மங்கையர் மலர்



MANGAYAR MALAR மார்ச் 1997 விலை ரூ. 10



சாரதா'ஸில்
ஜவுளி எடுத்தால்தான் திருமணம் -
இதுவே சம்பந்தம் பேசுமிடத்தில்
மக்களின் செல்லமான நிபந்தனை!
யுகருபிணி
சாரதா'ஸின்
பட்டுப்புடவைகளில்
இந்த வருடத்திய புதிய டிசைன்கள் . . .
அனுப்ரியா
சாரதாஸ்
(முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
827, அண்ணா சாலை,
சென்னை - 2.
போன் : 852 11 77
32, என்.எஸ்.பி. ரோடு,
திருச்சி - 2.
போன் : 702077


நீடித்திருக்கும்
பேரழகிற்கு !
Beuty Care
SKIN CREAM
A PROPRIETORY SIDDHA MEDICINE
30g
இதுவரை முகப்பருக்கென கிரீம் உபயோகித்தால், முகம் வறண்ட தோற்றமளித்தது. இதைப் போக்க வேறொன்றை உபயோகித்தால் முகத்தில் எண்ணைப்பசை அதிகம், இதைக் குறைக்க மற்றொன்று - இப்படி அப்பப்பா....! ஆனால் இப்பொழுது கண்டுபிடித்து விட்டேன்.
இக்கூப்பனை கொடுத்துவிட்டு
தள்ளுபடி ரூ. 2.80/-
Beuty Care
இந்தியாவின் முதல் சித்தா கிரீம்
இதிலுள்ள இயற்கையான சித்த மூலிகைகள் என் முகத்திற்கு முழுமையான பராமரிப்பை அளிக்கின்றது என்று பார்த்தாலே புரிகிறதல்லவா? இது முற்றிலும் Side Effects இல்லாதது.
குமாரி ஷாலினி
VISWAROOPA '97
'மார்க்கெட்டிங் அலுவலகம்'
ஸ்டான்ப்ரோ பார்மாஸூட்டிக்கல் லிட்,
18, ஆலங்காத்தா தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. போன் : 855 9369.


Lalitha
வாழ்வின் ஒவ்வொரு தருணமும்
கனவின் சுவைகளோடு
லலிதா ஜுவல்லரி மார்ட் பி. லிமிடெட்.,
123, உஸ்மான் ரோடு, பனகல் பார்க், சென்னை 600 017. போன் : 828 2939, 828 3413.

மங்கையர் மலர்

மார்ச் '97





மலர் : 17 இதழ் : 2



கல்கி

2.3.97 இதழில்....

- **வடை சுட்டு விற்கும் மாணவிகள்!**

  — கவர் ஸ்டோரி

- **சிறுமை கண்டு சீறுகிறார்; வறுமை கண்டு உருகுகிறார்!**

  — ஜொலிக்கும் காலேஜ் ஸ்டார்!


மணிக்கு
25
மட்டுமே செலவு !
ஆங்கிலத்தை எளிதில்
கற்றுக்கொள்ளுங்கள்!
நாம் காலத்தையும் பணத்தையும் பெரிதும் மதிக்கிறோம்
கைமேல் நீங்கள் அடையும் லாபம்
ரூ.99/-
விலை மதிப்பற்ற
இனி வெற்றிகளெல்லாம் உங்களதே எனக்கூறும் 7 வார கோர்ஸை இலவசமாக அடைவதன் வாயிலாக
ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் வீதம் ஐந்து மாதங்களில் நீங்கள் எளிதில் ஆங்கிலம் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள முடியும். இதற்கு ஒரு மணிக்கு கால் ரூபாய் மட்டுமே செலவு. ஆச்சரியப்படுகிறீர்களா ! ஆனால் இது உண்மை. முழுக்கோர்ஸில் 25 புத்தகங்கள் கிடைக்கும். எழுத்து முதல் சொற்களின் உச்சரிப்பு, வாக்கியம் அமைத்தல், இலக்கணம் இங்கிலீஷ் பேசுதல் போன்ற பல நிலைகளை மிகஎளிதாக மிகமிகக் குறைந்த செலவில் எந்த வயதினரும் வீட்டிலிருந்தபடியே சுலபமாக இங்கிலீஷைக் கற்றுக்கொள்ளப் பயன்படும் பாப்புலர் இங்கிலீஷ் கோர்ஸ் இதுவே. ஒவ்வொரு மாணவனும் மாணவியும் கண்டிப்பாகப் படிக்கவேண்டிய கோர்ஸ் இது. முழுக் கோர்ஸின் கட்டணம் ரூ.150/- (மணிக்குக் கால் ரூபாய் வீதம் தினமும் நான்கு மணிநேரம் படிக்க ஒரே ரூபாய். இப்படி 5 மாதங்களுக்கு ஆவது ரூ.150/- மட்டுமே)
பரிசுப்புத்தகங்களின்
1. கே.வி.ஆர். இங்கிலீஷ் டிக்ஷ்னரி (ஆங்கிலம்-தமிழில் உச்சரிப்பு-தமிழில் அர்த்தம்)
2. வேர்ட் பவர் (ஆங்கிலச்சொற்களின் அற்புத சக்தி)
3. லெட்டர் ரைட்டிங் ப்ராக்டிஸ் (ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதும் முறை)
4. அப்ரிவியேஷன்ஸ் டிக்ஷ்னரி
5. வெர்ப்ஸ் டிக்ஷ்னரி (வினைச்சொற்களும் அவற்றின் வடிவங்களும்)
6. சினோநிம்ஸ் & ஆன்டனிம்ஸ் டிக்ஷ்னரி (ஆங்கிலச்சொற்களும் அவற்றின் நேர் எதிர்ச்சொற்களும்)
உங்கள் பணத்திற்கு முழு உத்திரவாதம்
இந்தகோர்ஸ் உங்களுக்கு 100% சதவீதம் திருப்தியை அளிக்கும். உங்களுக்கு இந்தக் கோர்ஸ் முழுதிருப்தியை அளிக்கவில்லை என நீங்கள் கருதினால் இது வந்தடைந்த முப்பது நாட்களுள் இக்கோர்ஸின் புத்தகங்களைத் துண்டு துண்டுகளாகக் கிழித்து, எல்லாத்துண்டுகளையும் எங்களுக்குத் திருப்பி அனுப்பினால் உங்கள் பணத்தை நாம் செய்த தபால்ச் செலவைக் கழித்துக் கொண்டு உங்களுக்கு மணியாடர் செய்கிறோம். இது நாங்கள் அளிக்கும் உத்திரவாதம்.
இவ்வளவு நல்லகோர்ஸ் இருக்க வீண்யோசனை எதற்கு?
உடனே கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்
K.V.R INSTITUTE (Tamil Division)
P.B. NO. 1020, 77, Habibullah Road, T. Nagar, MADRAS - 600 017.
என் பெயர்
என் முகவரி
பின்கோடு


கதிரவனின் கதிர்களில் குளித்து எழுந்த பகுதியிலிருந்து...
புத்தம்புதிய உயர்தரமான சமையல் எண்ணெய்
KKR
சூரியகாந்தி எண்ணெய்
டபுள் ரிஃபைன்ட்
FRESH - High Class Cooking Oil
KKR
SUNFLOWER OIL
இலவசம்!
ஒரு எவர்சில்வர் டம்ளர் ஒரு எண்ணெய் பாட்டிலுடன் அல்லது இரண்டு பாக்கெட்டுகளுடன்
சரக்கு உள்ள வரை மட்டும்
கோடிக்கணக்காண இல்லத்தரசிகளின் எதிர்பார்ப்பின் நிறைவேறுதல் !
சமையலின் தரத்தையும், உடல் நலத்தையும், குடும்ப ஆரோக்கியத்தையும் விரும்புகின்ற கோடிக்கணக்கான இல்லத்தரசிகளின் இரகசியம் KKR சூரியகாந்தி எண்ணெய் தான்.
KKR சூரியகாந்தி எண்ணெய் ! ஆம். சுவையை அதிகமாக்கி அசல் ருசியை தருகிறது. கொழுப்புச்சத்து இல்லாமல், புரத சத்துக்கள் அதிகமாக இருப்பதால் உடலில் ஆரோக்கியத்தை ஏற்படுத்துகிறது.
உங்கள் எதிர்பார்ப்பு புதிய KKR சூரியகாந்தி எண்ணெய் தான்.
KKR
SUNFLOWER OIL
உயர்தரமான சமையல் எண்ணெய்
உயர்ந்த தரத்தை விரும்புவோர்க்கு !
KKR ஆயில் & எடிபிள்ஸ்
(டிவிசன் ஆப் SBW லிட்.)
126, Dr. இராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை - 600 004.
Ph : 8548393, 8548394, 8548395



.... சில வார்த்தைகள்

உண்மைகள் கசக்கும்!

இப்போதெல்லாம் ஒரு 'சைகாலஜி' சொல்லப்படுகிறது. எல்லோரையும் கடிந்து கொள்ளக் கூடாது. முகத்திற்கு நேரே விமர்சனம் செய்து விடக்கூடாது. குழந்தைகளை திட்டக் கூடாது.... 'என்கரேஜ்' செய்ய வேண்டும். 'பாஸிடிவ்'வாக பேச வேண்டும். 'நீ சிறந்தவன்', 'நீ உயர்ந்தவன்' எனப் பேசப்பேச அவன் உயருகிறான்....

ஒரு புத்தகத்தில் படித்தேன், வகுப்பிற்குப் புதிதாக வந்த ஆசிரியருக்கு ஏற்கெனவே சொல்லப்பட்ட விஷயம் 'அர்ச்சுன் எப்போதும் நல்லா படிப்பான்' என்பது. அட்டென்டன்ஸ் எடுத்த வாத்தியார் 'அர்ச்சுன்' என விளித்து விட்டு நிமிர்ந்து பார்த்தால் அவன் கடைசி பெஞ்சில்.

"அடேடே, என்ன அங்கே உக்கார்ந்திருக்கே. நீ பிரமாதமா வரப் போறவன். உனக்கு எவ்வளவு எதிர்காலம் இருக்கு. வா வா இப்படி உட்கார்." பையனுக்கு ஒன்றும் புரியவில்லை. முன்னாடி வந்து உட்கார்ந்தான். ஆசிரியரின் நம்பிக்கையான மொழியால் ரேங்க்கே வாங்காத அந்தப் பையன் மூன்றாவது மாதம் இரண்டாவது ரேங்க் வந்து விட்டான். எப்படி அது?

ஆசிரியருக்குச் சொல்லப்பட்ட அர்ச்சுன் வேறே வகுப்பு. ஆனால் அவசரத்தில் ஒருவருக்கொருவர் பேசும்போது சொன்ன வார்த்தை இந்தப் பையன் வாழ்க்கையில் திருப்புமுனையானது.

இது ரொம்ப சுவாரஸ்யமான விஷயம். உண்மையாகவும் நடக்கும்தான். ஆனால் இந்தப் போக்கின் மற்றொரு பக்கத்தையும் பார்க்க வேண்டும் அல்லவா? குழந்தைகளை மிகவும் உற்சாகப்படுத்துகிறோம். பெரியவர்கள் ஒருவருக்கொருவர் பேசும்போது ரொம்ப 'நாசூக்'காக பிரச்னைகளுக்கு இடமில்லாமல் பேசிக் கொள்கிறோம்.

"சாப்பாடு ரொம்பப் பிரமாதம்!"

என வாயளவில் விடை பெறுகிறோம். இப்படி நிறைய... இந்தப் போலியான போக்கு நம் வாழ்வில் நிறைய வர ஆரம்பித்து விட்டது. இதனால் உண்மைகள் மறைக்கப்பட்டு விடுகின்றன என்பது மட்டுமில்லை, உண்மையைச் சொல்பவர்களைக் கண்டால் பிடிக்காமல் போய்விடும் அளவிற்கு வளர்ந்து விட்டோம்.

'அவருடைய பெண்ணை ஹோட்டலில் ஒரு பையனோட பார்த்தோமே. சொல்லப்போய் நம்மைப் பிடித்துக் கொள்ளப் போகிறார்கள். நமக்கேன் வம்பு...' என்று ஒதுங்கி விடுகிறார்கள். அத மிஞ்சி சொல்பவர்களை நாம் நல்ல அர்த்தத்தில் எடுத்துக் கொள்கிறோமா?

'நம்ப பொண்ணை பத்தி சொல்ல வந்துட்டான். அவனுக்கு மெடிகல் சீட்

- மஞ்சுளா ரமேஷ்





வீட்டுக் கணக்கு எழுதும் போது, என் நான்கு வயது குழந்தை ஸ்ரீராம் நோட்டை பிடுங்கி தான் எழுதுகிறேன் என்று சொல்ல, பிறகு நான் சொன்ன இடத்தில், சரியாக பணத்தை எழுதினான். தினமும் நான் சொல்ல சொல்ல அவன் எழுத ஆரம்பித்துவிட்டான். நான் கணக்கு எழுத மறந்தாலும் என் குழந்தை ஞாபகப்படுத்த ஆரம்பித்து விட்டான்... சின்ன வயதிலிருந்தே வீட்டுக் கணக்கு எழுதுவது பழக்கமாகிவிடும்... நம் வீட்டு நிலைமையும் குழந்தைகளுக்குப் புரிய ஆரம்பித்து விடும்.

— போரூர் ஆர். சீதா

கிடைச்சப்பவே இவனுக்கு வயத்தெரிச்சல். இவன் பொண்ணு பி.ஏ. கோட்டானாமே. சரியாவே படிக்கிறதில்லைன்னு அவ அம்மா திட்டிகிட்டு இருந்தான்னு நேத்து அஞ்சல சொல்லிக்கிட்டிருந்தா....' என்கிறோம். ஆக உண்மைகள் சொல்லப்படாமல் நிறைய விஷயங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றன. 'சாப்பாடு சரியில்லை' என்று சொல்வது சாப்பாடு செய்தவர் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காகத்தான். பெண் காலேஜுக்குப் போகாமல் தியேட்டருக்குப் போகிறாள் என்று சொல்வது வழிதவற ஆரம்பித்திருக்கும் பெண்ணைத் திருப்பி நல்வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான் என்பதை மறக்கத் தொடங்கிவிட்ட காலம்.

'நச்சம் முன்னால இருவாய தெச்சாலும்
மனை மேல இருக்கிற தேங்காய்க்கு
மஞ்ச பூசல'

என ஒரு கிழவி கத்தினாளாம், வாயக் கிழித்துக் கொண்டு. நல்லதைச் சொல்வதற்காக நம் வாய் கிழிந்து போனாலும் பரவாயில்லை என நினைப்பவர்கள் எத்தனை பேர்?

ஒரேயடியாக எதற்கெடுத்தாலும் குறை சொல்வது, புறம் பேசுவது, கயிறு திரிப்பது, வம்பு பேசுவது என்பவையெல்லாம் ஒதுக்கப்பட வேண்டிய விஷயங்கள். ஆனால் மற்றவர்களின் மேல் அக்கறை கொண்டு நாம் சொல்லத் தயங்குகின்ற விஷயங்களைச் சொல்லிவிட வேண்டும் என்பதைத்தான் இங்கு வலியுறுத்துகிறேன். அப்படி நம்மை நோக்கி வருகின்ற கருத்துக்களையும் நாம் சரியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதும் இதன் மறுபக்கம்தான்.

- திருமணங்களிலே என்னென்ன சம்ப்ரதாயங்கள்,
- பிறந்த நாள், காதுகுத்து, வளைகாப்பு, சீமந்தம் இவற்றிற்கு என்ன செய்ய வேண்டும்,
- பண்டிகைகளுக்கு என்ன வழி முறைகள்,
- நம்முடைய குடும்ப 'ஸ்பெஷாலிடி" சமையல் என்ன,

நம்முடைய இந்த அழகிய பரம்பரை பரம்பரையாக வந்த தன்மைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டே வருவது –

இந்தத் தயக்கத்தால்தான்.

இன்றைய மாமியார்கள் 'மடி விழுப்பு பண்டிகை பலகாரமெல்லாம் என்னோடு போகட்டும் என மருமகளை ஃப்ரீயா விட்டுட்டேன்' என்று சொல்வதும் தவறு. 'இன்றைக்கு மகாலக்ஷ்மி நோன்பு, அதற்கு இது இதெல்லாம் செய்ய வேண்டும்' என்று சொல்ல வரும் மாமியாரை முகம் காட்டுவதும் மருமகளுக்குத் தவறு.

ஆபிசிலே எடுத்துக் கொண்டால் சீனியர் ஆபீசர்ஸ், 'ம்..... இந்தப் புது எம்.பி.ஏ. என்னத்த கிழிக்கிறான்' என தப்பு செய்ய வைத்து வேடிக்கை பார்ப்பதும், இளைய அதிகாரி 'பெரிசு அப்படித்தான் நொச்சு நொச்சுங்கும்... விடுய்யா' என்று அலட்சியப்படுத்துவதும் தவறு.

ஒருவர் வளர்ச்சி மேல் ஒருவருக்கு
ஒருவர் வாழ்க்கை மேல் மற்றவருக்கு
இங்கு ஆழ்ந்த அக்கறை வேண்டும்.

அபிமானம் வேண்டும். அதே சமயம் வேண்டுமென்றே செய்யப்படும் விமர்சனமாக, கேலியாக இருக்கக் கூடாது. 'நாமும் வாழணும், பிறத்தியாரும் நன்றாக வாழணும்' அந்த அக்கறை எல்லோருக்கும் இருந்தால்தான் இங்கே நம் நாட்டின் பாரம்பர்யங்கள் காப்பாற்றப்படும்.

உண்மைகள் கசக்கலாம். ஆனால் அது உடலுக்கு, மனதுக்கு, வாழ்க்கைக்கு நல்லது.

பட்டுப் புடைவை முதல்

திருபுவனம் கம்பஹரேஸ்வரர் கோயிலுக்குப் போகும் வழியில் அமைதியாக ஒரு பள்ளி. நகரப் பள்ளியை நினைவுப்படுத்தும் அழகிய யுனிஃபார்ம், கட்டுக் கோப்பான வகுப்புகள், ஆங்கிலம்... ஆச்சர்யமாக இருந்தது. இந்தச் சிறிய கிராமத்தில் யார் நடத்துகிறார்கள் இவ்வளவு அழகிய பள்ளியை என விசாரித்தபோது ஆச்சர்யமான விஷயங்கள் நிறைய வந்தன.

பட்டுப் புடைவைகளுக்குப் பெயர் பெற்ற ஊர் திருபுவனம். வருடத்திற்கு பலகோடி இலாபம் பெறும் வகையில் வெற்றிகரமாக நடந்து வரும் திருபுவனம் பட்டு கூட்டுறவு சொசைட்டியின் (Z.322) நெசவாளர்கள் சேர்ந்து இப்பள்ளியை உருவாக்கியிருக்கிறார்கள் எனத் தெரிந்து கொண்ட போது ஆச்சர்யமாக இருந்தது.

"எங்களுடைய பட்டுக் கூட்டுறவு சங்கம் இத்தனை தூரம் இன்று வெற்றி பெற்று வருகிறது, வருடத்திற்கு நல்ல லாபத்தைப் பெறுகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் எங்களுடைய தரம், பாரம்பர்யச் சிறப்பு, நம்பிக்கை, நெசவாளர்களின் கடின உழைப்பு. நாங்கள் இன்று நன்றாக இருக்கிறோம். எங்களுடைய சந்ததிகள் நன்றாக இருக்க வேண்டும் அல்லவா?

மாறிவரும் இந்த விஞ்ஞான யுகத்தில் நெசவாளர்களின் குழந்தைகள் நல்ல கல்வியைப் பெற வேண்டும் என்று விரும்பினோம். இங்கிருந்து பஸ் ஏறி கும்பகோணம் போய்ப் படிக்க வேண்டும் என்பதாலேயே நிறைய தாய்மார்கள் தங்கள் பெண்குழந்தைகளை ஆறாம் வகுப்போடு நிறுத்தி விடுவார்கள்.



அவர்களும் உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காகவே பார்த்துப் பார்த்து இந்தப் பள்ளியை ஆரம்பித்தோம். நெசவாளர்களை உறுப்பினராகக்

கொண்ட ஒரு அமைப்பை ஆரம்பித்தோம். அப்படி அடிப்படை அமைத்து ஆரம்பிக்கப்பட்டதே "இ. கொ. சில்க்ஸ் மெட்ரிகுலேஷன் ஸ்கூல் ஃபார்



பள்ளிக் கல்வி வரை

கேர்ள்ஸ் என்கிறார் இச் சங்கத்தின் மானேஜர் எம். நடராஜன்.

பள்ளியைப் பார்க்குமுன் பட்டுப் புடைவை சங்கம் என்பதால் அவர்களிடமும் பேசிவிட வேண்டும் என்ற ஆவல். "பல கோடி லாபம் சம்பாதிக்கும் சொசைட்டி உங்களுடையது என்கிறீர்கள்? அந்த வெற்றி எதனால் கிடைத்தது என நினைக்கிறீர்கள்? தவிரவும் புடைவைக் கலாசாரமே மறைந்து சுடிதார் நிலையல்லவா வந்து கொண்டிருக்கிறது?" என்று சங்கத்தின் இணை இயக்குநரும், செயலாளருமான எல். ஸ்ரீராமலிங்கத்தைக் கேட்டோம்.

"வெற்றிகரமாக இன்று எங்கள் சங்கம் இயங்குவதற்கு முழுக்க முழுக்க இதன் அட்மினிஸ்ட்ரேஷன்தான் காரணம் என்பேன். தரமான பட்டு நூல், தரமான ஜரிகை வாங்குவதிலாகட்டும், நெசவாளர்களிடையே அவற்றைச் சரியாகக் கொடுத்து புடைவையாக வாங்குவதிலாகட்டும் நாடு பூரா விநியோகம், நல்ல பெயர் எல்லாநிலைகளிலும் மிகச் சரியாக நடந்து வருகிறது. அதனால் ஒட்டுமொத்த வளர்ச்சி இருக்கிறது எனலாம்.

நீங்கள் புடைவைக் கலாசாரம் மறைந்து வருகிறது என்கிறீர்கள். ஆனால் வருடத்திற்கு வருடம் எங்கள் விற்பனை அதிகரித்துக் கொண்டுதான் வருகிறது. தவிரவும் நம் நாட்டுப் பெண்களிடம் இருந்து பட்டுப்புடைவையைப் பிரிக்க முடியாது.

காட்டன் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இன்று கஷ்டப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அதற்குக் காரணம் பவர்லூமின், சிந்தடிக் புடைவைகளின் போட்டி. ஆனால் பட்டினை கைத்தறியாகத்தான் நெய்ய முடியுமே தவிர பவர்லூமில் முடியாது. முயற்சி செய்தவர்கள்

வெற்றியடையவில்லை. அப்படியே ஆனாலும் புடைவை வியாபாரம் இல்லையென்றால், கடிதாருக்கு நெய்ய ஆரம்பித்து விடுகிறோம். அவ்வளவுதானே!" எனச் சிரிக்கிறார்.

இக்கூட்டுறவு சொசைட்டியின் தலைவரும், பட்டினைப் பற்றிய நுணுக்கங்களை அறிந்தவருமான எம்.எல். அய்யாசாமி அமைதியாகப் பேசினார். பல பட்டுப் புடைவைகளையும் தருவிக்கச் சொல்லி பிரித்துக் காண்பித்துத் தங்கள் சொசைட்டியில் புதிய புதிய முயற்சிகளையெல்லாம் விளக்கினார்.



• மீராபாய்



• ஸ்ரீராமலிங்கம்

"பொன்னாடை என்றால் உண்மையான பொன்னாடையாக ஜரிகையில் நெய்வது நாங்கள் மட்டும்தான். டெல்லியில் அப்படி வாங்கிக் கொள்கிறார்கள். காரணம் குவாலிட்டி. அதே போல் பனவுஸ் துணியுடன் கூடிய புடைவை கூட போட ஆரம்பித்து விட்டோம். இன்னொன்று, பட்டுப்புடைவை வாங்கும் சகோதரிகள் டார்க் கலரில் வாங்கினால் நல்லது. அப்போதுதான் அதில் ஜரிகை 'பளிச்'சென்று இருக்கும். இதோ பாருங்கள், ஒரே ஜரிகைதான். இரண்டு புடைவையிலும் எப்படி இருக்கிறது...." என லைட்ரோஸ் கலர்ப் புடவை, சிவப்பு வண்ணப்புடவை இரண்டையும் காட்டினார்.

"அடிப்படை வண்ணங்களான ஏழு வண்ணங்களிலுள்ள புடைவை சாயம் போகாது. அது தவிரவே சாயம் போகும் எனச் சொல்லப்பட்ட புடைவைகளுக்குக் கூட நூல் நிலையில் சாயமேற்றும் போது ஒருவித ரசாயனத்தையும் கலக்கும் முறை இப்போது வந்துவிட்டது. அதனால் இப்போது பெரும்பாலான வண்ணங்களில் அந்தப் பிரச்னை இருக்காது." என்கிறார் அய்யாசாமி.

உற்சாகமாக (!) பட்டுப்புடைவைகளைப் பார்த்துவிட்டு பள்ளிக்குக் கிளம்புகிறோம்.

தி.கொ. சில்க்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் முதல்வர் மீராபாய் மிகவும் உற்சாகமாகப் பேசினார். "இப்போது ஒன்பதாம் வகுப்பு வரை நடக்கிறது. அடுத்த வருடம் மெட்ரிகுலேஷன் வகுப்பு ஆரம்பம். இங்கே கிராமமாக இருந்தாலும் நிறைய பிள்ளைகள் ஆர்வமாக இருக்கிறார்கள். ஆசிரியைகளும் மிகவும் ஆர்வமாக இயங்குவதால் வெகு விரைவில் இந்தப் பள்ளி மிக உயர்ந்த நிலைக்கு வந்துவிடும் என்பதில் எங்களுக்குச் சந்தேகம் இல்லை" என்கிறார்.

"இந்த பள்ளி எப்படி இருக்க வேண்டும் எனும் என்னுடைய கனவைக் காண்பிக்கிறேன்" எனக் கும்பகோணம் செல்லும் நெடுஞ்சாலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் பள்ளியின் காப்பாளர் நடராஜன். பல ஏக்கர் பரப்பில்



முடிவடையும் நிலையில் அற்புதமான பள்ளிக்கட்டிடம். நீண்ட தாழ்வாரமும், விசாலமான வகுப்பறைகளும், கண்ணுக்கெட்டிய வரை வயல்வெளியும்... கல்விக் கூடத்திற்கான அருமையான சூழ்நிலை.

"மிக விரைவில் இந்தக் கட்டிடத்திற்கு எங்கள் பள்ளியை மாற்றி விடுவோம். பெண் கல்வி என்பது நம் சமூகத்திற்கு நாம் செய்யும் மிகச் சிறந்த சேவை. படித்த பெண்களால்தான் எதிர்காலத்திற்கு மிகச் சிறந்த, நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் பிரஜைகளை உருவாக்க முடியும். எனவேதான் எங்களால் முடிந்தது இந்தச் சுற்றுவட்டாரப் பெண்களுக்கு நல்ல ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்து ஆரம்பித்தோம்.



• அய்யாசாமி



• நடராஜன்

நெசவாளர்கள் உறுப்பினர் தொகை தவிர, பல சமூக ஆர்வலர்களிடம் இருந்து நன்கொடையினைப் பெற்றுதான் இந்தக் கட்டிடத்தைக் கட்டினோம். பள்ளி மாணவர்களிடம் ஒரு பைசா நாங்கள் 'டொனேஷன்' வாங்கவில்லை. கட்டணத் தொகையும் மற்றவர்களின் பள்ளிகளை ஒப்பு நோக்கும் போது குறைவுதான். ஆனால் கல்வியின் தரத்தில் எங்கள் பட்டுப்புடைவையைப் போலவே காம்ப்ரமைஸ் செய்து கொள்வதேயில்லை. நல்ல டீச்சர்கள், நல்ல பாடத்திட்டம் என வளர்ந்து கொண்டிருக்கிறோம். பெண்களிடம் புடைவையை விற்று நாங்கள் நன்றாக இருக்கிறோம், அந்தப் பெண் சமூகத்திற்கு எங்களால் ஆன தொண்டு என்றுதான் இதை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் வியாபாரமாக இல்லாமல் சேவையாக இதை விரிவுப்படுத்திக் கொண்டிருக்கிறோம்..." என கண்களில் ஏராளமான கனவுகளுடன் மெய்மறந்து பேசுகிறார் நடராஜன்.

தருமபுர ஆதீன ஸ்வாமிகள் சொசைட்டிக்காரர்கள் பெண்கள் பள்ளி தொடங்குகிறார்கள் என்றவுடன், வேறு சிலர் இவர்கள் தரும் விலையை விட அதிகமாகத் தருகிறோம் என்ற சொன்ன போதும் கூட மறுத்துவிட்டு இவர்களுக்கே கொடுத்தாராம்.

அரசு அங்கீகாரம் பெற்ற இப்பள்ளி எதிர் காலத்தில் மிகச் சிறந்த பள்ளியாக, கல்லூரியாக வளரப் போகிறது என்பதற்கான அறிகுறிகளை அங்கு நிறையவே காண முடிந்தது. 'நம் பாரம்பர்யச் சிறப்பையும் இங்கு படிக்கும் பெண்களுக்கு அறிவுறுத்தி வலியுறுத்துகிறோம். அதற்கான பாடத்திட்டங்களையும் எங்கள் கல்வித் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம்' என்று மீராபாய் சொன்னபோது இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. அதுதானே நமக்கு வேண்டியது!

— மஞ்சுளாரமேஷ்



சருமத்தைப் பாதுகாக்கும் தன்மை உங்களுக்குள்ளேயே அமைந்திருப்பது, இயற்கை அளித்த வரப்பிரசாதம். சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும், குளிர்ச்சியாகவும் இருப்பதற்கு, உங்கள் சருமத்தின் இயற்கையான அமைப்பும் காரணமாகும். அழகுக்கு மெருகூட்டும் இவையாவும் சருமத்தின் அடிப்பகுதியில் ஆழப்பதிந்திருக்கின்றன. இவை சிறப்பாக செயல்பட, சருமத்தின் மேற்பகுதியில் மிகச் சரியான அளவில், முறையுடன் இவற்றை வரவழைக்க வேண்டும்.


உலகெங்கும் உள்ள சருமப்பராமரிப்பு நிபுணர்கள் நன்கு அறிவார்கள். ஆகையால்தான், உங்கள் மேனிக்கு மெருகு ஊட்ட, இயற்கையாகவே சருமத்தில் உள்ள சக்திகளை தூண்டும் வண்ணம், சருமப்பராமரிப்பு சாதனங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

அறிமுகப்படுத்துகிறோம். ஃபரேயா சருமப் பராமரிப்பு சாதனங்கள் அணிவரிசை. உங்கள் சருமத்திற்காக, உங்கள் சருமத்துடன் செயல்படுகிறது:-

சரும நிபுணர்கள், கடந்த சில வருடங்களாக செய்த ஆராய்ச்சியின் விளைவாக சருமம் கெட்டுப்போகும் முறைகளைப் பற்றியும், கெடுவதைக் குறைக்கும் வழிமுறைகளையும் கண்டுபிடித்துள்ளனர். இந்த விஞ்ஞான அற்புதங்கள், இந்தியாவின் மற்ற தயாரிப்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட, சருமப் பராமரிப்பு சாதனங்களின் அணிவரிசையாக ஃபரேயா மூலம் கிடைக்கின்றன.

ஃபரேயா அணிவரிசை, சரும நோய் மருத்துவர்கள், அழகியல் நிபுணர்கள் மற்றும் மருந்தியல் வல்லுனர்கள் அடங்கிய குழுவால் உருவாக்கப்பட்டவை. இந்தியாவின் முன்னணியிலுள்ள தனிப்பட்ட பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. இவை உங்கள் சருமத்தின் இளமையை மீட்டுத்தந்து, நிலையாக வைக்கும் இயக்கத்துடன் முழுமையாக ஒருங்கிணைந்து செயல்படுகிறதா என்பதற்காகவே சோதனை செய்யப்படுகிறது. ஃப்ரேயா சருமத்திற்குள் செயல்படுவதால், இதன்பயன் நெடுநாள் நீடித்து நிற்கிறது.

உங்கள் சருமத்தில் வெடிப்புகள் ஏற்பட பல காரணங்கள் உள்ளன. உங்களுக்கு அதைப்பற்றி தெரியாததும் ஒரு காரணம்.



அன்புடன் நினைத்திடுங்கள். பரிசினை வென்றிடுங்கள்.

ராம் காஷ்யப்



சமய சஞ்சீவி கட்டுரைப் போட்டி

உங்கள் வாழ்க்கையில் எதிர்பாராத திருப்புமுனையோ அல்லது தவிர்க்க முடியாத நெருக்கடியோ ஏற்பட்டிருக்கிறதா? அத்தகைய சமயத்தில் சமய சஞ்சீவியாக யாரேனும் உங்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ உதவியிருக்கிறார்களா? அப்படி உதவியவர் உறவினராகவோ அல்லது நண்பராகவோ இருக்கலாம். அந்த நிகழ்ச்சியை ஒரு சுவையான கட்டுரையாக எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். அவ்வாறு சமய சஞ்சீவியாக உதவியவரை அன்புடன் நினைவு கூர்ந்து பாராட்டுவதற்கு இது ஒரு அரிய தருணம். அது மட்டுமின்றி உங்கள் கட்டுரைகள் பரிசுபெறும் வாய்ப்பையும் ராம் காஷ்யப் உங்களுக்கு அளிக்கிறது. ஆமாம், சிறந்த கட்டுரைகளைப் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுப்பதோடு, அவற்றுள் மிகச் சிறந்தவற்றுக்குப் பரிசுகளும் வழங்குகிறோம்.


நிபந்தனைகள் :

- கட்டுரைகள் முழுத்தாளில் ஒரு பக்கத்துக்குள் இருக்க வேண்டும்.
- உறையின் மீது சமய சஞ்சீவி கட்டுரைப் போட்டி எனக் குறிப்பிட வேண்டும்.
- கட்டுரைகளைச் சுருக்கியும் திருத்தியும் வெளியிடும் உரிமை ராம் காஷ்யப் நிறுவனத்துக்கு உண்டு.
- கட்டுரைப் போட்டி தொடர்பாகக் கடிதப் போக்குவரத்து எதுவும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- பரிசு பெற்றவர்கள் விவரம் ஏப்ரல் மாத இறுதியில் பத்திரிகைகளில் பிரசுரமாகும்.
- பரிசு பெறும் கட்டுரைகளை நடுவர் குழுவினர் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களுடைய முடிவே இறுதியானது.

முந்துங்கள்!
கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் மார்ச் 15, 1997.

ரூ.25,000
மதிப்புள்ள தங்க நகைகள்
1-ம் பரிசு
(ஒரு நபருக்கு)

ரூ.5,000
மதிப்புள்ள தங்க நகைகள்
2-ம் பரிசு
(இரண்டு நபருக்கு)



ரூ.2,500
மதிப்புள்ள தங்க நகைகள்
3-ம் பரிசு
(மூன்று நபருக்கு)

100 ஆறுதல் பரிசுகள்
4 கிராம் மதிப்புள்ள வெள்ளி நாணயங்கள்

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி :

Ram Kaashyap
Chits Private Limited
14/3, தண்டபாணி தெரு, தி.நகர், சென்னை 600 017.
போன் : 4341513, 4330034

ஈடில்லா சேமிப்பு; இணையற்ற தீர்வு


எதிர்கால கணவனே!



எதிர்கால
கணவனே!
எழுதுகிறேன்
சில வரிகள்....
மாதா பிதாவிற்குப் பிறகு கும்பிட
வேண்டிய
குருவிற்கு நீ
கோவில் கட்டாவிடினும்
கிண்டல் பண்ணாமலிரு!
உடன் படிப்பவளை
உடன் பிறப்பாக
எண்ணாவிடினும்
உணர்வுள்ள தோழியாக நினை!
தந்தை - தாய் சம்பாதித்திடினும்
உரிமையால்
உலகையே விலை பேசாதே!
பணத்தின் அருமை
படிக்கும் போதே
அறிய வேண்டும்.
வேலைக்குச் சேர்ந்தபின்
வேண்டும் செல்வம் வராவிடினும்
வேறு வழி - குறுக்குவழி
வேண்டவே வேண்டாம்.
ஆற்றலுக்கு மதிப்புண்டு
அரிய உழைப்பில் அதை
அறிந்து கொள்
தாய் மொழியாம்
தமிழ் - கற்றுக் கொள்
ஆயின்
வேற்றுமொழி கற்காமல்

இந்திய மக்களையே
அந்நியப் படுத்தாதே
மொழிப்பாசம் வேண்டும்
தேசப் பற்று வேண்டும்.
இனப் பற்று மட்டும்
மனித இனப்பற்றாகவே
இருக்கட்டும்
உலகம் உன் கையில்
அடங்கி விடும்.
எம்மதமும் சம்மதம்
என்ற
கொள்கைக்குள் நீ
கட்டுப்படாவிடினும்
எம்மதமும் எனக்கு
எதிரியில்லை என்ற
வார்த்தைகளை உன்மனதில்
வளரவிடு....
பெண்மைக்கு மதிப்பு கொடு
பெண்மைக்கு பெருமை சேர்
தாய்மைக்குத் தலை வணங்கு
தரணியில் மகிழ்ச்சி கொள்வாய்
திருமணம் ஆனபின்
திருமகளாய் மட்டும்
அவளை நினையாதே
கலைமகளாய் - சக்தியாய்
உனது சக்தி
வளர உதவுபவளாய்
உரிமை கொடு.
உலகம் ஏற்று
'எந்நோற்றான்' என்று
என்னை பாராட்டாவிடினும்
ஏன் பெற்றான் என்று
இவ்வுலகம்
என்னைத் தூற்றக் கூடாது!
எனவே,
என் உணர்வுகளைப்
புரிந்து நட!
மனித நேயமே மந்திரமாய்
ஏற்று நட!
எதிர்கால கணவனே!
என் மருமகளின்
எதிர்கால கணவனே!

— சுப்புலக்ஷ்மி. வி.




THE NEW COLORS OF SPRING 1997
VIRTUAL VIOLET
THE LOOK FROM SHEER TO SHOCKING
REVLON
REVLON
REVLON
Revolutionary



"நான் குழந்தையைப் பார்த்துக்கறேன். நீ ஆபீஸுக்குக் கிளம்பு."

பொழுது விடிந்ததும் விடியாததுமாய் மாமியார் சொன்ன இந்த வார்த்தைகள் ஷைலஜாவிடம் விதம்விதமான எண்ணங்களைத் தோற்றுவித்தன. சொன்ன விதம், அதற்கான சாதாரண அர்த்தம். உள் நோக்கம். அதற்கும் பின்னால் மறைந்திருக்கும் நினைப்புகள். அதன் காரணகாரியங்கள்...

ஷைலஜாவுக்கு வேலையே ஓடவில்லை. மானிட்டரில் ஓடிய எழுத்துக்கள் கண்களை மறைத்தன. கண்ணீர். நினைத்து நினைத்து மறுகி மறுகி... கண்ணீர் திரண்ட போது...

அவள் எழுந்தாள். குழந்தையை நினைத்ததும்... வேகமாக பாத்ரூமுக்குள் சென்றாள். அவசர அவசரமாக சட்டை ஹூக்குகளை அகற்றி... பாலை வாஷ் பேஸினில் பீச்சியபோது.. அவள் குழந்தை பாலுக்கு அழுவது போல பிரமை....

ஜாக்கெட்டை சரி செய்து கொண்டு, கண்களைத் துடைத்து... குமுறும் நெஞ்சத்தை அமைதிப்

உறவுக்

படுத்தி விட்டு... இருக்கையில் அமர்ந்தாள். அவள் பக்கத்தில் எதிரில் அடுத்த அறையில்... அதற்கும் அடுத்து...

வனஜா, மேகலா, சரஸ்வதி, நளினி... எல்லோருக்கும் குழந்தைகள் இருக்கத்தான் செய்கிறது. எல்லோருக்கும் வேலைக்குப் போக வேண்டிய நிர்பந்தம். காலத்தின் நாகரீகத்திற்காக என்று அலுவலகம் வந்தவர்களுக்கு, கல்யாணத் தகுதியாகி, பின்பு நிர்பந்தமாகி... பந்தங்களை ஒதுக்கித் தள்ளுகின்ற, பிணைக்கிற விலங்காகி... சூழ்நிலைக் கைதிகளாகி...

இரண்டு டேபிள் தள்ளி, டைப் செய்த படி தன்னையும் கவனிக்கும் சரஸ்வதி... தான் அழுததை உணர்ந்திருப்பாளோ... இருப்பாள். சரஸ்வதிக்கு எப்பவுமே சூட்சமம் அதிகம்.

காப்பி வந்தது. வெகு நேரம் ஆடை படிந்து கிடந்து, ராஜகோபால் 'என்ன மேடம்' என்ற பிறகுதான் குடித்தாள்.

ஷைலஜாவுக்குத் திருமணமாகி இரண்டு ஆண்டுகள்தான் ஆகின்றன. அவள் கணவன் வேணுகோபால்

கங்கா ராமமூர்த்தி

பிரபல ஆடிட்டர் கம்பெனியில் நல்ல சம்பளத்தில் வேலையாக இருந்தான். ஆனாலும் வேலை பார்க்கும் பெண் தான் வேண்டும் என்று விரும்பி னான். அவன் விரும்பியபடியே பைனான்ஸ் கம்பெனியில் வேலை பார்க்கும் ஷைலஜா மனைவியானாள்.

ஷைலஜாவின் சம்பாத் யத்தை வைத்து வீட்டுச் செல வுகளை சரிக்கட்டினார்கள், வேணுகோபாலின் வருவாய் அப்படியே சேமிப்பாகி பெரிய பிளாட் வாங்க... வளர்ந்து வந்தது.

ஷைலஜாவுக்கு பெண் பிறந்து மூன்றாம் மாதம் புக்ககம் வரும் போது, வேணு, அம்மாவையும் ஊரிலிருந்து வரவழைத்து விட்டான்.

குழந்தையோடு வந்து இரண்டு

தவல்

நாளாயிற்று.

"ஷைலா, ஒனக்கு என்னிக்கு ஜாய்ன் பண்ணணும்."

"இன்னியோட லீவு முடிஞ்சு போச்சு. நாளைக்கு ஜாய்ன் பண்ணணும். வேணும்னா இன் னும் ஒரு மாசம் லீவு எடுத்துக் கலாம்."

"எதுக்கு? அம்மா இருக்கா. குழந்தையை பார்த்துக்குவா. நீ அனாவசியமா லீவு எடுக்க வேணாம்" வேணு குறுக்கிட் டான்.

ஷைலஜா குழந்தையை மடியில் வைத்துக் கொண் டாள். ஐந்து மணிக்கு ஸ்வேதா விழித்துக் கொண்டு விடுவாள். பால் கொடுத்து விளை யாட்டுக் காட்டி மறுபடி எட்டு மணிக்கு தூங்கப் பண்ணி - எழுந்ததும் குளிப்பாட்டி - மருந்து கொடுத்து கூழ் காய்ச்சி பதமாக பாட்டிலில் விட்டு தந்து, பகலில் ஜூஸ் கொடுத்து... மூன்று மாதக் குழந்தை என்றாலும் பக்கத்தில் யாரும் இல்லை யென்றால் அழுது



The following particulars regarding the ownership of 'MANGAYAR MALAR' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	V. Murali
Nationality	:	Indian
Address	:	D-38, Nelson Chambers, 115, Nelson Manickam Mudaliar Road, Aminjikarai, Chennai- 600 029.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	:	Manjula Ramesh
Nationality	:	Indian
Address	:	7, Arunachalapuram 2nd Street, Adyar, Chennai - 600 020.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1997 K. Rajendran
Publisher

சாதித்துக் கொள்ளுகிற சாமார்த்தியம்.

மாமியாரால் முடியுமா?

அப்படியே முடிந்தாலும் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுப்பது எப்படி? ஆறு மாதமாவது கொடுக்க வேண்டும். அது மாமியாருக்குத் தெரியாமலிருக்குமா? நாளைக்கு தன்னிடம் தனியாகச் சொல்வார்களோ....

எண்ணங்களில் மூழ்கி வெளிப்படுத்தும் திராணியின்றி குழந்தையின் விரல்களைப் பற்றிக் கொண்டு நெடு நேரம் உட்கார்ந்திருந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. மாமியார் வாசல் தெளித்து கோலம் போட்டு விட்டு வரும் போது ஷைலஜா குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். மார்போடு சேர்த்து அணைத்தபடி... யாரோ வந்து குழந்தையை தன்னிடமிருந்து பிரிக்கிறார்களோ என்ற பயத்தோடு....

"நான் குழந்தைய பார்த்துக்கறேன். நீ ஆபீஸுக்குக் கௌம்பு" என்று சொன்னதும் ஷைலஜாவுக்கு மறு பேச்சு பேச முடியவில்லை.

'உங்களால முடியுமா'னு கேட்டால் தப்பாகி விடுமோ என்ற பயம்.

மூன்று குழந்தைகளைப் பெற்று வளர்த்தவளுக்குத் தெரியாதா என்று நினைத்து விட்டால்....

அன்பாகச் சொல்கிறார்களா. அதிகாரமாகச் சொல்கிறார்களா. தலையெழுத்து என்று எண்ணிச் சொல்கிறார்களா... கடவுளே... முகத்துக்கு எவ்வளவு மூடிகள். வார்த்தைகளில் எவ்வளவு ஜாலங்கள்?

இரண்டு வருஷப் பழக்கத்தில் இன்னும் கணவனையே முழுவதுமாகப் புரிந்து கொண்டதாக ஷைலஜா நினைக்கவில்லை. அப்படி இருக்கும் பொழுது.. மூன்று நாள் பழக்கத்தில் மாமியாரை எப்படிப் புரிந்து கொள்வது.

"ஷைலா. மூணு மாசமா என் சம்பளம்தான் செலவாகுது. இந்த மாசமாவது பாங்க்ல கட்டணும். ம். ஆபீஸ் போ. அம்மா குழந்தைய நல்லா பார்த்துப்பா!"

"அவங்களுக்கு பாவம்... கஷ்டங்க...."

"என்ன கஷ்டம். பேத்தியை பார்த்துக்கறதுக்குக் கசக்குமா? பெரியண்ணா பிள்ளையை அம்மாதான் வளர்த்தாள். சின்னண்ணா பெண்ணும் பிள்ளையும் அம்மாவை விட்டு நகராது. இத்தனைக்கும் சின்ன அண்ணி வேலை பார்க்கலை. வீட்டோடதான் இருந்தாள்."

கொடுத்து வைத்தவள் - ஷைலஜா நினைத்துக் கொண்டாள்.

"ஷைலஜா, லஞ்ச் டைம் வந்தாச்சு. இன்னும் என்ன ரிப்போர்ட்டை தட்டிட்டிருக்கே. வா.. வா...."

"நீ போ. சரஸு. நான் வரல்லே."

"ஏன்... ஏன் வரல்லே...."

"ம்சு... பசிக்கலே...."

சரஸ்வதி ஷைலஜாவை ஆழ்ந்து பார்த்தாள்.

"குழந்தை நினைப்பு... அதானே...

மறுக்காமல். தலை குனிந்த போதே, கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் தரையில் சிதறியது.

"ஷைலா. உன் மாமியார் பார்த்துப்பாங்க. நீ ஏன் கவலைப்படறே. எழுந்திரு. பச்சை உடம்பு. இப்படியெல்லாம் பட்டினிகெடந்து வருத்திக் கொள்ளக் கூடாது. ம். வா... வா...."

சரஸ்வதி தனக்காகக் காத்திருந்து, தன்னையும் அன்பால் கட்டுப்படுத்திய போது, ஷைலஜாவால் தட்டிக் கழிக்க முடியவில்லை. பெருமூச்சு விட்டுக் கொண்டு எழுந்தாள். கைப்பையிலிருந்து டிபன் டப்பாவை எடுத்தாள். சரஸ்வதியோடு சென்றாள். சாப்பாட்டு மேஜையில் ஆண்களும் பெண்களும் சளசளப்பதும் கலகலப்பதும்.

யாருக்கும் எந்தப் பிரச்னையும் இல்லையா! பிரச்னையை தற்காலிகமாக ஒதுக்கி வைத்து விட்டு கலகலப்பாக இருக்கிறார்களா? இவர்களுக்கெல்லாம்....

சரஸ்வதி, ஷைலஜாவின் மனம் போகும்

பாதையைத் தடம் பிடித்துக் கொண்டு வந்தவள் போல...

"இவர்களுக்கெல்லாம், குழந்தைகள் இருக்கே... அவர்களை யார் கவனித்துக் கொள்கிறார்கள்? எப்படி இவர்களால் குழந்தையைப் பிரிந்து வர முடிகிறதுனு யோசிக்கறே... இல்லே..."

"ஆமாம் சரஸு..."

"மேகலாவுக்கு, ரெண்டு குழந்தை. ஒண்ணு மாமியார் கிட்ட, இன்னொன்னு அம்மாகிட்ட. நளினியோட மாமியார் உள்ளூர்லதான் இருக்காங்க. ஆனாலும் குழந்தையை பார்த்துக்க முடியாதுன்னு சொன்னதாலே ஆயா வெச்சிருக்கா. வனஜாவோட மாமியாரைப் பத்தி அவ நெறையவே சொல்லியிருக்கா...."

காலியாகக் கிடந்த டேபிளில் எதிரும் புதிருமாக இருவரும் உட்கார்ந்தார்கள்.

"இப்பவும் நீ தயிர் சாதமும் காரட் சாலடும் தானா...."

"இன்னிக்கு எனக்குக் காலைல நேரமே இல்லை. எங்க மாமியார்தான் சமையல் செய்தாங்க. ஆபீஸ் கௌம்பறப்ப டப்பாவை குடுத்தப்பதான் எனக்கே சங்கடமா இருந்தது. நான் சமையல் கட்டுப் பக்கமே போகலை. குழந்தையைக் கவனிக்கவே நேரம் சரியா இருந்தது. என்ன வெச்சிருக்காங்களோ...."

பிளாஸ்டிக் உறையைப் பிரித்து டப்பாவை வெளியில் எடுத்தாள். திறந்தாள். வெள்ளை வெளேர் என்று தயிர் சாதம் நடுவில் ஊறுகாய். இன்னொருபுறம் இரண்டு சப்பாத்தி. இடையில் பீன்ஸ் பொரியல். "அட... எட்டு மணிக்குள் இவ்வளவும் செய்து கொடுத்து அனுப்பி வெச்சிருக்காங்களே!" ஒரு நிமிடம் மனம் நெகிழ்ந்தாலும் அடுத்த கணமே –

மருமகள் சம்பாதிச்சுக் கொட்டணும்னா மாமியார் எது வேணும்னாலும் செய்வாங்களோ... என்று நினைவு திசை திரும்பியது.

சாப்பிடத் துவங்கினார்கள்.

வனஜா அவர்களை நோக்கி வந்தாள்.

"ஏன் ரெண்டு பேரும் லேட்....."

"குழந்தைய நினைச்சு ஷைலா அப்செட் ஆகியிருந்தா... அதான் இருந்து கூட்டிட்டுவந்தேன்."

"யாரு பார்த்துக்கறாங்க. உங்க மாமியாரா?"

"ம்..."

"ஷைலா. பேரன், பேத்தினு ஆசையா இருப்பாங்கனு பேரு. இப்ப பாட்டி. தாத்தாவுக்குக் கூட இந்த ஆசை இல்லாமப் போயிடுத்தோன்னு நெனைக்கறேன். வீட்டை மறந்து ஆபீஸ்ல கொஞ்சம் சந்தோஷமா இருக்கோம். வீட்டை நெனைச்சோம் சங்கடம்தான்..."

"நாம வேலை பார்க்கறதாலதானே... சங்கடமெல்லாம்...."

"வீட்ல இருந்தா, சும்மா விடுவாங்களா? ஒவ்வொருத்தி என்னமா சம்பாதிக்கறா. நமக்குனு வந்து வாய்ச்சது பாருன்னு... தாலி கட்டிய மனுஷரே சொல்லிக் காட்டுவார். தெரியுமா? பொண் பார்க்கறப்பவே, அவ வேலைபார்க்கற கம்பெனியைப் பத்தி விசாரிச்சுட்டு, பிடிக்குமா பிடிக்காதான்னு சொல்ற உலகம்...."

ஷைலஜா டிபன் டப்பாவை மூடினாள். சரஸ்வதி கைகழுவப் போயிருந்தாள்.

"உன் மாமியார் எப்படி? நல்லா கவனிச்சுக் கறாங்களா?"

"தெரியல வனஜா. அவங்க ஊர்ல இருந்து வந்தே மூணு நாள்தான் ஆறது. நானும் அப்பதான் வந்தேன். குழந்தையைக் கவனிக்கவே நேரம் சரியா இருந்தது. இன்னிக்கு ஆபீஸ் போகணும்னு சொன்னதும் திடும்னு கனவில இருந்து முழிச்சிக்கிட்டாப் போல திகைப்பா இருந்தது. இன்னும் ஒரு மாதம் லீவு போடணும்னுதான் நான் நெனச்சேன்...."

"அதிகபட்சமா அவ்வளவுதான் போட முடியும். பணத்தை ருசி பார்த்த மனுஷங்களாலே அந்த ருசியை மறக்கமுடியறதில்லை. புருஷன், மாமியாரை விடு. நமக்கே அப்படித்தான். குழந்தை, குட்டினு வீட்ல உட்கார முடியாது. விலைவாசியும் செலவும் பிடரியைப் பிடிச்சுத் தள்ளுது. ஷைலா, மாமியார்கிட்ட குழந்தையை விட்டதுக்கா இவ்வளவு சோகமா

பிரட்டை ஸ்லைஸ் செய்யாமல் வாங்கி நீள வாட்டத்தில் வெட்டவும். நீளமான அதன் மீது வெண்ணெய் தடவி, அதன் மீது நமக்குப் பிடித்தது போல் ஜாம், சாஸ், சட்னி, கடலை, குருமா என எது வேண்டுமானாலும் தடவவும். ரோல் பண்ணி வட்டமாகக் கட் பண்ணிக் கொடுத்தால் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

— பாலா



நீங்க நெனச்சா முடியாதா?

"போனில் பேசும்போது, நம்மிடம் பேசுவோரது குரல் நமக்குச் சரியாக காதில் விழவில்லையெனில்,

'Speak loudly' என்று சொல்வதற்கு பதிலாக 'Be louder please' என்று சொல்லவேண்டும் என்று குறிப்பிட்டிருந் தீர்கள்.

ஆனால், சிலர் ரிஸிவரை கையில் எடுத்ததும் நம் காது செவிடாகும் வண்ணம் காட்டுக் கத்தலாகக் கத்துகிறார்களே, அவர்களிடம் **'speak slowly'** (மெதுவாகப் பேசுங்கள்) என்று சொல்லலாமா ?" என்று கேட்டிருக்கிறார் சென்னை ஆதம்பாக்கத்திலிருந்து **S. சுஜாதா** என்பவர்.

★ மெதுவாகப் பேசுங்கள் என்பதை **'speak slowly'** என்று சொல்வதற்கு பதிலாக **'softly'** என்று சொல்வதுதான் நல்லது.

இதுபோன்று தொலைபேசி உரையாடல் பற்றி சந்தேகங்கள் கேட்டு ஏகப்பட்ட கடிதங்கள் வந்துள்ளன. ஒரு சில கடிதங்களை இப்பொழுது பார்க்கலாம்.

★ "ஸார் நீங்கள் பேச விரும்பும் நபர் இங்கே இல்லை' என்பதை **'He is not here'** என்று சொல்லலாமா?

V.S. மஞ்சுளா, தாமரைகுளம்

'He is not here' என்று சொல்வதை விட **'He is not in at the moment'** என்று சொல்வது தான் முறையாகும்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்த வேண்டிய சில முக்கியமான விஷயங்கள்.

★ அவர் வெளியே போயிருக்கிறார் என்பதை **'He has gone out'** என்று சொல்லுங்கள்.

இதேபோல,

'He has gone for lunch'. அவர் சாப்பிடப் போயிருக்கிறார்.

'He is out of town'. அவர் ஊரில் இல்லை.

'He is on leave'. அவர் லீவில் (விடுப்பில்) இருக்கிறார்.

'He is on tour'.

அவர் 'டூர்' போயிருக்கிறார் என்றெல்லாம் சொல்லலாம். நீங்கள் இதுபோலச் சொன்னால் அவர்கள் சும்மா இருப்பார்களா ?

மெல்லப் பேசுங்கள்!



எங்கே போயிருக்கிறார் ?

எப்பொழுது வருவார்?

எத்தனை மணிவரை இருப்பார்? என்றெல்லாம் கேள்விகள் கேட்பார்கள் அல்லவா?

இதுபோன்று எத்தனை கேள்விகள் கேட்டாலும் சளைக்காமல் இங்கிலீஷில் பதில் சொல்ல நீங்கள் எளிய முறையில் பயிற்சி பெறலாம்.


ஆர்வமும், முயற்சியும் இருந்தால் ஆங்கிலம் கற்பது மிகவும் சுலபம். அதற்கான பயிற்சியினை அளித்துவருகிறது **விவேகானந்தா கல்வி நிலையம்.**

புது வருடப் பிறப்புக்கு குடும்பத்துடன் நாமக்கல் ஆஞ்சநேயரை தரிசிக்க சென்றோம். சுவாமியை தரிசித்து, பின் பிரகாரத்தில் வலம் வரும்போது, ஒரு நபர் கையில் கற்றை நோட்டீஸ்களுடன் அனைவருக்கும் அளித்தார். ஏதோ சுவாமி ஸ்லோகம் என்று நினைத்து வாங்கிப் பார்த்தேன். அதில் பகவான் மகிமை என்று போட்டு இது போல் 1000 நோட்டீஸ் அடித்து அனைவருக்கும் வழங்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் பேராபத்து வந்து சேருமென்றும், நோட்டீஸ் கொடுத்தவர் மேன்மையையும், கொடுக்காதவர் துன்பத்தையும் அடைவார் என்றும் போட்டிருந்தது. இதைப் படித்தவுடன் கோபம் ஏற்பட்டது.

என் கணவர், நோட்டீஸ் கொடுத்தவரிடம், "புது வருடத்தில் அனைவரும் நல்ல செயல்கள் நடக்க வேண்டும் என்று எண்ணி கோயிலுக்கு வருகின்றனர். நீங்கள் ஏன் இப்படி மிரட்டுவது போல் நோட்டீஸ் தருகிறீர்கள். இது சரியல்ல. இதற்குப் பதில் ஆஞ்சநேயர் சுலோகங்களை வழங்கினால் அனைவருக்கும் நன்மை அளிக்குமே" என்று மிரட்டுவது போல் கூறியவுடன் அவர் வேகமாக ஆலயத்தை விட்டே வெளியேறி விட்டார்.

இதுபோல் பல கடவுளுக்குச் செய்ய வேண்டுமென்று பலர் கார்டுகளை அனுப்புகிறார்கள். அவ்வாறு 1000 நோட்டீஸ், 100 கார்டோ எழுதவதைக், 1000 முறை கடவுளின் நாமாவளியைச் சொல்வதே பலனளிக்கும்.

— புவனா வெங்கடரமணன்



****

இருக்கே..."

"குழந்தைப் பிரிஞ்சதுக்காகத்தான்..."

"அதுகூட இல்லே. மாமியாரும் சேர்ந்து ஆபீஸுக்குப் போன்னு சொன்னதாலேதான் அதிகமா 'பீல்' பண்றே... சரியா...?"

வனஜா சொல்வதுதான் நிஜம். அதுதான் அதிகமாக மனசை உறுத்தியது. "மாமியார்களுக்கும் வீட்ல சகல வசதியும் தேவையாயிருக்கு. மருமகளும் வேலைக்குப் போறதைத்தான் விரும்பறாங்க. ஆனால் ஆயா உத்யோகம் மட்டும் பார்க்க கசக்குது. என் மாமியார்கிட்ட நான் நெறைய அனுபவிச்சிட்டேன் ஷைலா. ஆபீஸ்ல எட்டு மணி நேரம் ஒழைச்சிட்டு பஸ்ஸைப் பிடித்து வீடு போய்ச் சேர்வேன். ஒடம்பு அலுத்துக் களைத்து வரும். என் மாமியார் வாசல்லயே நிப்பாங்க. இடுப்புல குழந்தை அழும். சமாதானப்படுத்தக் கூட மாட்டாங்க. என்னைக் கண்டதும் "இந்தாடியம்மா ஒன் அருமைக் குழந்தை. இனி நீயாச்சு ஒன் பொண்ணாச்சு..."ணு கையில திணிச்சுட்டு... வெளில கௌம்பிடுவாங்க. எனக்கு ஒரு பக்கம் அழுகை, இன்னொரு பக்கம் கோபம்.... வேலையை விட்டுடலாம்னு தினமும் நெனைப்பேன். ஹ்ம். அப்படியும் இப்படியுமா நாள் ஓடி.... இன்னிக்குப் பெண் ஸ்கூல் போறா....

வனஜாவின் பேச்சு, ஷைலாவிற்கு மேலும் வேதனையைக் கிளற... அலுவலகம் மீண்டும் வேலையில் மூழ்கி... அதன் இயந்திர கதியை சீராக இயக்கும் பணியில் ஒன்றாகி.. மணித்துளிகள் கடந்து மணியை மெல்லப் பிடித்து...

ஐந்து முப்பதுக்கு ஷைலா எழுந்து விட்டாள். மற்றவர்களின் வருகைக்காக அவள் காத்திருக்கவில்லை. அவளை பிடித்து வைத்துக் கொள்ள அவர்களும் விரும்பவில்லை.

பஸ்ஸுக்காகக் காத்துக்கிடக்கவில்லை. ஆட்டோ பிடித்தாள். குழந்தை என்ன செய்கிறதோ என்ற கவலை விஸ்வரூபமாகியது. வீடு வருவதற்குள் உத்தேசமாக பணத்தை எடுத்து வைத்து, மீட்டரைக் கூடப் பார்க்காமல் இறங்கி வாசலைப் பார்த்தாள். கதவு தாளிட்டிருந்தது. லேசாகத் தட்டினாள். திறந்தது.

செருப்பைக் கழற்றிவிட்டு கூடத்தில் கால் வைத்தாள். குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. கால் கழுவப் போனாள்.

"இந்தா..." மாமியார் கைகளில் ஆவி பறக்க காப்பி.. "குடி, கொஞ்ச நேரம் குழந்தை பக்கத்துல உட்காரு. சூடா பொங்கல் செய்திருக்கேன். சாப்பிடு, ஷைலா... ஆபீஸ் போகணும், குழந்தைக்கும் தாயா இருக்கணும். குழந்தைய மடியில வெச்சுக்கோ. உன்னோட அணைப்பு, உன் ஸ்பரிசம் உன் கொஞ்சல் எல்லாம் குழந்தைக்குப் பலம். நீ குழந்தையோட இரு. நான் சமையலறையை கவனிச்சுக்கறேன்."

கண்கள் தளும்பின. மனசில் இருந்த உறுத்தல் கண்களின் வழியாக வெளியேறுகிறதோ! மாமியாரை அப்படியே நிற்க வைத்து நமஸ்கரித்தாள். ஏன் எதற்கு என்று புரியவிட்டாலும் மாமியாரின் கண்களிலும் ஏனோ நீர் கோர்த்துக் கொண்டது. இதழ்கள் மென்மையாகப் புன்னகைத்தது.

உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு எதை அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும்.

ஆரோக்கியம் ✓	நவீனம் ✓
சுவையான உணவு ✓	சேமிப்பு ✓
நீடித்த உழைப்பு ✓	வீட்டுபயோகம் ✓
வசதி ✓	சுகம் ✓

நினைவிலிருக்கும்படியான ஒன்றை ✓

மேலுள்ளவைகளுடன் அவர்களுக்கு மற்றொன்றையும் கொடுங்கள்



Premier

Non-Stick Kitchen Collection

தவ்வா, ஃப்ரை பேன், ஸாஸ் பேன் கடாய், அப்பம் பேன், அலுமினியம் மூடி, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மூடி. அனைத்தும் ஒரு கவர்ச்சிகரமான கட்டுக்கோப்பான, அன்பளிப்பிற்குத் தயாரான பெட்டியில்.

Premier Marketing, "Ankur Manor", 182, Poonamallee High Road, Kilpauk, Chennai 600 010., India.
Phone: 8231200, 8231300, 8231400, Fax: 91-44-8231500



பதவி : வேலையிலிருந்து ஓய்வு பெற்ற மதிப்பிற்குரிய வீட்டுத் தலைவர்
(திரு. C. முத்துசுவாமி, I.A.S. (ஓய்வு)

பொறுப்பு : சமூகசேவை, குடும்ப சேமிப்பு, பேரப்பிள்ளைகளுடன் விளையாட்டு.

சிறந்த சேமிப்பிற்கு இவர் சிபார்சு TDFC

வேலையிலிருந்து தானே ஓய்வு என்கிறார் சுறுசுறுப்பான திரு. C. முத்துசுவாமி தன் அன்றாட வாழ்க்கையை மகிழ்ச்சியாக உபயோக முள்ளதாகக் கழிக்க முடியும் என்று உறுதியாகக் கூறுகிறார். வீட்டிலும், வெளியுலகிலும் இளைஞர்களை ஊக்குவிக்கும் உற்சாகம் கொண்ட இவர் சுயமரியாதையோடும் தன்னம்பிக்கையோடும் என்றும் வாழ தனக்கு உறுதுணையாக இருப்பது TDFC என்கிறார். முதலீட்டிற்கு முழுப்பாதுகாப்பு நிலையான நல்ல ஈட்டுத்தொகை, சிறந்த சேவை அளிக்கும் உறுதியான நிறுவனம். இவையனைத்திற்கும் உதாரணமாகத்திகழும் TDFC இருக்கும் பொழுது பஞ்சாய்ப் பறந்து போகும் நிதி நிறுவனங்களைப்பற்றி நினைப்பதற்கே அவசியமில்லை என்கிறார் திரு. C. முத்துசுவாமி.

குறிப்பு: P.T. Consultancy Service நடத்திய ஆய்வின் படி இந் நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களில் 28% பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.

திட்டம் - 1 - தவணை முறையில் வட்டி அளிக்கும் திட்டம்

(குறைந்தபட்ச வைப்புத் தொகை - ரூ. 5,000/-)

- 15 சதவிகிதம் வருட வட்டி மாதந்தோறும் கூட்டு வட்டி முறையில் கணக்கிடப்பட்டுள்ளது குறிப்பிட்ட காலத்தில் வட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச டெபாசிட் தொகை 12 மாதம் ஒருவருக்கு ரூ.10,000-ம் மற்றவைகளுக்கு வழக்கம் போல் ரூ.5,000 ஆகும்.

15% ஒரு வருடத்திற்கு
வட்டி மாதந்தோறும் வழங்கப்படும்.

திட்டம் - 2 - முதலீடு பெருகிடும் திட்டம்

(குறைந்தபட்ச வைப்புத் தொகை - ரூ.3,000/-)

மேற்கண்ட உங்கள் முதலீட்டுப் பெருக்கம் 15% வருட வட்டியில் கூட்டு வட்டி முறையில் பிரதி மாதம் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கொண்டு வைப்புத் தொகை இரண்டு திட்டத்திலும் ரூ. 1000 - ன் மடங்குகளில் மட்டும் ஏற்கப்படும்.

22.16% ஐந்து வருடத்திற்கு திட்டம் 2-ல்

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட்.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : 99, கிரீம்ஸ் சாலை, அலுவலக வளாகம், சென்னை-600 006.
தொலைபேசி : 8278351/8272917/8276059, தந்தி : TAFCON. P.B.No.719.

கிளைகள் :
- பேருந்து நிலையம், காந்திபுரம், கோயம்புத்தூர்-641 044. தொலைபேசி : 437102
- பேருந்து நிலைய வளாகம், திருச்சி-620 001. தொலைபேசி : 464188
- மதுரை-625 001. தொலைபேசி : 741686
- அலுவலக வளாகம், சாலை, -638 001. தொலைபேசி : 78204


இந்த விளம்பரம் கம்பெனியால் 6.10.96 தினமணியில் வெளியிடப்பட்ட சட்டபூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்.

உங்களது முதலீடு "டிடிஎப்சி" யில் பாதுகாப்பானது - பத்திரமானது

DIPR/934/DIS/96/ELEGANT

இந்த மாதம் எப்படி?


மேஷ ராசி :



அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம்.

இராசி நாதனுடன் சேர்ந்துள்ள ராகு, ஆறில் இருந்து கொண்டு மாதம் பூராவும் நன்மையே செய்ய உள்ளார். செவ்வாய் காவல் துறையினர்க்கும், சங்க இலாகாவினருக்கும் அனுகூலமாக இருப்பதுடன் கடன் நிவாரணத்தையும் அளிப்பார் என நம்பலாம். இந்த மாதத்தில் ஸ்ரீ சுப்ரமணியரையும், நாகேசுவரனையும் தினமும் நினையுங்கள். ரோக நிவர்த்தியும் ருண நிவர்த்தியும், புத்திர தோஷ நிவர்த்தியும் ஏற்படும். 11-ல் உள்ள சூரியன் மாதத்தின் முற்பகுதியில் பதவி உயர்வினைத் தரலாம். மாதம் பூராவும் சுக்கிரனது அருள் பரிபூரணமாக இருப்பதால் குடும்பத்தில் குறிப்பாக தாம்பத்திய உறவில் மகிழ்ச்சியும், மன அமைதியும் கிடைக்கும். புதன் நீச்சம். புதன் நின்ற ராசி நாதனும் நீச்சம். எனினும் புதன், சனி, ராகு மூவருமே மீனத்தில் நின்று, சனியும் குருவும் பரிவர்த்தனை பெறுவதால் பாவக்கிரகங்களால் சாதகம் அதிகமில்லை எனினும் பாதகமில்லை எனலாம். உங்கள் முயற்சியில் சில தேக்கங்கள் ஏற்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமலும் போகலாம். எனவே எவரிடத்திலும் எதற்காகவும் வாக்கு தரவோ, ஜாமீன் நிற்கவோ வேண்டாம். அலுவலகப் பெண்டிர் சுக்கிர உச்சத்தால் பிறர் மெச்சத்தக்க விதத்தில் சாதனைகளைப் புரிய முடியும். 15, 16 தேதிகளில் மகிழ்ச்சி கூடும்.

ரிஷப ராசி :



கிருத்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 ஆம் பாதங்கள்.

யோககாரகனாகிய சனி உங்களின் அன்றாடப் பணிகளில் வெற்றியைக் கொடுப்பார். மாதத்தின் பிற்பகுதியில் நடிப்புத் துறையினர்க்கும், கலைஞர்களுக்கும் ஏற்றதொரு சூழ்நிலை உருவாகி புதுப் பட ஒப்பந்தம், கச்சேரிகள் என ஏற்பட்டு பொருளாதார நிலை உயர்வை நோக்கி நடை போடும். நிதி சம்பந்தமான விவகாரங்களில் ஈடு பட்டுள்ளவர்களுக்கு, இதற்கு முன் இருந்த இறுக்கமான சூழ்நிலை மாறி, எதையும் சுலபமாகச் சாதிக்கும் நிலை உருவாகும். குருவின் பார்வையும் சுப நிகழ்ச்சிகளுக்கு உதவும். இதுவரை உங்களை அலைக் கழித்துக் கொண்டிருந்த ஒரு விஷயத்தில் மன நிம்மதி அளிக்கும் வகையில் சுபமான முடிவு ஒன்று ஏற்படும். பழைய பாக்கிகளும் வசூலாகும். பெண்களுக்கு எதிர் பார்த்த வகையில் பதவி உயர்வு, அல்லது சொத்து, நகை வாங்குதல் போன்ற விஷயங்களில் வெற்றி உண்டு. இதற்கு முன் பங்கு மார்க்கெட்டில் பணம் போட்டோ, அல்லது நிலையற்ற நிதி நிறுவனங்களில் பணத்தைப் போட்டோ ஏமாந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மார்ச் 1997

ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29
30	31					

மிதுன ராசி :



மிருகசிரிஷம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

மாதத்தின் முற்பகுதியில் சுக்கிரனால் கலைத்துறையினர்க்கு அனுகூலம் உண்டு. நீச்ச புதனால் காரியானுகூலம் ஏற்படும் எனச் சொல்வதற்கில்லை. பிற்பகுதியில் பணி புரியும் இடங்களில் மனம் மகிழும் வண்ணம் மேலதிகாரிகளிடம் நற்பெயர் வாங்குவீர்கள். ஆனால் வீட்டில் 10-ஆம் இடத்துச் சுக்கிரனது சஞ்சாரத்தால் குழப்பமும், ஒரு பெண்ணால் மன வருத்தமும் ஏற்படலாம். இரண்டாமிடத்தையும், விரய ஸ்தானத்தையும், மற்றும் சுகஸ்தானத்தையும் குரு பார்ப்பதால் நன்மைகள் கூடுதலாகவே நடை பெற வேண்டும். புதன் ஆட்சி உச்சத்திலிருந்து திசை நடப்பவர்களுக்குக் கவலை இல்லை. ஸகலமும் நன்றாகவே இருக்கும். சுப காரியம் கூட நிறை வேறும். மாணவ மாணவியர் கல்வியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இந்த இராசி குழந்தைகளின் பெயரில் தட்க்ஷிணாமூர்த்திக்கும், புதனுக்கும், விநாயகருக்கும் அர்ச்சனை செய்வது நல்லது. மாதப் பிற்பகுதியில் வக்கிரம் பெறும் செவ்வாயும் குருவின் பார்வையைப் பெற்று அனுகூலம் செய்யலாம். ஏழைகளுக்கும், முடவர்களுக்கும் தான தருமம் செய்யலாம். பெரிய நிறுவனத்தின் தலைவராக நீங்கள் இருந்தால் தருமஸ்தாபனங்களுக்கு நன் கொடையளிப்பது நல்லது. குறிப்பாக ஏற்றமும் இறக்கமும் உள்ள மாதம் எனலாம். திருவாதிரை நட்சத்திரக்காரர்களுக்கு பணப் பற்றாக்குறை கூட ஏற்படலாம். பிரதோஷத்தன்று சிவனைத் தரிசிக்கலாமே? அல்லது குருவாயூரப்பனைப் போய்ப் பார்த்துச் சேவித்து விட்டு வாருங்களேன்.


☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

விளையாட்டுக்குக் கூட குழந்தைகளை மாடிப் படியின் கைப்பிடி சுவர், பால்கனி சுவர், வீட்டின் காம்பௌண்டு சுவர் போன்றவற்றின் மீது உட்கார வைத்து ஆடக் கூடாது. சில சமயம் குழந்தை நாம் சற்று கவனக் குறைவாக இருக்கும் போது கையிலிருந்து துள்ளி கீழே விழுந்து விடும்.

— கல்யாண்



கடக ராசி :



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

குருவின் பார்வை உதவும் நிலையில் உள்ளதால் குழந்தைகளைப் பற்றிய கவலை குறையும். மூன்றாம் இடத்து ராகுவும் பிதுர் வம்சத்து சொத்தை நீங்கள் அடைய உதவலாம். மண் காரகனாகிய செவ்வாயுடன் சேர்ந்ததால் அது நிலமாகக் கூட கிடைக்கலாம். சுக்கிரனால் மாதம் பூராவும் உதவும் நிலை உள்ளது. பல நாட்களாக எதிர் பார்க்கும் ஏதோ ஒரு இனத்தில் உங்களுக்கு வெற்றி கிடைக்க லாம். கண் பாதிக்கப்பட்டு சரியாகும். 9-ல் உள்ள புதனின் சஞ்சாரம் சரியாக இல்லை. அதனால் மருத்துவச் செலவு உண்டாகலாம். எனினும் சனி குரு பரிவர்த்தனை உங்களுக்குச் சாதகமாகவே இருக்கும். கேது 10-ல் இருந்தால் அரசாங்க சம்பந்தமான வழக்குகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும். அரசியல் வாதிகள், காவல் துறையினர், நிதிப் பொறுப்பில் இருந்தவர்கள், ஆகியவர்களுக்குச் சற்று சோதனை தரும் நிலை என்றாலும் சுக்கிரன், குரு ஆகிய சுபர்களால் விபரீதம் ஏதும் ஏற்படாமல் தடுக்கப்படும். பதவியையும், பொருளையும் இதற்கு முன் இழந்தவர்கள் கார்த்த வீரியார்ஜுன ஜெபம் சொல்லுவது நல்லது. கொடுத்த கடன் வசூலாகவும், வழக்குகளில் வெற்றி பெறவும் இந்த ஜெபம் உதவும். மொத்தத்தில் சென்ற ஆண்டு போலல்லாமல் நல்லதொரு நிலை உங்களை நாடி வரும். கவலை வேண்டாம். யாரிடமும் படபடப்போ, கோபமோ காட்டாமல் அமைதியான முறையில் உங்கள் அன்றாடப் பணியைச் செய்தாலே, நல்லவை யாவையும் உங்களை நாடி வர குரு அருள் புரிவார்.

சிம்ம ராசி :



மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்.

மாதத்தின் முற்பகுதியில் எட்டாமிடத்தில் மூன்று கிரகங்களும், பிற்பகுதியில் 5 கிரகங்களும் உங்களுக்குச் சில பாதிப்புக்களை உண்டாக்கும் என்கிறது கோட்சாரம். ஆனால் சனியும் குருவும் பரிவர்த்தனை பெறுவதும், புதன் சுக்கிரன் எட்டில் அமர்வதும்

பாம்பினோ ஹல்வா



தேவையான பொருட்கள்: 200 கிராம் பாம்பினோ வெர்மிசெல்லி, 250 கிராம் சர்க்கரை, 500 மில்லி பால், 50 கிராம் உலர்ந்த தேங்காய் பொடி, 50 கிராம் வனஸ்பதி, 10 கிராம் முந்திரி, 10 கிராம் உலர்ந்த திராட்சை, 6 ஏலக்காய்கள், ஒரு சிட்டிகை கலர். **தயாரிக்கும் முறை:** பொன் அரக்கு நிறமாகும் வரை பாம்பினோவை வனஸ்பதியில் வறுத்துக் கொள்ளவும். பின் எடுத்து தனியாக வைத்துக் கொள்ளவும். பாம்பினோவை பாலில் அதை கெட்டி வரை இறுகிக் கொள்ளும் வரை சிறிய தீக்கூட்டில் வேக வைக்கவும். சர்க்கரை கலர் மற்றும் தேங்காய்ப்பொடியை அதில் சேர்க்கவும். 3 முதல் 5 நிமிடம் வரை ஆறவிடவும். அதன்பின் திராட்சை, முந்திரியைக் கொண்டு அலங்கரிக்கவும். **துண்டுகள்:** ஒரு சமமான தட்டில் சிறிது எண்ணெயைத் தடவி அதன்மீது ஹல்வாவை பரப்பவும். அரைமணி நேரம் கழித்து உங்களுக்கு பிடித்த வடிவங்களில் துண்டுகள் போடவும்.



இத்தனை எதுக்கு ?
எதுக்குன்னா, அம்மா
பாம்பினோவால
செய்யப்போறது
சூப்ப்ப்பரான **ஹல்வா,**
புலாவ், **பாயசம்,**
இன்னும் பலபல .....



BAMBINO

இந்தியாவின் No.1 சுவையுள்ள வெர்மிசெல்லி.

Mudra : BMO : 97004 Tam

கடையில் வாங்கும் நல்லெண்ணெய் பச்சையாக உபயோகிக்கும் பொழுது சில சமயம் காரல் அடிக்கும். இட்லிக்கு ஊற்றிக் கொள்ள நல்லெண்ணெயை இலேசாகக் காய்ச்சி சிறிது கடுகு, பெருங்காயம் தாளித்து உப யோகப்படுத்தினால் கூட இரண்டு தட்டு இட்லி வார்க்க வேண்டியிருக்கும்.



— உஷா நாராயண்

உள்ளபடியே உங்களுக்கு உன்னதமான நிலையைத்தான் தரும். ஆறாம் வீட்டில் நீச்சம் பெற்ற குரு மறைந்தும் நிற்கிறார். ஆனால் சனியுடன் பரிவர்த்தனை இது உதவுமா, கோட்சார ரீதியாக இது சரியா என்றெல்லாம் குழப்பம் அடைய வேண்டிய அவசியமில்லை. பிறந்த ஜாதகத்தின் தசா புத்திக்கு ஏற்பவும் பலன் நடக்க வேண்டுமல்லவா! எனவே ஜாதகத்தில் குரு, ராகு, சூரியன் நல்ல நிலையிலிருந்து அவர்களது தசை அல்லது புக்தி நடப்பவர்கள் கவலையே பட வேண்டியதில்லை. இந்த மாத கிரக சேர்க்கைகள் முரண்பாடானதொரு நிலையை உண்டாக்கும். அதனால் இயல்பாகவே சற்று முன் கோபமும், சிடுசிடுப்பும் உடையவர்கள் இந்த ஆண்டு பூராவும் சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. செலவுகள் கட்டுக் கடங்காமல் செல்லலாம். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தன்மையைக் கொண்டவர்களுக்கு நன்மை கூடுதலாக இருக்கும். எனவே சிம்ம ராசிக்காரர்களைப் பொறுத்தமட்டில் இந்த ஆண்டு பூராவுமே அவர்களது சொல், பழகும் தன்மை, உயர்வு மனப்பான்மையைக் குறைத்துக் கொள்ளுதல் போன்ற குணங்களால் உயர்வான நிலையை அடைய முடியும். ஆதித்யஹிருதயம், ஐக்கிய மத்ய ஜெபம் செய்வது நல்லது. இரண்டில் உள்ள செவ்வாய் கூடப் பிறந்தவர்களின் உடல் நிலை பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே அங்காரகனுக்கு அர்ச்சனை செய்யலாம்.


கன்னி ராசி :



உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2, ஆம் பாதங்கள்.

சுக்கிரனால் சுகமில்லை. குருவின் பார்வை இராசிக்கு இருப்பதால் ஏழில் உள்ள கிரகங்களினால் ஏற்படும் பாதகங்களால் பாதிப்பு அதிகம் ஏற்படாது எனலாம். மாதம் பூராவுமே இராசி நாதன் நீச்சத்தில் இருப்பதால் பணப் பற்றாக் குறை, எதிர் பார்த்த இனங்களில் ஏமாற்றம், செய்யும் தொழிலில் சில அனாவசியக் குறுக்கீடுகள் என பல விதத்தில் பாதகங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சனி, குரு பரிவர்த்தனை காரணமாக அவர்களின் பார்வை ராசிக்கு இருப்பது ஒரு விதத்தில் பலம் தரும். அத்துடன் மாதத்தின் முற்பகுதியில் சூரியனால் அரசியல்வாதிகளுக்கும், அரசுத்துறையிலிருப்பவர்களுக்கும் தனலாபமும், உடல் ஆரோக்கியமும் நன்கு அமைவதுடன், எதிரிகளின் எதிர்ப்பு இவர்களை ஒன்றும் செய்து விடாது. பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து மீள ஸ்ரீ குபேர யந்தரத்தை வீட்டில் வைத்து பூஜை செய்யலாம். கட்டுரையின் கடைசி பகுதியில் எழுதியுள்ள மந்திரத்தை நன்கு ஜெபிக்கவும். நிதி நிலை சீரடையும். பதவி உயர்வும் உண்டு. குரு பார்வையால் எதிர் பார்க்கும் திருமணம் கை கூடி வரும். ஏற்றத் தாழ்வுகள் உள்ள மாதம். விஷ்ணு ஸ்தோத்திரமோ, கனக தாரா ஸ்தோத்திரமோ படிப்பது நல்லது.

துலா ராசி :



சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

மாதம் பூராவும் புதன், சனி, கேது ஆகியவர்களும், முற்பகுதியில் சுக்கிரனும், பிற்பகுதியில் சூரியனும் உதவும் நிலை. எனவே இந்த ராசிக் குழந்தைகளின் கல்வி நலன், உடல் நலன் ஆகியவை நன்றாகவே அமையும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிர் பாராத தனலாபமும் கிடைக்கும். அரசுத்துறையினரிடமிருந்து அனுகூலமான பதிலோ, பழைய பாக்கித் தொகையோ வரலாம். பொது நலத் தொண்டில் ஈடுபடுபவர்களும், கலைஞர்களும், நடிப்புத் துறையினரும் நன்கு பாராட்டப்படுவார்கள். 12-ல் ராகு இருப்பதால் தலை சுற்றல், பித்த மயக்கம், இதன் காரணமாக மருத்துவச் செலவு ஆகியவை ஏற்படலாம். அலைச்சலும் உண்டு. மாதத்தின் பிற்பகுதியில் சூரியனும் செவ்வாயும் உங்களுக்கு நன்மை செய்ய இருக்கிறார்கள். சகோதரர்களால் மகிழ்ச்சியும் வஸ்திர லாபமும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கும், பெரியளவு நிறுவனங்களில் உள்ளவர்களுக்கும் வருமான வரி

இலாகாவினரால் எதிர் பாராத செலவினங்கள் வரும்.


விருச்சிக ராசி :



விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

ராகுவால் உடல் நலம் நன்கு அமையும். தனலாபமும் உண்டு. மாதத்தின் முற்பகுதியில் செவ்வாய் பழைய கடன் பாக்கி ஒன்றை நீங்கள் திருப்பிப் பெற உதவுவார். சுக்கிரன் மாதம் பூராவும் தாம்பத்திய உறவில் மகிழ்ச்சியையும் மன நிறைவும் பெறும் வண்ணம் சஞ்சரிக்கிறார். மாதத்தின் பிற்பகுதியில் சுக்கிரன் உச்சம் பெறும் சமயம் ரியல் எஸ்டேட் சம்பந்தமான முயற்சியில் வெற்றியைத் தருவார். ஒரு புனித யாத்திரையை மேற்கொண்டு ஆன்மீகத்தில் சிறந்து விளங்கும் குரு மகான் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். பதவி மாற்றத்திற்கும் வாய்ப்பு உண்டு. ஒரு பெண் சம்பந்தமாகச் சில சோதனைகள் வரலாம். அது உங்கள் வீட்டில் இருக்கும் பெண்ணாகவும் இருக்கலாம். எனவே எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. நீச்ச புதன் இல் வாழ்க்கையில் சில பிரச்னைகளை உண்டாக்கினாலும், சுக்கிரனால் அது சரி செய்யப்பட்டு விடும். 5-ல் கேதுவின் சஞ்சாரம் நன்கு அமையவில்லை. எனவே உங்கள் குழந்தைகள் சம்பந்தமான கல்வி விஷயங்களில் மனக்கவலை ஏற்படலாம். கல்வியில் அவர்களது ஆர்வம் குறைய ஆரம்பிக்கும் வாய்ப்பு உண்டு. எனவே அதற்கேற்ப அவர்களுக்குரிய உற்சாகத்தையும் உதவியையும் செய்வதே சிறந்த பரிகாரம் தரும். அதற்கு மாறாக கண்டிப்பும், கடுஞ்சொற்களும் அவர்கள் திருந்துவதற்கு பதிலாக மேலும் தலைவலியைத்தான் தருவார்கள். நவக்கிரகங்களுக்கும், தட்சிணாமூர்த்திக்கும் அர்ச்சனை செய்யலாம்.

தனுசு ராசி :



மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

குடும்பஸ்தானம், தனஸ்தானம், வாக்குஸ்தானம் எனப் பலவாறு புகழப்படும் இரண்டாம் ஸ்தானத்தில் குரு நீச்சம் அடைந்து, சனீஸ்வரனுடன் பரிவர்த்தனை பெறுவதால் தொழிலில், உத்தியோகத்தில், அல்லது கல்வி கற்பதில் ஏமாற்றம் ஏற்படாது. சனீஸ்வரனும், குருவும் அப்படி இணைந்து உதவும் நிலை. அத்துடன் குடும்ப சுகத்திற்கும், சுப நிகழ்ச்சிகளுக்கும் சுக்கிரன் உதவுவார். புதன் மாதம் பூராவும் சுகஸ்தானத்தில் நீச்சம் பெற்றாலும் பரிவர்த்தனை பெறும் சனியுடனும், நன்மை புரியும் வகையில் உள்ள சுபரான சுக்கிரனுடன் மாதத்தின் பிற்பகுதியில் சேருவதாலும் உங்களுக்கு நன்மைகள் அதிகம் நடந்திட வேண்டும். அதனால் உத்தியோக உயர்வு உண்டு. பழைய பாக்கியும் வசூல் ஆகும். நீங்கள் செய்யும் எத்தொழிலிலும், பணி புரியும் எத்துறையிலும் உங்கள் கை ஓங்கி இருக்கும். செல்வாக்கு மிக்க மாதமாக இருக்கும். தாம்பத்திய உறவு மகிழ்ச்சியாகவே இருக்கும். 9-க்கும் 10-க்கும் உடைய சூரியன், புதன் ஒன்று சேர்ந்து 4-ல் இருப்பதால் தரும கரும அதிபதி யோகம் எனும் பலத்த யோகம் உண்டு. இதனால் வீடு, வாகனாதி லாபம் கிடைக்கும். புத்திரப்பிராப்தி உண்டு. வீட்டில் சுப நிகழ்ச்சி ஒன்று நடக்கும்.

மகர ராசி :



உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்.

செவ்வாய், ராகு மற்றும் மாதத்தின் முற்பகுதியில் சூரியன் ஆகியவர்களால் சிறு சிறு பிரச்னைகள் உடல் சம்பந்தமாகவும், மற்றும் தொழில் சம்பந்தமாகவும் ஏற்பட்டுப் பிற்பகுதியில் சரியாகும். மாதம் பூராவும் புதன் நீச்சம் பெறுவதால் அரசுத் துறையில் பணி புரிபவருக்கு மேலதிகாரிகளால் சற்றுத் தொல்லைகள் உண்டாகக் காரணமாவான். அதனால் வைணவக் கோயில்களுக்குச் சென்று பெருமாளுக்கு அர்ச்சனை செய்யலாம். என்றோ யாரோ செய்த தவறுகளுக்கு நீங்கள் இன்று பதில் சொல்ல வேண்டிய நிலை அத்துடன்

மற்றவர்களிடம் ஏற்பட்டால் எதைக் குற்றம் என்று நாம் எண்ணுகிறோமோ, அதுவே நமக்கு ஏற்பட்டால் சோதனை என்று அழைக்கிறோம்.

— எமர்சன்

தகவல் : எம்.எம். ஆனந்தன்



நிதிப் பொறுப்பில் உள்ளவர்கள் கவனமுடன் செயலாற்ற வேண்டிய கால கட்டம். வேண்டியவர்களாலே கூட உங்களுக்கு சற்று பிரச்னைகள் தோன்றலாம். மற்றபடி எல்லா கிரகங்களும் மூன்றாமிடத்தில் உதவும் நிலையிலேயே இருப்பதால் வீண் கவலைகள் ஏற்படாது. ஒரு சிலருக்கு உத்தியோக உயர்வு, வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைத்தல், நகைகளை விடுவித்தல் போன்ற நற்காரியங்களும் நடக்கும். சுக்கிரனால் சுபவிரயம் ஒன்று ஏற்படும். அது திருமணமோ, அல்லது அது போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாலோ ஏற்படலாம். வஸ்திர, வாகன லாபமும் உண்டு. நீண்ட கால வழக்கு ஒன்று உங்களுக்குச் சாதகமாக முடிவடையும். சனீஸ்வரனை ஆராதியுங்கள். முடிந்தால் மிருத்தியுஞ்சய ஜெபத்தையும், சுதர்ஸன ஜெபத்தையும் தினமும் முடிந்த அளவிற்குச் செய்யுங்கள்.

கும்ப ராசி :



அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்.

இராசி நாதன் பரிவர்த்தனை பெறுவதால் சற்று சிரமங்கள் குறையலாம். சுக்கிரனால் மாதம் பூராவும் நன்மை உண்டு. மற்ற கிரகங்கள் எதிர் பார்க்கும் எந்த இனத்திலும் வெற்றியைப் பெற உதவமாட்டார்கள். சற்று சிரமமான மாதமே. நவக்கிரக அர்ச்சனை அவசியம் செய்யுங்கள். புதுப்படமோ, தொழிலோ, வியாபாரமோ ஆரம்பிப்பதற்கு உகந்த மாதமல்ல. எதிலும் எச்சரிக்கை, எங்கும் அளந்து பேசுதல் போன்ற கொள்கைகளைப் பின் பற்றுவது நல்லது. குரு 12-ல் நீச்சமானாலும் பரிவர்த்தனை என்பதால் பாதகம் செய்ய மாட்டார். இருட்டில் விளக்கு இல்லாமல் நடமாட வேண்டாம். பூச்சித் தொல்லைகளுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படலாம். ஸ்ரீ துர்க்கை, லக்ஷ்மி, மற்றும் நாவலடியான், சனீஸ்வரர் ஆகியவர்களைத் தொழுங்கள். ஏதேனும் புண்ணியஸ்தலம் சென்று வரலாம். அடுத்து வரும் மாதங்களில் நிலைமை படிப்படியாகச் சீரடையும். தசாபுக்தி நன்கு அமைந்தவர்களுக்கு இந்த கோட்சாரத்தினால் பாதகம் ஏற்படாது.

மீன ராசி :



பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

மாதத்தின் முற்பகுதியில் இராசியில் மூன்று கிரகங்கள், பிற்பகுதியிலோ ஐந்து கிரகங்கள். குரு இலாபத்தில் பரிவர்த்தனை. சுக்கிரன் உச்சம் பெறும் காலத்தில் எதிர்பாராத வகையில் திருமணம் கைகூடி வரும். வேலை கிடைக்கும். புதுத் தொழில் ஆரம்பிப்பீர்கள். வெளிநாடு செல்லும் நிலையும் உண்டு. வீடு ஒன்று வாங்குவீர்கள். அல்லது கட்டுவீர்கள். இதுவரை விற்காத மனை ஒன்று மாதத்தின் பிற்பகுதியில் விற்பனை ஆகி விடும். நகை வாங்க நல்லதோர் சமயம் கனிந்து வந்துள்ளது. புதனும் நீச்சபங்க ராஜ யோகம் தருவார். குறிப்பாக இந்த இராசிப் பெண்களுக்கு ஆதாயம் அதிகம் ஏற்பட சுக்கிரனும் புதனும் உதவுவார்கள். பாம்புக் கிரகங்கள் சற்று பாதகத்தைத் தரலாம். அதனால் வீட்டில் உள்ள வயோதிகப் பாட்டி, பாட்டனார் போன்றவர்களுக்கு உடல் பாதிப்பு வரலாம். சூரியன் அரசுப் பணியில் உள்ளவர்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் தொல்லை தரலாம். எனினும் சுக்கிர பலமும் குரு சனி பரிவர்த்தனை பலமும் உங்களுக்கு எந்தவித பாதகமும் எதனாலும் ஏற்படாமல் கேடயமாக நின்று காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருங்கள். விநாயகரையும், ஷண்முகனையும் வணங்குங்கள். முடிந்தால் சூரியனார் கோவில், வைத்தீஸ்வரன் கோவில் அல்லது குருவாயூர் சென்று வாருங்கள். அல்லது அந்தந்த தெய்வங்களுக்குரிய தோத்திரப் பாடல்களைக் கூறி வீட்டிலேயே விளக்கேற்றுங்கள். இரும்பு அகலில் நல்லெண்ணெயில் திரியிட்டு, மேற்கு திக்கு நோக்கி விளக்கேற்றுங்கள். ஆறுமுகனைத் தொழுங்கள். கவலைகள் அகலும்.

குபேர மந்திரம்

திருமலை வாசனே தன் திருமணத்திற்குத் தேவையான பணத்தை குபேரனிடமிருந்து கடனாகப் பெற்று வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்றால் நாமெல்லாம் எம்மாத்திரம்! எனவே நாமும் அந்தக் குபேரனைத் தஞ்சம் அடைவோம். அவரது அருள் இருப்பின் பொருள் தானாக வந்து குவியும். அதற்காகத் தினமும் கீழ் காணும் ஸ்லோகத்தை 11 முறை காலையில் குளித்தவுடன் சொல்லி வருவதன் மூலம் நமது பணக் கஷ்டம் தீரும். சற்று இன்னும் நியமத்துடன் செய்ய விரும்புகிறவர்கள் குபேர யந்த்ரத்தை வாங்கி வைத்து, இந்த ஸ்லோகத்துடன் தியான ஸ்லோகத்தையும் கூறி, தூப, தீப, நிவேதனத்துடன் நீராஞ்சனத்தைக் காட்டியும் வேண்டிக் கொள்ளலாம். இவ்வாறு துதிப்பதால் வறுமை அகலும். தனம், வீடு, வாகனம், குறைவற்ற செல்வம் நம்மை வந்தடையும்.

ஸ்லோகம் :

''ஓம் யக்ஷாய குபேராய வைஸ்ரவணாய
தநதாந்யாதிபதியே
தநதாந்ய ஸம்ருத்திம்மே
தேஹி தாபய ஸ்வாஹா''

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்


ரூ. 3000/- பெறுமானமுள்ள ஏ.ஆர்.சி. ஜுவல்லர்ஸ் தங்கநகை பரிசு பெறும் கட்டுரை :

அடுத்தவள் செய்தால் தவறு; தான் செய்தால்?

சென்னையிலிருந்து புறப்பட்ட ரயிலில் பெண்கள் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்த நான் அன்றைய தினசரி பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் தாலி பற்றி பல செய்திகள் வந்திருந்தன. தாலியை பறித்துக் கொண்டு ஓடிய திருடனைப் பற்றியும், தாலியைப் பிடுங்கிக் கொண்டு மனைவியைத் துரத்திய கணவனைப் பற்றியும், தங்கம் விற்கும் விலையில் தாலிக்குத் தங்கம் வாங்குவது கூட கடினம் என்பது போன்ற பல தகவல்கள். என்னிடமிருந்து பேப்பரை வாங்கிப் படித்த என் எதிர் இருக்கையி லிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி கூறிய குற்றச்சாட்டுகளுள் சில –

"இன்றைய பெண்கள் தாலியை மதிப்பதே இல்லை, கையில், காதில் போடும் அணிகலனைப் போல்தான் தாலியும் ஒரு அணிகலன் என்றே நினைக்கிறார்கள், பணத் திற்காக சிலர் தாலியையே விற்கிறார்கள், கணவனிடம் சண்டை போட்டுக் கொண்டு தாலியையே கழற்றி எறிகிறார்கள்."

உடன் பயணித்த ஒரு பெண்மணி, "அவ ரவர் மனதைப் பொறுத்தது இந்தத் தாலி விஷயம். சந்தர்ப்ப சூழ்நிலைகள்தான் பெண்களை இந்த மாதிரி நடக்கவைப்பது" என்று கூறினார்.



ஒரு இளம் பெண் "தாலிதான் கணவன் மனைவி பந்தத்தைக் காட்டு கிறது என்று நினைப்பது தவறு. தாலி குறித்து நாம் கொண்டிருக்கும் நம்பிக் கைகள் சில மூட நம்பிக்கைகள்தான்" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே அந்த எதிர் இருக்கை பெண்மணி அந்த இளம் பெண் மணியுடன் காரசாரமாக விவா தமே செய்து விட்டார். முடி வாக அவர் "ஒரு பெண் சாகும் வரை அல்லது விதவையாகும் வரை அவள் தாலி கழுத்தைவிட்டு இறங்கவே கூடாது." என்று கூறி முடித்தார். மற்றவர்களும் அந்தத் தாலிப் பேச்சை அத் துடன் விட்டு வேறு பேச்சுக்கு மாறிவிட்டனர். சிலர் தூங்க வும் ஆரம்பித்து விட்டனர்.

நடு இரவு திருச்சி ஸ்டேஷனை வந்தடைந்த ரெயில் சில நிமிடங்கள் நின்று புறப்படத் துவங்கியவுடன் ஒருவர் ஓடி வந்து பெண்கள் பெட்டியின் பூட்டிய கதவுகளுக்கு வெளியே படிகட்டில் தொற்றிக் கொண்டார். ரயிலும் வேகமெடுத்தது. அந்த மனிதர் கதவைத் தட்டி திறக்கச் சொன்னார். தான் தண்ணீர் குடிக்க கீழே இறங்கியதாகவும், திரும்பி பெட்டிக்குச் செல்லு முன் ரயில் புறப் பட்டு விட்டதாகவும் கூறினார். கதவைத் திறக்கப் போன ஒரு பெண்மணியை மற்றவர் கள் தடுத்தனர். திருடனாக இருந்தால் என்ன செய்வது என்று கூறினர்.

திடீரென ஒரு பெண்மணி அந்தப் பெட்டி யின் மற்றொரு கதவின் பின்புறமும் ஓர் ஆள் இருப்பது போல் தோன்றுகிறது என்றும்,

மங்கையர் மலர் & ஏ.ஆர்.சி ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும்

பொன்னான தருணங்கள்

நான்கு கதவின் பின்புறம் திருடர்கள் இருந்தாலும் இருக்கலாம் ஆகவே எந்தக் கதவையும் திறக்க வேண்டாம் என்றும் கூற எல்லா ஜன்னல் கதவுகளும் பட்டென்று இறக்கப் பட்டன. சிலர் கடவுளை பிரார்த்திக்கத் தொடங்கினர். சிலர் நகைகளைக் கழற்றி பத்திரப்படுத்தத் தொடங்கினர். என் எதிர் இருக்கைப் பெண்மணி தன் நகைகளை (தாலி உட்பட) கழற்றி கைக்குட்டையில் சுற்றி இடுப்பில் செருகிக் கொண்டார். இதைப் பார்த்த மற்றவர்களுக்கோ ஆச்சர்யம்.

ஒரு பெண் அபாயச் சங்கிலியை இழுக்க, வண்டி நின்றது. படிக்கட்டிலிருந்தவர் இறங்கி ஓடி விட்டார். அதிகாரிகள் எங்கள் பெட்டிக்கு வந்து காரணத்தைக் கேட்டுவிட்டுப் போக ரயிலும் புறப்பட்டது. பெண்களிடையே மீண்டும் "திருட்டுப் பயத்தில் தாலியையே கழட்டி மறைக்கும்" பேச்சு துவங்கியது. ஆனால் அந்த எதிர் இருக்கை பெண்மணியோ கண்ணை மூடிக் கொண்டு தூங்குவது போன்று சாய்ந்து உட்கார்ந்து கொண்டார். நாங்களோ சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டோம்.

— ரமணி தாணுபிள்ளை, சென்னை - 81.


பிரசுரத்திற்கு.....

'பெருமாளே இருக்கட்டும்னு சொன்னார்!'

தாலிக்கொடி விஷயம் மிகச் சமீபமாக என்னையே அசரவைத்தது காரணம், (நான் பள்ளியில் பணிபுரியும் பயாலஜி ஆசிரியை.) எனக்குக் கடவுள் நம்பிக்கை அத்தனை இல்லை. ஆனால் எண்ணத்தின் வலிமையில் அசாத்தியமான அசைக்க முடியாத நம்பிக்கை. சரி விஷயத்திற்கு வருவோம்...

என்னுடன் பணிபுரியும் வரலாற்று மேடம் சாந்தாவிற்கு 31, 32 வயதில் இரண்டே பெண்கள். அவர்கள் படித்த அழகான பெண்கள் தான். ஆனால் என்ன பாடுபட்டும் சரியான வரன் மட்டும் ஏனோ அமையவேயில்லை. என்னென்னவோ பிரார்த்தனை, பரிகாரம் என மேடம் செய்தது ஊருக்கே தெரியும். அவருடைய பிரச்னை தீர்ந்தபாடில்லை. அன்று ஃப்ரீ பிரியடில் சக ஆசிரியைகளுடன் இந்த பிரச்னையைத்தான் பேசிக் கொண்டிருந்தார். பக்கத்திலிருந்த தமிழ் மேடம்,

"சாந்தா உன்னோட தாலிக்கொடிய திருப்பதி உண்டியல்ல போடறதா இப்பவே வேண்டிக்க... கண்டிப்பா கல்யாணம் நடக்கும்" என்றார். சாந்தா மேடம் உடனே தலையாட்ட




தொடங்கும் முன் அவரைக் கையசைத்து நிறுத்தினேன்.

"மேடம் தப்பா நெனைக்கலேன்னா நா ஒண்ணு சொல்லுவேன்" என, அதிகம் வாய்திறவாத நான் முன் வந்தது கண்டு அவருக்கு ஆச்சர்யம். "அட... என்னவாயிருந்தாலும் சொல்லும்மா..." என்றார். "உங்க தாலிய பாத்தா அஞ்சாறு பவுன் தேர்ற மாதிரி இருக்கே" என்றேன். "ஆமா. கவுண்டருங்க இப்பிடித்தான் போடுவோம்" என்றார். "தயவு செஞ்சு, இத உண்டியல்ல போடறதுக்குப் பதிலா நா சொல்ற மாதிரி செஞ்சுபாருங்க. இன்னித்த மதிப்புப்படி இது இருவத்தஞ்சாயிரமாவது தேறும். அந்தத் தொகைய அஞ்சா பிரிச்சு அஞ்சு ஏழைப் பொண்ணுங்க கல்யாணத்துக்குத் தாலிக் கொடியா குடுத்துருங்க.. எண்ணி அஞ்சே மாசத்துல உங்க பொண்ணுங்க கல்யாணம் நடக்கலே... இந்த வேலைய நான் ரிசைன் பண்ணிடறேன். ஆனா ஒண்ணு ரொம்ப முக்கியம், 100% அசைக்க முடியாத நம்பிக்கையோட இதைச் செய்யணும்" என நான் அசாத்திய உறுதியுடன் கூறுவது கண்டு அவரது கண்கள் மின்னின. அப்போதைக்கு அவர் ஒன்றும் கூறவில்லை. பின் நான் தனியாக இருந்த போது "உனக்கு, ரொம்ப ஏழைப் பொண்ணா.. தெரிஞ்சவங்க யாராவது இருந்தா சொல்லுமா" என்றார்.

அடுத்த வாரமே நாங்கள் மிகவும் கீழ் மட்டத்தில் அன்றாட கூலி வேலை செய்து பிழைக்கும் பெண்களில், கல்யாணமாகப் போகும் ஐவரை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு ஒவ்வொரு சவரனில் தாலியும், கூட மலிவு விலையில் பட்டுப் புடைவையும் வாங்கிக் கொடுத்தார் மேடம். இத்தனையும் பந்தா இல்லாமல் மூன்றாம் பேர் அறியாமல் மிக மிக சந்தோஷமாக மனதிருப்தியுடன் தந்தார். அந்த ஐந்து பெண்கள் பட்ட மகிழ்ச்சியை ஆயிரம் பெருமாள் கொண்ட மகிழ்வாக உணர்வதாக என்னிடம் மட்டும் கூறி மகிழ்ந்தார். சாந்தா மேடம் குடும்பம் வசதியானதுதான் என்றாலும் சடாரென இப்படி தர மனம் வேண்டுமே.

அதன் பின் முழு ஆண்டுத் தேர்வில் வந்த



வேலை, கரெக்ஷன் என பிஸியாக டைம் ஓடியது. அதன் பின் லீவு என ஒரு மாதம் ஓடியது தெரியவில்லை. ஒரு திங்கள் அன்று சாந்தா மேடம் எல்லோருக்கும் ஸ்வீட் தந்தார். "ஹஸ்பெண்ட் பிரமோஷன் வாங்கியதற்கா" என சக ஆசிரியைகள் கேட்டதற்கு, "அனு வரட்டும் சொல்றேன்" என்றபடி, நான் வகுப்பு முடிந்து வந்தவுடன் "அனு. இந்தா உனக்குத் தான் மொதல் பத்திரிகை" என கூற எல்லோரும் ஆச்சர்யத்தில் மேடமை பார்க்க, விவரம் சொன்னார்.

திருமண சங்கத்தில் எப்போதோ தனது பெண்களின் பயோடேட்டாவுடன் ஜாதகத்தையும் தந்து வைத்திருக்கிறார். அது பற்றி அவருக்கே கூட மறந்து போனதுதான். போன திங்கள் அன்று போனில் "வரன் பார்க்க வீட்டுக்கு வரலாமா" என கேட்க, இவரும் ஒன்றும் புரியாமல் வரச் சொன்னாராம். அன்று சாயங்காலமே வந்து விட்டனர் மாப்பிள்ளை வீட்டார். பையன்கள் இருவராம். பார்மஸியில் எம்.பார்ம் முடித்து இருவரும் அயல்நாட்டில் உள்ளனர். நர்ஸிங் முடித்த பெண்தான் வேணும் என்று தேட, திருமண சங்கத்தில் விவரம் கண்டு, ஜாதகம் பார்க்க, அம்சமாக பொருந்தக் கண்டு உடன் வந்து விட்டனர்.

இரு பெண்களையுமே இரு பையன்களுக்கு பேசி முடிக்க வந்தனராம். பையன்களுக்கு லீவு இல்லை என்பதால் அடுத்த திங்களே திருமணமும் பேசி நிச்சயமாக, மேடம் மகிழ்ச்சியில் வாய் பேசவில்லை. பொருத்தமான அதுவும் டிமாண்ட் எதுவும் செய்யாத வரன் ஒரே சமயத்தில் இரு பெண்களுக்கும் அமைந்தது என்றால் என்னவென்பது!? கண்களில் நீர் துளிக்க என் கையைப் பற்றிக் கொண்டு கூறினார்.

தமிழ் மேடம், "தாலிக் கொடிய சொன்ன படி திருப்பதி உண்டியல்ல போட்டுறு சாந்தா" எனக்கூற, "பெருமாள் போனாப் போகுது.. உன் கழுத்துலியே இருக்கட்டும்னுட்டாரு", எனச் சிரித்தபடி கூறிவிட்டு என்னைப் பார்த்து கண்ணடிக்க நானும் சிரித்தேன், வியந்தேன்.

(இதை எழுதவே அவரின் சம்மதம் பெற பெரும்பாடு பட்டேன். கண்டிப்பாக பெயரை மட்டும் மாற்றச் சொல்லி, எழுதச் சொன்னார்.)

— கலைச்செல்வி, நீலகிரி.

கல்வியைத் தந்த தாலி!

எனக்குத் திருமணமாகி ஐந்து வருடங்கள் கழித்து, பிஸினஸில் ஏற்பட்ட நஷ்டம் காரணமாக பிழைப்பு தேடி மதுரையிலிருந்து சென்னைக்குக் குடி பெயர்ந்தோம். கைகளில், காதில் எஞ்சியிருந்தவை வேன் சார்ஜ், வீட்டுக்கு அட்வான்ஸ் என மறு அவதாரம் எடுத்தன. இந்தச் சூழ்நிலையில் நான் மேலே படிக்க எண்ணி (வேலைக்காகத்தான்) சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.எட். கரெஸ்பான்டன்ஸ் கோர்ஸுக்கு விண்ணப்பித்தேன். டியூஷன் மற்றும் என் குடும்பத்தாரின் உதவி எங்களைக் கஷ்டமில்லாமல் வைத்திருந்தது.

என்னுடைய நல்ல நேரம் எனக்கு பி.எட். ஸீட் கிடைத்து ரூ. 2260/- பணம் கட்டச் சொல்லி ஆர்டர் வந்திருந்தது. கையில் பணமோ, நகையோ எதுவும் இல்லை. புது இடம். உதவுவார் யாரும் இல்லை. என் குடும்பத்தாரை மேலும் மேலும் தொந்தரவு செய்ய எனக்கு மனமில்லை. என் கணவரைச் சேர்ந்தவர்களும் கைவிரித்து விட்டனர். இருக்கும் நிலைமைக்குப் படிப்பு என்ன வேண்டியிருக்கிறது என்ற கேலியான விமர்சனங்கள் வேறு. எங்களுக்கோ கிடைத்த வாய்ப்பை நழுவவிட மனமில்லை.

என் கணவர் ஒரு பக்கம் பணத்திற்கு அலைய நான் கடைசி நாளன்று யுனிவர்சிடி சென்று டைரக்டரைச் சந்தித்து (ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில்) என் நிலைமையைச் சொல்லி மறுநாள் பணம் கட்ட அனுமதி கேட்டு, பெற்று வந்து விட்டேன். அன்று மாலையும் பணம் கிடைக்கவில்லை என்ற சுரத்தில்லாத பதிலைத்தான் என் கணவரிடமிருந்து நான் பெற முடிந்தது.

இரவு முழுவதும் நாங்கள் தூங்கவில்லை. மறுநாள் காலை என் கணவர் என்னிடம் தாலியை அடகு வைத்துப் பணம் கட்டிவிடுவோம் என்று யோசனை சொன்னார். மிகுந்த துக்கத்துடன், ஒரு மஞ்சளை எடுத்து கயிற்றில் முடிந்து அணிந்து கொண்டு தாலியுடன் சேட் கடைக்குச் சென்றேன். முதலில் பணம் தர மறுத்தவர் பின் என் யுனிவர்சிடி ஆர்டரைப் படித்து, மனமிரங்கி, அதன் மதிப்புக்கு (1 சவரன்) மேலேயே பணம் (2300) தந்தார். அதை எடுத்துச் சென்று ட்ராப்ட் எடுத்து பி.எட்டில் சேர்ந்தேன்.

மிகுந்த கஷ்டத்திலேயே படிப்பும் முடித்

RECKITT & COLMAN

"என்னுடைய அக்கம்பக்கத்தில் இருப்போர் தங்கள் இல்லங்களை வெறுமனே சுத்தம் மட்டுமே செய்கிறார்கள்; ஆனால் ஒரு டாக்டரான நான், எனது இல்லத்தில் கிருமிகள் அறவே இல்லாதவாறும் சுத்தம் செய்கிறேன்!"



ஒவ்வொரு இல்லமும் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. ஒரு டாக்டரான எனக்கு தெரியும், பார்ப்பதற்கு சுத்தமாக தெரிவதெல்லாம் உண்மையான சுத்தம் இல்லை என்று. பரிசுத்தமாக பளிச்சென்று தோன்றும் வீடுகளிலும் கூட, வயிற்றுக் கோளாறுகளை ஏற்படுத்தும் ஸல்மோனெல்லா மற்றும் சரும நோய்கள் உண்டாக காரணமான ஸ்டாஃபைலோகோக்கஸ் போன்ற நோய்பரப்பும் கிருமிகள் இருக்க முடியும்.

கிருமிகளை நீங்கள் சுத்தப்படுத்த முடியாது. அவைகளை நீங்கள் அறவே அழிக்க வேண்டும். பினாயில் மற்றும் டிடர்ஜென்ட்டினால் செய்யப்படும் சாதாரணமான சுத்தம் இதுபோன்ற கிருமிகளை அழிக்காது. அதனால்தான் நான் லைஸோல் டிஸ்இன்ஃபெக்டன்ட் மற்றும் பாத்ரூம் க்ளீனரை மிகவும் நம்பகமானதாக கருதுகிறேன்.

லைஸோல் கிருமிகளை 99.9% அழிக்கிறது. இதன் அடர்வு செய்த பிரேஸி ஃபார்முலா, இல்லங்களில் இருக்கும் கிருமிகளை 99.9% அழிக்கிறது.

இது ஒரு ஆற்றல்மிக்க க்ளீனர் ஆகும் இதன் தனித்தன்மைவாய்ந்த நாஸில் தரைகளின் ஓரங்களிலும் விளிம்புகளிலும் படியும் அழுத்தமான கடின கறைகளை சுத்தம் செய்ய உதவுகிறது. இதன் நீரால் கழுவ தேவையற்ற ஃபார்முலா தரையை இருமுறை கழுவ வேண்டிய அவசியத்தை போக்குகிறது.

டபுள் **ஆக்ஷன்** டிடர்ஜென்டுகள் மற்றும் பினாயில்கள் இனி எனக்குத் தேவையில்லை. லைஸோலின் டபுள் ஆக்ஷன், கிருமிகளை அழித்து தரைகளையும் பாத்ரூம்களையும் சுத்தப்படுத்துகிறது. சிரமமுமில்லை. தொல்லையுமில்லை. சுத்தமும், ஆரோக்கியமும் நிறைந்தது, எனது இல்லம்.

குடும்பத்துக்கு பாதுகாப்பு ஆற்றல்மிக்க டபுள் ஆக்ஷனுடன், லைஸோல் என் குடும்பத்தினரை சுகவீனத்திலிருந்தும், நோய்நொடிகளிலிருந்தும் பாதுகாக்கிறது. இதமூட்டும் பரவசமான இதன் மணம் நாள் முழுதும் நீடித்திருக்கிறது. லைஸோல் எல்லா தரை பரப்புகளிலும் உபயோகிக்க பாதுகாப்பானது; மேலும் குழந்தைகள் இருக்கும் இல்லங்களிலும் உபயோகிக்க உகந்தது. ஒரு டாக்டரான நான், எனது குடும்பத்தினரின் பாதுகாப்புக்கு லைஸோல் நம்பகமானதாக கருதுகிறேன்.



HYGIENIC

கி ரு மி க ளி ன் அ ழி வி ல் ஆ ரோ க் கி ய ம் ஆ ர ம் ப ம்.


தேன். அந்த வருடமே எனக்கு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. முடித்த வருடமே இங்கு ஒரு புகழ் பெற்ற பள்ளியில் ஆசிரியராக பணியில் அமர்ந்தேன். இன்று நான் ஓரளவு நல்ல நிலைமையில் இருக்கக் காரணம் என் தாலிதான். தாலியால் (நல்)வாழ்வு பெற்றேன்.

— தேவி வைத்யநாதன், சென்னை - 44.

கல்யாணமானவளா, ஆகாதவளா?

எனக்குத் திருமணமாகி எட்டு வருடங்கள் வரை தாய்மைப் பேறை நான் அடைய வில்லை. ஊரார் உற்றார் ஏசல் ஏராளம். எல்லாவற்றையும் வாங்கிச் சகிப்புத் தன்மையுடன்.. ஒவ்வொருவர் ஆலோசனையின் படி எது பரிகாரமோ.. அதைச் செய்து வந்தேன். ஒரு பெண்ணின் ஆலோசனையின் பேரில் கர்ப்பப்பை க்ளீன் செய்தால் மிகவும் நல்லது என்றவுடன்...

ஒரு மார்கழி மாதம்... என் கணவர்... தனியார் க்ளினிக் ஒன்றில்... பார்த்து வரச் சொன்னார். துணைக்கு என் மாமியார்... நாத்தனார்... ஓரகத்தியோடு சென்று பெண் மருத்துவரைப் பார்த்தோம். அப்போதுதான் நான் மருத்துவமனைக்கே செல்கிறேன். துணைக்கு வந்தவர்களை தள்ளி நிற்க வைத்து விட்டு விசாரிக்க ஆரம்பித்தார். நான் பொதுவாக, (அப்போது தாலியை மஞ்சள் கயிற்றில் போட்டிருப்பதால் அதை ஜாக்கெட் உட்புறம் மறைத்து மேலே வெறும் செயின் மட்டும் அணிந்து எங்கும் செல்வது வழக்கம். என் தாய் கூட திட்டுவார், இது என்ன ஃபேஷன். பெண்களுக்குத் தாலி தானே அழகு.. மங்களம். அது மஞ்சள் கயிற்றில் இருந்தால் தனி அழகு. அதைக் கேவலமாய் மறைத்துக் கொள்கிறாயே..." என்பார். நான் சிரித்து மழுப்பி விடுவேன். அன்று அதற்கு நல்ல சூடு கிடைத்தது.)



டாக்டரிடம் 'க்ளீன் செய்ய வந்தேன்' என்று சொன்னதும்... அவரும் டெஸ்ட் செய்து விட்டு, "உன் கூட யார் வந்தது" என்று விசாரித்து அவர்களை வரச் சொன்னார்.

அவர்களின் எதிரிலேயே "இந்தப் பெண் திருமணமான பெண்ணா... ஆகவில்லையா..." என்றதும் எல்லோரும் விழித்தனர். "ம்.." என்று நான் தலையாட்டவும்.... "அப்போ தாலி எங்கே" கழுத்தைத் தடவிப் பார்த்து ஜாக்கெட் மறைவில் இருந்த கயிற்றை வேகமாக எடுத்து வெளியே போட்டதும்தான் அவர் முகம் சகஜ நிலையை அடைந்தது. எனக்கே சொல்ல முடியாத நிலை. மாமியாரோ... அங்கேயே ஆரம்பித்து விட்டார் வசை புராணத்தை...

டாக்டர் மறுபடி வாயைத் திறந்தார். "ஏன் என்றால்... இந்தப் பெண் கருவுற்றிருக்கிறாள். 30 நாட்களாகி விட்டது போல் தெரிகிறது. இப்போ' க்ளீன் பண்ணணும்னு வேறு சொன்னவுடன் கழுத்தைப் பார்த்தேன். தாலியைக் காணோம். அதற்குத்தான் இப்படி கேட்கிறார் போல ஆகிவிட்டது."

என்ற உடன்... நான் பாலில் குளித்தது போன்ற உணர்வையும் ஒரே சமயம் என் விவரமறியாத எண்ணத்தையும் துடைத்து விட்டு புது உலகில் நீந்தினேன் எனலாம். திட்டிய மாமியார் வாயெல்லாம் பல்....

— எஸ். வைஜெயந்திமாலா, தஞ்சாவூர்.

காதிலே மின்னும் தோடானது!

தாலியைப் பெண்கள் யாரும் மற்ற நகைகள் போல் அணிய மாட்டார்கள். வளையல், தோடு போன்ற நகைகளைப் போல் எடுத்துக் கொள்ள முடியாத ஓர் அற்புதச் சின்னம் அது. இதனை அவற்றைப் போல கலபமாக கழற்றவோ, தொலைக்கவோ மறந்துவிடவோ முடியாதது. எங்களது பாசம் மிகுந்த இனிய குடும்பத்தில் நாங்கள் எதிர்பாராத வகையில் எங்கள்





தேங்

தந்தையை இழக்க நேரிட்டது. எங்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத பேரதிர்ச்சி அது. நெற்றி நிறைய குங்குமமும், நேர் வகிட்டின் செந்தூரமும், மை இடும் கண்களும், அந்த மஞ்சள் நிறமும் துலங்கிய அன்னை முகம் பொலி விழந்ததை எப்படிச் சொல்ல?

பின்னர், சுமாரான குடும்ப நிலையில் எனது அன்னை சில காலம் கழித்து, கழற்றப் பட்ட தாலியை அழித்து எனக்கும் எனது சகோதரிக்கும் தோடாக மாற்றி வாங்கிப் போட் டார். இன்றும் எங்கள் காதுகளின் தோட்டி னைப் பார்த்தால் அது வெறும் தோடாக மட் டும் நினைக்காமல் அதை ஒரு தாலியைக் கண் டால், அணியும் போது ஏற்படும் பெண் ணின் பயபக்தியும், எனக்கு ஏற்படுவதை என்னால் தவிர்க்க முடியாது.

— ஜி. லக்ஷ்மி, சீர்காழி

தாலியைக் கழற்றி விசிய பாட்டி!


என் தாத்தா (அம்மாவின் அப்பா) என் பாட்டியை மிக மிக விரும்பி திருமணம் முடித் தவர். என் பாட்டி கொஞ்சம் 'டாமினேட்டிங் டைப்'. என் தாத்தா பாட்டியை யாரிடமும் விட்டுக் கொடுக்கமாட்டார். நாங்கள் சாப்பிடா விட்டாலும் கண்டு கொள்ள மாட்டார். ஆனால் பாட்டியைக் கட்டாயப்படுத்தி சாப் பிட வைப்பார். இப்படி சிறு சண்டைக் கூட இல்லாமல் இருப்பதைக் கண்டு பல குடும்பங் களும் வியந்துள்ளது. எடுத்துக்காட்டுத் தம்பதி களாய் அன்றில் பறவை போல் வாழ்ந்தனர்.

நாங்கள் விடுமுறைக்குப் பாட்டி ஊருக்குச் சென்றிருந்த பொழுது பாட்டி, தாத்தாவை கிண்டலடித்துக் கொண்டிருந்தோம். என் தாத்தா பாட்டியைக் கிண்டலாக, "அவள் திரு மணத்திற்கு ஒரு தங்க நகைக் கூட இல்லை. நான் போட்ட தாலி மட்டுந்தான் தங்கம். எனக்கு வரதட்சணையே கொடுக்காமல் ஏமாற்றி விட்டார்கள்" என்று கூறிச் சிரித்தார். பாட்டி கோபத்துடன் தாலியைக் கழற்றி என் தாத்தா முகத்தில் வீசி விட்டார். அப்பொழுது என் பாட்டி வயது 88. தாத்தாவிற்கு 94.

இதை எதிர் பாராது அதிர்ச்சியடைந்த என் தாத்தா அப்படியே மௌனமாகிவிட்டார். பாட்டிக்கு அப்பொழுதுதான் தான் செய்த தவறு புரிந்து தாத்தா காலில் விழுந்து மன்னிப் புக் கேட்டார். ஆனால், "நான் இறந்ததற்குச் சமமாய் தாலியை எறிந்து விட்டாய், இதற்கு மேல் எனக்கு என்ன வேண்டும்?" என்று மெல்லப் பேசியவர் அதற்குப் பிறகு மௌன மாகி விட்டார். அந்தக் குற்ற உணர்வில் மன தினுள் நொறுங்கிப்போன பாட்டி இரண்டே நாட்களில் இறந்து விட ஒரு வாரத்திற்குள் தாத் தாவும் இறந்து விட்டார். தாலியால் பிரிந்தவர் கள் சாவில் அன்றில் பறவை போலாகி விட் டனர்.

ஊரில் அனைவரும் இன்றும் ஒற்றுமை தம்பதி என்று துதி பாடுகிறது. (தாலி விஷயம் யாருக்கும் தெரியாது). இதை ஏன் எழுதுகிறேன் என்றால் ஆத்திரத்தில் எதையும் செய்து விடா தீர்கள். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு. கண் ணாடி போல நொறுங்கினால் மண்ணும் ஒட்டாது.

— சி. கயற்கண்ணி, இராயப்பன்பட்டி.



நெல்லை தாலியா! மதுரை தாலியா!

எனது சொந்த ஊர் மதுரை. என் கணவர் ஊர் நெல்லை மாவட்டம். (சிவகிரி). நாங்கள் வசிப்பது சென்னை கே.கே. நகரில். எங்கள் குடியிருப்புப் பகுதியில் அன்னை புவனேஸ்வரி திருக்கோவில் உள்ளது. எனது கணவர் அக் கோவிலின் செயலாளராக உள்ளார்.

1990-ம் ஆண்டு நவராத்திரி விழாவின் போது நான் அம்பாளைத் தரிசனம் செய்து விட்டு பிரஹாரத்தைச் சுற்றி வரும் பொழுது எனது மாங்கல்யத்தின் ஒருபகுதி பத்தவைப்பு விடப்பட்டு தவறி விழுந்து விட்டது. நானும் கவனிக்கவில்லை. எனக்குப் பின்னால் வந்த ஒரு அம்மையார் அதைக் கண்டு எடுத்துக் கோவில் நிர்வாகத்தில் ஒப்படைத்து விட்டார். உடனே நிர்வாகம் ஒலிப் பெருக்கி மூலம் அனைவருக்கும் அறிவித்தார்கள். அதாவது நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் யாராவது மாங்கல்யத்தைத் தவற விட்டிருந் தால் நிர்வாகத்தை அணுகி பெற்றுக் கொள்ள மாறு பல முறை அறிவித்தார்கள்.

நானோ மதுரையைச் சார்ந்தவளாதலால் நெல்லைத் தாலி என்ற அறிவிப்பை முக்கிய மாகக் கருதிக் கொள்ளவில்லை. என்னுடைய மாங்கல்யத்தைச் சரிபார்த்துக் கொள்ள



வேண்டும் என்ற எண்ணம் கூட எழவில்லை. வீட்டுக்கு வந்து விட்டேன். சுமார் நான்கு தினங்கள் கழித்து ஒரு நாள் தற்செயலாக எனது மாங்கல்யத்தில் உள்ள விநாயகர் முகப்புக் காணப்படாதது குறித்து அதிர்ச்சியுற்றேன். இதை ஒருவார காலம் எப்படி கணவரிடமும் என் குடும்பத்தாரிடமும் கூறுவது என மனம் புழுங்கிக் கொண்டிருந்தேன்.

என் கணவரோடு வெளியே கடைக்குச் சென்ற சமயம் மெதுவாக விஷயத்தைக் கூறினேன். சில நிமிட இடைவெளிக்குப் பிறகு என் கணவர் இதைப் பற்றி ஒன்றும் கவலைப் படாதே என்று எனக்கு ஆறுதல் கூறினார். இதற்கு இடையில் அவர் கோவில் செயலாளர் என்பதனால் அங்கு கிடைத்த நகையைப் பொருளாளர் வசம் பத்திரப்படுத்தி, 15 நாள் வரை பார்ப்போம் யாரும் வாங்கவில்லை என்றால், 'அம்பாளுக்கு நகை செய்து கொள்ளலாம்' என கோவில் நிர்வாகிகளிடமும், உறுப்பினர்களிடமும் கூறிவிட்டார்.

இதற்குப் பிறகு ஒரு நாள் மதியம் 3 மணியளவில் என்னிடம் என் கணவர், கோவிலில் ஒரு மாங்கல்யம் கிடைத்ததே, நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தது என்று கூட அறிவித்தார்களே, அந்த மாங்கல்யமாக இருக்கலாம் என்ற ஐயப்பாட்டைச் சொன்னார்.

உடனே நான் வாருங்கள் போய்ப் பார்க்கலாம் என்று கூறினேன். இங்குதான் அவர் தன்னுடைய தர்மசங்கடமான நிலையை விளக்கினார்.

"நான் கோவில் செயலாளர். நான் நகையைப் பார்க்கவும் இல்லை. கோவிலில் கிடைத்தது என்றவுடன் பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டேன். அதை என்ன செய்ய வேண்டும் எனவும் சொல்லிவிட்டேன். இந்நிலையில் நானே போய் என் நகை என்று சொன்னால் அது முறையாகாது. நீயே போய் முறையிட்டு, கொடுத்தால் பெற்றுக் கொள். தலைவர், பொருளாளர், உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து விளக்கி ஆவன செய்து கொள்" என வர மறுத்து விட்டார்.

நான் அவர்களை எல்லாம் சந்தித்து விளக்கம் அளித்து அவர்களை ஒப்புக் கொள்ள வைத்தேன். அதற்கு மறுதினம் அம்பாள் பாதத்தில் வைத்துப் பூஜை செய்து எடுத்துக் கொள்வது என தீர்மானித்து நிர்வாகத்தினரும் நானும் கோவிலுக்குச் சென்றோம். எல்லோர் முன்னிலையிலும் குருக்களிடம் கொடுத்து, அதை அவர் மூலஸ்தானத்திற்குக் கொண்டு சென்ற சமயம், அம்பாள் கழுத்திலிருந்த பூமாலை சட்டென்று கீழிறங்கி நெஞ்சில் வந்து நின்றது. உணர்ச்சி வசப்பட்ட அங்கிருந்த அனைவரும் "அம்மா" "அம்மா" என கதறி விட்டார்கள். நான் கலங்கிய என் கண்களோடு அம்பாளைத் தரிசித்து மாங்கல்யத்தைப் பெற்றுக் கொண்டேன். அன்னையே "என் நகை" என்பதற்குச் சத்தியம் கூறியது போல அந்த நிகழ்ச்சியைப் பார்த்த பெரியவர்கள் கூறினார்கள். என் வாழ்நாளில், நான் பெற முடியாத மறக்க முடியாத பேறு மாங்கல்யம் திரும்பக் கிடைத்ததுதான்.

— *மனோரஞ்சிதம், சென்னை - 78.*

இன்றைய தேதியில் டேப் ரிகார்டர் இல்லாத வீடுகளே இல்லை எனலாம். ஒலிப்பதிவு வசதியுள்ள வற்றில் குழந்தைகள் குறிப்பாக 10 வது, +2 பயிலும் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான ஃபார்முலாக்கள், டெபனிஷன்கள், கணிதத்தில் கோட்பாடுகள் ஆகியவற்றைப் படித்துப் பதிவு செய்து கொண்டால் படிக்காத நேரத்தில் திரும்பத் திரும்ப கேசட்டைப் போட்டுக் கேட்டு மனதில் வாங்கிக் கொள்ளலாம். நேரமும் மிச்சம். மனதிலும் எளிதில் பதியும்.

— *லக்ஷ்மி சிவகுமார்*



போரடிக்காமல்



போன இதழில் பொருளாதாரத்தைப் பற்றியும் பணவீக்கத்தைப் பற்றியும் மேலோட்டமாகப் பார்த்தோம். பணவீக்கம் காரணமாக பணமதிப்பு இறங்கிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் நம்மிடம் இருக்கும் சிறு சேமிப்பின் மதிப்பை எப்படி தக்க வைத்துக் கொள்வது, எப்படி உயர்த்துவது என்று நாம் யோசிக்க வேண்டும். ஏனென்றால் பணத்தை 'சும்மா' வைத்திருக்கக் கூடாது (Money should not be kept idle) என்பது நாட்டின் அடிப்படை பொருளாதாரக் கொள்கை.

எதில் முதலீடு செய்வது, எப்படிச் செய்வது அவைகளில் உள்ள நன்மைகள் மற்றும் தீமைகளைப் பற்றி நாம் நிறையவே படித்திருக்கிறோம், கேட்டிருக்கிறோம். அநேகமாக எல்லா வகையான முதலீட்டைப் பற்றியும் நாம் அறிந்ததே. இருந்தும் ஏன் பங்கு மார்க்கெட்டிலும், 'திமர்' நிதிக் கம்பெனிகளிலும் பணம் போட்டு ஏமாந்தோம்?

உண்மையில் பல பேருக்குத் தெரியாதது - "எந்த காலகட்டத்தில் எந்த அளவில் முதலீடு செய்வதென்றும், எந்த மட்டில் நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்பதும்தான்.

அடுத்ததாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, "எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் போடாதீர்கள்" (Don't put all the eggs in one basket) அதாவது பொருளாதார வல்லுனர்களின் கருத்துப்படி நம்மிடம் இருக்கும் சொத்து (சிறிதளவானாலும்) கூடிய மட்டில் அகலப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். இதையே வேறு விதமாகக் கூறுவதென்றால் நம்மிடம் இருக்கும் அரிய சேமிப்பை ஒரே வகையான முதலீட்டில் போடக் கூடாது. வெவ்வேறு வகையாகப் பிரிக்க வேண்டும். இதைச் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

வங்கி இருப்பு, அரசாங்கப் பத்திரங்கள், தங்கம், கம்பெனிகளில் டெபாசிட், டிபென்சர், பங்குகள், ஆயுட் காப்பு, வீடு, மனை, நிலம். இவையெல்லாம் வெவ்வேறு முதலீட்டுச் சாதனங்கள்.

எல்லாரிடமும் எல்லா வகையான முதலீடுகளும் இருக்க முடியாது. ஆனால் ஓரளவுக்கேனும் நம் வசதிக்கேற்ப நம் சொத்துக்கள் விரிவாக இருந்தால், நாளடைவில் நமக்கு நன்மையாக இருக்கும். அதாவது ஏதாவது ஒரு முதலீட்டில், ஒரு காலகட்டத்தில் நமக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், வேறு வகையான முதலீடு அந்த நஷ்டத்தைச் சரிகட்டும். இதைத்தான் ஆங்கிலத்தில் mixed portfolio என்று கூறுவர். அதாவது 'சமச்சீரான முதலீட்டுக் கலவை'.

'ஓய்வுகால பணம் மொத்தத்தையும் நிதிக் கம்பெனிகளில் டெபாசிட் செய்தேன். இப்படி பண்ணி விட்டார்களே' 'என் பெண் கல்யாணத்திற்காக வைத்த பணத்தை பங்கு மார்க்கெட்டில் போட்டிருந்தேன். மார்க்கெட் படுத்து விட்டதே' என்று கூறுபவர்களின் தவறு இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும் இல்லையா?

இந்தக் கட்டுரையின் நோக்கமே, எல்லா வகையான முதலீடுகளையும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்ப்பதுதான். நான் 'இதில் முதலீடு செய்யுங்கள் - அதில் முதலீடு செய்யுங்கள், என்று கூறப் போவதில்லை. ஏன்? அப்படிச் சொல்லவும் கூடாது. உண்மையிலேயே 'ரெடிமேட் முதலீட்டு பார்முலா' என்று ஒன்றும் கிடையாது. அவரவர் தங்களிடம் இருக்கும் பணத்தின் அளவு, குடும்பச் சூழல், சொத்து நிலவரம், என்று பலவகையான விஷயங்களை வைத்துக்





கொண்டு தங்கள் குடும்பத் தேவைக் கேற்ப முதலீட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

முதலீட்டை வெவ்வேறு கோணங் களிலிருந்து பார்க்கலாம். I) முதலீட்டுத் தொகையை வைத்துப் பார்க்கையில் மிகப் பெருந் தொகைக்கான முதலீடு கள் வீடு, மனை, நிலம் போன்றவை. மிகப் பெருந்தொகையில்லாமல் ரூ. 5000/- - ரூ. 20,000/- வைத்து நல்ல கம் பெனி டெபாசிட்டுகள், தங்கத்தில் முதலீடுகளைச் செய்யலாம். மிகச் சிறு தொகைக்கான முதலீடுகள், வங்கி வைப்புக்கள், அரசாங்கப் பத்திரங்கள்.

வீடு மற்றும் நிலத்தில் முதலீடு அடிக்கடி செய்ய முடியாது. மேலும் நினைத்த மாத்திரத்தில் அவைகளை பணமாக மாற்ற முடியாது. இதையே வேறு விதமாகப் பார்த்தால் முதலீட்டின் இரண்டாவது கோணம் புலப்படும்.

முதலீடுகளில் மூன்று வகைகள் :

1. உடனடியாகக் கிடைப்பது (1 - 6 மாத காலம்)
2. ஓரளவு உடனடியாகக் கிடைப்பது (1 - 3 வருடங்கள்)
3. நெடு நாட்கள் (3 - 7 வருடங்கள்)

நாம் வங்கிகளில் போட்டு வைத்தால் 3 மாதமோ, 6 மாத காலமோ நம் வசதிக்கேற்ப கிடைக்கும். நல்ல பங்குகளில், நல்ல கம்பெனிகளில் டெபாசிட் செய்தால், 1 - 3 வருடத்திற்குள் அசலை வட்டியுடன் திரும்பிப் பெறும் வாய்ப்புகள் உண்டு.

நெடு நாட்கள் முதலீட்டு வகையைச் சார்ந்தது அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் வீடு, நிலம் போன்ற முதலீடுகள்.

மேற்கூறிய விஷயங்களைச் சற்று விரிவாகப் பார்ப்போம். உதாரணமாக வீடு, நிலம், மனை போன்ற முதலீடுகள் நிச்சயமாக நல்ல, உசத்தியான முதலீடு. நிலத்தின் விலை ஏறிக் கொண்டே போவதின் பின்னணியைப் பார்ப்போமா. பொருளாதாரத்தில் 'Demand Supply Theory' எனப்படும் "தேவை வரத்து நியதி" மிக முக்கியமான கருத்தாகும். அதாவது இரு விஷயங்கள் ஒன்று போல் சீராக இருக்குமானால் ஒரு பொருளின் வரத்து தட்டுப்பாடின்றி தாராளமாகக் கிடைக்குமானால், அப்பொருளின் விலை இறங்கும்.

அந்த நியதியின் படி பார்த்தால் நிலம் பூமியில் இருப்பதுதான். புதிதாக அதிகமாகப் போவதில்லை. ஆனால் அதன் தேவையோ பல்வேறு காரணங் களுக்காக ஏறிக் கொண்டே போகிறது. இதனால் அதன் விலையும் ஏறிக் கொண்டுதான் இருக்கும்.

எந்த இடத்தைச் சேர்ந்த நிலம், எந்த அளவு ஏறும் என்பது மட்டும் இடத்திற்கு இடம் மாறுபடும். உதாரணமாக நல்ல குடிநீர் வசதி, ரயில் நிலயம், மார்க்கெட் அருகில் உள்ள இடங்களின் மதிப்பு சற்றுக் கூடுதலாகத்தான் இருக்கும். மேலும் தொழிற்சாலைகள் அருகில் 'வர இருக்கும்' நிலங்களின் மதிப்பு பல மடங்காக உயர வாய்ப்புள்ளது.

எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் பம்பாயில் வேலை செய்கிறார். தன் ஓய்வு காலத்திற்கு வீடு கட்டிக் கொள்வதற்காக ஊர் பேர் தெரியாத ஒரு ஒதுக்குப் புறத்தில் அறியாமையால் நிலம் வாங்கிப் போட்டிருக்கி றார். அந்த இடத்தில் போக்குவரத்து, தண்ணீர் வசதி மிக மிகக் குறைவு. மேலும் பெரிய ஊர்களை இணைக்கும் பாதைக்கு (ஹை வேஸ்) அருகில் இல்லாமல் இருப்பதாலும் அந்த இடத்தின் விலை கிட்டத்தட்ட வாங்கின நிலையிலேயே இருக்கிறது. அந்த மாதிரி இடங் களை விற்பதற்கான மார்க்கெட்டும் குறைவு. இதை நான் எழுதுவதன் காரணம், வீடு, மனைகள் நல்ல முதலீடானாலும் நன்கு யோசித்து வாங்க





சிலர் வாஷ்பேசின் குழாயைத் திறந்து வைத்துக் கொண்டே முகம் கழுவுவார்கள். ஒரு பிளாஸ்டிக் மக்கில் பிடித்து உபயோகித்தால், எவ்வளவு நல்லது!

— பார்வதி

வேண்டும் என்பதற்காகத்தான்.

யோசிக்காமலே வாங்கலாம் என்று ஒன்று உண்டானால் அது அரசாங்கத்தின் இந்திர விகாஸ் பத்ரம் மற்றும் என்.எஸ்.சி. (N.S.C.) பத்திரங்கள். அவைகளை ரூ. 1000/- க்குக்கூட வாங்கலாம். ஆறு வருடத்தில் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக பெருகுவதில்லாமல், வருமானத்திலிருந்தும், முதலீட்டின் ஒரு பகுதிக்கு வரி விலக்கும் உண்டு. ஆறு வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதிலுள்ள மற்றொரு வசதி அதையே பாதுகாப்பாக வைத்து வங்கிகளில் கடன் வாங்கலாம். இதை வீட்டில் வருமான வரி கட்டுபவர்கள் பேரில் வாங்கினால் வரி விலக்குக் கோருவதற்கு சௌகரியமாக இருக்கும்.

— ஜெயந்தி ஸ்ரீனிவாசன்

முதலீடு செய்ய முடிவெடுப்பது இப்பொழுதெல்லாம் ABC படிப்பது போல மிக எளிதானது.

போலி நிதிக் கம்பெனிகளில் முதலீடு செய்து விட்டு தங்கள் முதலை இழந்தவர்களும், அதை கேள்விப்பட்டு அலண்டு போய் இருப்பவர்களும் இப்பொழுது ஒரே வழி வங்கியை நாடுவது மட்டுமே நலம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை விட பங்குகளில் முதலீடு செய்து பங்கு மார்க்கெட்டின் பயங்கர சரிவால் கடந்த இரண்டு வருடமாக முதலை முடக்கி விட்டவர்களும் கேட்கும் கேள்வி எதில் முதலீடு செய்வது, எங்கு முதலீடு செய்வது என்ற ஒரே கேள்விதான்.

வங்கிகள் மிக மிகப் பாதுகாப்பானவை தான். ஆனால் வட்டி விகிதம் மிகக் குறைவு. மிக அதிக பட்சமாக ஒரு வருட டெபாசிட்டுக்கு 14% வரை மட்டுமே பெற முடியும். ஆனால் அதே வங்கி துவக்கியுள்ள துணை நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தால் லாபம் அதிகம்.

உதாரணம் - இந்தியன் வங்கியில் 13 மாத டெபாசிட்டுக்கு மிக அதிகபட்சமாக 12% வட்டி தான் பெற முடியும். இதே இந்தியன் வங்கியின் துணை நிறுவனமான இந்த் பேங்க் ஹவுசிங்கில் டெபாசிட் செய்தால் 13 மாதத்திற்கு 16.5% வட்டி மேலும் புரோக்கர் கமிஷன் 1% என மொத்தம் 17.5%. இதே இரண்டு வருஷமாக இருந்தால் கமிஷன் 1.5%, மூன்று வருடமாக இருந்தால் 2% கமிஷன் உங்களிடமே நேரிடையாகக் கொடுத்து விடுவார்கள்.

மேலும் வங்கியை விட தனியார் நிறுவனங்கள் 17%, 18%, 19% என்று தற்பொழுது தளர்த்தப்பட்ட RBI நிதிக் கொள்கையினால் வட்டி அளிக்கின்றனர். இவர்களை எப்படித் தேர்ந்தெடுப்பது எப்படி அதிக வட்டி பெறுவது? இதற்கு இப்பொழுது ABC படிப்பது போன்று மிக எளிதான மதிப்பீடுகள் வந்துள்ளன. இவை தான் கிரிஸல், கேர், இக்ரா என்ற மூன்று நிறுவனங்கள் வழங்குகின்றன.

கிரிடிட் ரேட்டிங் என்றழைக்கப்படும் இந்த மதிப்பீடுகள் ISI முத்திரை, அக்மார்க் முத்திரை, ISO 9001, ISO 9002 போன்று நிறுவனத்தை ஆராய்ந்து அதன் சாதக பாதகங்களை ஆராய்ந்து நிறுவனத்தை பற்றிய மதிப்பீடுகளை வழங்கும் குறியீடுகள் ஆகும்.

இந்த ரேட்டிங்கை பார்த்து முதலீடு செய்யலாம். இவர்கள் ஒரு முதலீட்டை மிக அதிக பட்ச பாதுகாப்பு, அதிக பாதுகாப்பு, போதுமான பாதுகாப்பு, மிதமான பாதுகாப்பு, போதாத பாதுகாப்பு, ரிஸ்க், பணம் செலுத்தத் தவறும் என்று ஏழு விதமாக பிரிக்கின்றனர்.

கிரிஸல் எனப்படும் The Credit Rating Information Service of India Limited ம், சரி CARE -ம் சரி, ICRA வும் சரி மூன்று நிறுவனங்களும் UTI, IDBI, ICICI, IFCI போன்ற பெரிய பெரிய இந்திய நிதி நிறுவனங்களால் மதிப்பீடு செய்வதற்கு மட்டுமே உருவாகின. இந்த நிறுவனங்கள் ஒரு கம்பெனி லாபம் ஈட்டுகிறதா? வருங்காலத்திலும் அது தொடர்ந்து லாபம் ஈட்டுமா? போன்ற 500க்கு மேற்பட்ட கேள்விகளை கேட்டு கம்பெனியின் எதிர்கால செயல்பாடுகளை ஆராய்ந்து கம்பெனியின் நிதித்திறனை அந்த நிறுவனம் அசலையும், வட்டியும் திருப்பி அளிக்குமா? என்று ரேட்டிங் மூலம் சொல்கின்றன. தொடர்திறம், நம்பகம், முதன்மை போன்ற மூன்று கொள்கைகளை முன்னிறுத்தி மூன்று நிறுவனங்களும் நிதி

வல்லுனர்கள், இன்ஜினீயர்கள், ஆடிட்டர்கள் என்று ஆயிரத்துக்கு மேற்பட்ட வல்லுனர்களை கொண்டு ஆராய்ந்து, கேள்வி கேட்டு, டாகுமென்ட் பார்த்து, அலசி பின்பே இந்த மதிப்பீடுகளை அளிக்கின்றனர். இந்த மதிப்பீடுகள் பிக்ஸட் டெபாசிட் எனப்படும் வைப்பு நிதிகளானாலும் சரி, டிபென்சர்கள் எனப்படும் கடன் பத்திரங்களானாலும் சரி. உங்கள் முதலும், வட்டியும் உரிய காலத்தில் கிடைக்குமா என்பதை இந்திய அரசின் ரூபாய் ஆவணங்கள் சரி திட்டமான AAA+ (ட்ரிப்பின் ஏ ப்ளஸ்) அடிப்படையில் அமைந்தவையே இந்த மதிப்பீடு நிறுவனங்கள்.

இந்த ரேட்டிங் விஷயம் இந்தியாவிற்குப் புதுமையானதாக இருப்பினும் இது முதன் முதலில் 1866-ம் ஆண்டு "ஹென்றி வர்ணம் புவர்" என்பவர் ஆரம்பித்து வைத்தார். கிட்டத்தட்ட 130 வருடத்திற்கு முன்னதாக மேற்கு அமெரிக்காவில் "ரயில் ரோடு" என்ற கம்பெனி தன்னுடைய விரிவாக்கத்திற்கு மக்களிடம் கையேந்தியது. அப்பொழுது மக்கள் கம்பெனி பற்றியும், அதன் பாதுகாப்பை பற்றியும் பல் வேறு சந்தேகங்களை எழுப்பினர். இதை அறிந்த "ஹென்றி வர்ணம் புவர்" என்பவர் நிறுவனத்தின் தினசரி நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை விடுத்தார். இது கம்பெனியை பற்றி நல்ல எண்ணம் ஏற்படவும், மக்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தவும் பெரிதும் உதவியது. இதுவே முதன் முதலில் "ரேட்டிங்" ஆரம்பித்த வரலாறு. இதற்கு பின் உலகளவில் பல்வேறு நிறுவனங்கள் தோன்றின. அதில் பிரபலமான நிறுவனமே "ஸ்டான்டர்டு அண்டு புவர்" (Standard and Poor) ஆகும். இது உலக அளவில் பல்வேறு நாடுகளைப் பற்றியும், அதன் பொருளாதார பொறுப்பு பற்றியும் ஆராய்ந்து அறிக்கை வெளியிடுகிறது. இந்த நிறுவனம் இந்தியாவின் மதிப்பீடு "போதாத பாதுகாப்பு" என்று சொல்கிறது. இதைக் கேட்டு ஒவ்வொரு இந்தியனும் வெட்கப்பட வேண்டும். கீழே உள்ள அட்டவணையை உற்று நோக்குங்கள். நீங்கள் பிக்ஸட் டெபாசிட் செய்வதாய் இருந்தால் முதலில் அந்த நிறுவனம் "ரேட்டிங்" பெற்றுள்ளதா என கேளுங்கள். ரேட்டிங் பெற்றது எனில் அது டிரிபிள் ஏ, அல்லது டபுள் ஏ (AAA or AA) பெற்றுள்ளதா என கேளுங்கள்.

இது இரண்டும் இருந்தால் இருக்கும் நிறுவனங்களில் இந்த ரேட்டிங்கில் எந்த நிறுவனம் அதிக வட்டியும், இன்சன்டிவ்வும் தருகின்றன என்று பார்க்க வேண்டும். இது இரண்டும் இருப்பின் உங்கள் டெபாசிட்டை எப்பொழுதும் சிறு சிறு பாகங்களாக பிரித்து போடுங்கள். அப்பொழுதுதான் அவசரத்திற்கு வேண்டுமானால் எடுக்கலாம். மேலும் உங்களுக்கு ரூ. 2500 வட்டி வரும் போல் இருந்தால், நீங்கள் வருமான வரி கட்டாதவராய் இருந்தால் Form No. 15-A பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்!

இந்த ரேட்டிங்கில் கொடுக்கப்பட்டுள்ள Plus sign (+) Minus sign (-) சிறிய வேறுபாட்டை குறிக்கவே தவிர வேறு ஏதும் இல்லை. மேலும் ஐயங்கள் ஏற்படும்போது இதற்கெனவே இருக்கும் ஆலோசகர்களை நாடுவது நல்லது.

— அ. ஜெய விஜயன்
(ஷேர் & இன்வெஸ்ட்மெண்ட் ஆலோசகர்)

ரேட்டிங் அட்டவணை

	கிரிஸல்	இக்ரா	கேர்
அதிகபட்ச பாதுகாப்பு	FAAA	MAAA	CARE AAA
அதிக பாதுகாப்பு	FAA+	MAA+	CARE AA
	FAA	MAA	
	FAA-	MAA-	
போதுமான பாதுகாப்பு	FA+	MA+	CARE A
	FA	MA	
	FA-	MA-	
போதாத பாதுகாப்பு	FB+	MB+	CARE BB
	FB	MB	CARE B
	FB-	MB-	
அதிக ரிஸ்க்	FC+	MC+	CARE C
	FC	MC	
	FC-	MC-	
பணம் செலுத்தத் தவறியது	FD	MD	CARE D

படித்துக் கொண்டிருந்த சயின்ஸ் டுடே திறந்தபடியே மடியில் கிடக்க, 'தடக், தடக்' என்ற 'ரிதம்' தாலாட்டுப் பாட, தன்னையறியாமல் கண்களை சிறிது மூடியபடி, உறங்க ஆரம்பித்தாள் உஷா. வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் நிற்க, சட்டென உறக்கத்திலிருந்து கலைந்த உஷா, பாத்ரூம் பக்கம் செல்ல எழுந்து, இரண்டு தப்படி நடந்தாள். முதல் தப்படியில் 'படக்' இரண்டாவது தப்படியில் 'படக்' பின் படக்படக் என்று குரல் காலடியில் கேட்க, குனிந்து பார்த்தாள். முன்புற ஸீட்டில் நாலு பேர் அமர்ந்து, தங்களை மறந்து சீட்டாடிக் கொண்டே, வாயில் வேர்க்கடலைப் பருப்புகளையும், கீழே அதன் தோல்களையும் இஷ்டத்திற்கு எறிய, அவைகள்தான் உஷாவின் காலடியில் மிதிபட்டு, பரிதாபமாக மிதிப்பட்ட கரப்பான் பூச்சி போல், 'படக், படக்' என்று குரல் எழுப்பின. எங்கும் ஒரே குப்பை. முகத்தை லேசாக சுளித்தபடி நடந்தாள் உஷா.

கிசு கிசு மூட்டும் இயந்திரம்!



மீண்டும் தன் இடத்தில் அமர்ந்து புஸ்தகத்தை விரித்தாள். தன் ஜன்னலை ஒட்டி வாழைப்பழத் தோல், ஒன்று, தன் தோகைகளை விரித்தபடி பொத்தென்று நல்ல வேளையாக வெளியே விழுந்தது. வெளியே விழுந்ததால், வெளியே நடப்பவர்களுக்குத் தான் வழுக்கி விழும் நிலைமை ஏற்படும். வண்டியின் உள்ளே அமர்ந்தபடியே தின்றுவிட்டு தோலை எரிந்த அந்த நபர், வழுக்கி விழும் வாய்ப்பைப் பெறப் போகும் நபர் வண்டியின் உள்ளே இருப்பவரா? அல்லது வெளியில் நடப்பவரா? என்றெல்லாம் கவலைப்படாமல், தன் கால் களை எதிர் ஸீட்டில் நீட்டியபடி குறட்டை விட ஆரம்பித்தார்.

வண்டி ஒரு ஸ்டேஷனில் உறுமியபடி நின்றுவிட்டு, பத்து நிமிடம் கழித்து கிளம்பியது. நான்கைந்து வியாபாரிகள், கூடைகள் சகிதம் வண்டியில் ஏறி, 'ஆரஞ்சு, ஆரஞ்சு', 'பேல் பூரி, பேல் பூரி', 'கொய்யா, கொய்யா' என்று இறைந்து கூவி, இங்கும் அங்கும் சென்று விற்க, பயணிகள் அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப, வாங்கித் தின்று, வழக்கம் போல், தங்களால் இயன்ற வரை வண்டியின் உள்ளே, வெளியே என்று 'எங்கும் நீக்கமற' குப்பைகளைப் பரப்ப, சிறிது நேரத்தில் எங்கும் குப்பை, எதிலும் குப்பை.

இவ்வளவு நேரம், எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த உஷா மீண்டும் புஸ்தகத்தைப் புரட்டலானாள். அடேயப்பா! விஞ்ஞானம் தான் எந்த அளவில் வளர்ந்து விட்டது? வாஷிங் மிஷின், பாத்திரம் தேய்க்க மிஷின் இவைகளெல்லாம் இப்பொழுது பழைய கண்டு பிடிப்புகள் என்றாகி, ஆள் இல்லாமலேயே பாங்கில் பணம் போட எடுக்க 'கம்ப்யூட்டர்', காரில் அமர்ந்தபடியே பாட, பாட்டு கேட்க, எல்லா இடங்களிலும் தொடர்பு கொள்ள, இன்னும் எத்தனை வசதிகள்? டெலிபோனில் எந்த நபருடன் பேசுகிறோமோ, அவரை அந்த போனிலேயே பார்க்க என்று விஞ்ஞானம் எவ்வளவு வளர்ந்து விட்டது? இவைகளைப் போன்று இன்னும் கொஞ்சம் புது மாதிரியான கண்டு பிடிப்புகள் இந்த மாதிரியான பொது இடங்களில் வந்தால் என்ன என்று நினைத்தபடியே கண் அயர்ந்தாள் உஷா!

வண்டியில் நான்கு பேர்களாக அமர்ந்தபடி சீட்டாடிக் கொண்டே, கடலையைக் கொரித்து தோல்களை கீழே உதிர விட்டுக் கொண்டிருந்தனர். "உங்கள் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்க உதவுங்கள்" என்ற மொச்சைக் கொட்டை எழுத்துக்கள் இவர்கள் கண்களில் விழுவதேயில்லை. 10 நிமிடம் சென்றது. தோலை கீழே எறியப் போன நபரின் பின் புறத்திலிருந்து ஒரு மெல்லிய கம்ப்யூட்டர் குரல், 'தயவு செய்து குப்பையை அதன் இடத்தில் சேர்க்கவும்' என்று குரல் எழுப்ப, அந்த ஆள் அசட்டையாக அதை ஒருமுறை, இருமுறை, மும்முறை என்று 'ஆப்' செய்யவும், அந்த கம்ப்யூட்டர் குரல் அத்துடன் அடங்கி விட்டது. காரணம் அதைக் கண்டு பிடித்தவர் மும்முறை குரல் கொடுக்கத்தான் ஆணையிட்டிருக்கிறார். நம்மவர் இத்தகைய விண்ணப்பத்திற்கும் மனம் இரங்கவில்லை.

இன்னும் 10 நிமிடங்கள் சென்றன. குப்பைகள் விழுந்து கொண்டேயிருந்தன. இப்

பொழுது சீட்டிற்கு இருபுறமும் இரு கைகள் நீண்டு, அந்த குப்பை எரிந்த ஆளை, சீட்டாட விடாமல், குப்பை எறிய விடாமல், இடுப்புப் பகுதியில் விடாமல் 'கிககிக' மூட்ட ஆரம்பித்தது. (பளார் என்று முதுகில் அறைந்து, குப்பையை, அதற்கென்று உள்ள குப்பைத் தொட்டியில் எறிடா, மடையா என்பது போல் கண்டு பிடித்திருக்கலாம். அப்படிக் கண்டு பிடித்திருந்தால் நம்மவர் அந்தக் கைகளையே அல்லவா பிடுங்கி எறிந்திருப்பார்கள்? ஆகையால்தான் இந்த 'கிககிக' மூட்டுதல்.) தோலை எறிந்து கொண்டிருந்த நம்மவர், இடுப்பில் உண்டாகும் 'கிககிக'ப்பை பொறுக்க முடியாமல், ஒரு வழியாக கீழே கிடந்த குப்பைகளை பொறுக்கி அதன் இடத்தில் சேர்த்தார்.

அடுத்து வாழைப்பழக்காரர். நிதானமாகப் பழத்தை உரித்துத் தின்று விட்டு, தோலை



எறிய, கை நீட்டுகிறார். வீட்டின் பின் புறமிருந்து படக்கென்று ஒரு கை நீண்டு, அவர் கையை பின்புறமாக இழுத்துவிட, கூடவே குப்பையை அதன் இடத்தில் சேர், என்று மெல்லிய குரல் எழுப்ப, ஒவ்வொரு முறையும், அவர் கை முன்னே நீட்டும் போதும், கை பின்னே இழுக்கப்பட, அந்த வாழைப்பழக்காரர் ஒரு வழியாக அலுத்துப் போய் தோலை குப்பைத் தொட்டியில் எறிந்து விடுகிறார்.

எல்லா பொது இடங்களையும், தன் வீட்டு 'வாஷ்பேசின்' என்று நினைத்துக் கொண்டு இஷ்டத்திற்கு மூக்கைச் சிந்தும், கோழையைத் துப்பும், பொது நலப் பிரியர்களை என்ன செய்ய? இதோ! இந்த மனிதர் இப்பொழுது என்ன செய்கிறார்? ரோட்டில் தன் இச்சைப் போல் நடந்து வந்து கொண்டிருக்கிறார். வாயிலுள்ள வெத்தலையின் சாறு சிறிது தொண்டைக்குள் இறங்கி விட, 'ஷ்ஷ்ஷ்' என்று வாயில் ஸ்டைலாக இரண்டு விரல்களை வைத்து, வாய் நிறைய இருந்த வெற்றிலைச் சாறை புளிச் சென்று நடு ரோட்டில் , ஏன் விட்டால் 'கவனிக்காமல்' அடுத்தவன் பேண்ட்டிலும் துப்ப முயற்சிக்க, 'சரக்' என்று காலடியில் 'ஷாக்' போன்று ஏதோ ஒன்று தன்னை அழுத்த, வெத் தலைச் சாற்றைத் துப்ப முடியாமல், வாயிலுள்ள எச்சிலைத் துப்ப முடியாமல், ஏன் இஷ்டம் போல் மூக்கைக் கூட சிந்த முடியாமல் துடிதுடித்துப் போய் அதற்கென்று இருந்த குப்பைத் தொட்டியில் போய், விருப்பமில்லாமல் அந்த வேலைகளை செய்து விட்டு நடந்தார். அதுவரை அங்கும் இங்கும் எங்கும் துப்பிக் கொண்டிருந்த அவர் நிலை இப்படியாக மாறியது. இஷ்டம் போல் நடந்து கொள்ளும், நம் 'தான் தோன்றி'ப் பிரியர்களினால் எவ்வளவு முயன்றும், நாளடைவில், சுற்றுப் புறத்தை முயன்றும் அசுத்தம் செய்ய முடியாமல், நாட்டில் எங்கும் சுத்தம் எதிலும் சுத்தம்.

மடியிலிருந்த சயின்ஸ்டுடே புஸ்தகம் சரிந்து விழ, அரைத் தூக்கத்தில், சுத்தமான இந்தியாவைக் கண்டு கொண்டிருந்த உஷா, விழித்துக் கொண்டு கீழே விழுந்த புஸ்தகத்தை எடுக்கக் குனிந்தாள். சுற்றிலும் இறைந்து கிடந்த கடலைத் தோல்கள் அவளைப் பார்த்து 'திருதிரு' வென முழித்தன. ஸ்டேஷன் வந்து விட்டதால் உஷாவும், 'நிச்சயம் இப்படிப்பட்ட சுத்தம் என்றாவது ஒரு நாள் நம் ஊரிலும் வரும்' என்ற நம்பிக்கையுடன், வண்டியிலிருந்து கீழே இறங்கி நடந்தாள்.

— சாந்தா சேஷன்

♦ ''இன்டர் நெட்'' பற்றிய அறிவியல் பூர்வமான கட்டுரை காலத்திற்கேற்றது. பயனுள்ள தகவல்களை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக எழுதிய பெரமண்டூர் வாசவதத்தைக்குப் பாராட்டுக்கள்!

பா. சுபா தேவி, மதுரை - 15.

♦ பொன்னான தருணங்கள் கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம். சின்ன மூக்குத்தி செய்யும் அமர்க்களங்கள் ஒவ்வொருவர் வாழ்வில் ஒவ்வொரு விதமாக புகுந்து புறப்படுகிறதே. சுவாரசியமான அனுபவங்கள். மூக்குத்தியை குழந்தைக்குக் குத்தி, அஜாக்கிரதையால் இழந்த சகோதரியின் துயரம் மனதை மிகவும் நெருடுகிறது.

கமலா தெய்வசிகாமணி, சென்னை - 96.

சொல்ல விரும்புகிறோம்!



♦ என்னது? ஆயிரம் வகையான ஊறுகாய்களா? (ஊறுகாய் 1000 போட்ட அபூர்வ சிந்தாமணி) அப்பப்பா! நினைத்தாலே தலை சுற்றுகிறது! அதே சமயம் நாவில் நீர் சுரப்பதையும் உணர முடிகிறது. ''ஊறுகாய் திலகம்'' என்ற பட்டத்தை உஷா பிரபாகரன் அவர்களுக்குச் சூட்டினாலும் தகும். அவரது கண்டுபிடிப்பான தானிய கதம்ப ஊறுகாய் போடும்முறை மிகமிக எளிதாக இருந்தது குறிப்பிடத்தக்கது!.

கலைச்செல்வி, தோட்டக்குறிச்சி.

♦ குழந்தை இல்லை என்றால் அதன் முழு பொறுப்பும் பெண்களையே போய் சேர்ந்து அதனால் அவர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளுமளவிற்குக் கூட போய் விடுகிறது. அதற்கு ஆண்களும் பல சமயங்களில் காரணமாகிறார்கள் என்ற கட்டுரையும், காரணங்களும் கணவன்மார்களையும் சிந்திக்க வைத்தது.

என். ராஜலெட்சுமி, மேலப்பாதி.

♦ திருவஹீந்தபுரத்துக்கு சென்று வந்துள்ளோம். அப்பொதெல்லாம் சாமியைக் கும்பிட்டுக் கொள்வோம். அவ்வளவுதான். ஆனால் அதன் சரித்திரப் பெருமையை ஆசிரியர் கட்டுரையின் மூலம் விவரித்த போது மெய்சிலிர்த்துப் போனோம்.

வசந்தராஜசெல்வன், பாண்டிச்சேரி - 3.

♦ என் மாதிரி இல்லத்தரசிகளுக்குப் பொருளாதாரத்தைப் பற்றிய பயனுள்ள விளக்கக் கட்டுரை இன்னும் விவரமாக அறிய விரும்புகிறேன். நடுவில் படிக்கத் தொந்தரவாய் நீல நிறம் அதிகமாய் இருந்தது ஒரு குறை.

மங்களம், சென்னை.

♦ 'வலிப்புப் பிணி' ஜன்னி வரும் காரணங்களையும், அதை தடுக்கும் ஆலோசனைகளையும், வந்தால் செய்யும் முதலுதவி பற்றியும் தெளிவாய் விளக்கிய டாக்டர் ஞானசம்பந்தம் அவர்கட்கு கோடி நன்றிகள்.

எல். மீனாட்சி சுந்தரம், மதுரை - 10.

♦ அனுபவ தோரணங்களுக்கிடையில் சில சினிமா ஸ்டில்களை சுவாரஸ்யத்திற்காக என்று

மூக்குத்தி செய்யும் அமர்க்களம்!

போட்டிருந்தாலும் பொருத்தமாகத்தான் உள்ளது.

த. சாந்தி, மன்னார்குடி.

♦ தங்களது ''சில வார்த்தைகள்'' தொடரை மிகவும் விரும்பிப் படிப்பேன். இந்த மாதம் எனக்கு ஒரு நெருடல், இது எனக்காகவே எழுதப் பட்டதோ என! தாங்கள் எழுதியுள்ளது போல 'நாம் அப்படிப் பேசியிருக்க வேண்டாமே, அப்படி நடந்து கொண்டிருக்க வேண்டாமே' என நினைத்து உருகும், மருகும் தருணங்கள் பலப் பல. என்ன செய்வது? சிந்திய பால் போலத்தான். எது எப்படியானாலும் தங்களது ''சில வார்த்தைகள்'' தொடரால் என் கண்கள் திறக்கப்பட்டது. நன்றி தொடர்க உங்கள் எழுத்துப் பணி.

பானுமதி, திருச்சி.

♦ ... ஆனால் தம்பி கல்யாணத்தில் எனது ஆதங்கத்தினை வெளிப்படுத்தியதற்காக மூத்த மகளான என்னைப் புறக்கணித்து எனக்குப் பின் உள்ள சகோதரி மற்றும் இரண்டு தம்பிகளின் திருமணங்களை வைராக்கியத்துடன் நடத்தி முடித்த எனது பெற்றோர்களை என்னவென்பது?


ஒரு வாசகி, சென்னை.

வாஸ்து எனும் புதையல்


இந்த அண்ட சராசரங்களையும் உலகையும் அதனுள் நீல வானங்களையும், வண்ண வண்ண மலர்களையும், பசுமையான நிலங்களையும், சுவையான நீர் மிகுந்த ஆறுகளையும் நமக்காக மிகவும் நேர்த்தியாக படைத்த அந்த பரமாத்மாவே ஒப்பில்லாத கட்டிடக்கலை வல்லுனர் ஆவார். இந்த வானவெளியே ஒரு அதிசயம். எல்லா கிரஹங்களும் நாம் அறிந்து கொண்டாலும், அறிந்து கொள்ளா விட்டாலும் அதனதன் பலனை கொடுத்துக் கொண்டே இருக்கின்றது. இந்த கிரஹங்கள் கொடுக்கின்ற நன்மை மற்றும் தீமையான பலன்களை நம்முடைய முனிவர்களும், ஞானிகளும் அறிவுக் கண் கொண்டு பார்த்தார்கள். அதன் பலனாக நமக்கு இரண்டு வகையான ஜீவ சாஸ்திரங்கள் கிடைத்தது. ஒன்று வாஸ்து சாஸ்திரம் மற்றொன்று ஜோதிட சாஸ்திரம். வாஸ்து சாஸ்திரம் மனிதனை இயற்கை வழியே உயர்வடையச் செய்து வாழவைக்கும். ஜோதிட சாஸ்திரம் அதனை வழி நடத்தும். ஜோதிடம் மற்றும் வான சாஸ்திரம் அறிந்த வாஸ்து வல்லுனர்கள் இன்று சரியாக எல்லா வகையான துறையைச் சார்ந்தவர்களுக்கும் வாழ வழி காட்ட முடியும்.

கடந்த இதழில் அடுக்குமாடி கட்டுவதற்கான இடம் எப்படித் தேர்வு செய்வது என்றும், அடி நிலைத் தொட்டி, கிணறு, மேல் நிலை நீர்த் தொட்டி எப்படி அமைய வேண்டும் என்பதனை குறித்தும் தெரிந்து கொண்டோம். இனி கட்டிடத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டின் அமைப்புகளும் எப்படி இருக்க வேண்டும் என்பதனை நாம் நன்கு அறிந்து கொள்வோம்.

1. வீட்டின் தலை வாசல் கிழக்கு வடக்குப் பகுதியில் வடகிழக்கிலும் தெற்கு திசையில் தென்கிழக்கு தெற்குப் பகுதியிலும் வடமேற்கில் மேற்குப் பகுதியிலும் அமைய வேண்டும். கீழ் கண்ட படத்தில் விளக்கம் காணலாம்.



2. சமையல் அறை வீட்டின் தென்கிழக்கு மூலையிலேயே அமைய வேண்டும். இரண்டாவது இடமாக வடமேற்கில் அமையலாம்.




வடகிழக்கிலும், தென் மேற்கிலும் அமைந்தால் பெண்களுக்குக் கடுமையான உடல் நல பாதிப்புகள் ஏற்படுவதை சாஸ்திரங்களும், அனுபவங்களும் காட்டுகின்றன.

3. படுக்கை அறை தென் மேற்கு மற்றும் வட மேற்குப் பகுதியிலேயே அமைய வேண்டும். எக்காரணத் தினாலும் வடகிழக்கு மற்றும், தென்கிழக்குப் பகுதிகளில் அமைக்கக் கூடாது. வடகிழக்கில் குழந்தைகள் படிக்கும் அறைகள் அமைக்கலாம். தென் கிழக்கில் உள்ள படுக்கை அறைகளில் மன சோர்வு, உடல்



பி.ஜே. ரவிராஜ்


நலக்குறைவு, விவாகரத்து சண்டை சச்சரவுகள் ஏற்படும்.



4. கழிவு அறைகளை வடமேற்கிலும், தென்மேற்கிலும், தென் கிழக்கிலும் அமைத்துக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் வடகிழக்கு ஈசான்ய மூலையில் அமைக்கக் கூடாது.

சாதாரணமாக இன்று கட்டப்படும் அடுக்கு மாடி கட்டிட வீடுகளின் வடிகுழாய்கள் மற்றும் புகை போக்கிகள் ஒன்றாக வர வேண்டும் என்ற சிக்கனத்தின் காரணமாக எப்படித் தவறுகள் நடக்கின்றது என்பதனை கீழ் கண்ட வரை படத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இதில் K என்பது சமையல் அறையாகவும், B என்பது படுக்கை அறையாகவும், T என்பது



கழிவு அறைகளாகவும், H என்பது ஹாலாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

1. வடகிழக்குப் பகுதி வீட்டை எடுத்துக் கொண்டோமேயானால் முதலாவதாக நுழைவு வாயிலே அந்த வீட்டின் தென் மேற்கில் அமைந்துள்ளது. படுக்கை அறை வடகிழக்கில் அமைந்துள்ளது. இந்த இரு அமைப்பையும் மாற்றி விடுவது நல்லது.

2. தென் கிழக்குப் பகுதியை எடுத்துக் கொண்டோமேயானால் முதலாவதாக நுழைவு வாயில் அந்த வீட்டின் வடமேற்கில் வடக்கைப் பார்த்தார் போல் அமைந்துள்ளது. இதுவும் நன்மை பயக்காது. மேலும் இதில் கழிவு அறை அந்த வீட்டின் வடகிழக்கில் இருக்கின்றது. இது ஈசனுக்கு உரிய மூலை. இதையும் மாற்றப்பாருங்கள். படுக்கை அறை தென் கிழக்கு மூலையில் அமைவதும், சமையல் அறை தென் மேற்கில் அமைந்து இருப்பதும் சரியில்லை. இவற்றை மாற்றிக் கொள்ளுங்கள்.

3. தென்மேற்கில் அமைந்துள்ள வீட்டில் சமையல் அறை படுக்கை அறை, கழிவு அறை நுழைவு வாயில் முதலியன சரியாக அமைந்திருந்தாலும் வடகிழக்கில் வாயில் உள் நோக்கி இருப்பதால் இதுவும் நம் சந்ததிகளாகிய குழந்தைகளை பாதிக்கும்.

4. வடமேற்கில் அமைந்துள்ள வீட்டில் வாயில், படுக்கை அறை மற்றும் கழிவு அறை சரியாக அமைந்திருந்தாலும் சமையல் அறை வடகிழக்கில் அமைந்துள்ளது. இது பெண்களின் உடல் நிலை மற்றும் மன நிலைகளை பாதிக்கும்.

(இதில் ஒவ்வொன்றுக்கும் அதற்கான விளைவுகள் வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவற்றையெல்லாம் எழுதி உங்களை பயமுறுத்தக் கூடாது என்பதற்காகவே தவிர்த்திருக்கிறோம். நமக்கென்று ஃப்ளாட் சொந்தமான பிறகு சாஸ்திரப்படி மாற்றி நல் வாழ்வு பெறலாமே!)

இம்மாதிரி கட்டப்படும் அடுக்குமாடி கட்டிடங்கள் சிக்கனத்தின் காரணமாகக் கட்டப்படுவதால், வீட்டில் குடியிருப்பவர்கள் நிலைதான் பாதிக்கப்படுகின்றது. இதில் எல்லா திசைகளில் உள்ள வீட்டினையும் சாஸ்திரப்படி அமைக்க முடியாது என்று கூறுபவர்களும் உண்டு. ஆனால் நிச்சயமாக 100% எல்லா வீடுகளையும் சாஸ்திரப்படி அமைக்க முடியும். சமீபத்தில் கோவையில் இம்மாதிரி முழுதுமாக வாஸ்து படி அடுக்குமாடி கட்டிடம் என் சிற்றறிவின் ஆலோசனைப்படி அமைக்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.

ஏற்கெனவே மேலே கட்டப்பட்டு குறைபாடுள்ள வீடுகளை நாம் நிச்சயமாக அதிகபட்ச குறைபாடுகளை குறைத்து விட முடியும். இதற்கு சீனாவில் உருவான ஃபென்குயி நமக்கு வழி காட்டுகின்றது. இப்படி மாறுதல் செய்யப்பட்ட அடுக்குமாடி வீடுகளில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வாஸ்து வாயிலாக நான் ஏற்கெனவே கூறியது போல் ஆராய்ந்து அறிந்த ஜோதிட வல்லுனர்களின் உதவியுடன் மாற்றங்களே செய்ய முடியாத வீடுகளையும் எந்திரா தந்திரா மற்றும் மந்திரா என்கின்ற முறையில் வரை படங்களையோ அல்லது நேரிலோ பார்த்து மாறுதல்களை கொடுத்து அதில் வாழும் மக்களை நஷ்டம், கஷ்டங்களில் இருந்து விடுவிக்க முடியும். இதில் 70% விடிவு பெறலாம். கட்டிடம் கட்டும் தொழிலதிபர்கள் இதில் சற்று கவனம் செலுத்தி கட்டுவார்களேயானால் நிச்சயமாக இதில் நாம் பெரிய முன்னேற்றங்களை கொண்டு வரலாம்.

இன்று இந்த அடுக்குமாடி வீடுகளில் வாழும் மக்கள் தங்களுக்கு நேரிடும் பல வகையான துன்பங்களுக்குக் காரணம் அறியாமலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நாம் சற்று சிந்தித்தால் நமக்கு சாஸ்திரங்கள் வழிகாட்ட காத்திருக்கின்றது. மேலும் விவரங்கள் அறிய சென்னையில் 1 - 5 ந் தேதி வரையில் 8540084 தொலைபேசியிலும், 6ந் தேதி முதல் மாத கடைசி வரை கோவை - 577907 லும் தொடர்பு கொள்ளலாம். (தொடரும்)

சேமிப்பு மாடல் போட்டி முடிவுகள்...

இது கம்ப்யூட்டர் யுகம்



• பாலசுப்ரமணியம், ஷண்முகம்

வழிகாட்டிகள் கலந்துரையாடல் பார்க் டவுன் பெனிஃபிட் ஃபண்டுடன் இணைந்து நடத்தியபோது ஒரு பெண்மணி, "முன்பெல்லாம் பேங்க்கில் குழந்தைகளின் சேமிப்பை ஊக்குவிக்க ஒரு பொம்மை உண்டியல் தருவார்கள். இப்போது அதை நிறுத்திவிட்டார்கள். நீங்கள் அது போல ஆரம்பிக்கலாமே!" என்றார். உடனே அதை ஏற்றுக் கொண்ட பார்க் டவுன் பெனிஃபிட் ஃபண்ட் சேர்மன் பாலசுப்ரமண்யம், "மங்கையர் மலர் வாசகிகள் 'சேமிப்பு' என்பதைக் குறிக்கும் ஒரு பொம்மை மாடலை உருவாக்கித் தரட்டும். சிறந்த மாடலுக்கு நாங்கள் ஒரு சவரன் பரிசு தருகிறோம்" என்றார்.

வழக்கம் போல நிறைய பேர் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள். குறிப்பாக நிறைய மாணவ மாணவியர் இந்த முறை கலந்து கொண்டது மகிழ்ச்சியாக இருந்தது.

வந்திருந்த மாடல்களைத் தேர்ந்தெடுக்க 'ரெடிமணி' சேர்மன் மோகன், ஓவியர் கலா மற்றும் பார்க் டவுன் பெனிஃபிட் ஃபண்ட் சேர்மன் பாலசுப்ரமண்யம், செயலாளர் ஷண்முகம், மங்கையர் மலர் ஆசிரியை மஞ்சுளா ரமேஷ் ஆகியோர் நடுவர்களாக இருந்து ஆலோசித்தனர்.

...வெகு எளிதாக தேர்ந்தெடுத்துவிடலாம் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஒவ்வொன்றையும் தேர்ந்தெடுத்து பேசப் பேச அதற்கான விளக்கங்கள், அதையொட்டிய மேலும் ஐடியாக்கள் என விரிந்து கொண்டே போனது.

பலர் பொம்மைகள் செய்து அனுப்பியிருந்தனர். முறத்தைக் கொண்ட ஒரு பொம்மை, யானை பொம்மை, ரோபாட் பொம்மை என எங்களைச் சுற்றி ஏகப்பட்ட பொம்மைகள். கங்காருவைப் பார்த்தவுடன் "காசு போட்டவுடன் அதன் வயிற்றிலிருந்து ஒரு குட்டி எட்டிப் பார்ப்பது போலச் செய்யலாம்" என்றார் ஓவியர் கலா.

அதே போல கையில் பூவுடன் இருக்கும் ஒரு இத்தாலிய மாடல் ஷண்முகத்தை மிகவும் கவர்ந்தது. அனைவரையும் கவர்ந்த இன்னொரு படம் காசு போட்டவுடன் ஜால்ரா அடிக்கும் பொம்மையின் வரைபடம். "அந்த உண்டியல் பொம்மையில் காசு போட்டால் உடனே ஜால்ரா அடிக்கும் என்றால் அதற்காகவே குழந்தைகள் காசு போட ஆரம்பிப்பார்கள்" என்றார்கள்.

ஆனால் அது ரிப்பேராகி ஜால்ரா அடிக்காவிட்டால் அதை மாற்றுவதே ஒரு வேலையாகி விடும், தவிரவும் இது கம்ப்யூட்டர் யுகம். குழந்தைகள் மிகவும் முன்னேறி விட்டார்கள். ஏதேனும் 'சிப்ஸ்' மூலம் குரல் கேட்கும் காலம்; ஒரு இன்விடேஷனைத் திறந்தவுடன் கபடி கபடி என குரல் வந்ததாம், அந்த அளவுக்கு கம்ப்யூட்டர் காலமாகி விட்டது என்றும் பேசப் பட்டது.

"இதெல்லாம் கொஞ்ச நேரத்தில் அல்லது நாளில் போரடித்துவிடும். 'யுடிவிடி வேல்யூ'



• 'ரெடிமணி' மோகன், ஓவியர் கலா



• தமிழ் செல்வி பாண்டியன், மதுரை




• லக்ஷ்மி, உதகை

இருந்தால் நல்லது. எப்போதும் மாணவர்களுக்கு உபயோகப்படும் விதத்தில் இருக்குமானால் நன்றாக இருக்கும்" என்றார் மோகன். அவரைக் கவர்ந்த ஒரு வாசகியின் ஐடியா, "நாம் எதை வாங்கச் சேமிக்கிறோமோ அதே மாடலில் உண்டியல் இருக்க வேண்டும். டீ.வி. வாங்க என்றால் டீ.வி மாடல் உண்டியலாக இருந்தால் அதைப் பார்க்கும்போதெல்லாம் விரைவில் பணம் சேர்த்து குறிப்பிட்ட அந்தப் பொருளை வாங்க வேண்டும் என்று உந்துதல் ஏற்படும்" என எழுதியிருந்த ஒரு வாசகியின் கடிதம். அந்த ஐடியா நன்றாக இருந்தாலும், அத்தனை வகையான பொம்மைகளை செய்து வைக்க முடியாதே எனப் பேசினோம்.

கடைசியாக 'குளோப்' எனப்படும் உலக உருண்டை வடிவ உண்டியல் நாம் பேசிய அனைத்து அம்சங்களுடன் பொருந்துவதாக இருந்தது. எல்லோர் வீட்டிலும் உலக உருண்டை இருக்காது. அதனால் மாணவர்களுக்கு இது மிகவும்



• ஜெயந்தி, தஞ்சாவூர்



உதவியாக இருக்கும். 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' எனவே சேமிப்பது அவசியம் என்பதை உணரலாம். 'குளோபல் சேவிங்க்ஸ் ஸ்கீம்' என்றே போடலாமே' என்றெல்லாம் மடமடவென ஐடியாக்கள் குவிய ஆரம்பித்தன.

அதிலும் ஒரு சிறிய பிரச்னை, நிறைய பேர் அந்த ஐடியாவை எழுதி இருந்தனர். அவர்களின் பெயர்களை எழுதிப் போட்டு நாங்கள் தேர்ந்தெடுத்த பரிசு பெற்ற அதிர்ஷ்டசாலி -

டி.எஸ். துர்கா மீனாட்சி,
30, பாரதி தெரு கிழக்கு, தியாகராஜ நகர், திருநெல்வேலி - 627 011.


இவருக்கு ஒரு சவரன் தங்கக் காசினை பார்க் டவுன் பெனிஃபிட் ஃபண்ட் பரிசாக அளிக்கிறது. எங்களைக் கவர்ந்த அந்த சில படங்களை இங்கு காண்கிறீர்கள்!

— புவன்

படங்கள் : **ராஜ""நாராயணன்**



• மீனாட்சி, மதுரை



• பத்மா பீமன், திருச்சி - 21

மூலிகையாகப் போய் மாத்திரையாய் வருகிறது


"அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களில் அகப்பட்டுக் கொண்டு நவீனப் பொருட்களினால் உடலையும், உள்ளத்தையும் கெடுத்துக் கொண்டு மக்கள் நடை பிணமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதைக் காணும் போது நெஞ்சு பொறுக்குதில்லை.

இதற்கு அடிப்படை காரணம் இயற்கைக்கு மாறுபட்ட போலி நாகரீகமான வாழ்க்கை நடைமுறைகளைக் கையாள்வதின் காரணமாக நமது இளைய சமுதாயம் வலிமை குன்றிப் பொலிவின்றிக் காணப்படுகின்றது. அதிக உழைப்பும் செலவும் இல்லாமல் இயற்கையாக எளிதில் கிடைக்கக் கூடிய மூலிகைகளைச் சுலபமாக பயன்படுத்துவதன் மூலம் உடல் நலத்தை எல்லோரும் பேணிகாக்கலாம் என்பதைச் சொல்வதுதான் என்னுடைய இலட்சியம்" என்கிறார் டாக்டர் சி.கே.எம். சபாபதி –

பி.எல். படித்த இவர் இத் துறைக்கு வந்ததற்கே தந்தையின் அயராத ஆராய்ச்சியும், உழைப்பும் தான் காரணம் என்கிறார்.

"என்னுடைய தாத்தா திருப்பத்தூர் அருகே ஒரு சிறு கிராமத்தில் விவசாயம் செய்து கொண்டு இருக்கும் போது பாம்புகடி, விஷக்கடிக்கு மருந்து கொடுத்து குணப்படுத்துவார். தினந்தோறும் சுற்றுப்பட்டு கிராமத்தினர் பத்திலிருந்து பதினைந்து பேர் சிகிச்சை பெற்று பூரண சுகத்தோடு செல்வார்கள்.

எனது தந்தை சி.கே. மாணிக்கவாசகமும் ஒரு விவசாயிதான். 1974-ல் அக்டோபர் மாதத்தில் ... களுக்கு ஏற்பட்டு விவசாயத்தைக் கவனிக்க முடியாமல் வீட்டிலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. டாக்டர்களிடம் சென்று காண்பித்ததில் பயனில்லை. வலி அதிகமாகிக் காய்ச்சல் தொற்றிக் கொண்டுள்ளது. அன்று இரவில் வேப்பிலையைக் கனவில் கண்டுள்ளார் இவர். எனது தந்தையின் சிந்தனையும் ஒரு பொருளை காணும் கண்ணோட்டமும் மற்றவர்களிடமிருந்து வித்தியாசமானது. 'ஏன் நமக்கு இந்தக் கனவு' என யோசித்திருக்கிறார்.



• டாக்டர் சி.கே.எம். சபாபதி

மறுநாள் காலை எழுந்தவுடன் வேப்பிலையைக் கொண்டு வந்து மண் பாத்திரத்தில் போட்டு ஒரு டம்ளர் நீர்விட்டுக் காய்ச்சி அரை டம்ளராகக் கஷாயமாக்கி வெறும் வயிற்றில் குடிக்க ஆரம்பித்துள்ளார். ஒரே வாரத்தில் அவருக்குப் புதுத் தெம்பு ஏற்பட்டு உள்ளது.

அதற்கிடையே மலத்தில் சிறு பூச்சிகள் வெளியேறியிருக்கிறது. சுளுக்கு தீர்ந்தபாடில்லை. குளிர் காலங்களில் சிறுவர்கள் குப்பை கூளங்களை பற்றவைத்து தெருவோரத்தில் குளிர் காய்ந்து கொண்டிருந்திருக்கிறார்கள். அவர் அங்கே சென்று காலில் சுளுக்கு ஏற்பட்ட இடத்தை அனலிலே காட்டி இதமாகத் தேய்த்து உள்ளார். மறுநாள் வலி குறைந்துள்ளது. தொடர்ந்து மூன்று நாட்கள் செய்ததில் முழுவதும் குணம் தெரிய ஆரம்பிக்க சிந்தித்தார். கிராமத்தில் இருக்கும் மக்கள் சிலருக்கு உடல் பேதியா, உடல் நலமின்மையா, காலில் சுளுக்கா தாம் கண்டு அனுபவித்த மருத்துவத்தை சொல்லிக் கொடுத்துள்ளார்.

இவரிடம் ஆலோசனை கேட்ட அனைவரும் குணம் அடைய மேலும் இவருக்குள் ஓர் ஆர்வம் ஏற்பட மூலிகைகளை ஆராய முற்பட்டார். பல நூல்களைப் புரட்டினார்.

வேப்பிலையை அம்மை நோய் வந்த நோயாளிகள் இருக்குமிடத்தைச் சுற்றி போடு கின்றனர். அதன் காரணத்தை ஆராயும் போது நோய் கிருமிகளிடமிருந்து வேப்பிலையில் உள்ள கசப்புத் தன்மையானது மனிதனைப் பாதுகாக்கின்றது என்பதை உணர்ந்தார்.

வேப்பிலையை சக்திக்கும், அருகம்புல்லை விநாயகருக்கும் துளசியை திருமாலுக்கும், வில்வ இலைகளை சிவனுக்கும் படைக்கின் றார்கள். படைத்த இலைகளை பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குகிறார்கள். கடவுள் பேரைச் சொல்லியாவது ஓரிரு இலைகளை உண்பதால் நோய் நீங்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

இவருடைய ஆராய்ச்சி மக்களிடையே சென்றடையும் போது நல்ல பலனை அளித் தது. 1974-ல் டிசம்பர் மாதம் திருப்பத்தூரில் மருத்துவமனை தொடங்கினார். திருப்பத்தூரை சுற்றி உள்ள கிராமம் மற்றும் பட்டி தொட்டி யெல்லாம் இவர் பிரபலமடைந்தார். தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற் கொண்டார்.

தன்னுடைய எண்ணங்களை மக்களுக்குத் தெரியப்படுத்த "என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்", "தெய்வீக மூலிகைகள்" என்று இரண்டு நூல்களை எழுதி உள்ளார். ஒவ்வொரு நூலும் ஒன்றரை இலட்சம் பிரதிகள் விற்று மக்களிடையே நன்மதிப்பைப் பெற்று உள்ளது. தன்னுடைய வாழ்க்கையின் பெரும் பகுதியை மூலிகைகளுக்கே செலவிட்டு கடந்த வருடம் காலமானார்.

நான் பி.எல். படித்துள்ளேன். சிறு வயதி லிருந்தே அப்பாவிடம் இருந்ததால் அனைத்தும் நன்கு தெரிந்து வைத்திருப்பவன். கிட்டத்தட்ட 15 வருடங்களாக அனுபவபூர்வமாக ஆராய்ச்சி யுடன் உணர்ந்திருப்பவன். தந்தையின் உழைப்பு வீணாகக் கூடாது. அவருடைய அரிய முயற்சிக்கு நாம் உறுதுணையாக இருக்க வேண் டும் என்ற ஆர்வத்தால்தான் தந்தை வழியில் நான் மூலிகை மருத்துவம் செய்து வருகிறேன்.

"உங்களுடைய சிகிச்சையில் என்ன தனிச் சிறப்பு என்பீர்கள்?"

"சித்தா, யுனானி, ஹோமியோபதி, ஆயுர் வேதம் எதனுடனும் இணையற்றது. மூலிகை வைத்தியம். வெறும் பச்சிலைகளைக் கொண்டு மருத்துவம் செய்கிறோம்.

நோயாளிகளை மூன்று விதங்களாகப் பிரிக் கிறோம். நாடிப் பிடித்து அல்ல.

நோய் - வலி - வியாதி.

நோய் என்பது தீமை விளைவிக்கக் கூடிய விஷக் கிருமிகளால் மனித உடல் தாக்கப்பட்டு ஏற்படும் உடல் நலக் குறைவு. இதற்கு உதாரண மாக அம்மை, காலரா.

வலி என்பது நரம்புப் பிடிப்பு, இரத்த ஓட்டம் ஒழுங்காக இல்லாமலிருப்பது, உடல் பாகங்களின் தேய்மானம், உராய்வு எனலாம்.

மற்றவர்களுடைய துயரங்கள் முட்டாள்களுக்கு மட்டுமே ஆறுதல் அளிக்கின்றன.

— ஸ்பெயின் பழமொழி

தகவல் : சித்ரா

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

வியாதி என்பது இரத்த அழுத்தம், இடுப்பு வலி, நெஞ்சு வலி, தலைவலி, கை கால் வலிப்பு, பாரிச வாயு எனலாம்.

நோயாளிகள் வயது, நோயின் தன்மை பொறுத்து மருத்துவம் செய்து வருகிறோம். மேலும் குறிப்பாக நோயாளிகள் முதலில் எங்களிடம் வருவதில்லை. அனைத்து இடங்களுக்கும் சென்று விட்டு இறுதிநிலையில் வருகிறார்கள். முழுமையாக குணப்படுத்தக் கூடிய வியாதியைக் கூட இந்தத் தாமதத்தினால் குணப்படுத்த முடியாமல் தள்ளிப் போட வைக்கிறோமே தவிர முழுமையாக குணப்படுத்த முடிவதில்லை.

"இன்றைய அவசர உலகில் தங்களுடைய மூலிகை வைத்தியம் மக்களிடையே சென்றடைகிறதா?

50 சதவீதம் சென்றடைகிறது. எந்தவொரு காரியத்தையும் அவசரமாக மேற்கொள்வது தவறு. இது மருத்துவத்திற்கும் பொருந்தும். நாங்கள் கொடுக்கும் மூலிகைகள் குறிப்பாக 45 நாளிலிருந்து 60 நாட்களுக்குள் பூரண குணம் கிடைக்கிறது. ஆனால் இப்போதெல்லாம் நாங்கள் கூட மக்கள் அவசரத்திற்கேற்ப மூலிகைகளைக் காய வைத்து, அரைத்து, தூளாக்கி 'காப்சியூல்' வடிவில் கொடுக்க ஆரம்பித்துள்ளோம். என்ன செய்வது?

"தந்தை விட்ட வழியில் தாங்கள் இத்துறையில் நுழைந்துள்ளீர்கள். இத்துறையில் தாங்கள் ஏதாவது புது அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணியுள்ளீர்களா?

தந்தை வழியில் நானும் எனது அண்ணன் டாக்டர் சி.கே.எம். குருபரனும் வந்துள்ளோம். மூலிகைகள் அழியக்கூடாது. அதனுடைய முழு பலனும் மக்களுக்குத் தெரியவில்லை. வெளிநாட்டினர் தமிழ்நாட்டிற்குள் நுழைந்து மூலிகைகளைக் கப்பல் வழியாக டன் டன்னாக ஏற்றிக் கொண்டு சென்று காப்சூல் வடிவில் மீண்டும் தமிழ்நாட்டிற்கே அனுப்புகிறார்கள். இத்தகைய நிலையில் மூலிகைகளை மக்களிடையே வளர்க்கவும், அதற்கென்றே கல்லூரிகள், மருந்துக்கடைகள் ஆரம்பிக்கப்பட்டு வரும் காலங்களில் மூலிகை மருத்துவம் மக்களிடத்தில் பரவ வேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர்கால இலட்சியம். அதற்காக பாடுபடுவேன்" என்கிறார் டாக்டர் சி.கே.எம். சபாபதி

— தஞ்சை கிருத்திகா

படம் : **ராஜநாராயண்**

சேமியுங்கள்

பாடுபட்டுச் சேர்த்த பணத்தை நல்ல நிதி நிறுவனத்தில் பாது காப்பாகப் போட வேண்டும். அதே சமயம் அதற்குக் கூடு மானவரையில் நல்ல வட்டியும் கிடைக்க வேண்டும். இந்த ஆசை யாருக்குத்தான் இல்லை? குறிப்பாக வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின், தமது சேமிப்பை இவ்வாறு பயன்படுத்தி, சீரான வரு மானத்தை மாதம்தோறும் பெற வேண்டும் என்ற ஆர்வம் பலருக்கும் இருக்கிறது.

இன்று இவ்விதம் நமக்கு உதவ வரும் பல சேமிப்பு நிறுவனங்களில், சிறந்த சில நிதி அமைப்புகள் உள்ளன என்று இதுவரை கூறி னோம் அல்லவா? அந்த வகையில் கம்பெனி சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, அசை யும் சொத்துக்கள் வாங்க கடன் தரும் நிறு வனங்களைப் பற்றி அடுத்ததாகத் தெரிந்து கொள்வோம். இன்று இந்த வகையில் மிகப் பிரபலமாக இயங்கி வரும் லக்ஷ்மி ஜெனரல் பைனான்ஸ் லிமிடெட்டைச் சேர்ந்த நிபுணர்களான திரு. ஸ்ரீநிவாஸ் ஆசார்யா (எக்ஸிகியூடிவ் டைரக்டர்), திரு. வி.கே. ராமன் (ஜெனரல் மானேஜர்) ஆகி யோரைச் சந்தித்து அவர்களிடமிருந்து இது பற்றிப் பெற்ற விளக்கங்களை வாசகர்கள் நலனுக்காக இங்கே அளிக்கிறோம் –

கேள்வி : அசையும் சொத்துக்கள் வாங்கக் கடன் தரும் உங்களுக்கு முதல் பணம் கிடைக்கும் வழிகள் என்ன?

திரு. ஆசார்யா : எங்களுக்கு நிதி வருவாய் மூன்று வழிகளில் கிடைக்கின்றன. பொது மக்கள் எங்களிடம் முதலீடு செய்யும் டெபா சிட்டுகள், வங்கிகள் தரும் கடனுதவி தவிர எஸ்ஐடிபிஐ (SIDBI) ஐடிபிஐ (IDBI) ஐசிஐசிஐ (ICICI) போன்ற நிறுவனங்கள் தரும் கடன் ஆகியவையே எங்கள் மூலாதாரம். இவற்றில் பொது மக்கள் முதலீடு பிரதான இடத்தை வகிக்கிறது.

கேள்வி : பொதுமக்கள் உங்களைப் போன்ற நிறுவனங்களில் முதலீடு செய்யும் பணத்திற்கு எந்த வகையில் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது?

திரு. ராமன் : எங்களைப் போன்ற நிறு வனங்களில் முதலீடு செய்யப்படும் பணத்தை அவ்வளவு எளிதில் கடனாக வெளியாருக்குத் தந்து விடுவதில்லை. ரிசர்வ் வங்கியின் சட்டப் படி முதலீடு செய்யப்பட்டுள்ள தொகையில் பன்னிரெண்டரை சதவிகிதம் அரசாங்க பாண்டுகளில்தான் வைக்கப்பட வேண்டும். மீதமுள்ள தொகையை வெளியாருக்குக் கட னாக அளிப்பதினையும், அதைத் திரும்ப வசூலிப்பதையும் மூன்று நிறுவனங்களுக்குக் கணக்கு காட்டியாக வேண்டும். ஒவ்வொரு ஆறு மாதத்திற்கொரு முறை ரிசர்வ் வங்கி



• ஆசார்யா

யினருக்கும், எங்களின் தரத்தை நிர்ணயிக்கும் சங்கத்தினருக்கும் கணக்குக் காட்ட வேண்டும். எங்கள் வங்கிக்கும் காலாண்டுக்கொருமுறை கணக்கைக் காட்டி அங்கீகாரம் பெற வேண் டும்.

கேள்வி : அவ்வாறு உங்களை கண் காணிக்கும் இந்த நிறுவனங்கள் உங்களை அங்கீகரித்துள்ள விவரத்தை பொது மக்கள் எவ்வாறு அறிந்து கொள்வது?

ஆசார்யா : எங்களைப் போன்ற நிறுவனங் களை ரிசர்வ் வங்கியினர் மூன்று வகைகளாகப் பிரிக்கின்றனர். மிக நன்றாக இயங்கும் நிறு வனங்களுக்கு அங்கீகாரம் அளித்து ஒரு சான் றிதழ் தருகிறது. மேலும் நாங்கள் பொது மக்க ளுக்குத் தரக்கூடிய வட்டி விகிதத்திற்கு வரை யறை விதிப்பதில்லை. அதை எங்கள் விருப்பத் திற்கு ஏற்ப தரமுடியும். இதனை பொதுமக்கள்

அறிவதற்கு, இந்தகைய நிறுவனங்கள் வெளியிடும் விளம்பரங்களில் கீழ்பகுதியில் இந்த அங்கீகார சான்றிதழ் பற்றி குறிப்பிடப்படுகிறது. இதைக் கவனித்து மக்கள் அந்தகைய நிறுவனங்களில் பணத்தை பாதுகாப்பாக முதலீடு செய்யலாம்.

இதற்கு அடுத்தபடியாக இயங்கும், சற்று முன்னேறிவரும் நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு ரிசர்வ் வங்கி பதினைந்து சதவிகிதத்திற்கு மேல் வட்டியளிக்கக் கூடாதென உச்சவரம்பை தீர்மானிக்கின்றனர். அதற்கும் கீழ் நிலையில் உள்ள நிறுவனங்களை, நீங்கள் இன்னும் நிறைய முன்னேற வேண்டும். அதனால் பொதுமக்களிடமிருந்து ஓரளவிற்குதான் நீங்கள் டெபாசிட்டுகள் வசூலிக்கலாம் என பணத்தை வசூலிப்பதிலேயே ஓர் உச்சவரம்பை தீர்மானித்து விடுகிறது. இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து கவனித்துத் தெரிந்து கொண்ட பின்னரே முதலீடு செய்வது உசிதம்.

கேள்வி : எந்தெந்த அசையும் சொத்துக்களுக்கு நீங்கள் கடன் தருகிறீர்கள்? அதை உங்கள் மூலம் வாங்குவதில் குறிப்பாக என்ன நன்மை கிடைக்கிறது?

ராமன் : கார், பேருந்து, லாரி போன்ற பொது மக்கள் பயன்படுத்தும் வாகனங்கள்

பயப்படாமல்

மற்றும் தொழிற்சாலைகளில் பயன்படும் வாகனங்கள் ஆகியவற்றிற்கு நாங்கள் கடன் தருகிறோம். எங்களைப் போன்ற அநேக நிறுவனங்கள் இவ்வாறே கடன் தருகின்றன. இந்த வகையில் இந்த வாகனங்களை ஓட்டி அதன் மூலம் லாபமடைந்து, எங்கள் கடனை திருப்பியளிக்க வழி இருக்கிறது. மேலும் இவ்வாகனங்களை எங்களிடம் வாங்குவதில் பல நன்மைகள் உள்ளன. முதலாவதாக, வாகனம் வாங்க வருபவருக்கு அதை எந்த நிறுவனத்திடமிருந்து வாங்குவது சிறந்தது என்று ஆலோசனை கூறுகிறோம். பிறகு அதற்குத் தேவையான இன்சூரன்ஸ் போன்றவற்றை செய்து கொடுப்போம். எங்கள் மூலம் வாகனங்களை வாங்குவதால் விரைவில் வாகனம் கைக்கு வந்துவிடும். அதனால் வாகன விலையேற்றம் உங்களை பாதிப்பதில்லை. மேலும் லாரி போன்ற அன்றாடம் வருவாய் தரக்கூடிய வாகனங்களை சீக்கிரமே பெறுவதால், வாங்குபவரின் தொழில் முயற்சி விரைவாக முன்னேற்றமடையும்.

கேள்வி : இத்தகைய வண்டிகளுக்குப் பெரிய அளவில் கடன் அளிக்கும் நீங்கள் அதற்குரியதாக எந்த வகை ஆதாரத்தைப் பெற்று அளிக்கிறீர்கள்?

ஆசார்யா : நாங்கள் பொது மக்களின் பணத்தை முக்கிய பங்காகக் கொண்டு கடனளிக்கிறோம். அதனால் அதை அவ்வளவு எளிதில் தந்து விட மாட்டோம். எங்களிடம் கடன் பெறுபவர் ஏற்கெனவே எங்களுக்கு அறிமுகமானவராக இருந்தால்தான் குறுகிய நேரத்தில் அவருக்குக் கடனை அளிப்போம். அறிமுகமில்லாதவராக இருந்தால் அவரது மனுவைப் பெற்றுக் கொண்டு இரண்டு நாட்களில் பதிலளிப்பதாக உறுதியளிப்போம். அந்த இரண்டு நாட்களுக்குள் அவர் செய்யும் தொழில், அதில் அவருக்கு உள்ள ஈடுபாடு, அதில் அவர் பெறும் லாபம், அதில் அவர் குடும்பத்தாரின் பங்கு, அவருக்குப் பொதுமக்களிடமிருந்து கிடைத்துள்ள பெயர், அவருக்குத் திருப்பி அளிக்கக்கூடிய தகுதி, அனைத்திற்கும் மேலாக மார்கெட்டில் அவரின் நேர்மைக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் ஆகியவற்றை மொத்தமாக அலசி ஆராய்ந்து அறிந்து கொள்வோம். எங்களுக்குப் பூரண திருப்தி ஏற்பட்ட பிறகே அவருக்குக் கடனளிக்கப்படுகிறது. அநேகமாக இந்த முறைதான் எங்களைப் போன்ற அனைத்து நிறுவனங்களாலும் பின்பற்றப்படுகிறது.



• ராமன்

கேள்வி : கடனாக அளிக்கப்படும் பணத்திற்கு வட்டி எவ்வாறு வசூலிக்கிறீர்கள்? இதைத் தவிர மற்ற கட்டணங்கள் ஏதேனும் செலுத்த வேண்டுமா?

ராமன் : ஒவ்வொரு நிறுவனம் வெவ்வேறு விதமாக வட்டியை அளிக்கிறது. அதிலும்

மக்கள் மிக பத்திரமாக இருக்க வேண்டும். இல்லையெனில் முதலில் குறைந்த வட்டியென காட்டி, பிறகு கூடுதல் கட்டணங்களை விதித்து இறுதியில் மிக அதிக வட்டி விதித்து விடுவர். எங்கள் நிறுவனத்தில் முதலிலேயே 23% முதல் 24% என்ற வட்டியைத் தெளிவாகக் கூறி விடுகிறோம். இதைத் தவிர வேறு எந்தச் செலவும் கடன் வாங்குபவருக்குக் கிடையாது. அதையும் எழுத்து மூலம் கொடுத்து விடுவோம்.

இதே போல் கடன் பெற விரும்புபவர்கள் அவர்கள் வாங்கும் நிறுவனத்திடம் எழுத்தில் பெற்றுக் கொள்வதே சிறந்தது.

மற்றொரு சிறந்த வாய்ப்பு எங்களிடம் கடன் பெறுபவருக்கு அளிக்கப்படுகிறது. கடனைத் திருப்பியளிக்கும் தவணைகளை குறித்த தேதியில் விடாமல் கட்டுபவருக்கு ஒவ்வொரு வருட இறுதியிலும் இரண்டு சதவிகிதம் தள்ளுபடி தரப்படுகிறது. இதனால் மூன்றாண்டுகளில் ஒரு கணிசமான தொகை தள்ளுபடியாகக் கிடைக்கிறது. இதை முதலில் நாங்கள் தொடங்கினோம். பல நிறுவனங்கள் இதையே வேறு பல விதமாக அளிக்கின்றனர். கடன் பெறுபவர் தமது வேலையில் குறித்த தேதியில் கட்ட மறக்கக் கூடும். அதனால் ஒரு வாரத்திற்கு முன்பிருந்து, அவரைத் தொடர்பு கொண்டு நினைவுபடுத்தத் தொடங்குவோம்.

கேள்வி : வட்டியைத் திருப்பித்தர நீங்கள் நிர்ணயிக்கும் கால வரையறை என்ன?

ஆசார்யா : கடன் வாங்குபவர்கள் அதை ஓராண்டு முதல் மூன்றாண்டிற்குள் திருப்பித் தரலாம். எங்களிடம் கடன் பெற வருபவரின் தகுதியை தீர்மானித்து அவர்கள் ஓராண்டில் திருப்பித் தருவது நல்லதா? அல்லது மூன்றாண்டு காலத்தில் திருப்புவது சிறந்ததா? எது லாபகரமானது என்று ஆலோசனை கூறுகிறோம். ஆனால் பொதுவாக மக்களிடையே பிரபலமாக உள்ள கால வரையறை முப்பது முதல் முப்பத்தி ஆறு மாதங்களே.

கேள்வி : வண்டியைக் கடனாக வாங்கியளிக்கும் நீங்கள் அதனை அடகுப் பொருளாக வைத்துக் கொள்வீர்களா? அதை நீங்கள் எவ்வாறு கண்காணிக்கிறீர்கள்?

ராமன் : வாகனத்திற்கான முழு பணத்தை வாகனத்தை விற்கும் நிறுவனத்திற்கு நாங்கள் செலுத்தியவுடன் வண்டியின் ஆர்.சி. புத்தகத்தில் எங்கள் நிறுவனத்திடம் கடன் பெற்று வாங்கப்பட்டுள்ளது என சிவப்பு மையில் எழுதப்பட்டு விடும். அந்தப் புத்தகம் கடன் கொடுத்த நிறுவனத்திற்கு அனுப்பப்படுகிறது. அதோடு வண்டியின் ஒரு சாவியும் தரப்படுகிறது.

எங்களைப் போன்ற நிறுவனங்களுக்கும் வங்கிக்கும் ஒரு வித்தியாசம். வங்கிகளில் கடன் வாங்கி வாகனம் வாங்கப்படும் போது தவணை கட்டத் தவறினால் போலீஸ், சட்டம் ஆகியோரின் துணை கொண்டே வாகனத்தை எடுத்து வரலாம். ஆனால் எங்களைப் போன்ற நிறுவனங்களில் கடன் தரப்படும் போது, கடன் பெற்றுச் செல்பவருக்கு வண்டி வாடகைக்குத் தரப்படும் வகையில்தான் குறித்துக் கொள்ளப்படுகிறது. அதனால் தவணை கட்டத் தவறினால், உடனே வண்டியை மூன்றாமவர் தலையீடு எதுவுமின்றி நேராக எடுத்து வந்து விடுவோம்.

திரும்பப் பெற்ற வண்டி எந்த இடத்தில், எந்த நபருக்கு விற்றால் நல்ல விலைக்குப் போகுமோ, அங்கு விற்க ஏற்பாடு செய்யப்படும். விற்பனையாகும் வரை கடன் பெற்றவர், தவணையை செலுத்தி வண்டியைத் திருப்பி எடுத்துச் செல்ல வாய்ப்பளிக்கிறோம். செலுத்தத் தவறி, வண்டி விற்கப்பட்டால், கிடைக்கும் தொகையில் கடனாகத் தரப்பட்ட தொகையைப் பிடித்துக் கொண்டு, மீதத்தைத் திருப்பியளித்து விடுவோம். இதனால் கடன் பெற்றவர் நஷ்டம் அடையாததால், மகிழ்ச்சியில் பல சமயங்களில் மேலும் பல வாடிக்கையாளர்களை எங்களிடம் சேர்க்கும் தூதர்களாக மாறி விடுகின்றனர்.

கேள்வி : மக்களுக்கு நீங்கள் தரும் நம்பிக்கையை எந்த வகையில் பிரதிபலிக்கிறீர்கள்?


ஆசார்யா : எங்கள் நிறுவனத்தின் மீது இரு சாராருக்கு நம்பிக்கை வர வேண்டும். முதலாவதாக எங்களிடம் முதலீடு செய்யும் பொது மக்கள் தங்கள் பணம் பத்திரமாக



உருளைக்கிழங்கை நறுக்கி, தண்ணீரில் அலம்பி ப்ரெஷர்பேனில் சிறிது எண்ணெய் விட்டு அதில் போட்டுப் பிரட்டி, உப்புக் காரம் போட்டு பின் மூடி 'வெய்ட்' போட்டு வைக்கவும்.

இரண்டு விசில் வந்தவுடன் ஆஃப் செய்யவும். பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு திறந்து லேசாகக் கிளறவும். அருமையான, அதிக எண்ணெய் குடிக்காத ரோஸ்ட் ரெடி.

— உஷா



இரும்புச் சத்து குறைபாட்டிற்காக பிரத்தியேக மருந்துகளோ, உணவோ உட்கொள்பவர்கள், உணவிற்கு முன்னும், உணவிற்குப் பிறகும் (சுமார் ஒரு மணி நேரமாவது) காப்பி அல்லது டீ அருந்தக் கூடாது. இது இரும்புச் சத்தை ரத்தம் கிரகித்துக் கொள்வதை தடுத்து விடும்,

நன்றி : பியூட்டி அண்டு பாடி கேர்
தகவல் : கிருஷ்ணவேணி ரங்கனாதன்

உள்ளது என்று தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு எங்கள் சேவையைத்தான் ஆதாரமாக காண்பிக்க இயலும்.

எங்களைப் போன்ற நிறுவனங்களில் முதலீடு செய்பவர்கள் பலர் வயதில் முதிர்ந்தவர்கள். இதை மனத்தில் கொண்டு எங்கள் நிறுவனம் அவர்களிடம் நேரே வீட்டிற்குச் சென்று பணத்தைப் பெற்றுக் கொள்கிறோம். அதற்கான ரசீதை, கம்ப்யூட்டரின் உதவியுடன் அடுத்த அரை மணி நேரத்தில் தயார் செய்து திருப்பி அவர்களிடம் அனுப்புகிறோம். இக்காரியங்களை விரைந்து செய்ய எங்கள் நிறுவனத்தில் பணிபுரிபவருக்கு மோட்டார் சைக்கிள், பேஜர் போன்ற வசதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. நாங்கள் அவர்களுக்குத் தரும் இந்த வட்டி, பலருக்கு மாதாந்திர பென்ஷனைப் போல உதவுகிறது. அதனால் அவர்கள் எந்த இடத்திற்கு அனுப்பும்படி கூறுகிறார்களோ, அதற்கேற்றபடி அனுப்புவோம். அவர்கள் தங்கள் குழந்தைகளிடம் மாறி, மாறி இருந்தாலும், தனது சகோதரி போன்ற பிற உறவுக்காரர்களுக்கு அனுப்ப நினைத்தாலும், குறிப்பிட்ட தொகையைக் கோயிலுக்கு அனுப்ப நினைத்தாலும், அவர்களின் விருப்பப்படி அனுப்புகிறோம். மேலும் பலருக்கு மாத வருமானம் போல் இத்தொகை பயன்படுவதால், வங்கிகள் அவர்களது காசோலையை விரைவாக அனுப்ப நாங்கள் உதவுகிறோம். அதையும் மீறி, அவர்கள் மாதத்தின் முதல் வாரத்தில் பணம் கைக்கு வரவில்லையென தெரிவித்தால், அவர்கள் கவலைப்படாதிருக்க மற்றொரு காசோலையை அனுப்பி விடுவோம். வங்கியோடு கணக்கை பிறகு சீர் செய்து கொள்வோம். எங்களைப் போன்ற நிறுவனங்களுக்கு வாடிக்கையாளருடன் இருக்க வேண்டிய தொடர்பு, மிக நல்ல நிலையில் இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

எங்களிடம் கடன் பெறுபவருக்கும் அதே அளவு நம்பிக்கை இருக்க வேண்டும். அதனால் பணம் பெற்று அவர்கள் வாங்கும் வாகனத்தை நல்ல நிறுவனத்திடமிருந்து வாங்க உதவுவது எங்கள் கடமை. மேலும் அதனால் அவர்கள் பயன் பெற வேண்டும். நல்ல பேனா ஒன்று அறிவாளியிடம் இருந்தால் அதன் மூலம் சிறந்த காவியம் உருவாகும். அதே பேனா தகுதியில்லாதவனிடம் சென்றால் அதைக் கொண்டு கிறுக்கத்தான் முடியும். ஏன்? அதன் கூரிய முனை கொண்டு பிறரைத் துன்புறுத்தவும் முயல்வான்.

அதே போல் லாபமளிக்கக்கூடிய வாகனங்களை, அதைக் கொண்டு சிறந்த முறையில் தொழில் நடத்த, அதை நன்கு ஓட்டி, பொது மக்களுக்கு சேவை செய்யக் கூடியவருக்கே கடன் வழங்கப்படும். இதில் நாங்கள் காட்டும் அக்கறையைப் பயன்படுத்தி, ஒரு வண்டிக்குக் கடன் வாங்குபவர், நாளை பல வாகனங்களுக்குத் தானே முதலாளியாக மாறலாம். இதற்கு எங்கள் நிறுவனத்தின் கைராசி மட்டுமல்லாது, காட்டப்படும் அக்கறையே முதற் காரணம் என நம்பி, வாங்கிய கடனை தவணைப்படி சீராகக் கட்டி விட வேண்டும். அப்படித் தராமல் எங்களை இழுத்தடிக்கவும் இயலாது. எந்த நேரத்திலும், எந்த இடத்திற்கு அழைத்தாலும் சென்று எங்கள் நிறுவனத்தினர் பணத்தை வசூலிப்பார்கள். மேலும் தனி நபராக ஒரு வண்டியை வாங்குவதை விட, எங்களைப் போன்ற நிறுவனங்கள் மூலம் வாங்குவதால், நாளை அதன் மூலம் ஒரு பிரச்னை ஏற்பட்டால், அதைச் சமாளிக்க, அதற்குரிய வகையில் வாதாட, உரிய பக்க பலம் தயாராக இருக்கும். அதோடு வங்கியில் கடனை வாங்கி வாகனம் வாங்க நேரம் அதிகமாகிறது. ஆனால் இங்கு எங்களைப் போன்ற நிறுவனங்களால் அதிக பட்சமாக இரண்டு நாட்களிலேயே கிடைக்கிறது.

இவ்வாறு பணம் செலுத்துபவர், பணம் கடனாகப் பெறுபவர் ஆகிய இருவரின் நம்பிக்கையைப் பெற்றுள்ளதால்தான், எங்களைப் போன்ற நிறுவனங்களுடன் ஒவ்வொரு குடும்பமும் மூன்று நான்கு தலைமுறைகளாக தொடர்பு கொண்டு மகிழ்கின்றனர். அதுவே எங்களுக்குக் கிடைத்துள்ள மிகச்சிறந்த நற்சாட்சி பத்திரம்!

பேட்டி : **ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்**
படங்கள் : **ராஜா நாராயண்**

AISWARYA
BENEFIT FUND LIMITED
(Regd. under Companies Act)

44-A, Malaya Perumal Street
Chennai - 600 001
✆ : 583341
(Regd No. 18/18747/90)

Dr. M.V.L. NARASIMHAN, M.A., M.L., RMP (H)
President

S.H. VYAS, B.A.
Managing Director

S. GURUMOORTHY
(Retd. Officer, State Bank of India)
Jt. Managing Director

Dear Prospective Depositor/well wisher.

"AISWARYA" is not a mere Benefit Fund in the mill but a part of your family, to take care of your interests and grow along with the growth of your prosperity.

Manned by a band of reputed well placed V.I.P.s, men of integrity the ***AISWARYA* BENEFIT FUND** has entered the field of financial activities to establish integrity-based financial services, providing "fear free" options for the investors, unlike mushrooming of bogus and unethical financial units, which have shown phenomenal "unreal" growth and closed down their shutters in shocking speed.

AISWARYA aims at social welfare activities in future in the field of providing **home for the aged, value based education by arranging to start prestigious institutions** and other allied activities.

We, at ***AISWARYA* BENEFIT FUND** will leave no stone unturned to gain and retain the confidence of well wishers like you.

Institutions may come and go but the reputation remains because of our reputation and integrity. Now that a number of finance companies have croaked, it is the onerous duty of benefit funds like ***AISWARYA* BENEFIT FUND LTD.** to cater to the needs of the community in looking after their financial interests. We follow the Reserve Bank of India Regulations and therefore you can be rest assured that your funds are in safe hands.

We deploy the funds only in safe investments viz. loans against jewellery and immovable properties. Hence there is absolute safety to your funds.

Our Managing Director Mr. S.H.Vyas is a reputed businessman with more than 25 years of top level management experience. Mr. S. Gurumoorthy, our Joint Managing Director, the kingpin of our company, is a scale I Retired Officer from State Bank of India. Other Directors have been chosen from the cream of businessmen in different walks of life.

Hence we assure you that we shall live upto your confidence reposed in us.

Assuring you of an everlasting business relationship,

With high regards,

Yours sincerely,

Dr. M.V.L. Narasimhan, M.A., M.L., DHBM
(Advocate & Homoeopath)
President
✆ : 4936233

WE ACCEPT
FIXED DEPOSIT
CUMULATIVE DEPOSIT
RECURRING DEPOSIT
&
SAVINGS BANK DEPOSIT

நம் வீட்டில் இருக்க வேண்டிய புத்தகங்கள்

“ஆண்ட்டி, உங்களோட டிக்ஷனரியை தரீங்களா, அண்ணனுக்கு ஒரு வார்த்தைக்கு அர்த்தம் பாக்கணுமாம்” இப்படி இன்று நேற்றல்ல; டிக்ஷனரி, பாரதியார் கவிதைகள் அது இதுன்னு வந்து பள்ளிக் குழந்தைகள் அடுத்த வீடுகளில் கேட்ட வண்ணம் உள்ளனர்.

படிக்கும் குழந்தைகள் இருக்கும் வீடுகளில் சில புத்தகங்கள் கட்டாயம் இருக்க வேண்டும். வீட்டை, டீவி, பிரிட்ஜ், 2 இன் 1, வாஷிங் மிஷின் என்று அலங்கரிப்பதைப் போல சில அத்தியாவசிய புத்தகங்களும் ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியம் தேவை. புத்தகங்கள் என்றதும் வார, மாதாந்திர இதழ்கள், நாளிதழ்கள் கதைப் புத்தகங்கள்தான் நம் நினைவுக்கு வரும். அவைகளும் வீட்டிற்குத் தேவைதான். நம் தனிமையை போக்க, பொழுதை நன் முறையில் செலவிட இப்புத்தகங்கள் பெரும்பாலும் உதவுகின்றன. இவற்றினைத் தவிர 'சாகாவரம்' பெற்ற புத்தகங்கள் நம் வீட்டிலிருப்பது நம் சந்ததியினருக்கு நாம் அளிக்கும் விலை மதிப்பற்ற பொக்கிஷம். அந்த சாகாவரம் பெற்ற புத்தகங்கள் உங்கள் வீட்டு வரவேற்பறையை அலங்கரிக்கிறதா?

முதலில் ஆங்கில அகராதி, டிக்ஷனரி. இது படித்த, படிக்கின்ற, படிக்கப் போகும் என மூன்று பிரிவினருக்கும் தேவையான ஒன்று. எந்த ஒரு வார்த்தைக்கும் நம் விருப்பப்படி பொருள் கொள்ளாமல் அதற்கு மிகச் சரியான அர்த்தத்தை அறிந்து கொள்ளும் பழக்கம் பள்ளிப் பருவத்தி லிருந்தே நம் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். அதற்கு வழி காட்டியாய், நாம் முதலில் அந்த டிக்ஷனரியை பயன்படுத்த வேண்டும். தவிர தினம் பத்து புதிய வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளும் அரிய பழக்கத்தை மேற் கொண்டால் அது நம்மை ஆங்கில மொழியில் மேம்படுத்தும்.

அடுத்து திருக்குறள். இது ஒவ்வொரு தன்னார்வமுள்ள மனிதனிடமும் இருக்க வேண்டியது. நம் வீட்டில் இல்லை என்றால் எப்படி? திருக்குறளை பள்ளியில் மனப்பாடப் பகுதியாக, மதிப்பெண் பெறத்தக்க வினாவிடையாகத்தான் நாமும் படித்தோம்; இன்றும் மாணவர்கள் மனப்பாடம் செய்கின்றனர். திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். அதில் வரும் கருத்தை நாம் வாழ்வில் கடைபிடித்தால் நாம் அடையும் மேன்மையையும் வள்ளுவரே குறிப்பிடுகிறார். இந்தக் குறளை உரையுடன் வாங்கி, தினம் ஒரு குறள் என நாமே படிக்கலாம். நம் வீட்டுக் குழந்தைகளுக்கு ஆங்கிலம் வருமளவிற்கு தமிழ் எழுதப்படிக்க வருவதில்லை. இது எந்த வகையிலும் நமக்குப் பெருமை சேர்ப்பதில்லை. அக் குறையை நீக்க நாமே தமிழார்வத்தை குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும். எளிய மெட்டில் சிறு குழந்தைகளுக்கு ஒரு அதிகாரத்தை (பத்து குறளையும்) பாட்டாகக் கூட கற்றுத் தரலாம்.

பாட்டு என்றதும் மனதிற்கு நினைவு வருவது பாரதியார் அல்லவா? பாரதியார் கவிதைகள் என்றும் இனியவை அதனை ருசிக்க நல் இதயம் இருந்தால் போதும். பல பள்ளிகளில் பேச்சுப் போட்டி, கட்டுரை, பாட்டுப் போட்டி என பாரதியில்லாமல் போட்டிகளில்லை எனலாம். பள்ளி மாணவர்கள் இந்த பாரதியின் கவிதைகளை நேரம் கிடைக்கும் போதெல்லாம் நுகர நம் வீட்டில் ஒரு பாரதியார் கவிதைகள் புத்தகம் அவசியம். பேச்சுப் போட்டி என்றல்ல, மேடைப் பேச்சில் கூட பாரதியின் வைரவரிகளை மேற்கோளாகக் காட்டி நம் பேச்சை கனப்படுத்தலாம். கட்டுரையிலும் பாரதியின் கவிதையை இணைத்தால்



கட்டுரையின் மதிப்பும் உயரும். இது பலனை உடனடியாக எதிர் பார்க்கும் மாணவர்களுக்கு. பாரதியின் கவிதைகள் படிப்பதற்கும் பாடுவ தற்கும் இனிமையா னது. இதனை நம் வாழ்வில் இணைத்துக் கொண்டால் நாம் தேசபக்தி சிறந்த குடிமகனாவோம்.

அடுத்து எல்லா வீட்டிலும் தேவை, 'அட்லஸ்' எனப்படும் தேசப்படப் புத்தகம். உலகம் அளவில் பெரியது. நமது தொலைத் தொடர்பு சாதனங்களால் தூரம் குறைந்து கொண்டே வருகிறது. அந்த வகையில் பல நாடு களின் மிகச் சரியான இடத்தினை, தலை நகரினை அதன் அமைப்பினை அறிய இந்தப் புத்தகம் பேருதவி புரியும். படிக்கும் மாணவர் கள் உள்ள வீட்டில் நிச்சயம் இது இருக்க வேண்டும்.

இதுவரை நாம் பார்த்தவை பள்ளி மாண வர்களுக்கும் தேவையான வீட்டில் வைத் திருக்க வேண்டிய புத்தகங்கள். இந்தியா ஆன் மீகத்தில் உயர்ந்த நாடு. பல நாட்டவரும் நம் ஆன்மீக வளர்ச்சியை அதன் முக்கியத்துவத்தை பாராட்டும் வேளையில் நம் வீட்டிலும் அது தொடர்பான புத்தகம் இருப்பது அவசியம். பலர் மகாபாரதம் படித்தால் வீட்டில் சண்டை கள் வரும் என்பர். ஆனால் பகவத் கீதை? அதில் பாரதத்தின் சாராம்சம் அடங்கியுள்ளது. ஒவ்வொருவரின் வீட்டிலும் இருக்க வேண்டி யது இந்த. பகவத் கீதை. இதன் தமிழ் மொழி பெயர்ப்பை நாம் வைத்திருத்தல் அவசியம்.

உடம்பில் எந்த இடத்தில் வலி இருந்தாலும், சில ஐஸ் கட்டிகளை ஒரு ப்ளாஸ்டிக் பையில் போட்டு வலியுள்ள இடத்தில் வைக்க, அடுத்த பத்தாவது நிமிடம், வலியா?! மூச்! போயே போய்விடும்.

— ஜெயா



குழப்பமான சூழ்நிலையில் மனிதன் இதனைப் படித்தால் நிச்சயம் தெளிவு பிறக்கும். பார்த் தனுக்கு ஏற்பட்ட மனக் குழப்பத்தைவிட எவருக்கும் அதிகபட்ச குழப்பம் வாழ்க்கையில் வர இயலாது. இறைவனே குழப்பங்களுக்கு விடையாக அளித்த பகவத்கீதை நமக்கும் வழி காட்டும். அதே போல்தான் பைபிளும். நன்னம் பிக்கையூட்டக் கூடிய பல வசனங்கள் பைபி ளில் உள்ளன. பரந்த மனப்பான்மையுள்ள எவர் வீட்டிலும் இந்தப் புத்தகங்கள் இருக்க லாம்.

கம்பராமாயணம், ஸ்ரீராம பிரானுக்காக மட்டுமல்ல, இனிய தமிழிற்காக அற்புதமான உவமைகளுக்காக நம் வீட்டிலிருப்பது மிக அவ சியம். ஒரு மனிதனிடம் இருக்க வேண்டிய பண்பு நலன்கள் சமநோக்கு, சகோதரத்துவம் எல்லாம் நம் இதிகாச ராமனிடம் அமுதகரபி யாக உள்ளன. இதனை நாம் நேரம் கிடைக்கும் போது மூலமும் உரையுடன் படிப்பது நம் குண நலனை சீர்படுத்தும்.

நம் வீட்டு சராசரி குழந்தைகளுக்கு பள்ளிப் பாடங்களைப் படிப்பதைத் தவிர டீ.விதான் விருப்பமான பொழுது போக்கு. புத்தகம் படிக் கும் பழக்கத்தை சிறுவயதிலேயே நாம்தான் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். அந்தப் பழக்கம் வந்து விட்டால் அவர்கள் வாழ்வில் தனிமை என்பதே இல்லை. டீ.வியை பார்ப் பதில் சில நன்மைகளிருந்தாலும் பெரும்பாலும் நம் தன்னார்வத்தை, சுய முயற்சியை இவை கள் பல சமயங்களில் பாதிப்பதாக உள்ளது. டீ.வியில் ஒளிபரப்புவதைத்தான் பார்க்க வேண் டும். ஆனால் புத்தகம் படிப்பது அப்படியல்ல. நம் விருப்பப்படி நமக்குப் பிடித்த துறைகளைப் பற்றிப் படிக்கலாம். ஒவ்வொரு நல்ல புத்தகமும் நம்மை ஒருபடி மேலே உயர்த்துகிறது. டீ.வி. எல்லாம் பொழுது போகாதவர்களுக்கு. எனவே அதில் வரும் நிகழ்ச்சிகள் மூலம் (அதிகமாக திரைப்படப் பாடல்களைத்தானே சேனல் சேனலாக மாறி மாறி காட்டுகிறார்கள்) நம் நிலை உயர வழி இல்லை. புத்தகங்களை நம் குழந்தைகளின் உற்ற நண்பனாக்குவது நம் கையில் தான் இருக்கிறது.

Books for hour. Books for ever. என இரு வகையுண்டு. மேலே குறிப்பிட்ட அத்தனை புத்தகங்களுமே சாகாவரம் பெற்றவை, என் னாளுக்கும் உரியவை. டிக்ஷனரி, திருக்குறள், அட்லஸ், பாரதியார் கவிதைகள், பகவத்கீதை, பைபிள், கம்பராமாயணம் இவையெல்லாம் ஒரே சமயத்தில் வாங்க இயலாவிட்டாலும் ஒவ் வொன்றாகவாவது வாங்கி நம் வீட்டில் சேர்த்திட வேண்டும். இவைகள் வீட்டை அலங்கரிக்க மட்டுமல்ல, நம் மனத்தை, கருத்தை அலங்கரிக்க அத்தியாவசியமானவை.

— லலிதா முரளீதரன்

கைகள் கண்களுக்கும் மேலானவை!


கைகள் மனித உறுப்புகளில் மிகவும் முக்கியமான உறுப்புக்களில் முதன்மையானது. பார்வையில்லாதவர்கள் என்றால் 'பிரெய்ல்' முறையில் படிக்க முடியும். கைகள் இருந்தால் படிப்பு இருக்கிறதோ இல்லையோ ஏதாவது ஒரு வேலை பார்த்து பிழைத்துக் கொள்ள முடியும். கைகள் போய் விட்டால் ஒரு விதத்தில் வாழ்க்கை நம்பிக்கை இரண்டுமே இழந்து விட்ட நிலைதான். மனித உணர்வுகளின் முதல் வழியானது கைகள்தான் எனலாம்.

சேதமான, துண்டித்துப் போன கைகளை மறுபடி சிராக்கி பழைய நிலைக்குக் கொண்டு வந்து செயல்பட வைக்கும் 'ஆராய்ச்சி மற்றும் கைகள் புனரமைப்பு மையம்' சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இயங்கி வருகிறது. சமீபத்தில் வெள்ளி விழாக் கண்ட இந்த மையம் இந்திய அளவில் இத்துறையில் அரசு மருத்துவமனை இது ஒன்றுதான். விபத்துக்கள், அவை ஏற்படும் விதங்கள், இந்த மையத்தின் செயல்பாடுகள் பற்றிய செய்திகளை இந்த புனரமைப்பு மையத்தின் தலைவரான பேராசிரியர் டாக்டர் கோ. பாலகிருஷ்ணன் அவர்கள் கூறுகிறார்



• கோ. பாலகிருஷ்ணன்

"கைகள் ஒரு விதத்தில் கண்களை விட மிகவும் மேலானவை. இதன் தேவை களும் அப்படியே. இதனாலேயே குடும்ப மற்றும் அரசியல் பகைகள் என வரும் போது முதலில் கைகளைத்தான் வெட்டுவார்கள். இது தவிர விபத்துக்களை நாங்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கிறோம். 1. சாலை விபத்துக்கள்; 2. தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள்; 3. வயல் வெளிகளில் (தற்கால நவீன இயந்திரங்களால் ஏற்படும்) விபத்துக்கள்; 4. வீடுகளில் (கறிகாய் வெட்டும் போதும் சாமான்கள் அரைக்கும் போதும்) ஏற்படும் விபத்துக்கள் என்னும் இவைகளுடன் இப்போது பட்டாசுகளினால் ஏற்படும் விபத்துக்கள் என்பதையும் சேர்க்க வேண்டிய நிலை.




இது போன்ற விபத்துக்களுக்கு மிகமுக்கிய காரணம் கவனக் குறைவுதான். தொழிற்சாலைகளில்/வீடுகளில் மற்றும் எல்லா இடங்களிலும் பணிபுரியும் நேரம் தேவையில்லாதவற்றை கவாரசியமாகப் பேசிக் கொண்டு இருப்பது; குடும்பச் சூழ்நிலை பற்றிய எண்ணங்கள் - இதனால்தான் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. தொழிற்சாலைகளில் பாதுகாப்புக்காகத் தரும் உபகரணங்களைப் பயன்படுத்தாமை; உற்பத்தியை அதிகமாக்க எண்ணி வேகமாகச் செய்யும் எண்ணம். சில சமயம் முதலாளிகளின் தூண்டுதல் - இவைகள்தான் பாதுகாப்பு உபகரணங்கள் பயன் படுத்தாமைக்கு முக்கிய காரணம். இவைகளைத் தவிர்த்தாலே விபத்துக்கள் மிகையாகக் குறையும்.

இது போன்ற சமயங்களில் அடிபடுபவர்கள் பெரும்பாலும் குடும்பத்தை நடத்திச் செல் பவர்களாகயிருப்பார்கள் என்பதுதான் வேதனைக்குரிய விஷயம். எல்லா விபத்துக்களின் போதும் முதலில் அடிபடுவது கைகள்தான். அதிலும் முதலில் விரல் நுனிகள், விரல்கள் அதிக பட்சம் முழங்கை வரை சில சமயம் தோள்வரையிலும் கூட

பாதிக்கப்படும்.

எங்கள் மருத்துவமனையில் 1971-ல் இத்துறை மிகச் சிறிய அளவில் ஒட்டு உறுப்பு அறுவையகத்துறையாக (Plastic Surgery) பேராசிரியர் திரு. வெங்கடஸ்வாமி அவர்களால் துவக்கப்பட்டது. வட சென்னையைச் சுற்றியுள்ள தொழிற் சாலைகளில் ஏற்படும் விபத்துக் களால் கைகள் சேதமுற்றவர்களின் எண்ணிக்கை அதிகமான அளவில் இருந்ததைக் கண்டு ஒரு தொலை நோக்குடன் இத்துறை (1973-ல்) கைகள் மறுவாழ்வு மற்றும் ஆராய்ச்சி மையமாக மேம்படுத்தப்பட்டது. 20 படுக்கை களுடன் துவங்கிய இந்த மையத்தில் இன்று 80 படுக்கைகள் உள்ளன.

கைகளின் பாகங்கள் துண்டிக்கப்பட்ட நிலையென்றால் மறு பொருத்துதலும், சிதைந்த மற்றும் துண்டிக்கப்பட்ட உறுப்புகள் இணைக்காத நிலையென்றால்



• சீரமைக்கப்பட்ட கை

மாற்றுப் பொருத்துதலும் செய்கிறோம்.

மறு பொருத்துதல் செய்யும் நிலையென் றால் தேவைகளுக்கு ஏற்றவாறுதான் முடி வெடுக்கப்படும். கட்டை விரல் அல்லாத மற்ற விரல்கள் துண்டிப்பு (இதில் ஒரு விரல்தான் என்றால்) கூடுமான வரை இணைப்பு செய்வ தில்லை. நோயாளி பெண்ணாகயிருந்தால் மட் டுமே அவருடைய எதிர்காலத்தை மனதில் கொண்டு இணைப்பு செய்யப்படும். முற்றிலும் நசுக்கப்பட்ட காயங்கள், துண்டிக்கப்பட்ட இடத்தில் முன்கூட்டியே காயம் பட்டிருத்தல், மற்றும் அறுவை செய்திருத்தல், துண்டிக்கப்பட்ட இடத்தில் தூய்மைக் கேடு, தசையழிவு நிலை, நோயாளிகளின் மூப்பு நிலை போன்ற வைகளை மனத்தில் கொண்டு மறு இணைப்பு செய்வது பற்றி தீர்மானிக்கப்படும். அதே நேரம் துண்டிப்புடன் சேர்ந்த பெரிய காயங்கள், பாதிக்கப்பட்டவருக்கு உள்ள (நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற) நீண்ட நாளைய நோய்கள், மனநிலை சரியில்லாத நிலை, நாள நரம்புக் காம்புகளில், சிராய்ப்பு போன்ற நிலைகளில் மறு பொருத்துதலைத் தவிர்த்து விடுகிறோம்.

அடிபட்ட 6 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரத்திற்குள் அறுவை சிகிச்சை செய்து மறு இணைப்புத் தர வேண்டும். ஒரு விரல் துண்டிப்பு என்றால் அதிகபட்சம் 24 மணி நேரத்திற்குள் மறு இணைப்பு தரலாம்.

துண்டாகி விட்டபாகத்தை ஓடுகின்ற குழாய் நீரில் (Running tap water) அடிபட்ட பகுதியில் நீர்படாத வண்ணம் அதில் படிந்துள்ள தூசுகளை கழுவி ஓட்டையற்ற பிளாஸ்டிக் பையில் போட்டு



• வெட்டப்பட்ட விரலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் விதம்

நன்றாகக் கட்டி அதை ஐஸ் கட்டிகள் போடப்பட்ட வேறு ஒரு பையில் (ஐஸ் கட்டிகளிடையே) வைத்து பாதுகாப்பாகக் கொண்டு வர வேண்டும். துண்டித்துப் போன பாகத்தின் வெட்டுப்பட்ட பகுதியில் எக் காரணம் கொண்டும் தண்ணீர் படவே கூடாது. அடிபட்ட கையின் இரத்த நாளங்களை மருத்துவரின் உதவியுடன் அடைத்து நன்றாகக் கட்டுப் போட்டு கையை இதயத்திற்கு மேல் உயர்ந்த நிலை யில் வைத்துக் கொண்டு வர வேண்டும். இப்படிச் செய்தால் இரத்தக் கசிவு குறையும். இவைகளை செய்ய உதவும் மருத்துவரே ஜன்னி வராமல் தடுக்கும் (Tetanus Toziod) ஊசியையும் போட்டு விட வேண்டும். முடிந்த அளவு வேகமாகக் கொண்டு வர வேண்டும். வரும் வேகத்துக்கு ஏற்பதான்

இதன் 'ரிஸல்ட்' அமையும். அவசரப் பிரிவுக்குப் போகாமலேயே அங்குள்ள சிவப்புக் கோடுகளைத் தொடர்ந்து இத்துறைக்கு வந்து விடலாம்.

ஒரு விரல் மட்டும் மறு இணைப்பு என்றால் 6 மணி நேரமும் உள்ளங்கையென்றால் 10 மணி நேரமும், மணிக்கட்டுக்கு மேல் என்றால் 10 லிருந்து 12 மணி நேரமும் ஆகும். அக்குளில் ஊசி போட்டு இவை செய்யப்படுவதால் நீண்ட நேரம் மயக்கத்திலிருக்கும் தேவையுமில்லை. சிறு குழந்தைகள் மற்றும் 60 வயது தாண்டியவர் என்றால் முழுமயக்கம் கொடுத்து தான் செய்ய வேண்டும். அடிபட்டவர்களின் உடல் நிலை பற்றி முழுமையான தகவல்களை எங்கள் மருத்துவர் குழுவினர் விசாரித்து சோதனை செய்யும் நேரம் துண்டிக்கப்பட்ட பாகத்தை மறு இணைப்பு நிலைக்குத் தயாரும் செய்து விடுவர். துண்டிக்கப்பட்ட நோயாளியின் சுவாசம், இரத்த ஓட்டம் தொடர்ந்து கண் காணிக்கப்படும். தேவைப்பட்டால் இரத்தம் செலுத்தப்படும். சிகிச்சைக்குப் பின்பு கைகளை கவனிப்பது போல நோயாளியின் உடல் நிலையும் தொடர்ந்து கவனிக்கப் படும். மறு இணைப்புக்குப் பின்பு மூன்று வாரங்கள் மருத்துவ மனையில் இருப்பதுடன் தொடர்ந்து வரும் மூன்று மாதம் அசைவுப் பயிற்சி (Physiotherapy) செய்து வர கை பழைய நிலைக்கு வந்து விடுவதுடன் ஆக்க பூர்வமாகவும் செயல்படத் துவங்கிவிடும். மறு இணைப்புக்காகப் போடப் பட்ட தையல்கள் மட்டும்தான் அடிபட்டதை நினைவில் கொண்டு வருபவை! மற்றபடி கை பழைய நிலைக்கு வந்து விடும். அறுவை சிகிச் சையுடன், நோயாளியின் ஒத்துழைப்பும் இருந் தால்தான் இதில் முழு வெற்றி கிடைக்கும். கையில் அடிபட்டுள்ள இடத்துக்கு ஏற்ப ஒரு மாதம் முதல் இரண்டு மாதங்களுக்குள் கைகளில் உணர்வு வரும். அதுவரை மீண்டும் கைகளில் அடியேதும் படாமல் குறிப்பாகத் தீக் காயம் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.


விபத்தில் சிக்கியவரின் உடம்பின் ஒரு பகுதியிலிருந்து தாராளமாகப் பெயர்த்தெடுத்து இழப்புக்குள்ளான பகுதிக்கு எளிதாக மாற்றத்தக்க புதிய முறைதான் மாற்றுப் பொருத்துதல். விபத்துக்களினால் ஏற்படும் காயங்களுடன், பிறவி ஊனங்களையும் கூட இந்த முறையினால் சீராக்க முடியும். கைகளில் மட்டுமல்லாமல் கால்களில் ஏற்படும் ஊனங்களுக்கும் இம்முறை நல்ல பலன் தரும். சில சமயம் துண்டிக்கப்பட்ட உறுப்புக்கள் மிகவும் சிதைந்து போய்விடும். கிடைக்காமலும் கூட போய்விடலாம். அது போன்ற நிலைகளுக்கு இந்த 'மாற்றுப் பொருத்தம்' மிகவும் உகந்தது. கைப் பெருவிரல் இழந்த நிலைக்குக் கால் விரல்களைக் கூட மாற்றி வைப்பது உண்டு. கைவிரல் மாற்றத்திற்குக் கால் விரல் மிகவும் பொருத்த மானது. ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட விரல்களையும் மாற்ற முடியும். இதனை நன்கு திட்டமிட்டு செய்ய முடியும்.

இது வரை 300க்கும் மேற்பட்ட மாற்றுப் பொருத்துதலும் 100க்கும் மேற்பட்ட மறு பொருத்துதலும் இங்கு வெற்றிகரமாக செய்யப் பட்டுள்ளன. இந்த சிகிச்சைகள் ஸ்டான்லி மருத்துவமனையில் இலவசமாகத் தான் செய் யப்படுகின்றன. அரசின் பேருதவியுடன் பல நல்ல உள்ளங்களின் நன்கொடைகளைக் கொண்டுதான் இந்த மையம் செயல்படுகிறது. கட்டுப்படுத்தப் பட்ட நிலையில் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நீண்டநாள் நோய்கள் இருப்பின் இந்த சிகிச்சைகள் தாராளமாகப் பெற முடியும். சாலை விதிகளையும், பாது காப்பு விதிகளையும் மதித்து கவனக் குறைவைத் தவிர்த்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். அதையும் மீறிய நிலையில் ஏற்பட்ட விபத்துக்களுக்கு ஆண்டு முழுவதும் இலவசமாக சேவை செய்ய எங்கள் மையம் காத்திருக்கிறது" என்கிறார் டாக்டர் பாலகிருஷ்ணன்.

பேட்டி : **வைதேகி தேசிகன்**

சீமை இலந்தைப் பழத்திற்கு தந்த வலைப் பைகளை, உங்கள் வீட்டுத் தொங்கும் பூச்சட்டிகளுக்கு மாட்டுங்கள். இடையிடையே சட்டி மேல் (வலை ஓட்டைக்குள்) கலர் சமிக்கிகளை பெவிகால் போட்டு ஒட்டுங்கள். உங்கள் கைவண்ணத்தில் கண்ணைப் பறிக்கும் பூஞ்சட்டி!

— மஞ்சுளா கிருஷ்ணன்





பாலகன் பாலுக்கழுதால்

பாலூட்டி தாலாட்டல் எப்படி?

தவழ்ந்து, நடந்து, பயிலும் பாலகனை தொடர்ந்து வளர்ப்பது எப்படி? இதற்கொரு புத்தகம்.

இருக்கும் பொருளை பாதுகாத்து வளர்ப்பதும் தேவையானோர்க்கு கொடுத்தும் வளர்ப்பதும் எப்படி? இதற்கொரு வங்கி.

சிட்டி யூனியன் வங்கி.

CUB

சிட்டி யூனியன் வங்கி லிட்.,

பதிவு அலுவலகம் : கும்பகோணம் - 612 001.

ரிசர்வ் வங்கி அங்கீகாரம் பெற்ற வங்கி

MCS / CUB / 1582 / 97

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் தொகை
- ஸ்ரீ சக்ரா திட்டம்
- VIP திட்டம்
- ரொக்கப் பத்திரங்கள்
- CUB ஸ்டாக் இன்வெஸ்ட்மெண்ட்
- NRI சேமிப்புத் திட்டம்
- வாமன விஸ்வரூப திட்டம்

இவளும், இவளும்!

பாரதம் ராஜஸ்தானம்...! பத்தாயிரம் நகரங்களைக் கொண்ட மேவாரின் மேன்மைக்காகவே வாழ்ந்தவர் ராணா சாங்கா. இவர் உடலில் இருந்த விழுப்புண்கள் எண்பது. அந்நியர்களை அடித்து விரட்ட, எதிர்த்து நின்ற போர்களிலே ஒரு கண்ணிழந்து, ஒரு கையிழந்து, ஒரு காலிழந்தும் மாளாத இந்த மாவீரன் சாங்காவை எதிரிகளுக்கு எமனாக வாழ்ந்த ராணா சாங்காவை — கயவர்கள் வஞ்சனையாக விஷமிட்டுக் கொன்று விட்டார்கள். மேவாரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய உரிமை பெற்ற இளவரசன் உதயசிம்மனுக்கோ ஆறு வயது. ஆனால் அந்தப் பாலகனின் உயிருக்கும் பகைவர்களால் ஆபத்து. குஜராத்தின் சுல்தான் ஒற்றுமையற்ற ராஜபுத்திரர்களின் குழப்படியைப் பயன்படுத்திக் கொண்டு மேவார் மீது படை எடுத்து விட்டான். ராணா சாங்காவின் வீரத்திலே நெஞ்சம் புழுங்கியவன் இந்த பஹதூர்ஷா!

கணவனை இழந்த ராணி கருணாவதி, தீக்குளித்துத் தன் கற்பைக் காக்க உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய நிலையில் மேவாரின் வாரிசை காப்பாற்ற இளவரசன் உதயசிம்மனை; தான் சகோதரி போல பாவித்து வந்த - தோழியும் - குழந்தையின் தாதியுமான பன்னாவின் கையில் ஒப்படைத்தாள் ராணா கருணாவதி. "மேவாரின் வருங்கால அரசனை உன் பொறுப்பில் விட்டுச் செல்கிறேன். அவனுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பு" என்று கூறி சிதையில் புகுந்து சதியானாள்.

தாதி பன்னாவுக்கு உதயசிம்மன் வயதில் ஒரு மகன். பட்டமேறிய பன்பீர் இளவரசனைக் கொன்று விட்டுத்தானே மேவாரின் நிரந்தர ராணாவாகத் திட்டமிட்டிருப்பதை அறிந்து கொண்ட போது சூழ்ச்சிக்காரனின் குத்துவாளுக்குத் தன் சொந்த மகனைப் பலியாக்கி விட்டு அரச குமாரனைக் காப்பாற்றினாள் தாதியான பன்னா. ராஜ விசுவாசம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் கடமை தவறாத் தன்மை, இவற்றுக்கு இலக்கணமாக விளங்கினாள் தாய் பன்னா! இது பாரதத்து ராஜஸ்தானத்து பன்னா என்ற பணிப் பெண்ணின் கதை.

இதே போல இங்கிலாந்திலும் ஒரு பன்னா - தாதி பெயர் டால்கீத். அவள் காப்பாற்றியதும் அரச வாரிசைத்தான். இளவரசியை. மண் மாறுபட்டாலும் பண்பு மாறாத நிலையை தாதி டால்கீத்தின் கதையில் காணலாம்.

இங்கிலாந்தில் முதலாம் சார்லஸ் மன்னரின் ஆட்சி.

ராணா சாங்காவைப் போல மக்களின் மதிப்புக்குரிய மன்னன் அல்ல சார்லஸ். அவர் காலத்தில் இங்கிலாந்து சர்ச்சின் (தேவாலயம்) அதிகாரத்துக்குட்பட்டிருந்தது. சர்ச்சைத் திருப்



திப்படுத்தினால்தான் மன்னர் நிம்மதியாக ஆட்சி செய்ய முடியும். பார்லிமெண்டின் ஒத்துழைப்பும் வேண்டும் மன்னருக்கு. சார்லஸ் பார்லிமெண்டோடு முரண்பட்டவர் பியூரிட்டன்களை (சிறு நிலச் சுவான்தார்கள் மத்திய தர வர்க்கத்தினர்) அலட்சியபடுத்தினார். ஆகவே உள் நாட்டுப் போர் மூண்டது. ஆட்சியைப் பார்லிமெண்டு கைப்பற்றியது. மன்னரைப் பதவி இறக்கம் செய்தது.

1628-ல் வெடித்த உள் நாட்டுப் போரில் பல ஆங்கிலேயக் குடும்பங்கள் அமெரிக்காவுக்குக் குடியேறின.



சார்லஸ், பிரஸ்பிடீரியன் என்ற கிறிஸ்து மதச் சார்புடைய ஸ்காட்லாந்து மக்களை ஆங்கிளிகன் பிரிவு சர்ச்சைப் பின்பற்றும்படி வற்புறுத்தினார். இதை ஏற்காத ஸ்காட்லாந்தியர் புரட்சி செய்தார்கள். இதோடு கத்தோலிக்கர்களான அயர்லாந்து மக்களும் மன்னர் சார்லஸிடம் அதிருப்தி கொண்டு புரட்சி செய்தார்கள். இவ்வாறு சார்லஸ் எதிரிகளைத் தேடிக் கொண்டார்.

இந்நிலையில் அரசியல் நடத்த (ஆட்சி) பணம் வேண்டுமே. ஆகவே பார்லிமெண்டைக் கூட்ட வேண்டிய கட்டாயத்துக்குள்ளானார் சார்லஸ். 1640-ல் சரித்திரம் இதை நீண்ட பார்லிமெண்ட் என்றழைக்கிறது. காரணம், கூட்டிய பார்லிமெண்ட் 20 வருடங்கள் தொடர்ந்து செயல்பட்டது! மன்னரின் தேவைக்குப் பார்லிமெண்ட் பணம் ஒதுக்கு முன் பல சீர்திருத்தங்களை செய்வதாக மன்னரை ஒப்புக் கொள்ளச் செய்தது. அவற்றில் ஒன்று மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பார்லிமெண்டைக் கூட்ட வேண்டும் என்பது. விவாதங்கள் தொடர்ந்தன. லண்டன் வாசிகள் பார்லிமெண்டுக்குச் சாதகமாக ஆயுதமேந்தினார்கள்.

சாந்தா மூர்த்தி..

மன்னர் சார்லஸும் தன் ஆதரவாளர்களைக் கொண்ட ஒரு படையை உருவாக்கினார். இவர்களுக்குக் கேவலியர்கள் (காவாலியர்கள் அல்ல!) என்று பெயர். பிரபுக்கள் பெரும் பண்ணையார்களின் ஆட்களைக் கொண்டது இப்படை. பார்லிமெண்டை ஆதரிக்கும் படைக்கு பியூரிட்டன்ஸ் என்று பெயர். மத்தியதர பொது மக்கள் சிறுபண்ணையார்களைக் கொண்டது. இது தங்களை வட்டத் தலையினர் - ரவுண்ட் ஹெட்ஸ் என்று அழைத்துக் கொண்டனர் பியூரிட்டன்கள். காரணம், கேவாலியர் மீதுள்ள தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்க இவர்கள் தங்கள் தலைமுடியை குட்டையாக வெட்டிக் குறைத்துக் கொண்டார்கள். கேவலியர்களின் தலைமுடி நீளமாக இருக்கும். 1642-ல் தொடங்கிய இந்த உள்நாட்டுப் போரை சரித்திரம் 'பியூரிட்டன் ரெவல்யூஷன்' என்றழைக்கிறது. இக்கால கட்டத்தில்தான் ஆலிவர்

● நீ வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ. ஏனையோரின் முதுகின் மேல் ஏறிப்போக விரும்பாதே. அது உனக்கு ஆபத்து.

— நீயேட்சே

தகவல் : எம். புஷ்பவள்ளி

இராம்வெல் என்ற ராணுவத் தலைவர் உருவாகி இங்கிலாந்தின் ஆட்சியையும் கைப்பற்றினார். பார்லிமெண்டுக்கு மகத்தான அதிகாரங்களை பெற்றுக் கொடுத்தது கிராம் பெல்தான்.

பல முனைகளில் பியூரிட்டன்கள் (ரவுண்ட் ஹெட்ஸ்) வெற்றி பெறவே மன்னர் சார்லஸ், இங்கிலாந்தை விட்டு ஓடி ஒளிய வேண்டிய நிலை ஏற்பட்டது. பார்லிமெண்ட் (கிராம்பெல்) மன்னரைத் தேடிக் கைது செய்ய முனைப்பாக இருந்தது. எக்ஸ்டெர் என்னுமிடத்தில் ஒளிந்திருப்பதாக அறிந்து அதை முற்றுகையிட்டனர். புரட்சியாளர்களின் கையில் சிக்காமல், மனைவி குழந்தையைக் கைவிட்டு தப்பி ஓடினார் சார்லஸ்.

இந்த நிலையில் சார்லஸின் மனைவி ராணி ஹென்ரிட்டா மரியா இக்கட்டான நிலையில் தவித்தாள். எக்ஸடர் வீழ்ந்தால் புரட்சியாளர் தன்னைப் பிடித்து வைத்துக் கொண்டு கணவன் சார்லஸ் சரணாகதியடையும்படி தன்னைப் பிணையாகப் பயன்படுத்துவார்கள் என்று பயந்தாள். ஆகவே அவர்கள் கையில் சிக்காமல் தானும் தப்பி ஓட விரும்பினாள். அதற்குத் தடையாக இருந்தது கைக் குழந்தை இளவரசி ஹென்ரிட்டா ஆனி. பிறந்து ஒரு மாதமே ஆகி இருந்த பச்சிளம் குழந்தை. குழந்தையோடு தப்பியோட முடியாதே.

அருகில் நிற்கும் தாதியை (கவர்னஸ்) அழைத்தாள். லேடி டால்கீத் என்னும் அவளிடம் குழந்தை இளவரசி ஆனியைக் ஒப்படைத்தாள். "டால்கீத்! என்னை நீ எப்படி நேசிக்கிறாய் என்பதை நான் அறிவேன். அதே அன்பை என் குழந்தையிடமும் காட்டு. அரசகுமாரியை பார்லிமெண்ட் ஆட்களின் கைக்குப் போகாமல் காப்பாற்று" என்று கூறி அவசரமாக வெளியேறினாள். தலைமறைவானாள்.

தாதி டால்கீத் தன் அரவணைப்பிலிருந்த குழந்தையைப் பார்த்தாள். சின்னஞ் சிறு ஜீவன். பிறந்து சில வாரங்களே ஆன இளங் குருத்து. கனமொன்றுமில்லை. ஆனால் அவள் மனத்திலே ராஜ விசுவாசம், கடமை, பொறுப்பு என்ற கனங்களே பாறையாக அழுத்தின. அதை நினைத்தபோது கை கனத்தது. ராணி பத்திரமாக ஆபத்தில்லாமல் தப்பி இருப்பாளா? அரசர் எங்கே இருக்கிறார் எதுவும் அறிய வாய்ப்பில்லை டால்கீத்துக்கு.

சிறிது நேரத்துக்கெல்லாம் மனைவியைத் தவிக்கி விட்டுத் தான்மட்டும் தப்பி வந்தோமே என்ற மனச்சாட்சி உறுத்த முற்றுகையிட்டுள்ள எதிரிப்படையணியில் எப்படியோ புகுந்து மனைவியையும் குழந்தையையும் காண வந்தார் சார்லஸ். மனைவி தப்பிச் சென்றதை டால்கீத் கூற அவள் கையில் உள்ள தன் குழந்தையை ஆசையோடு முத்தமிட்ட மன்னர், "டால்கீத் இது அரசி எனக்களித்துள்ள கடைசிப் பரிசு. குழந்தையைக் கைவிட மாட்டேன், காப்பாற்றுவேன் என்று எனக்கு வாக்களி" என்று தாதியின் கையைப் பற்றிக் கொண்டு கேட்டார்.

"அரசே! என் உயிரின் மேல் ஆணை உங்கள் குழந்தையைக் காப்பாற்றுவேன்" என்றாள் டால்கீத் உறுதியோடு.

ஓராண்டு கழிந்தது அமைதியாக எக்ஸடரில். ஆனால் 1645 ஆகஸ்டில் பார்லிமெண்ட் படைகள், எக்ஸடர் நகர எல்லைகளை அடைத்தது. இந்தத் திடீர் நடவடிக்கையினால், ஒரு வயதுக் குழந்தையோடு டால்கீத் வெளியேறுவது அசாத்தியமாயிற்று. எங்கு போவது, யார் உதவியை நாடுவது என்றும் புரியவில்லை.

எக்ஸடர் நகர் கடுமையான முற்றுகைக்குட்பட்டிருந்ததினால் அந்த மாரியில் நகரில் பஞ்சமும் புகுந்து கொண்டது. எந்த மாவீரனானாலும் விரட்ட முடியாததாயிற்றே பஞ்சம். ஆகவே ஏப்ரலில், எக்ஸடர் நகர ராணுவத் தளபதி சரணடைய ஒப்புக் கொண்டார். ஒரு நிபந்தனையின் பேரில் — "குட்டி இளவரசியை இங்கிலாந்தில் உள்ள ஏதாவதொரு பத்திரமான இடத்துக்கு அனுப்ப இணங்க வேண்டும். பத்திரமான இடம் எது என்பதை லேடி டால்கீத் முடிவு செய்வாள். அது தவிர இளவரசிக்குப் பாதுகாப்பும் அவளை வளர்க்கப் பணமும் பார்லிமெண்ட் வழங்க வேண்டும்."

லேடி டால்கீத் தன்னையும் இளவரசியையும் ராஜவிசுவாசியான ரிச்மண்டிடம் அனுப்பக் கூறினாள். ஆனால் அவளும் குழந்தையும் எக்ஸடரை விட்டு வெளிப்பட்டதுமே வளைத்துக் கொண்டு, ஒக்லாண்டிலுள்ள பழைய அரண்மனையில் சிறை வைத்தார்கள். அங்கிருந்தபடியே லேடி டால்கீத் சரண ஒப்பந்தத்தை மீறிச் செயல்பட்டதை எதிர்த்துப் பார்லிமெண்டுக்கு எழுதினாள். ஆனால் பதில்

ஏதுமில்லை. வாக்களித்தபடி பண உதவியும் கிடைக்கவில்லை. டால்கீத் இளவரசியைக் காப்பாற்ற தன் கைப்பணத்தைச் செலவிடும் நிலைக்கு ஆளானாள். அவள் கைப் பணமும் கரையவே மீண்டும் பார்லிமெண்ட்டுக்கு எழுதினாள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றும்படி.

மூன்று மாதங்கள் காத்திருந்தும் பதிலேதுமில்லை. அதன் பிறகு வந்த பதில் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இளவரசியை லண்டனில் உள்ள புனித ஜேம்ஸ் ஆலயத்தில் இருக்கும் லேடி நார்த்தம்பர்லாண்டிடம் ஒப்படைத்து சரணடையுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மன்னரின் இருகுழந்தைகள் லேடி நார்த்தம்பர்லாண்டின் பொறுப்பில் இருந்தன. பார்லிமெண்டின் இக்கட்டளைக்கு லேடி டால்கீத் ஒப்பவில்லை. "மன்னரின் அனுமதி பெற்றுத்தான் உங்கள் விருப்பப்படி என்னால் செயல்படுத்த முடியும். என் இஷ்டத்துக்கு நான் எந்த முடிவும் எடுக்க இயலாது" என்று பார்லிமெண்ட்டுக்குப் பதில் அனுப்பினாள். பார்லிமெண்ட் தொடர்ந்து மௌனம் சாதிக்கவே டால்கீத்துக்குப் பயம் ஏற்பட்டது. குழந்தை இளவரசியை பலவந்தமாகத் தன்னிடமிருந்து பறித்துக் கொண்டால் என்ன செய்வது என்ற கவலைப்படலானாள்.

'என் உயிரைக் கொடுத்தாவது உங்கள் குழந்தையைக் காப்பாற்றுவேன்' என்று மன்னருக்கும் அரசிக்கும் அளித்த வாக்கை நினைத்துக் கொண்டாள். 'என்ன இடர் வந்தாலும் சரி இங்கிருந்து குழந்தையுடன் தப்பி விடுவது' என்ற முடிவுக்கு வந்தாள். குழந்தை இளவரசியைப் பராமரிப்பதற்காக நியமித்துள்ள பணிப் பெண்களை அழைத்தாள். "பார்லிமெண்டிடமிருந்து இளவரசிக்கு நீதி கிடைக்கவில்லை என்பதை நீங்கள் கண் கூடாகக் கண்டீர்கள். குழந்தையை இங்கிருந்தபடி அதிக நாள் காப்பாற்ற முடியாது என்று பயப்படுகிறேன். உங்களிடம் நான் வேண்டும் உதவி இதுதான். நான் குழந்தையுடன் தப்பிச் சென்றதை எவ்வளவு நாள் உங்களால் மறைக்க முடியுமோ அவ்வளவு நாள் அதை ரகசியமாகக் காப்பாற்ற வேண்டும்"என்று கேட்டுக் கொண்டாள். அப்படியே உதவுவதாக அவர்கள் வாக்களித்தனர்.

அப்போது பிரபுக்களுக்கும் மன்னர்களுக்கும் குற்றேவல் புரியும் (வாலட் - Valet) இளைஞன் ஒருவன் டால்கீத்தின் உதவிக்கு வந்தான். அவன் பிரான்ஸ் தேசத்தவன். மன்னர் சார்லஸும் ராணி மரியாவும் தஞ்சம் புகுந்திருப்பது பிரான்ஸ் நாட்டில்தான், "அம்மணி! நீங்கள் இந்தத் தோற்றத்தில் இங்கிருந்து தப்பிப் போக முடியாது" என்றான் புன் சிரிப்புடன் அந்த வாலட். "கணவனோடு செல்லும் பெண்களுக்கு அபாயம் குறைவு. பிறர் பார்வைக்கு உங்கள் கணவனாக நடிக்கும் வாய்ப்பை எனக்குத் தர வேண்டும். உங்கள் முயற்சி வெற்றி பெற நான் உதவுகிறேன்" என்றான்.

"இது உன் உயிருக்கு அபாயம் என்பதை நீ உணர வில்லையா?"

"உன்னைப் போன்ற தீர மிக்க ஒரு பெண்ணுக்கு உதவுவதில் நான் உயிரிழப்பதைப் பெருமையாகவே கருதுகிறேன்" என்றான் வாலட் இளைஞன்.

தாதி டால்கீத் தன் உருவத்தை வெகுவாக மாற்றிக் கொண்டாள் கந்தல் உடைகளை அணிந்தாள். முதுகில் துணி மடிப்புக்களைப் பொறுத்தித் தன்னை கூனல் பிச்சைக்காரி போலாக்கிக் கொண்டாள். குழந்தை இளவரசிக்கு ஒரு பையனைப் போல வேஷமணிவித்தாள். ஒருநாள் விடியற்காலை வேளையில் தூங்கிக் கொண்டிருந்த மூன்று வயது இளவரசி ஆனியை நம் ஊர் குறத்திகள் குழந்தைகளைத் தூளி கட்டி தோளில் மாட்டிக் கொண்டு வருவது போல தூளியில் கிடத்திச் சுமந்து கொண்டாள். கற்பனைக் கணவன், அவனும் பிச்சைக்கார வழிப்போக்கன் போலத் தன்னை மாற்றிக் கொண்டிருந்தான். கந்தல் துணி மூட்டையைச் சுமந்துவர, தோட்டத்தின் நிழல்களில் பதுங்கிப் பதுங்கி இல்லத்திலிருந்து வெளியேறி நெடுஞ் சாலையை அடைந்தார்கள் இருவரும்.

பொழுது புலர்ந்து நல்ல வெளிச்சம் பரவிய பிறகு லேடி டால்கீத்தும் வாலட் இளைஞனும் கவனமாக பிரஞ்சு மொழியிலேயே பேசிக் கொண்டு வழி நடந்தார்கள். குழந்தை இளவரசி கண் விழித்து கால்களைத் தரையில் பதித்ததும்

இரவு செய்த சப்பாத்தி மறுநாள் காலையில் சாப்பிட மிருதுவாக இல்லையே என்று நினைக்க வேண்டாம். சப்பாத்திகளை ஒரு ஸ்டீல் டப்பாவில் வைத்து டைட்டாக மூடி குக்கரில் வைத்து ஒரு விசில் வந்த பிறகு எடுத்தால் அப்போதுதான் செய்த மாதிரி மிருதுவாக இருக்கும்.

— மீனா. வி.



சுற்று முற்றும் பார்த்தாள். தான் அணிந்திருக்கும் அழுக்கும் கந்தலுமான உடைகளைப் பார்த்தாள். அவ்வளவுதான் 'ஓ' என்று கதறி ஆர்ப்பாட்டம் செய்யலானாள்.

"அழுக்குத் துணி அசிங்கம்! கிழிசல் கந்தல்! என் அழகான நீல நிற ஆடை எங்கே? தலையில் அணியும் ரிப்பன் எங்கே?"

என்று நல்ல ஆங்கில மொழியில் பேசி அடம்பிடித்தாள். அவள் வாயில் இனிப்புக்களைத் திணித்து அவள் அழுகையை அடக்கினாள் டால்கீத். அதிர்ஷ்டவசமாக இளவரசி ஆனி கூச்சகபாவமுடைய குழந்தை. தாதியும் வாலட்டும் தங்கள் வேஷத்துக்கு ஏற்ப நடிக்கலானார்கள். வழிப் போக்கர்களிடம் கைநீட்டி பிச்சை கேட்டார்கள். பயணிகள் இவர்களை வெறித்துப் பார்த்து இளவரசியின் தலையைத் தடவி "எத்தனை அழகான பையன் இவர்களுக்கு!" என்று பாராட்டினார்கள்.

இளவரசி ஆனி கோபத்துடன் கத்துவாள். "பையனா? இளவரசி நான் இளவரசி!" என்று. டால்கீத் உடனே அவளை அணைத்துக் கொண்டு கொச்சை ஆங்கிலத்தில் அவர்களிடம் "இவனுக்கு இன்னும் சரியாகப் பேச வரவில்லை, தன் பெயரைக் கூற முயற்சிக்கிறான்" என்று கூறி சமாதானப்படுத்தி அப்பால் நகருவாள். இவ்வாறு கோடை முழுதும் பயணித்தார்கள். இளவரசி ஆனி சிலவேளைகளில் லேடி டால்கீத்தின் முதுகுத் தூளியில் பயணிப்பாள். சில போது அவர்களுடன் தளர் நடை பயின்று நடப்பாள். டோவர் துறைமுகப் பகுதியை அடைந்த போது அபாயம் நெருங்கலாயிற்று.

பியூரிட்டன் போர் வீரர்கள் குதிரை மீதமர்ந்து நெடுஞ்சாலைகளைக் கண்காணித்து வந்தனர். அரச குடும்பத்து அகதிகள் நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கிறார்களா என்று. இளவரசி ஹென்ரிட்டா ஆனிக்கு இவர்கள் கெட்டவர்கள் என்று தெரியும். ஆகவே லேடி டால்கீத்தின் ஆடையைப் பற்றிக் கொண்டு பின்னால் ஒளிந்து கொண்டாள். குதிரை வீரன் அவளை விசாரித்தான்.

"யார் நீ? எங்கே போகிறாய்?"

காவல் வீரனின் கேள்விக்கு வாலட் வாலிபன் பதில் கூறினான். மளமளவென்று சரளமான பிரஞ்சு மொழியில் பேசிவிட்டுக் கை நீட்டினான் தருமம் செய்யுமாறு! இவ்வாறு நடிக்கும் போது சிலபோது சில பென்னிகள் கிடைக்கும். சில சமயம் வசவுகளும் கிடைக்கும். இதை அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள். குதிரை வீரனும் அந்தக் கூனல் பெண்ணையும் பிரான்ஸ் நாட்டுப் பிச்சைக்காரனையும் 'அயல் நாட்டுக் கபோதிகள்' என்று நினைத்து அப்பால் போனான்.

சாக்கடைகளிலும் இரவில் வைக்கோல் போர்களிலும் தூங்கி படாத பாடெல்லாம் பட்டு, சுற்று வழிகளில் மோசமான சாலைகளில் நடந்து, பழக்கமில்லாத கரடுமுரடான காலணிகளை அணிந்துள்ளதினால் அவதிப் பட்டு, ஆனி "நான் இளவரசி! இளவரசியாக்கும்!" என்று கூச்சலிடுவதினால் தங்களை இனங் கண்டு கொள்ளுவார்களோ என்ற பீதி உந்தித்தள்ள ஒரு வழியாக டோவர் துறை முகத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கு ஒரு படகில், ஏழைகள் பயணிக்கும் மிக மலிவான டிக்கட்டை வாங்கிக் கொண்டு அழுக்கும் இருட்டும் நிறைந்த அதன் அடித்தளத்தில் இடம் பிடித்துக் கொண்டார்கள். லேடி டால்கீத்தை இவை எதுவும் பாதிக்கவில்லை. 'மன்னருக்கும் ராணிக்கும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட்டோம். இளவரசியை பார்லிமெண்டாரின் கையில் சிக்காமல் காப்பாற்றி விட்டோம்' என்று மன நிம்மதிப் பட்டாள் ராஜவிசுவாசியான அந்தத் தாதி.

பாரிஸ் நகரில் கந்தலாடையில் பையன் வேஷத்திலிருந்த ஆனி அழகுமிக்க இளவரசியாக பிரஞ்சு ஆடையில் சோபித்தாள். கூனல் முதுகுடனும் கந்தலாடையுடனும் பிச்சைக்காரியாக இருந்த தாதி டால்கீத்தும், வாலட்டும் எழில் மிகு மங்கையாக இளைஞனாக மாறினார்கள். டால்கீத் கதாநாயகியாகப் புகழப்பட்டாள். மக்கள் அவளைக் காண கண்டு பாராட்ட வந்து குவிந்தனர்.

லேடி டால்கீத் இளவரசி அழகு ஆனியை சார்லஸ் மன்னர் ராணி மரியாவின் காலடியில் சமர்ப்பித்த போது தான் அவர்களுக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட்ட பெருமிதத்தில் மகிழ்ந்து தான்பட்ட கஷ்டத்தையெல்லாம் மறந்து போனாள், ராஜ விசுவாசியும் கடமை தவறாதவளுமான அந்தத் தாதி!



இட்லிக்குச் சாப்பிடும் மிளகாய்ப் பொடியுடன் வெங்காயத்தை வெட்டிப் போட்டு ஒரு சுற்று அரைத்து எடுத்தால் திடீர் வெங்காயச் சட்னி தயார்.

— ஸ்ரீவித்யா காளிதாஸ்

இன்று அன்றாடம் கேள்விப்படுகின்ற, அனுபவிக்கின்ற பெண்களின் பல பிரச்னைகள் எவ்வளவு வேதனை தருவதாக இருப்பதைக் காண்கிறோம். எனவே இனிவரும் தலைமுறையான எதிர்காலப் பெண் குழந்தைகளையாவது தனிச் சிறப்புடன் கவனித்து வளர்க்க வேண்டியது பெற்றோர்களின் (குறிப்பாக தாயின்) கடமையாகிறது. நோய்கள் வந்த பின்பு பரிகாரங்கள் தேடுவதைவிட வருமுன்பு காப்பதுதான் மிகவும் சிறந்தது என்பதை இளம் தாய்மார்கள் நினைவில் கொள்ள வேண்டும். எனவே வருங்காலப் பெண் குழந்தைகளுக்கு நாம் அனுபவிக்கும் இன்றைய பிரச்னைகள் இல்லாமல் ஆரம்பத்திலிருந்தே என்னென்ன



• டாக்டர் ஜெயராம்

வருங்கால பெண் குழந்தைகளுக்கு...

செய்ய வேண்டும் என்பதை இத்துறையில் வல்லுனரான டாக்டர் எஸ். ஜெயராம் எழுதுகிறார்.....

குழந்தை பருவத்திலிருந்து தொடரும் பல வித நோய்களுக்கும் அடிப்படைக் காரணங்களாக அமைவது கணச்சூடும், கர்ப்ப சூடும் தான். கருவுற்ற தாய்க்குக் கர்ப்பச் சூட்டின் பாதிப்பு இருந்தால் அது குழந்தைக்குக் கணச் சூடாக தொடரும். இதனால் குழந்தைக்கு மாந்த நோய்கள் வரும். இழுப்பு நோய் எனப்படும் 'பிரைமரி காம்ப்ளக்ஸ்' வர இதுவே முக்கிய காரணங்களில் ஒன்று.

ஆங்கில முறையில் இந்த நோயால் பாதிக்கப்படும் குழந்தைக்கு டி.பி, ஆஸ்துமா போன்ற நோய்களுக்குத் தரப்படும் சிகிச்சைதான் தரப்படுகிறது. அடிக்கடி ஜுரம், வலிப்பு, மந்தபேதி, பசியின்மை, ஓயாத சளித் தொல்லை இப்படி பல பிரச்னைகள் தொடரும். இந்த நோயின் கடுமை குறைய மேலும் மேலும் தரப்படும் மருந்துகளினால் குழந்தையின் உடல் மிகவும் நலிந்து விடும். சிறு குழந்தைகள் inhaler உபயோகிப்பதை பார்க்கும் போது வேதனையாக உள்ளது.

நோய்த் தடுப்பு சக்தியாக செயல்படும் கல்லீரல் பாதிக்கப்படவும் இந்த கணைச்சூடு தான் முக்கிய காரணமாகிறது. இதற்கு வெகு எளிய பாட்டி வைத்தியம் உண்டு. டாக்டரைத் தேடி ஓடி 'அப்பாயிண்ட்மெண்ட்' வாங்க வேண்டியதில்லை. அந்தக் காலத்தில் வீட்டில் எப்போதுமே வைத்திருக்கும் 'பிள்ளை வளர்ப்பான்' என்று அழைக்கப்படும் வசம்பை ஆமணக்கு எண்ணெயில் தோய்த்து கருக்கி சாம்பலாக்கி வைத்துக் கொண்டு அதைத் தேனில் குழைத்து குழந்தையைக் குளிக்க வைத்தபின்பு அதன் நாக்கில் தடவ வேண்டும்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதென்பது நம் சீதோஷ்ண நிலைக்கு (இங்கு ஆண்டில் 11 மாதம் வெயில்) மிகவும் தேவையான ஒன்று. இந்த வெயிலினால் வரும் சூடு என்பது உடல் சூட்டை விட அதிகம். நம் உடலும் மேலும் மேலும் சூட்டை கிரகித்துக் கொண்டேதான் இருக்கிறது. இதைத் தவிர்க்க எண்ணெய்க் குளியல் என்பது மிகவும் அவசியமாகிறது. வெளிநாடுகளைப் பொறுத்தவரை ஆண்டின் 11 மாதம் குளிர். அவர்களைப் பார்த்து எண்ணெய்க் குளியலை மறந்து விட்டது பெரும் தவறு. அவர்கள் நல்ல வரவேற்பை 'வார்ம் வெல்கம்' என்கின்றனர். நாம் 'குளிர்ந்த உபசரிப்பு' என்றுதானே சொல்கிறோம்? வரவேற்கும் வார்த்தைகளிலேயே நமக்கு எது தேவை என்பது விளங்குகிறதல்லவா!

எண்ணெய்க் குளியல் மூளையில் ஏற்படும் பதட்டத்தைக் குறைத்து, இதயத் துடிப்பையும், இரத்த ஓட்டத்தையும் ஒரே சீராக்கிக் கழிவு உறுப்புகளை நன்கு இயங்க வைப்பதுடன் அதிகரிக்கும் உடல் சூட்டையும் தணிக்கவல்லது. இதனால் பருவகாலங்களினால் ஏற்படும் மாறுதல்கள் கூட நம் உடலை பாதிப்பதில்லை.

ஒரு சிறு துண்டு இஞ்சி, 5 சிறிய சாம்பார் வெங்காயம், 5 கறுப்பு வெற்றிலை, கருஞ்சீரகம் ½ டீஸ்பூன், மிளகு ½ டீஸ்பூன் - இவைகளை

ஒன்றாக அரைத்து அடை போலாக்கி 150 மி.லி. நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி வைத்துக் கொண்டு ஒரு வயதான குழந்தைகளுக்கு ஒன்று விட்டு ஒரு நாள் தேய்த்துத் தலைக்குக் குளிப் பாட்ட வேண்டும். குளிக்க பலமணப் பொடியை உபயோகிக்க வேண்டும். வெந்நீரை பதமாக வைத்து ஊற்ற வேண்டும். கொதிக்க வைத்தபின்பு குளிர்ந்த நீர் விட்டு விளாவக் கூடாது. மாறும் காலநிலைகள், அமாவாசை, பௌர்ணமி போன்ற நாட்களில் குளிர்க்க



வேண்டும். இது போல குளிக்க வைக்கும் அன்று குழந்தைக்கு நல்ல உறக்கம் வரும்.

எண்ணெய் தேய்த்தால் ஜுரம், தலைவலி வரும் என்று சொல்பவர்கள் பலருண்டு. ஆரம் பத்திலல்லாமல் திடீரென்று எண்ணெய்க் குளியல் செய்பவர்களுக்கு இப்படி இருக்கலாம். தலையில் வெளியேறாமல் தங்கிவிட்ட சூடு தான் இதற்குக் காரணம். இதற்கு எம்போன்ற சித்த மருத்துவர்களிடம் சூட்டைத் தணிப்பிக் கும் உள்மருந்து சிகிச்சை எடுத்து கொண்ட பின் தாரானமாக எண்ணெய்க் குளியலை தொடங்கலாம். வாரத்தில் இருமுறை எண் ணெய்க் குளியல் செய்தால் போதுமானது. பல வியாதிகள் வந்து வைத்தியத்தில் செலவிடு வதை விட இது சிறந்தது. "வாணியனுக்கு கொடுக்காதவன் வைத்தியனுக்குக் கொடுப் பான்" என்ற பொதுவான பழமொழி இதனால் தான் வந்தது.

தினந்தோறும் உள்நாக்கில் தடவும் தேனில் குழைத்த வசம்புப் பொடி உடனே உறிஞ்சப்படு வதால் பால் மட்டுமே குடிக்கும் குழந்தைகளுக் குத் தொண்டையில் படியும் 'அக்கரம்' நீங்கும். மூளை தூண்டப்படுகிறது. கபம் சேராது. நல்ல ஜீரணசக்தி வரும். மந்தம், மலசிக்கல் இருக்காது. 2 டீஸ்பூன் ஓமத்தை மண்சட்டியிலிட்டு வாசனை வரும் வரை வறுத்து அதில் ஒரு டம்ளர் நீர்விட்டு அரை டம்ளராக சுண்டும் வரை காய வைத்து சிறிது தேன் கலந்து ஒரு வயதுக்குள் என்றால் ஒரு பாலாடை, ஒன்று முதல் மூன்று வயது என்றால் 1½ பாலாடை என்ற அளவில் வாரம் ஒருமுறை தரலாம்.

துளசி, தும்பை, தூதுவளை போன்ற செடி களை வீட்டிலேயே தொட்டியில் வைத்தாவது வளர்க்க வேண்டும். இவைகள் என்றும் நம் ஆரோக்கியம் காப்பவை. சிறு குழந்தை ஜுரத் திற்கு தும்பையிலை, துளசியிலை, வெற்றிலை, விஷ்ணுகிரந்தி, வெள்ளருகு, அதிமதுரம் போன்றவைகளை 3 கிராமும், மிளகு 6 அல்லது 7 சேர்த்து குடிநீராக இட்டு 3 - 4 வேளையாகக் கொடுக்கலாம். பால சஞ்சீவிக் குளிகை என்ற சித்த மருந்துண்டு. இது கைவசமிருந்தால் 6 - 7 வயது வரை எந்த ஜுரத்தையும் தணிக்க இது போதுமானது. சளி, இழுப்போடு கூடிய ஜுரத் திற்கு கோரோசனை மாத்திரை விரைவிலேயே பலனளிக்கக் கூடியது. Antibiotics சாப்பிட்டு பக்க விளைவை தேடிக் கொள்ளத் தேவை யில்லை. எனினும், நீடித்த ஜுரமானால் அவ சியம் மருத்துவரை அணுகவும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை, அக்கரா - இவை ஐந்தையும் சம அளவு எடுத்து வறுத்து சன்னமாகப் பொடி செய்து வைத்துக் கொண்டு 3 நாட்களுக்கு ஒருமுறை ஒரு வய தென்றால் 2 சிட்டிகை, வளர்ந்த குழந்தைகள்



என்றால் வயதுக்கேற்ப தேனில் குழைத்து நாக் கில் தடவ டான்சில்ஸ் எனப்படும் உள்நாக்கு வளராது. ஆனால் அக்கரா தற்போது சுத்த மாகக் கிடைப்பது அரிது. இதே போன்ற வேறு மூலிகைகளைக் கூட தரக்கூடும். இதனால் எதிர்பார்க்கும் பலன்கள் எதிராகவும் அமைய வாய்ப்பு உண்டு. ஆனால் அதற்கு நிகரான மாற்று மூலிகைகளை எம்போன்ற மருத்துவர் களை அணுகி விசாரிக்கவும். தூத்துக்குடியைச் சேர்ந்த அமெரிக்காவில் குடியுரிமை பெற்ற


"நவீன பெண்களுக்கு நான் சிபாரிசு செய்வது டெயின்டி கேர்."
DAINTY CARE
டெயின்டி கேர். நாகரிகப் பெண்களின் நீண்ட கால கனவு
எப்படிப் பயன்படுத்துவது: மிக எளிதாகப் பயன்படுத்தலாம். 2 தேக்கரண்டி (20 மில்லி) டெயின்டி கேர் கரைசலை 200 மில்லி தண்ணீரில் (1/2 குவளை) கலந்து சானிட்டரி நாப்கின் அணிந்து கொள்வதற்கு முன் அந்தரங்க உறுப்பைச் சுத்தம் செய்து கொள்ளுங்கள். மேலும் தூய்மைக்கும் பாதுகாப்புக்கும், டெயின்டி கேர் கரைசலை, சானிட்டரி நாப்கின் மீது தெளித்துக் கொள்ளலாம். தினசரி சுத்தம் செய்து கொள்ள விரும்புகிறவர்கள் 200 மில்லி தண்ணீரில் 10 மில்லி டெயின்டி கேர் கரைசலைக் கலந்து சுத்தப்படுத்திக் கொள்ளலாம்.
அஸ்ட்ரோ டிரக் & ஃபார்மா லிமிடெட்
194, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, முதல் மாடி, சென்னை - 600 010.
தொ. பே : 6415596, 6415597, 6415540 பேக்ஸ் : 91-44-6415595
DAINTY CARE. THE ULTIMATE GERMICIDAL SOLUTION FOR MENSTRUAL HYGIENE.
சூப்பர் ஸ்டாக்கிஸ்ட் : மெர்க்குரி என்டர்பிரைசஸ், சென்னை. போன் : 6420156, 6420578.
டெயின்டி கேர்
4 வழிகளில் செயல்படும் திறன்
இதன் டியோடரன்ட் தன்மை, கிருமிகளைத் தடுத்து, இனிய லாவண்டர் நறுமணத்தை அளிக்கிறது.
இரத்தக் கசிவு, வெள்ளைப் படுதல் போன்றவற்றை தூய்மைப் படுத்துகிறது.
குளுமையான இனிய உணர்வை அளிக்கிறது.
ANEJA/CHI/145/97

டாக்டர் குடும்பத்தினர் இங்கு வரும் போதெல்லாம் இந்தப் பொடியை 5 கிலோவிற்கும் குறையாமல் பல வருடமாக வாங்கிச் செல்லுகின்றனர். இதே பொடியுடன் வசம்பு சுட்ட சாம்பலும் சேர்த்துக் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் சளி, இருமல், தொண்டை கட்டு போன்றவைகளுக்கு நல்ல பலன் தரும்; பாடகர்கள் தங்களின் குரலைப் பாதுகாத்து கொள்ள உதவும்.

வில்வ இலை, வெந்தியம், சாம்பார் வெங்காயம் இவைகளுடன் இன்னும் சில மூலிகைகளைச் சேர்த்து ஆமணக்கு எண்ணெயில் கலந்து காய்ச்சி ஆறவைத்து எடுத்து வைத்துக் கொண்டு - அதனுடன் பனங்கற்கண்டு பொடி சேர்த்து குழந்தையின் உள்நாக்கில் தடவிவர மலசிக்கல், மந்தம் வராது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் தாய்மார்கள் மார்பகத்திலேயே இந்த எண்ணெயைத் தடவிக் கொண்டு பால் தரலாம்.

கொடுத்து வர எதிர்காலத்தில் கருப்பை பிரச்னைகள் வராது. கணைச் சூட்டை நீக்கும். மஞ்சள் காமாலை வராது. ஈரல் வீக்கம் வராது.

பெண் குழந்தைகளுக்கு கருப்பையின் வளர்ச்சி 7 வயது முதலே துவங்கிவிடும். 7 வயதில் கருப்பையின் கழுத்துப் பகுதியும், கருப்பை அளவும் 2 : 1 என்ற விகிதத்தில் இருக்கும். 14 வயதில் இவையிரண்டும் சமமாக அமையும். இந்த வளர்ச்சி 21 வயது வரையில் தொடரும்.

3 வயது குழந்தை ஒன்று ஓயாத வயிற்றுப் போக்குடன் என்னிடம் கொண்டு வரப்பட்டது. நான் மாந்த எண்ணெய் தர அடுத்த முறை பேதியான போது அதில் ஒரு துண்டு முந்திரிப் பருப்பு வெளியே வந்து விழுந்தது. குழந்தை விழுங்கிய முந்திரி ஜீரணமாகாமல் வயிற்றினுள்ளேயே 2 மாதம் தங்கிவிட்டதுதான் வயிற்றுப் போக்கு தொடர்ந்ததற்குக் காரணம். சாதாரண பேதிக்கு மாசிக்காய், வசம்பு சுட்ட

இக்கட்டுரையை எழுதிய டாக்டர் எஸ். ஜெயராம் பற்றி.....

178 ஆண்டு பாரம்பர்ய பெருமை உடைய சித்த மருத்துவர். அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர். 3500 க்கும் மேற்பட்ட பழமையான மருத்துவ ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து இன்று புழக்கத்தில் இல்லாத, அச்சுப் புத்தகத்திலும் இல்லாத பல குரு மருந்துகளை செய்து சிகிச்சை அளிக்கிறார். (குரு மருந்து என்பது பல நோய்கள் சேர்ந்து இருக்கும் நிலையிலும் கூட தனித்தனி மருந்துக்கு அவசியமின்றி ஒரே சமயத்தில் அத்தனையும் தணிக்கும் சக்தி வாய்ந்த சித்தர்களுக்கே உரிய தனிச் சிறப்பான மருந்தாகும்!)

பரம்பரையில் முதல் குருவான ஸ்ரீ வேலாண்டிச் சித்தர் ஒரு அஷ்டமகாசித்தி பெற்ற மகான். குழந்தைப் பேறு மற்றும் குழந்தை நலத்திற்கான சிறப்பான மருந்துகளை அவர் உபதேசித்தார். கருக்கலைப்பு வைத்தியம் மட்டும் செய்யதே என்பது அவர் ஆணை! இன்றும் அதனை இவர் பரம்பரையில் காப்பாற்றி வருகிறார். கைநாடி ரகசியமும் அவர் அனுக்கிரகம்!

தோன்றாத்துணையாக இன்றும் அவர் வழிகாட்டுவதாகக் கூறுகிறார். இதுவன்றி சித்தர் விஞ்ஞானத்தில் மணி (ஜோதிடம்) மந்த்ரம், அவுஷதம், ஞானம் யோகம், கற்பம், ரசாயனம் ஆகிய 7 பிரிவிலுமே புலமை உள்ளவர்! 20 ஆற்காடு ரோடு (மேம்பாலம் அருகில்) கோடம்பாக்கம், சென்னை - 24 ல் நவோதயா சித்த மருத்துவமனையும் முழுநேர ஆராய்ச்சி நிலையமும் நடத்தி வருகிறார்.

உணவுப் பழக்கங்களும் கூட நம் உடல் சூட்டை தணிக்கவல்லது. தினமும் காலை உணவில் பழைய சாதத்தில் மோரும், சில சாம்பார் வெங்காயமும் சேர்த்து உண்ண உடல் சூடு தணியும். இட்லி, தோசையை விட மேலானது. கூடுமானவரை சிறு தின்டிகளைக் (Snacks) குறைப்பது நல்லது. தவிர்க்க முடியாத நிலையில் சாப்பிட்ட பின்பு வேண்டுமானால் தரலாம்.

கற்றாழையின் உள்சோற்றை 7 முறை கழுவி 50 கிராம் அளவு நறுக்கி அதனுடன் அரிசி பொரிமாவு கல்கண்டு பொடி சேர்த்து தொடர்ந்து 4 நாட்கள் காலை வெறும் வயிற்றில் தர வேண்டும். மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மாதம் இருமுறை இது போல்

சாம்பல் சிட்டிகை அளவு தேனில் குழப்பித் தரலாம்.

5 வயதான போது ஒரு குழந்தைக்கு இழுப்பு துவங்கி 11 வயது வரை அது கட்டுப்படாமல் தொடர - கண சூட்டுக்கான மருந்துகளை நான் தந்தேன். இப்போது நோய் நீங்கி நன்கு உடல் நிலையில் அந்தக் குழந்தை தன் பெற்றோருடன் தென்னாப்பிரிக்காவில் இருக்கிறாள்.

இப்படி பெண் குழந்தைகளை ஆரம்பத்தில் இருந்தே அடிப்படையான உடல் நலத்தில் கவனம் செலுத்துவோம். அடுத்த இதழில் இப்படி ஆரோக்கியமாக வளர்க்கப்படும் குழந்தையின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு....

(தொடரும்)



கத்திரிக்காய் எல்லோருக்கும் அலர்ஜியல்ல!

ஹோமியோபதி மருத்துவம் தோல் வியாதிகளுக்கு மிகவும் சிறந்தது. தீர்க்க முடியாத வியாதிகளுக்கு முழுமையாக பக்க விளைவில்லாமல் சிகிச்சை அளிக்கிறது. அண்மையில் சென்னையில் 'டெர்மா '97 தோல் வியாதிகள் கருத்தரங்கை மாநில பட்ட தாரிகள் மருத்துவ நிபுணர் சங்கம் நடத் தியது. பொதுச் செயலாளர் டாக்டர் ஆர். ஞானசம்பந்தம் அதில் இவ்வாறு கூறினார்.



• டாக்டர் லலிதா காமேஸ்வரன் கருத்தரங்கை தொடங்கி வைக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது –

"சரும நோய்களுக்குச் சிறந்த வைத்தியம் ஹோமியோபதிதான். பெரும்பாலான சரும வியாதிகள் பரம் பரையாகத் தோன்றலாம். அலர்ஜியினால் நோய்க் கிருமிகள், கூடத் தொற்றலாம்.

ஒவ்வாமை என்பது ஒவ்வொருவரின் தனித் தன்மையைப் பொருத்தது. அது நாம் உண்ணும் உணவில் உபயோகிக்கும் பொருள்களில் இராசாயனப் பொருள் களில் சருமம் படும்போது ஏற்படலாம். ஆனால் எல்லா அலர்ஜி பொருள்களும் அலர்ஜியை உண்டாக்கும் என்பதில்லை. ஒருவருக்கு கத்தரிக்காய் ஒத்துக் கொள்ளாது என்றால் மற்றொரு அலர்ஜி நோயாளிக்கு அது ஒத்துக் கொள்ளும்.

அலர்ஜியை உண்டாக்கக்கூடிய உணவுப் பொருள்களை நோயாளிகள் அறிந்து அனுபவப்பட்டிருப்பார்கள். உணவுக் கட்டுப்பாட்டில் இவைகளை தவிர்த்தால் (Eliminative Diet) பொதுவ. ஒவ்வாமையை உண்டாக்கும் அனைத்தையும் விலக்க வேண்டியதில்லை

அலர்ஜியின் முதல் பாதிப்பு சரும அரிப்பு, தடிப்பு அது உடம்பின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ பாதிக்கும். இந்த நிலை நீடித்து உடலில் இருந்தால் அது சருமத்தில் எக்சிமாவை (Eczema) உண்டாக்குகிறது. சிறு தடிப்பு அரிப்புடன் காணப்படும் முதல் கட்டம் சிறுசிறு கொப்பளங்களை உண்டாக்கு கிறது. மேலும் தொடர்ந்தால் கொப் பளங்கள் உடைந்து நோய் நுண்கிருமிகள் ஊடுருவி சீழ் பிடித்தல், நீர் வடிதல் உண்டாகி விடுகின்றன.

மூதாதையர் அலர்ஜி தும்மல், சளி ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும் பரம்பரையாக எக்சிமா தோன்ற வாய்ப்பு உண்டு. அதே போல் சிறு வயதில் மருந்துகளால் அமுக்கப்பட்ட ஆஸ்துமா பிற்காலத்தில் எக்சிமாவாகத் தோன்றலாம்.

ஹோமியோபதி தத்துவத்தின் அடிப்படை - சோரா (Psora) எனப்படும் நச்சு, இதை உடலிலிருந்து முழுமையாக ஆன்டி சோரிக் மருந்துகள் மூலம் குணப்படுத்துவதன் மூலம் பல்வேறு தோல் வியாதிகள் முழுமையாக குணம் பெறுகின்றன. அலர்ஜியினால் உண்டாகும் காரணம் கண்டுபிடிக்க முடியாத அரிப்பு, தடிப்புகள், எக்சிமா அலர்ஜி தும்மல் சளி, ஆஸ்துமா போன்றவைக்கு நிரந்தர குணம் ஹோமியோபதியில் உண்டு.

அடுத்து சருமத்தில் உள்ள செல்களை பாதிக்கும் வகை நோய்கள்: செல் பிரிதலில் சீரான எண்ணிக்கை இருக்க வேண்டும். அதிகமாக பிரிந்தாலும் பெரிதானாலும் கட்டிகள் உண்டாக்கும். வெளி செல்கள் (Epidermal Layer)

• தலை சொட்டைக்கு சிகிச்சை....



அதிகமாக பிரிவதால் சோரியாசிஸ் உண்டாகிறது. செதில் செதில்களாக பிரிந்து விழுதல் இதன் முக்கிய குறி. இதற்குக் காரணம் பாரம்பரியம் மட்டுமே என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நார்செல்களை பாதித்தால் நார்க்கட்டி உண்டாகும்; கொழுப்பு செல்கள் அதிகமானால் கொழுப்புக் கட்டிகள் உண்டாகும். நரம்புகளில் உள்ள நார்த்திசுக்களுடன் நரம்புக் கட்டிகள் உண்டாகும். எண்ணெய் சுரப்பிகளை பாதித்து பருக்கள், மருக்கள் உண்டாகின்றன. கால்களில் ஆணி விழுதல் இது போலத்தான். இந்த நோய்களுக்கு சிகிச்சை உண்டு என்று கூறினால் டாக்டர்களே நம்ப மறுத்துவிடுகின்றனர். புற்றுநோயும் இதைப் போன்றதுதானே, குணப்படுத்த முடியுமா? என்று கேட்கின்றனர். அடிப்படைக் காரணம் அபரிமித செல் வளர்ச்சிதான். மருக்கள், ஆணிகள், நரம்புக் கட்டிகள் குணப்படுத்தப்படும் போது கேன்சர் மட்டும் குணமாகாதா என்ன?

இதற்குத் தேவை ஆரம்பகால சிகிச்சைதான்.

ஹோமியோபதி மருந்துகள் நோய்க் குறிகளின் அடிப்படையில் வழங்கப் படுகின்றன. அடிப்படையான மனநலம், உடல் நலம் நோய்த் தன்மை முதலியவைகளை நன்கு அறிந்து சிகிச்சை அளித்தால் வெற்றிகிட்டும்.

சருமத்தின் நிறம் தோலில் உள்ள மெலானின் எனப்படும் நிறமி அணுக்களின் தன்மையைப் பொருத்தது. இந்த அணுக்கள் அதிக மாக இருந்தால் கறுப்பாகத் தோன்று வோம். குறைவாக இருந்தால் சிகப்பாக தோன்றுகிறோம். இந்த நிறமி அணுக்கள் அதிக மானால் மச்சங்கள் (Mole) கரும் புள்ளிகள் உண்டாகும். பெண்களுக்குக் கன்னங்களில் ஏற்படும் மங்கு இதற்கு உதாரணம்.


பரம்பரையாகத் தொடரும் சரும நோய் வகையை விட்டிலிகோ என்று கூறுகிறோம். உதடு, பாதங்கள், கைகளில், பிறப்பு உறுப்புகளில் தொடங்கி அது பரவ ஆரம்பிக்கும். ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வகை லியூக்கோடெர்மா. இரப்பர் பொருள்கள், தீக்காயங்கள், இரசாயனப் பொருள்கள், எக்சிமா, சோரியாசிஸ் போன்ற நோய்களால் இது ஏற்படுகிறது. பெரும்பாலும் லியூக்கோ டெர்மாவிலிருந்து மட்டும் குணம் பெற முடியும் என்று நினைக்கின்றனர். அற்புத ஹோமியோ மருந்துகளால் விட்டிலிகோ குணமாகும். கரும்புள்ளிகளையும் குணப்படுத்தலாம்.

முடியுதிர் தலையும், வழுக்கையையும் உள்சாப்பிடும் மருந்துகளால் குணப்படுத்த லாம். இளநரைக்கும் மருந்துகள் பயன்படும்.

முகப்பருக்களுக்குக் களிம்புகள் சிபாரிசு செய்யப்படுவதில்லை. மாறாக உடல் ஊக்கிகளை சீர்ப்படுத்துவதன் மூலமாக நிரந்தர தீர்வு காணமுடிகிறது.

ஹோமியோபதி சிகிச்சையில் இவைகளுக்கு முழு விமோசனமே கிடைக்கிறது.

• சரும வியாதிகளுக்கு சிகிச்சை....



கருப்பை புற்று பூரண குணம்

Mrs. சீரங்கம்மாள் (வயது 56) காமனாம்பட்டி, திருச்சி-13. இவருக்கு கருப்பையில் புற்று நோய் ஏற்பட்டு இரத்தம், சீழ் ஒழுக்குடன் மிகவும் துன்பப்பட்டு வந்தார். எமது குரு மருந்து சிகிச்சையில் குணமடைந்து 3 மாதமாக நலமுடன் இருக்கிறார். எந்த வயதிலும் நீடித்த வெள்ளைபோக்கு, கருப்பை புண்கள் (Cervical Erosion, Cervicities) பலருக்கு புற்று நோயாக மாறி விடுகிறது. இதில் பெண்கள் அலட்சியம் கூடாது. கருப்பை மார்பக புற்று, மூளை கட்டிகள் இரத்தப் புற்று (Leukemia), தொண்டை, கன்னம், கல்லீரம், இரைப்பை உள்பட எல்லா புற்று நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கிறோம். 20-40 நாளில் முன்னேற்றம் தெரியும்!

கருப்பை நோய்கள்/மாதவிடாய் கோளாறா?

குழந்தை இல்லாதோர் பிரச்சினைகள்

13 ஆண்டுக்கு பிறகு குழந்தைபேறு: திருமதி. கனி (வயது 38) பெரியார் நகர், ஈரோடு, பெரியார் Dt.. 13 ஆண்டுகள் பலவிதமான சிகிச்சைகளிலும் பலனின்றி வெறுத்துப் போன நிலையில் எமது குரு மருந்து சிகிச்சைக்கு பின் தாய்மை அடைந்துள்ளார். இதுபோல் மாதம்தோறும் பலனடைவோர் அநேகர். 1) ஆர்மோன் ஒழுங்கீனம் காரணமாக தாறுமாறான, கறுப்பான கட்டிகளாக அதிகமான ரத்தப்போக்கு. 2) கருக்கோளங்களில் கட்டிகள் - PCOD (Poly Cystic Ovarian Diseases) 70% பேரின் முக்கிய பிரச்சனை இதுதான்! இதனால் மாதவிடாய் நாட்கணக்கின்படி வருவதில்லை. முட்டை (Follicle) உற்பத்தி தடைபட்டு மாத்திரை சாப்பிட்டால் மட்டுமே மாதவிலக்கு ஏற்படுவது இல்லாவிட்டால் 2 - 3 மாதம் ஆனாலும் வருவதில்லை. சிலருக்கு 13 - 14 வயதிலேயே இந்தப் பிரச்சினை ஆரம்பித்து விடுகிறது 3) கருப்பையினுள் கட்டிகள் புண்கள் (Fibroid Polyp. Cyst, Endometriosis, Cervicitis) குழந்தை பெறுமுன்பேகூட பல பெண்களுக்கு கட்டிக்காக கருப்பையை எடுத்துவிட வேண்டிய நிர்ப்பந்தம். 4) கருக்குழலில் அடைப்புகள்- (Fallopian Tube Block) இதற்கு ஆபரேஷன் செய்வதால் கருக்குழலே சேதமடையும் வாய்ப்பு அதிகம். 5) 3-வது, 4-வது மாதத்தில் தொடர்ந்து கருச்சிதைவு (Missed Abortion) கருப்பை கோளாறுகளுக்கும், குழந்தை இல்லாத குறைபாடுகளுக்கும் பொதுவாக ஒருசில ஆர்மோன் மருந்துகளே பல பெயரில் வேறு வேறு டாக்டர்களால் வேறு வேறு மருந்துகள் போல தரப்படுகின்றன. ஓரிருமுறை சாப்பிட்டு பலனின்றியும் அதையே பல ஆண்டுகள் சாப்பிடுவதால் எளிதில் கருத்தரிக்கும் இளம் வயதுதான் வீணாகிறது என்பதை பலர் உணரவில்லை.

உயிரணு இல்லாத ஆண்கள்: (Azoospermia) ஆண்களின் குறைபாடுகளில் மிகவும் சிக்கலானதும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்தல் இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு வெற்றிகரமான சிகிச்சை எம்மிடம் உண்டு. 5-6 மில்லியன் உள்ளவர்கள் பலர் பல மாத்திரை, ஊசி மருந்து எடுத்தும் தற்காலிகமாக அதிகமாகி 3 மாதம் கழித்து சோதித்தால் முன் உள்ளதும் இல்லாமல் போனவர்களும் பலர் உண்டு. இவர்கள் நல்ல பலன் காணலாம்.மற்ற எந்த மருந்தினாலும் 1 ஆண்டில் கிடைக்கும் பலனை எமது சிகிச்சையில் ஒரு சில மாதங்களிலேயே காணலாம்! உடலை வாட்டும் கடும் பத்தியம் இல்லை. எமது சிகிச்சையில் 90% பேருக்கு ஆண் குழந்தைகளே பிறந்துள்ளன. குழந்தை இல்லாதவர்களுக்கென்றே 180 ஆண்டு பரம்பரை அனுபவம் பெற்றது.

கருப்பை கட்டி: பிரபாதேவி- (வயது 34) வங்கி ஊழியர், மகாலிங்கபுரம், சென்னை. இவருக்கு கருப்பையினுள் 3.5 செ.மீ. அளவு கட்டி (Fibroid) இருந்தது. இதனால் திருமணம் தடைப்பட்டது. எமது குரு மருந்தின் மகிமையால் இக்கட்டி முழுமையாக கரைந்துவிட்டது. **10 ஆண்டு ரத்தப் போக்கு:** செல்வி. வித்யா (வயது 22) (வங்கி ஊழியர்) இவருக்கு பருவடைந்த 12 வயது முதலே மாதம் முழுவதும் இருந்த ரத்தப் போக்கை நிறுத்த தொடர்ந்து கருத்தடை மாத்திரையே (21 நாள்) சாப்பிட்டு வந்தார். இந்த 10 ஆண்டு நோய் எமது சிகிச்சையில் குணமாகி வீணாய்ப் போக இருந்த திருமண வாழ்க்கை பிழைத்தது. 15-20 நாட்கள் நிறுத்த முடியாத எந்தவித ரத்தப்போக்கையும் எமது மருந்தினால் குணப்படுத்தலாம்.

குழந்தை இல்லாமை / கருப்பை நோய் / புற்று நோய் பற்றிய விளக்கமான எமது பேட்டி 1 & 8-2-97 மாலை சன் டி.வியில் ஒளிபரப்பானது.



Dr. S. JEYARAM,
M.A., M.A., M.D. (A.M.), RMP

நவோதயா சித்தர் மருத்துவமனை

20, ஆற்காடு ரோடு (மாடியில்)
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
(லிபர்டி பஸ் ஸ்டாப் / சேகர் எம்போரியம் அருகில்)
போன் : 044-4810752 / 044-8551258 (வீடு)
பெண் மருத்துவர் உண்டு. முன்பதிவு பெற்று வரவும்.

பெண்கள் மார்பக கட்டி

பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ ஒருவித கட்டி (Fibro Adenoma) வருவதுண்டு. இதற்கு நவீன மருத்துவத்தில் இதுவரை மருந்து இல்லை. பலமுறை ஆபரேஷன் செய்த பின்பும் கட்டி வளர்ந்து பலர் எம்மிடம் சிகிச்சை பெறுகிறார்கள். எமது சிகிச்சையில் எளிதாக குணம் பெறலாம். பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.


பலர் ஆண்டுக்கணக்கில் வேறு மருந்து சாப்பிட்டும் குணமில்லை என்று வருகிறார்கள். எமது 3 மாத குரு மருந்து சிகிச்சையில் இது குணம் தெரிவதை காணலாம்.

ஆலோசனை நேரம் : காலை 10 முதல் 2 மணி வரை, மாலை 4 முதல் 8.30 மணி வரை, ஞாயிறு காலை மட்டும்

மார்ச் 17-ந் தேதி, டாக்டரை திருச்சி-1, ஜங்ஷன் ரோடு, திருவள்ளுவர் பஸ் நிலையம் அருகில், ஹோட்டல் அஜந்தாவில் சந்திக்கலாம். போன்: 460501.

மார்ச் 18-ந் தேதி, கோவை, R.S.புரம், 5, பெரியசாமி ரோடு கிழக்கு, பிருந்தாவன் லாட்ஜில் டாக்டரை சந்திக்க. முன் பதிவுக்கு அகஸ்தியர் பீடம். போன்: 452235 (P.P.) (10 a.m. to 4 p.m.)

1 நிமிஷம் நின்று பேசுங்கள்!



மாறிவிடுகின்ற முதியவர்கள் - பற்றிப் படித்துக் கொண்டு வருகிறோம். இதில் 40 - 50 வயதுகளில் இருப்போருக்கும், முதியவர்களுக்கும் சென்னை அரசு பொது மருத்துவமனையின் மூப்பியல் துறையின் மருத்துவரான டாக்டர் திரு. நடராஜன் அவர்கள் சொல்வதைக் கேட்கலாமா?

"இன்று போட்டியான உலகம். பொருளாதார நெருக்கடி இல்லாத இடமேயில்லை. இன்றைய சூழ்நிலையில் கணவன் மனைவியிருவருமே சம்பாதித்தால்தான் குடும்பம் நடக்குமென்ற நிலை! இருக்குமிடப் பிரச்னை மிகப் பெரிய பிரச்னை. எத்தனை பெரிய குடும்பமென்றாலும் ஒரு சில சிறு சதுர அடிகளுக்குள் முடங்கிக் கொள்ள வேண்டிய நிலை.

40 - 50 வயதில் இருப்பவர்களுக்கு இன்று தங்களின் உடல் நோயையும், பலவீனத்தையும் மறந்து சம்பாதிக்க ஓட வேண்டிய கட்டாயம். எதையுமே மறந்து ஓட வேண்டிய நிலையில் இருக்கும் அவர்களால் வீட்டிலிருக்கும் அவர்களைப் பெற்ற முதியவர்களை நினைக்க ஏது நேரம்? இது நிச்சயம் புறக்கணிப்பு என்று பொருளில்லை. நேரமின்மை அவ்வளவுதான்!

அதே போல நிதிவசதி. கையிலிருக்கும் பணத்திற்கு ஏற்பதான் முதியவர்களின் தேவைகளுக்கான இடம். இது அநேகமாக கடைசியாகத் தள்ளப்படுகிறது. ஒரு சாதாரண சம்பாத்தியமுள்ள ஒரு நடுத்தர வயது மனிதனின் அம்மாவும், அவர் பெற்ற மகனும் ஒரே நேரத்தில் பார்வைக் கோளாறுக்கான கண்ணாடி கேட்டால் அவர் கையிலிருக்கும் பணத்துக்கு யாருக்கு முதலில் வாங்கித் தருவார்? வளர்ந்து வரும் தலைமுறையைச் சார்ந்த அவர் மகனுக்குத் தானே? வீட்டிலிருக்கும் தாய்க்கு 2-ம் இடம் தான். வாங்கித் தர வேண்டாம் என்ற எண்ணம் அவருக்கு இல்லை. ஆனால் கையில் உள்ள நிதி நிலை?

வசதியிருந்தும் கூட வேண்டுமென்றே பெற்றவர்களை கடை நிலைக்குத் தள்ளு வோரும் உண்டு. இதனாலேயே தலைமுறை இடைவெளிகளால் வரும் சண்டைச் சச்சர வுகள், குழப்பங்கள். மகனுக்குப் பெற்றவர் களிடம் பாசமில்லாமல் இல்லை; நேரம்தான் இல்லை. இதை அவரைப் பெற்றவர்கள் புரிந்து கொண்டால் அங்கே பிரச்னை ஏது?

முதியவர்களுக்கு அவர்களுடைய பிள்ளைகள் தரும் எத்தனை பெரிய வசதிகளையும் விட அவர் எதிர் பார்ப்பது அன்பும், பாசமும்தான். ஒரு நாள் பட்டினியே போட்டாலும் கூடப் பரவாயில்லை. தினமும் இரண்டு நிமிடம் நின்று பேசினால் போதும். அதில் அவர்கள் பெறும் மனமகிழ்ச்சியும் நிறைவும் அளவிட முடியாதது. தினமும் காலை வெளியே செல்லுமுன்பும், மாலை திரும்பி வந்த பின்பும் ஓரிரு நிமிடம் நின்று பேசினால் போதும் (இரண்டு முறை முடிய வில்லை என்றால் தினமும் ஒருமுறை யாவது கண்டிப்பாகப் பேச வேண்டும்).

வீடுகளில் எத்தனையோ பிரச்னைகள் வருகின்றன. இவைகளுக்கு என்ன முடிவெடுக்கலாம் என்று பெரியவர்களிடம் யோசனை கேளுங்கள். அவர்கள் சொல்லும் கருத்துக்களை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர் களா இல்லையா என்பது பொருட்டல்ல. அவர்களிடம் சென்று குடும்பப் பிரச்னை களை கலந்தாலோசிப்பதே அவர்களுக்கு மன நிறைவு தரும். குடும்பத்திலிருந்து



தோசைக்கு அரைத்த மாவை உப்பு போடாமல் எடுத்து வைத்தால் சீக்கிரத்தில் புளிக்காது. தோசை வார்க்கும் போது உப்பு போடலாம்.

— ஜெயா

தாங்கள் ஒதுக்கப்படவில்லை என்பது அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியான ஒன்று! தங்களைப் பெற்ற முதியவர்கள் காலமான பின்பு வெகுவிமரிசையாக அவர்களின் நினைவுகளை (திதி, திவசம்) நிறைவு செய்வோரில் எத்தனை பேர் அந்தப் பெரியவர்கள் உயிருடன் இருக்கும் போது அவர்களின் பிறந்த நாள், திருமண நாள் போன்ற விசேட நாட்களில் ஏதாவது பரிசு கொடுத்துக் கொண்டாடியிருக்கின்றனர்?

வயதானவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு எதிர்ப் பார்ப்புகள் எப்போதுமே அதிகம். அவர்களின் ஏமாற்றங்களுக்கும், வருத்தங்களுக்கும் இந்த எதிர்ப்பார்ப்புகள்தான் அடிப்படை காரணம். அந்தக் காலத்தில் இவர்கள் அடங்கியிருந்ததைப் போல தங்கள் மக்களும் தங்களிடம் இருக்க வேண்டும், எதிலும் தங்களுக்கு முதலிடம் வேண்டும் என்பன போன்ற எதிர்ப்பார்ப்புகள்.

முதியவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பு தரும் ஒரே விஷயம் பணம்தான். அவர்களின் சேமிப்புக்களை, சொத்துக்களை, தங்களின் கடைசி காலம் வரை தங்களிடமே வைத்துக் கொள்ள வேண்டும். பணமிருந்தால் சொந்த பந்தங்களும் அவர்களைத் தொடர்ந்து வரும். பெரியவர்களிடமுள்ள அடுத்த குறை புரிந்து கொள்ளாமை. எதையுமே புரிந்து கொள்ளாமலேயே செயல்படுகின்றனர். கையிலிருக்கும் பணம் காசினை பெற்ற குழந்தைகளுக்கு மற்றவர்களுக்கோ எழுதிக் கொடுப்பதும் புரியாமையினால்தான். மகன்/மகளின் நிதி நிலைமை, நேரமின்மை புரியாமலேயேதான் அனாவசியமான பிரச்னைகளை உருவாக்குகின்றனர். வருமானம் ஏதுமில்லை, சொத்துக்களும் ஏதுமில்லை என்ற நிலையில் அதிகமான தாழ்வு மனப்பான்மை சிறிய ஒரு விஷயத்தையும் பெரிய பிரச்னையாக்கி விடுவது, எப்போதுமிருக்கும் நோய்களுடன் இல்லாத நோய்களையும் சேர்த்து பெரிய தாக்கி 'என்னால் தாங்க முடியலே! மார்பு படபடவென்கிறது' - என்போரே அதிகம்!

இங்கு நோயுற்ற பெரியவர்களை நினைவற்ற நிலையில் கொண்டு வந்து 'அட்மிட்' செய்யும் அவர்களின் பேரன், பேத்திகள் அவர்களிடம் பணம் சொத்து என ஏதாவது இருந்தால்தான் அவர்களை அருகிலேயே இருந்து கவனிக்கின்றனர். அப்படி ஏதும் இல்லாத நிலை என்றால் 'இந்தப் பாட்டி எங்கள் தெருவில் அனாதையாகயிருந்தவர்' என்று சேர்த்து விட்டுத் திரும்பிப் பார்க்காமல் சென்று விடுகின்றனர். உடல்நிலை தேறி, நினைவும் வந்த நிலையில் அந்த முதியவர்களே தரும் முகவரியில் எங்களின் ஊழியர்கள் அவர்களை அழைத்துச் சென்றால் அவர்களை ஏற்று வீட்டிற்குள் அழைத்துச் செல்பவர்கள் வெகு சிலரே. பெரும்பாலோர் அவர்களை மீண்டும் வீட்டிற்குள் சேர்த்துக் கொள்வதை விரும்புவதில்லை. இது வருந்தத் தக்க ஒன்று. அவர்களை சென்னையிலுள்ள ஏதாவது ஒரு முதியவர் இல்லத்தில் சேர்த்து விடுகிறோம். அவர்களை வீதியில் ஒரு போதும் விடுவதில்லை. வயதான அவர்கள் இன்று சுமையாகத் தெரியலாம். ஆனால் அவர்களின் சேவை அந்தக் குடும்பத்துக்கு வெகுவாக தேவைப்பட்ட காலமும் ஒன்று இருந்திருக்குமே! அதை எண்ணியாவது அவர்களை அவர்களின் கடைசி காலம்வரை வைத்திருக்க வேண்டும். தவறுகள் எந்த பக்கமிருந்தாலும் மனிதாபிமான நடவடிக்கையுடன் செயல்பட வேண்டும்."

வசதியும், நிரந்தர வருமானமும் உள்ள மகன்/மகள் தன் வயதான பெற்றோரை கவனியாது விட்டு விட்டால் அவர்கள் தங்களின் அன்றாட தேவைகளுக்காக ஜீவனாம்சம் கோரி கோர்ட்டுக்குப் போய் வழக்காடும் உரிமையை இந்தியன் பீனல் கோடு தருகிறது.

வயதான பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் போது அவர்களின் பிள்ளை இறந்து போனால் - இறந்தவர்கள் விட்டுச் செல்லும் சொத்துக்களில் அந்த வயதான பெற்றவர்களுக்கும் சம உரிமை உண்டு. இறந்தவர் விட்டுச் செல்லும் சொத்துக்களுக்கு சட்டப்படி அவர்களும் வாரிசுகள் தான்! பெற்ற பிள்ளைகளை இழந்தாலும் உறவை இழந்தாலும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அமைந்துள்ளதுதான் நமது சட்டம்.

பேட்டி : **வைதேகி தேசிகன்**

• 'ரோல்ஸ்' (விளக்கம் - 3)

நேரத்திற்கும் இடத்திற்கும் தகுந்த தலையலங்காரங்கள் சில : 5

நீண்ட தலைமுடியை விரும்பாதவர்களே கிடையாது. அது ஒரு தனி அழகுதான். தற்போது, பராமரிப்பது கடினம் என்று சிலர் நீளத்தைக் குறைக்க விரும்பினாலும், அடர்த்தியை பாதுகாக்க விரும்புகின்றனர். முடி நீளமாக இருந்தாலும், குட்டையாக இருந்தாலும் அதற்கு ஏற்ற அலங்காரம் செய்து பார்க்கும் போது ஒரு தனி அழகு கூடத்தான் செய்கிறது. எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரி தலையலங்காரம் எடுபடாது. ஒவ்வொரு முறையும் ப்யூட்டி பார்லரைத் தேடி அலைய நேரமில்லையே என்ற குறை பல பெண்களுக்கு இருக்கும். சில எளிய ஹேர்-ஸ்டைல்களை இங்கே நீங்கள் காணலாம். இதில் சிலவற்றை நீங்களாகவும் செய்து கொள்ளலாம்.


1


2


3

1 • ப்ரெஞ்ச் ப்ளாட்




2

1. நீண்ட முடி அழகுதான். ஆனால் இதை வாரி பலவித அலங்காரங்கள் செய்வது என்பது சற்று கடினம். உதாரணத்திற்கு நீண்ட முடியுள்ள மணப் பெண்ணுக்கு ரிசப்ஷனுக்குக் கொண்டை போட்டால், முகத்தின் அளவைவிட அது பெரியதாகி விடும். இப்பொழுது அறிமுகமாகியுள்ள Double

• ப்ரெஞ்ச் ரோல்

side French Plait என்ற தலையலங்காரம் நீண்ட முடியுள்ளவர் களுக்கு நன்கு பொருந்தும். தலையின் இருபுறமும் French Plait ஐ போட்டு, பிறகு இரண்டையும் சேர்த்து அதன்பின் தங்க நிற லேசுகள், மணிகள் வைத்து அலங்கரிக்கலாம். அழகாக, ஆடம்பரமாகயிருக்கும். ஆனால் 'காடி'யாக இருக்காது. இதை பார்ட்டிகளுக்கு செல்லும் போதும் போட்டுக் கொள்ளலாம்.

2. தோளை விட சிறிதளவு நீண்ட முடி உடையவர் களுக்கு நன்கு பொருந்தக் கூடிய ஹேர் ஸ்டைல்தான்

நிமிடத்தில்

3







அலங்காரம்!

பிரஞ்ச் ரோல் (French Roll) கூந்தலை காதுக்கு இரு பக்கத்திலிருந்தும் எடுத்துச் சேர்த்து பிச்சோடா போல சுற்றி ஒரு 'முடி' அல்ல Knot போட்டுக் கொள்ள வேண் டும். (குளிக்கப் போகும்போது போட்டுக் கொள்வோமே அந்த மாதிரி!) பிறகு கீழ்பாக முடியினைச் சுற்றி ஒரு side roll போட வேண்டும். இது இரண்டே நிமிடங்களில் போடக்கூடிய hairstyle. இதை பார்ட்டிகள், கல்யாணம்



1

• ஹேங்கிங் கர்ல்ஸ்




2

போன்ற நிகழ்ச்சிகளுக்கு அணிந்து சென்றால் அழகாக இருக்கும். மணப்பெண் தோழிகளும் இது போன்ற ஹேர் ஸ்டைல் செய்து கொண்டால், பொருத்தமாக இருக்கும். இதிலும் மணிகள் வைத்து அலங்காரம் செய்யலாம். வயது வரம்பு என்பது இந்த ஹேர் ஸ்டைலுக்குக் கிடையாது.

3. அடர்த்தி அதிகமில்லாத முடி உடையவர்களுக்கு இருக்கும் தலைமுடியில், மேல்புறம் பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றையுமே கீழிருந்து சுற்றி 'ரோல்ஸ்' போட்டு கிளிப் குத்த வேண்டும். பிறகு கீழே இதற்கென விற்கும் இணைப்புகளை வாங்கி லூசாகவோ, பின்னலாகவோ, அல்லது கொண்டை போலவோ இணைத்துக் கொண்டு பெரிய ஹேர் ஸ்டைலாகக் காண்பிக்க முடியும். இந்த இணைப்புகள் முடியின் பல நிறங்களில் கிடைப்பதால், அவரவர் முடியின் நிறத்திற்கு ஏற்ப இவைகளை வைத்துக் கொள்ளலாம். இதன் மேல் அலங்கார பூக்களையும், முத்துக்களையும் வைக்கலாம்.

4. இப்பொழுதெல்லாம் நிறைய பெண்கள் முடியை பேஷனாக வெட்டிக் கொள்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் ஹேர் ஸ்டைல் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசை வரும். கவலைப் படாதீர்கள். குட்டையான அந்த முடியையே பல பகுதிகளாகப் பிரித்துக் கையால் சுற்றி, 'ரோல்' செய்து 'ஸ்ப்ரே' செய்து கிளிப் (கண்ணுக்குத் தெரியாத வகையில் இன்விசிபின் கிளிப்கள் கிடைக்கின்றன.) செருகிவிட்டால் போதும். மிகவும் நவீனமான "Hanging Curls" உடன் அவர்கள் வெளியே செல்லத் தயார். இதனுடன் மேல் பாகத்திற்கு "ப்னேட்பன்" என்ற அடாச்மெண்ட் வாங்கி இணைத்துக் கொள்ளலாம். மிக நவீனமாக அழகாக இருக்கும். வேலை படு சுலபம்.

5. மண நாளன்று பெண்ணுக்குக் கனமான ஜடை இணைத்து அவளை நிமிர முடியாமல் செய்து விடுகின்றனர். ஆனால் தற் போது மிகவும் குறைந்த எடையில் விற்கும் நெட்டி, முத்து போன்ற வைகளாலான ஜடைகளை வாங்கி பின்ன



• மணப்பெண் தலையலங்காரம்

லுடன் கலபமாக இணைத்துக் கொள்ளலாம். வேலை, நேரம் இரண்டுமே குறைவதுடன், கழுத்து வலியும் வராது.

"பொதுவாகவே எல்லா தலை யலங்காரங் களுக்குமே நன்கு ஷாம்பூ செய்து கொள்ள வேண்டும். 'பேக் கோம்ப்' எனப்படும் தலை முடியை எதிர்ப்பக்கமாக வாரிவிடும் முறை யால் மெலிந்த கூந்தலும், பஃப்பெனத் தெரியும். இவற்றால் 'ரோல்ஸ்' செய்யும் போது பெரிதாக இருக்கும். ஆனால் அடிக்கடி 'பேக் கோம்ப்' செய்வது நல்லதல்ல. நான் இங்கே செய்து காட்டியிருப்பது எல்லாமே பேக்கோம்ப் செய்யாமல்தான்'' என்கிறார் 'தி விஸிபின் டிஃபரன்ஸ்' எனும் ப்யூட்டி பார்லரை தி. நகர் வித்யோதயா எதிர் தெருவில் நடத்தி (தொ. பே. 8254079) வரும் வசுந்தரா.

"தலையலங்காரங்கள் முதலில் பார்க்க மலைப்பாக இருக்குமே தவிர போடப்போட வெகு சீக்கிரம் பழகிவிடும். நான் இங்கு கூறி யுள்ள ஹேர் ஸ்டைல்ஸ் எல்லாமே மூன்றி லிருந்து ஐந்து நிமிடங்களுக்குள் போட்டுக் கொண்டு விடலாம்.

அதே போல இப்போது கூந்தலுடன் இணைத்துக் கொள்ள நவீனமான அடாச் மெண்ட்ஸ் நிறைய வந்திருக்கிறது. அவற்றை வாங்கிப் பயன்படுத்திக் கொள்ளலாம். நம் வேலை இன்னும் கலபமாகிவிடும்'' என்கிறார் இவர்.

அட்டையில் : **வசுந்தரா**
படங்கள் : **ஜி. சுரேஷ்**

அடேடே அரிசி உப்புமா!

இன்னும் சில குறிப்புகள்:

☞ ப. மிளகாய் 2-ம், வற்றல் மிளகாய் 2-ம் தாளித்தால் உப்புமா மணமாக இருக்கும்.

☞ தாளித்து தண்ணீர் விட்டதும் அதில் 1 கப் பால் (அ) 1 கப் மோர் விட்டு கொதிக்க விட்டு பின் உப்புமா கிளறினால் உப்புமா வெளுப்பாக இருக்கும்.

☞ உப்புமா கிளறி முடிக்கும் போது 2 ஸ்பூன் தே. எண்ணெய், 2 ஸ்பூன் நெய் விட்டுக் கிளறி இறக்கினால் ருசியோ ருசி. வாசனை வீட்டைத் தூக்கும்.

☞ சலித்த அரிசி உடைசலில் 4 ஸ்பூன் தே. எண்ணெய் விட்டு பிசிறி கொதிக் கும் தாளித்த தண்ணீரில் போட்டால் ஒரு கட்டிக் கூட ஏற்படாது.

☞ உப்புமா தண்ணீர் கொதிக்கும் போது உப்பு போட்டு ஒரு சிட்டிகை சர்க்கரையும் சேர்த்து உப்புமா கிளறினால் சுவை கூடும்.

☞ இந்த உப்புமா வெண்கலப் பானையில் கிளற வேண்டும். கிளறி மூடி 10 - 15 நிமிடம் கழித்து சாப்பிட்டால் வெண் கலப்பானை சூட்டில் மேலும் வெந்து சுவையாய்



[redacted]


'நான் எடுத்த நல்ல முடிவு'
''ஹலோ ! ஒரு முக்கியமான விஷயம் சொல்றேன் கேளுங்க . . . நான் வந்து என் வீட்டுல ஒரு மாசத்துக்கு நாலு கிலோ கடலெண்ணெய் வாங்கிட்டு இருந்தேன். இப்ப கே.கே.ஆர். பாமாயில் வந்தப் புறம் அதையும் நாலு கிலோ வாங்கினேன். ஆனால் அதிலே ஒரு கிலோ மீந்திடுச்சி. ஏன்னா இந்த எண்ணெய் ஆண்டுவருது ... அதனால எனக்குப் பணமும் நிறைய மிச்சமாகுது. சமையலும் ரொம்ப நல்ல டேஸ்ட்டா இருக்கு... இனி மேல என் வீட்டிலே எப்பவுமே கே.கே.ஆர். பாமாயில் தான் . . . ஹலோ . . . உங்க வீட்டுல எப்படி ?''
M. சௌந்திரவள்ளி
டெலிபோன் ஆப்பரேட்டர்
KKR
இந்தியாவின் முதல் முத்திரைப் பெற்ற பாமாயில்.
K.K.R.
KKR
பாம் ஆயில் (இந்தியா) லிட்.,
126, Dr. ராதாகிருஷ்ணன் சாலை,
மைலாப்பூர், சென்னை - 600 004.
Ph: 8548393, 8548394, 8548395.
கே.கே.ஆர். பாமாயில் -
தாய்மை மற்றும் முழு குடும்பத்தின் ஆரோக்கியம்.
ADEPT/KKR/P/97





AN APPEAL

With the Blessings of Sri Sri Krishna Premi Swamigal, we are running a Vedic School (Vedapatasalai) with 20 students for the past 6 years, with the help of donation from General Public and also with the help of 'Kanchi Paramacharya's PIDI ARISI THITTAM.

Approximately we require Rs. 500/- per day.

We request the Asthikas donate generally to develop the school.

Donation exempted under 80-G of Income Tax Department.

Managing Trustee, Sri SATHGURU SABHA (Regd) No. 31, Subramanian Street, West Mambalam, Chennai - 600 033. Ph : 4890918

ADMISSION NOTIFICATION

नेशनल इंसटीटयूट आफ लबर एजकेशन & मेनेजमन्ट

NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT (NILEM)


Offers the following six months Diploma Course by Correspondence

DIPLOMA IN TOTAL QUALITY MGMT. & ISO 9000
DIPLOMA IN BUSINESS MANAGEMENT
DIPLOMA IN PERSONNEL MGMT. & INDUSTRIAL RELATIONS
DIPLOMA IN HUMAN RESOURCES DEVELOPMENT
DIPLOMA IN ENVIRONMENT & POLLUTION CONTROL
DIPLOMA IN BUSINESS ADMINISTRATION
DIPLOMA IN QUALITY CONTROL & ISO 9000
DIPLOMA IN INDUSTRIAL SAFETY
DIPLOMA IN QUALITY ASSURANCE & ISO 9000
DIPLOMA IN LABOUR WELFARE
DIPLOMA IN SALES & MARKETING MANAGEMENT
DIPLOMA IN FINANCIAL MANAGEMENT
DIPLOMA IN OFFICE ADMINISTRATION
DIPLOMA IN LABOUR LAWS
DIPLOMA IN INDUSTRIAL LAW

No formal qualification is required for joining the courses. Each diploma has 4 written papers. Enrolment Fee Rs. 50/-. Tuition Fee Rs. 600/- (including Study Materials & Model Question Papers) Postage Fee Rs. 50/-. Examination will be conducted in all major centres in India. For detailed Prospectus & Application Form send Rs. 30/- by D.D./M.O./I.P.O/ in favour of **NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT** and apply to NILEM No. 59, Second Street, Parameswari Nagar, Adyar, Chennai - 600 020. Ph : 044-4911443. Fax : 044-4915197

என்ன கோர்ஸ், எங்கு பழக்கலாம்?

சமீபகாலமாக நமது நாட்டில், ஆடை உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இமாலய பெருக்கமும், (boon) விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. பெருமளவில் நமக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தர நமது நாட்டிலுள்ள அநேக ஆலைகளும் (power, Handloom) நமது கலாசாரத்தை வெளிப்படுத்தும் பல்வகைப்பட்ட நெசவுகளும், விதம் விதமான நாகரிகத்தில் ஆடைகளை உருவாக்கும் Fashion Technology யும், ஆடைகளை ஏற்றுமதி செய்ய உதவியாக உள்ளன. இந்தியாவின் Textile Ministry இதற்குள்ள வாய்ப்புகளை அதிகப்படுத்த பெரிய நகரங்களில் Garment Management Technology யையும் Design Technology Course களையும் அறிமுகப்படுத்தி நல்ல வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கிறது. National Institute of Fashion Technology (Ministry of Textiles, Govt. of India) கீழ் கண்ட Course களை வழங்குகிறது.



Group A : Post graduate (management Cum Technology) Diploma Course. (2 yrs.). Eligibility : graduate with 50% marks.

இது Garment Manufacturing Technology (G.M.T.) Apparel Marketing and Merchandi sing (A.M.M.) முதலியவை அடங்கியது.

Group B : Post graduate (Design Cum Technology) Diploma Course (2 yrs.) Eligibility: graduate pass.

இந்த Course knit wear Design and Technology (KDT)

Textile Design and Development (TDT)

Leather Garment Design and Technology (LGDT)

முதலியவை அடங்கியது.

Group C : Under graduate (Design Cum Technology) Diploma Course இதில் Fashion Design (FD) யும் Accessory Design (AD) யும் அடங்கியது Eligibility : 12th (10 + 2) Pass.

இந்தக் Course களின் medium of instruction English.

இந்த Course ன் அட்மிஷனுக்காக ஒவ்வொரு வருஷமும் அக்டோபர் மாதத்திற்கு மேல் கீழ் கொடுக்கப்பட்டுள்ள NIFT சென்டரிலிருந்து அப்ளிக்கேஷன் பெறலாம். How to apply:

Application form with prospectus for NIFT Admission is available at the centres mentioned below on payment of Rs. 50/- in cash or by Demand Draft payable in favour of NIFT. The desirous candidate may submit the duly filled

application form along with a demand draft of Rs. 400/- (Rs. 200/- in case of SC/ST and physically handicapped candidates) in favour of registrar, NIFT, payable at New Delhi (before the last date mentioned).

NIFT provides residential accomodation to outstation students on cost sharing basis at each NIFT centre in a Housing Colony. Rs. 6000/- as tuition fees and Rs. 1500/- as Computer education fees is to be deposited at the beginning of each semester (Total 4 semesters) Rs. 200/- as insurance premium and co-curicular activities fees. Rs. 1500/- will be charged as security deposit which will be of refundable nature.

The written entrance examination for Admission to NIFT Programme is held in the month of February.

MUMBAI : NIFT, Tata Mills, Administrative Wing, Opp. Hind Mata Parel, Mumbai - 400 014. Phone : 4165666, 4165668, 4165669.

CALCUTTA : NIFT, Manjusha Bhawan, Karuangan, LA Block, 1B-181, Sector 111, Salt Lake City, Calcutta - 700 091.

GANDHINAGAR : NIFT, NIFT Building, Sector - 25, GIDC Electronic Estate, Gandhi Nagar, (Gujarat) - 382 010. Phone : 30772, 30832, 30834.

HYDERABAD : NIFT, Chenatha Bhavan, Nampally, Hyderabad - 500 001. Phone : 4733936, 4733937,504481.

CHENNAI : NIFT, Co-optex Building, Marketing Area, Pantheon Road, Egmore, Chennai - 600 008. Phone : 8233013, 8233744. Fax : 044 - 8233644.

— *திருமதி எல். ராம சந்திரன்,*
டெல்லி - 92.

நமது இதழில் 'வழிகாட்டிகள்' போட்டியை அறிவித்தது பற்றிப் பெருமிதப்படும் வகையில் நிறைய வாசகிகள் மிகப் பயனுள்ள கல்வி வகுப்புக்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இவற்றைப் பத்திரப்படுத்திக் கொண்டே வாருங்கள். கல்வியாண்டில் பயனுள்ளதாக இருக்கும். மற்றவர்களுக்கும் தரலாமே, வழி காட்டலாமே! (வாசகர்களுக்கு ஒரு வார்த்தை) இது ஒரு வழிகாட்டும் தகவல் பகுதி மட்டுமே. கோர்ஸ் அல்லது கோர்ஸ் நடத்தும் நிறுவனங்களின் நிறை குறைகளை அவரவர்கள்தான் ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். நம் நிறுவனம் அதற்குப் பொறுப்பாகாது. — ஆர்.

The written examination is conducted at Calcutta, Delhi, Gandhinagar (Gujarat), Hyderabad, Chennai, Mumbai, Bangalore, Chandigarh, Guwhati and Lucknow.

It is planned to test the knowledge, skill, ability and aptitude of candidates.

NIFT offers scholarships to those in need of financial assistance. Students interested to avail of this faculty should submit their application with parental income to the Academic Administration Office after the admission.

இந்த Course *மிகவும் பெருமளவில் மாதாந்திர வருமானம் கிடைக்கும் வேலை வாய்ப்புக்கு உதவி செய்யும்.*

National Institute of Fashion Technology (Ministry of Textiles, Govt. of India.)

DELHI : NIFT (National Institute of Fashion Technology) NIFT Campus, Opp. Gulmohar Park, Hauz Khas, New Delhi - 110016. Phone : 6965080, 6965059, 6964771, Fax : 011 - 6851198.

இரண்டாம் பரிசு ரூ. 250/- பெறும் கட்டுரை

MATHEMATIC OLYMPIAD :

Department of Atomic Energy *யின் ஒரு பகுதியாக விளங்கும்* National Board for Higher Mathematics (NBHM) *வருடா வருடம் மாணவர்களுக்குக் கணிதத் தேர்வு நடத்தி ஊக்கத் தொகை அளித்து வருகிறது. இத்தேர்வில் கலந்து கொள்ள +1 படிக்கும் மாணவர்கள் தகுதி பெற்றவர்கள்.*

சில சமயம் 10, 9 - ம் வகுப்பு மாணவர்கள் Junior *பிரிவில் போட்டியிட அனுமதிக்கப்படுவார்கள். இத் தேர்வுக்குக் குறிப்பிட்ட சிலபஸ் கிடையாது. 10- ம் வகுப்பு வரைக்குமான பாடத்தைத் தெளிவாகப் புரிந்து இருக்க வேண்டும்.*

இதில் கேட்கப்படும் கணக்குகள் வழக்கமான கணக்குகளில் இருந்து வேறுபட்டு இருக்கும். மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க NBHM *ஒரு புத்தகத்தை வெளியிட்டு உள்ளது.' மேலும் பல மாத இதழ்களும் உள்ளன.*

ஃபிலிப்ஸ் பவர் ஹவுஸ் வாங்கிய பிறகு, உங்கள் மனதில் ஒரு தனிப்பட்ட இடம் இருக்கலாம், ஃபிலிப்ஸ் சி.டி. பிளேயர் வாங்கும் வரை.





CD165 CD பிளேயர் உங்கள் ஃபிலிப்ஸ் பவர்ஹவுஸை பூர்த்தி செய்ய தேவையானது.

நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பது புது **ஃபிலிப்ஸ் பவர்ஹவுஸ்.** உங்கள் ஒவ்வொரு தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் தயாரிக்கப்பட்ட மியூசிக் சிஸ்டம். உங்களுக்குத் தேவையான போது, ஒரு C.D. பிளேயரை வாங்கவும். இது இணக்கமாக பொருந்தும் வகையில், திட்டமிட்டு தயாரிக்கப் பட்டுள்ளது. இது உங்களுக்குத் தேவையான பவர்களுடனும் வருகின்றது. LCD ஸ்பெக்ட்ரம் அனலைசர்; 5-பாண்ட் கிராஃபிக் ஈக்விலைசர்; ஆடோ ரிவேர்ஸ்; எலெக்ட்ரானிக் சோர்ஸ் செலெக்டர், காரா ஓகே; 4-பாண்ட் ரேடியோ. நீங்கள் இதை வாங்க தயங்கமாட்டீர்கள்.

AW666 உடன் 300W PMPO ரூ. 8245. AW567 உடன் 200W PMPO ரூ. 6345. உள்ளூர் வரிகள் எக்ஸ்ட்ரா.

வாருங்கள், சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவோம்.

PHILIPS

REGIONAL MATHEMATIC OLYMPZAD (RMO) :

முதலில் மாணவர்கள் அவரவர் மாநிலங்களில் நடத்தப்படும் RMO -ல் கலந்து கொள்ள வேண்டும். முதல் முப்பது பேர் அனுமதிக்கப் படுவார்கள். INMO - ல் முதல் 30 ரேங்க் எடுப்பவர்களுக்கு 3 - 4 வாரங்கள் பயிற்சி அளித்து, 6 பேரைத் தேர்வு செய்து International mathematic Olympiad (IMO) - ல் கலந்து கொள்ளச் சொல்வார்கள்.

INDIAN NATIONAL MATHEMATICS OLYMPIAD (INMO) -ல் முதல் முப்பது ரேங்க் எடுத்தவர்களுக்கு +2 முடித்த பிறகு பட்டப் படிப்பில் கணிதத்தை Main Subject ஆக எடுத்துப் படித்தால் மாதம் ரூ. 700/- ம் வருடம் ஒன்றுக்கு புத்தகச் செலவாக ரூ. 1000/- அளிக்கப்படும்.

மேலும் RMO பள்ளி அறிய தமிழகத்தில் RMO - Co-ordinator.

Prof. M.S. Rangachari.
Ramanujan Institute, Chennai University, Chennai - 5.
என்பவரிடத்திலும்
INMO பற்றி அறிய
Prof. A.M. Vaidya, Dept. of Maths, Gujarat University, Ahmedabad - 380 009
என்ற முகவரியிலும் தொடர்பு கொள்ளவும்.

— ஏ. அருண் கிருஷ்ணகுமார், வத்தலகுண்டு.

மூன்றாம் பரிசு ரூ. 100/- பெறும் கட்டுரை

J.N. டாடா படிப்பு உதவித் தொகை

கலை, அறிவியல், தொழில் நுட்பம் படிப்புகளை வெளிநாடுகளில் படிக்க விரும்பும் மாணவர்களுக்குக் கடனாகவும், முழு உதவித் தொகையாகவும் வழங்குவதற்கு டாடா அறக்கட்டளை ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பங்களை வரவேற்கிறது.

தகுதிகள் : தொடர்ந்து நல்ல திறமையுடன் படித்து, பட்டதாரியாக இருத்தல் வேண்டும். சிறந்த படிப்புத் துறை உள்ளவர்களாக இருந்து மேல் படிப்பு சேர விரும்புவோரும் இதில் அடங்குவர்.

சேர்க்கைக்கு முன்னர் உதவித் தொகை, கடன் வழங்குவதற்கு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள். தகுதி உள்ளவர்களுக்கு இறுதித் தேர்வு செய்யப்பட்டு கடன் உதவி வழங்கப் படும். இது சம்பந்தமாக மேலும் விபரங்களை தெரிந்து கொள்ள கீழ் கண்ட முகவரியை அணுகவும்.

The Director, J.N. TATA Endowment, 24, Homi Mody Street, Mumbai - 400 001.

சுற்றுலா மேலாண்மை படிப்பு

புதுவை பல்கலைக் கழகத்தில் முழு நேர இரண்டாண்டு சுற்றுலா மேலாண்மைப் படிப்பு விண்ணப்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் வரவேற்கப்படுகிறது.

படிப்பு : Master of Tourism Administration (MTA)

விண்ணப்பிக்க தகுதி : ஏதாவது பாடப் பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். 100% பணி வாய்ப்பு உண்டு.

ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கைக்குத் தகுதியானவர்களை தேர்ந்தெடுக்க நுழைவுத் தேர்வு நடத்தப்படுகிறது. ஆங்கிலம், பொது அறிவு, நாட்டு நடப்பு பற்றிய வினாக்கள் நுழைவுத் தேர்வில் இடம் பெறும். தேர்வில் தகுதி பெறுவோருக்கு நேர்காணல், குழு விவாதம் நடத்தப் பட்டு இறுதிப் பட்டியல் தயார் செய்யப்படுகிறது.

தேர்வு மையங்கள் : பெங்களூர், சென்னை, ஐதராபாத், புதுச்சேரி, திருவனந்தபுரம்.

மேலும் விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

The Dean, School of Management, Pondicherry University, Pondicherry - 605 014.

— நாகலட்சுமி நாகராஜன், நாமக்கல்.

பஜ்ஜிக்கு சென.சென கத்தரி, வாழை, உருளைக்கிழங்கு அலுத்து விட்டதா? ஒரு மாறுதலுக்கு வெள்ளிக்காயை வில்லையாக நறுக்கி மாவில் தோய்த்து பஜ்ஜி போட ரிக்கங்காய் பஜ்ஜியை விட அதிக ருசியாக இருந்தது. மிருதுவாகவும் லேசான தித்திப்புடனும் பஜ்ஜி அருமை.

— லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்



B.Sc. Rural Technology

காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகத்தில் B.Sc. Rural Technology என்னும் புதியதொரு பாடத்திட்டத்தை U.G.C. முன்னோடித் திட்டமாக, இங்கு செயல்படுத்தி வருகிறது.

இந்த Course -ல் Low Cost Building Technology, Water Management, Solar Energy, ஜாம், சாஸ், ஜூஸ், சர்பத், ரொட்டி தயாரித்தல், பழங்களைப் பதப்படுத்தல் ஆகிய துறைகளில் முழுமையாக பாட அளவிலும், நேரடி செய்முறைப் பயிற்சிகளின் மூலமும் கற்றுத் தரப்படுகிறது. இப்படிப்பை முடித்து பட்டம் பெறுபவர்கள் Holiday Resorts, நட்சத்திர ஓட்டல்கள், கிராம மேம்பாட்டுத் திட்டப் பணிகள் போன்றவற்றிற்கு விரும்பி அழைக்கப்படுகிறார்கள். சுயமாகத் தொழிலில் முனைந்தால், கணிசமாக வருவாய் ஈட்ட முடியும்.

தொடர்புக்கான முகவரி :

Director, Rural Technology Centre, Gandhigram Rural University, Gandhigram - 624 302, Dindugal District.

அஞ்சல் வழியில் இந்தியை இலவசமாகக் கற்றுக்கொள்ள :

மத்திய அரசு, இந்தியை இலவசமாக, தபால் வழியில் கற்றுத் தருகிறது. சான்றிதழ் வகுப்பு, டிப்ளோமா வகுப்பு - என இருவகை படிப்பு நிலைகளில் கற்றுத் தருகிறது.

• தமிழ், ஆங்கிலம், மலையாளம், வங்காளம் ஆகிய மொழிகளில் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

• பயிற்சிக் காலம் - ஓர் ஆண்டு

• பயிற்சியும், பாடங்களும் முழுக்க இலவசம்.

• மத்திய அரசுப் பணிகளுக்கு, இத்தகுதி இருப்பின் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

• குறைந்தபட்சம் 15 வயது நிரம்பியிருந்தால் போதும்.

• கல்வித் தகுதி எதுவும் அவசியமில்லை, பாட விளக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன் இருந்தால் போதுமானது.

பள்ளி செல்வோர், வீட்டிலிருப்பவர்கள், பணியிலிருப்போர் தங்களது ஓய்வு நேரங்களிலேயே இந்தியைக் கற்றுக் கொள்ள அருமையான வாய்ப்பு.

தொடர்பு முகவரி :

Assistant Director (Regional Languages)
Dept. of Correspondence Courses,
Central Hindi Directorate, West Block - VII,
Ramakrishnapuram, New Delhi - 110 066.

— எம். சந்திரா சுந்தரம்,
செங்குறிச்சி அஞ்சல்.

விழித்ததும் கிழித்ததில் பிடித்தது
(காலண்டர் தாளை)

* சமையல் எப்படி இருந்தாலும் பரவாயில்லை
பரிமாறுதல் அன்பாயிருக்க வேண்டும்.

* நாம் பேசுவது விதைப்பதற்குச் சமம்
கேட்பதோ அறுவடைக்குச் சமம்

* வெள்ளாட்டுப் பாலிலிருந்து எடுக்கும் வெண்ணெயும்
மனைவி கொண்டு வரும் ஆஸ்தியும் (வரதட்சணை) வீட்டுக்கு ஆகாது.

— சுலோசனா பார்த்தசாரதி

ஸ்கிரீன் பிரிண்டிங்

குறைந்த முதலீட்டில் பகுதி நேரமாகவோ, ஓய்வு நேரத்திலோ தொழில் செய்வதற்கேற்றது ஸ்கிரீன் பிரிண்டிங். பலநூறு ரூபாய் கட்டணமாகப் பெற்று ஸ்கிரின் பிரிண்டிங் பயிற்சி கொடுக்கும் நிறுவனங்களிடையே இலவசமாக பயிற்சி கற்று தருகிறார் வி.டி. ராம்குமார்.

500 ரூபாய் வைத்தால் போதும் ஸ்கிரீன் பிரிண்டிங் வீட்டிலேயே சொந்தமாக தொழில் தொடங்க வாய்ப்பு உள்ளது. குறைந்த முதலீடு செய்தால் அதிகப் பணம் தரக்கூடிய தொழில் இது.

இந்தப் பயிற்சியினை மூன்றே நாட்களில் மிகத் தெளிவாகக் கற்று தருகிறோம். மேலும் இதில் வரும் சந்தேகங்கள் ஒரு மாதம் (அல்லது) ஒரு வருடம் கழித்து வந்தால் கூட இதில் வரும் நெளிவு சுளிவுகளை முழுமையாகக் கற்றுத் தருகிறோம்.

விசிட்டிங் கார்டு, லெட்டர் பேட், ஸ்டிக்கர் போன்றவற்றினை தயாரிக்க முதலில் சொல்லிக் கொடுக்கிறோம். விருப்பப்பட்டால் அவர்களுக்குத் துணி, தோல், உலோகம் போன்றவற்றின் மீதும் பிரிண்ட் செய்யவும், கற்றுத் தருகிறோம்.

இந்தப் பயிற்சியில் சேர விரும்புவோர் ரூபாய் 50/-யை செலுத்தி விண்ணப்ப பாரத்தை பெற்று பூர்த்தி செய்து கொடுக்கவும். இந்த பணம் விளம்பரத்திற்காகவும், விண்ணப்ப பாரத்திற்காகவும், சான்றிதழ், இதற்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது.

முகவரி :


ஸ்ரீ நவசக்தி டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட், 1, செங்கல்வராயன் தெரு, பெரம்பூர், சென்னை - 11.

நடுக்கம் தீர்த்த நாயகர்!

கு ம்பகோணம் அடிக்கடி போதுண்டு. பட்டீஸ்வர துர்க்கை கண்ணிலேயே நிற்பாள். போய் தரிசித்துக் கிளம்பினால்தான் நிம்மதி. ஆனால் நிறைய பேர் 'திருபுவனம் கோயில் போனதில்லையா, போனதில்லையா, அடடா அடடா' எனச் சொல்லும்போது மனம் 'ஒரு தடவை போகணும்' என நினைத்துக் கொள்ளும். அங்கு குடி கொண்டுள்ள சரபமூர்த்தியின் சரப மந்த்ரத்தின் மகிமையை அனுபவபூர்வமாக ஒருவர் சொல்ல, மற்றொரு வகையில் சரபேஸ்வரரை புகைப்படமாகக் காணும் பேறு கிட்டியபோது இனியும் போகாமல் இருக்க முடியாது எனத் தோன்றிவிட்டது.



• காலையில் கும்பகோணத்தில் கோபுர தரிசனம்



• ஸ்ரீ சரபேஸ்வரர்

கும்பகோணத்திலிருந்து மாயவரம் போகும் வழியில் திருவிடைமருதூர் ரயில் நிலையத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம். ஒன்றுமில்லை, கும்பகோணத்திலிருந்து பதினைந்து நிமிடத்தில் போய் விடலாம். திருபுவனம் எனும் அவ்வூரின் நடுவில் கிழக்குப் பார்த்த கோபுரம். உள்ளே நுழைகிறோம். என்ன பிரம்மாண்டமான கோயில்! ஒவ்வொரு தூணிலும் செதுக்கி செதுக்கிக் கலைநுணுக்கங்கள். பார்த்துப் பார்த்துக் கண் பரவசம் காணுகிறது. கலைக் காடாக

மண்டிக்கிடக்கிறது அங்கே!

"கோயில் மூர்த்தி மிகப் புராதானமானது என்றாலும் இப்படிப் பிரம்மாண்டமாகக் கட்டினது மூன்றாம் குலோத்துங்கன்தான். இக்கோயிலை தஞ்சை பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில்களின் சாயலில் கோபுரங்கள் அமைத்திருக்கிறார்கள். கோபுரம் நாற்சதுரமாக அமைந்திருக்கிறது" என்கிறார் கண்காணிப்பாளர் டி.எம். பாலசுப்ரமணியம்.

கோயிலின் உள்ளே செல்கிறோம். மூலஸ்தானத்தில் கம்பஹரேஸ்வரர் லிங்க வடிவில் ஒளிர்ந்து கொண்டிருக்கிறார். "கம்பஹரேஸ்வரர் என்றால் நடுக்கம் தீர்த்த பெருமான். வடமொழியில் கம்பம் என்றால் நடுக்கம். பூகம்பம் என்று சொல்வோமே.... அதனை நீக்கியவர்



• பெரிய கோயில் போல.....

கம்பகரேஸ்வரர் என்று சொல்லக் கூடாது. ஏனென்றால் அந்த 'ஹ', 'க' மாறுதலால் நடுக்கத்தைத் தருபவர் என்று பொருளே மாறிவிடும்" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி குருக்கள்.

பிரம்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பட்டு வருந்திய வரகுணபாண்டியன் திருவிடைமருதூர் மகாலிங்கேசுவரனைத் தொழுது தோஷம் நீங்கப் பெற்றான். பிரம்மஹத்தி, 'இவன் வெளியே வரட்டும், பிடித்துக் கொள்ளலாம்' என வாசலிலேயே காத்திருக்க இறைவன் உத்தரவுப்படி அம்மன் சந்நிதி வழியாகவே வெளியே வந்து விட்ட பாண்டியனுக்கு இன்னும் நடுக்கம் தீரவில்லை. எங்கே பிரம்மஹத்தி தன்னை மீண்டும் பிடித்துக் கொள்ளுமோ என அஞ்சி திருபுவனம் வந்து இந்த ஈசனைத் தொழுததாகவும், அவன் மனதில் இருந்த பயம் நீங்கியதால், ஈஸ்வரன் நடுக்கம் தீர்த்த பெருமானாக கம்பஹரேஸ்வரராகக் காட்சியளித்தார் எனவும் கூறப்படுகிறது.

திரிபுரவனம் என்பதே திருபுவனம் ஆனது என்றும் சொல்கிறார்கள். அசுவக்ரீவன், விருஷபக்ரீவன், வியாழக்கிரீவன் எனும் மூன்று அசுரர்கள் பூலோகத்திற்கு வந்து இங்கு தவம் செய்து, சிவன் அருள் பெற்று யாராலும் வெல்ல முடியாத பொன் வெள்ளி இரும்பாலான மூன்று கோட்டைகளை கட்டிக் கொள்கிறார்கள். பிறகு வழக்கம் போல ஆணவத்தால் அட்டூழியம் செய்ய அவர்களை அழிக்கப் புறப்பட்ட சிவனின் பார்வை பட்டவுடனே அவர்களின் கோட்டை அழிந்ததாம். திரிபுரம் எரித்த சிவனாகக் காட்சியளித்தார் என்றும் சொல்லப்படுகிறது.

இங்கு குடி கொண்டிருக்கும் அம்மை அறம் வளர்த்த நாயகி. வடமொழியில் தர்மசம்வர்த்தினி. அருளும் கருணையும் குடி கொண்ட வடிவம்.

வடகிழக்கில் இக்கோயிலின் மகிமையைத்



• ஸ்ரீ சரபேஸ்வரர்


தன்னுள்ளே கொண்டுள்ள சரபமூர்த்தி உக்ரமே வடிவாகக் காட்சியளிக்கிறார். அந்த அருளும், தீட்சண்யமும் பார்க்கப் பார்க்க மெய்சிலிர்க்கிறது. பறவை, மிருகம், மனிதன் எனும் மூன்றின் கலவை அம்சமான மூர்த்தி. யாளி முகமும், இடுப்பு வரை மனித உடலும், நான்கு கைகளும், எட்டு கால்களும், இரண்டு இறக்கைகளுமாக அற்புதத் தோற்றம்... இறக்கைகளில் துர்க்கை, பிரத்தியங்கரா தேவிகள்....!

'இந்தத் தூணிலா உன் திருமால் இருக்கிறான்' என்ற ஹிரண்யனை, சம்ஹாரம் செய்த நரசிம்ம மூர்த்தி அரக்கனின் இரத்தத்தைக் குடித்ததால் அரக்க சுபாவம் வருகிறது. நரசிம்மத்தின் சினம் தணியாமல் ஆர்பாட்டம் அதிகரிக்கிறது. இதைக் கண்டு நடுநடுங்கிப் போன தேவர்கள் சிவனிடம் ஓடி முறையிட அவர் சரபவடிவம் எடுக்கிறார். சிவனுக்குச் சக்தி வேண்டுமல்லவா! எனவே தனக்கு இறக்கைக்குச் சக்தியளிக்க துர்க்கா பிரத்தியங்கராவின் சக்தியை அமைத்துக் கொள்கிறார். கண்டவர் நடுங்க சரபமூர்த்தியாகப் புறப்பட்ட ஈசன் நரசிம்மத்தின் உள்ளிருந்த அரக்கக் குருதியை வெளியே எடுக்க நரசிம்மம் சினம் தணிகிறது. சரபரும் நரசிம்மரும் அனுக்கிரஹ மூர்த்திகளாக ஆகின்றனர் என்பது வரலாறு. (இன்றைய விஞ்ஞான யுகத்திலும் இதைப் பொருத்த முடிகிறது என்பதுதான் விந்தை! 'அரக்க இரத்தத்தால் குணம் மாறிய நரசிம்மம்' என்பதை வியந்து யோசிக்க வேண்டியுள்ளது. சரபேஸ்வரரின் பாதம் நரசிம்மத்தின் இருதயத்தில் இருக்கும் அரக்க இரத்தத்தை வெளியேற்றுகிறது!)

எப்படியோ, அங்கு சரபேஸ்வரரின் அருளும் தெய்வானுக்கிரகமும் நிறைந்து இருப்பதையே எப்போதும் நடக்கும் சரபஹோமமும், பூஜைகளும் காட்டுகின்றன.

"பில்லி சூன்யத்தால், எதிரிகளால் பாதிக்கப்பட்டவர்கள், ஏதோ பீதியால் நடுக்கம் கொண்டவர்கள் இவர்களுக்கெல்லாம் சரபேஸ்வரர் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறார். நாடிஜோஸ்யத்திலும் நிறைய பேருக்கு சரபேஸ்வரரை தியானிக்கச் சொல்லி வருகிறது. அப்படி வருபவர்கள் இங்கே ஹோமமோ, பூஜையோ செய்கிறார்கள். சரபமந்த்ரமும் ரொம்ப சக்தி வாய்ந்தது" என்கிறார் கிருஷ்ணமூர்த்தி குருக்கள்.

• முகப்புக் கோபுரம்



சரப மூல மந்த்ரத்தை முறையாக உபதேசம் பெற்றுச் சொல்லும் போது எத்தனையோ பெரும் பிரச்னைகள், மனக் க்லேசங்கள் தனக்குத் தீர்ந்ததாக ஒருவர் சொன்னதைத் தான் நான் ஆரம் பத்தில் குறிப்பிட்டிருந் தேன்.

'அஷ்ட பாதாய
வித்மஹே
பக்ஷிராஜாய
தீமஹே
தந்நு சரபப்
ப்ரசோதயாத்!'

எனும் சரப

மந்த்ரத்தை மனசஞ்சலம் உள்ளவர்கள் அனைவரும் சொல்லலாம். நல்ல மனோதிடத்தை நிச்சயம் பெறுவார்கள்" என்கிறார் அங்கு கணக்காளராகவும், பல்லாண்டுகளாக சரபேஸ்வரரைத் தொழுபவராகவும் உள்ள ஜெயராம ஐயர்.



• மாரீசன் அரக்கனாக மாறிக் கொண்டிருக்கும் போது....

சரபேஸ்வரரின் இருமருங்கும் அழகு ரூபங்களாக இரண்டு சிலை ரூபங்கள். அதனை காலா, பஞ்சிகா என்கிறார்கள். ஸ்ரீதேவி, பூதேவியே அவர்கள் என்றும் சொல்கிறார்கள். சரபேஸ்வரரின் உற்சவ விக்ரகத்தை அருகிலிருந்து பார்க்கும் பேறு கிடைத்தது. கோபத்தையும், உக்ரத்தையும் அழிக்கப் புறப்பட்ட அந்த உருவம்! கலைஞனின் கற்பனையோ, கடவுளின் திருவருளோ! நாம் யார் அதைத் தீர்மானிக்க? நமக்கு அந்தத் தகுதியில்லை தான். ஆனால் அருள் பொழியும் அந்தச் சக்தி சொரூபத்தை மனம் ஒன்றித் தொழுதிடலாம்.

ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை ராகு காலங்களிலும், அவரவர் ஜென்ம நட்சத்திரத்திலும் சரபேஸ்வரரைத் தரிசிப்பது மிகவும் விசேஷமானது என்றார்கள் கோயிலைச் சார்ந்தவர்கள்.

மூலப் பெருமானைத் தரிசித்து பிரகாரத்திற்கு வந்தால்... அடடா எவ்வளவு பிரம்மாண்டமான பிரகாரம். பிரகாரத்தைச் சுற்றிலும் கல்லால் காவியம் படைத்திருக்கிறார்கள். இராமாயணமும், திருத்தொண்டர் புராணமும், யாளிகளும், சிற்பங்களும், தாமரையும்... செழித்துக் கொட்டிக்கிடக்கிறது அங்கே. இராமாயணத்தில் இராமனின் வில்பட்டவுடன் மாரீச மான் அரக்கனாக மாறுவது அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. பாதிமான், பாதி அரக்க உருவமாக அற்புதமாகப் படைத்திருக்கிறார்கள். விநாயகரும், துர்க்கையும், சண்முகருக்கான பெரிய சன்னதியும்... மிகப் பெரிய மேடையமைப்புடன் விரிந்து பரந்த பிரகாரம். நன்றாகப் பத்தாயிரம் பேர் அமர்ந்து கலை நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம், அவ்வளவு பெரிய மேடை. தருமபுர ஆதீனத்தின் பராமரிப்பின் கீழ் வருகிறது இக்கோயில்.

வீசும் தென்றல் காற்று நம்மோடு மோத, சோழர்கால அதிசயங்களைப் பார்த்து பிரமித்துக் கொண்டே வெளியே வருகிறோம். மருந்துக்குக் கூட ஒரு மலையில்லாத இந்தச் சோழநாட்டில் எப்படித்தான் இப்படி பிரம்மாண்டமான கற்கோயில்களை இவர்கள் சாதித்தார்கள் என வழக்கம் போல அதிசயிக்கத்தான் முடிந்தது.

• ஜெயராமன் • பாலசுப்ரமண்யம் • கிருஷ்ணமூர்த்தி



திரிபுவனம், பார்க்க வேண்டிய அனுபவிக்க வேண்டிய, உணர வேண்டிய ஓர் அற்புதத்தலம்.

— மஞ்சுளாரமேஷ்

படங்கள் : ஜி. சுரேஷ்

சுகந்தி எனது தோழி. எனக்கு மிகவும் இளைய சகோதரியாக இருக்கக் கூடிய அளவுக்கு இளையவள். பொறியியல் கல்லூரியிலும், பள்ளியிலுமாகப் படிக்கும் முத்தான இரண்டு மகன்கள். கார், அரண்மனை போன்ற வீடு, எல்லாவித நவீன கருவிகள் என்று சௌபாக்யம் பொங்கும் வாழ்வு. ஆனாலும் சுகந்தி வீட்டு வேலைகள் அனைத்தையும் தானே செய்கிறாள் (வேலைக்காரி வெளி வேலைக்கு மட்டும்தான். சமையல் அறை வேலை எதுவும் அவளுக்கில்லை) காலை நாலரை மணிக்கு எழுந்திருந்து குழந்தைகளுக்கு 'டப்பா' கட்டிக் கொடுப்பதிலிருந்து இரவு 11 மணி வரை பம்பரமாக சுழல்கிறாள்.



தெளிந்த நீரில் கல்லை எறியாதீர்கள்!

பண்டிகைகள், நாள் கிழமைகளை, கூடுமான வரை குடும்பப் பழக்க வழக்கங்களை அனுசரித்துக் கொண்டாடுகிறாள். இன்று தொலைக்காட்சி, ரேடியோ, மற்றும் ஜவுளிக்கடைக்காரர்கள்தான் நமக்குப் பண்டிகைகள் இருப்பதை நினைவூட்டுகிறார்கள். தீபாவளிக்கு வேலைக்குப் போகாத வீட்டம்மாக்கள் (குடும்பத் தலைவியை மலையாளத்தில் வீட்டம்மா என்பார்கள். இந்தச் சொல் எனக்கு பிடித்துப் போய்விட்டது) கூட, கடைகளிலிருந்து பட்சணம் பலகாரம் வாங்கி வைக்கிறார்கள் இன்றைய நாளில். அப்படி இருக்க, சுகந்தி அல்வா உட்பட பல இனிப்பு கார வகைகளைத்தானே செய்வாள்.

உடல் நலம் குன்றியதால் சிகிச்சைக்கு வந்த மாமியார், மாமனாரை, சுமார் மாதங்கள் வீட்டில் இருக்கச் செய்து, கண்ணென கவனித்தாள் சுகந்தி. எந்தக் கடையில் எந்தப் பொருள்கள், தரமானதாக அதே சமயத்தில் நியாய விலைக்குக் கிடைக்கும் என்பது சுகந்திக்கு அத்துபடி. ஒருநாள் சுகந்தியிடம் "சுகந்தி, உனக்கு ஓய்வே இல்லை போல் தோன்றுகிறதே!" என்றேன். அதற்கு அவள் சிரித்துவிட்டு, "நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால் என் மாமனார் என்ன சொன்னார் தெரியுமா?" என்று கேட்டு விட்டு மீண்டும் சிரித்தாள். என்ன என்பது போல் பார்த்தேன் அவளை.

"ஜெயராமா! சுகந்திக்கு பிள்ளைகள் பெரியவர்கள் ஆகி விட்டார்கள். சும்மாத்தானே இருக்கிறாள்? கம்ப்யூட்டர் வகுப்புக்கு போகச் சொல்லேன்" என்றாராம் மாமனார். அது மட்டுமல்ல, அவள் வெறும் இளங்கலை பட்டதாரி. முதுகலைப் பட்டதாரி இல்லை என்று அவருக்குக் கொஞ்சம் குறைகூட

உண்டாம்.

ஆனாலும் சுகந்தி தன் கணவர் விஷயத்தில் மிக்க பாக்யசாலி. பட்டென அப்பாவுக்கு பதில் சொல்லிவிட்டார் ஜெயராமன். "அப்பா சுகந்திக்கு முழு நேரமும் சரியாக இருக்கிறது வேலை. அவள் இஷ்டப்படியே முழுநேர வீட்டம்மாவாகவே இருந்து விட்டுப் போகட்டும். இதில் அவள் சந்தோஷப்படுகிறாள்" என்று பெரியவரின்




ஆனால் அந்தக் கணவன்மார்களை இன்று சுகந்தியின் மாமனார் போன்ற பல ஆசாமிகள் குழப்பி வருகிறார்கள். தேவையே இல்லாத புதுப்புது யோசனைகளை, கேட்காமலே சொல்லி, தெள்ளிய நீரோடை போலச் செல்லும் சந்தோஷமான மண வாழ்க்கையையும் கலங்க அடித்து விடுகிறார்கள். இதைப் படிக்கும் பெண்கள், "ஆஹா இது அடிமைத்தனம் அல்லவா, பெண்கள் என்றாலே அடுப்படிதானா?" என நினைக்கலாம். படிக்க, உத்தியோகம் பார்க்க, சாதனைகள் செய்ய விரும்பும் பெண்கள் செய்யட்டும். அதே சமயம் வீட்டு நிர்வாகம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழும் பெண்களை தாழ்வுமனப்பான்மை அடையச் செய்ய வேண்டாமே என்பதுதான் என் வாதம்.

குடும்பச் செலவுக்கு உதவியாக சம்பாதிக்கும் பெண்கள், கணவனைவிட கூடுதலாக பொருள் ஈட்டும் பெண்கள், என்றெல்லாம் பெண்கள் பல நிலைகளில் இருக்கிறார்கள். கேரளத்திலோ கேட்க வேண்டாம். பல கணவன்மார்கள் தாங்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு தாய் நாட்டில் தங்கிக் கொண்டு, மனைவிமார்களை வளைகுடா நாடுகளுக்கு அனுப்புவது பரம சகஜமாகிக் கொண்டு வருகிறது.

எனக்குத் தெரிந்த குமாரான திறமையுள்ள பெண் மருத்துவர் ஒருவர்,

காப்பி மேக்கரில் காப்பி, டீ தவிர வேறு என்ன தயார் செய்யலாம்? மேலேயுள்ள பில்டரில் சீரகத்தைப் பரப்பி வைத்துவிட்டு, காப்பி மேக்கரில் உள்ள நீர் கொதித்து ஆவியாகி, சீரகத்தினூடே இறங்கும் போது அருமையான சீரக வெந்நீர் கிடைக்கும். இதே முறையில், நாம் துளசி ஏலக்காய் கலந்த நீர், மிளகுக் கஷாயம், சுக்குக் காப்பி, ஆகியவை காப்பி மேக்கர் கொண்டு தயார் செயயலாம். திடீர் ரசப் பவுடரை மேல் பில்டரில் பரப்பி இதே முறையில் உடனடி ரசம் தயார் செய்யலாம்.

— எஸ். ராஜலக்ஷ்மி



☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

முடியாமல் தவிக்கும் பாட்டியைக் கண்டும் அவர்கள் பரிதாபப்படலாம்.

பெண்கள் வேலைக்குப் போவதை நான் எதிர்க்கவில்லை. நிறைய பணம் சம்பாதிப்பதும் அதே சமயத்தில் அதன் லாப நஷ்டங்களை ஏற்பதும் அவரவர் விருப்பம். அதே போல் முழுநேர குடும்பத்தலைவிகளாக இருப்பதும் பல பெண்களின் விருப்பமாக இருக்கிறது. அவர்களின் கணவர்களும் அவர்கள் அப்படி இருப்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட கணவர்களின் மனதிலே ஏதேனும் தாழ்வு மனப்பான்மை ஏற்படும்படி, புத்திசாலித்தனமான யோசனைகள் எதையும் சொல்ல வேண்டாம் என்றுதான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

எனது உறவுக்காரப் பையன் திருமணமான உடனேயே, தபால் ஆபீஸில் நல்ல வேலையில் இருந்த தன் மனைவியை வேலையை விடச் சொல்லிவிட்டான், அவனுடன் கலந்தாலோசித்த பிறகுதான்.

"சித்தி, ஏதாவது அபூர்வமான திறமை பெண்ணுக்குள்ளோ அல்லது ஆணுக்குள்ளோ ஒளிந்திருந்தால், அதை கண்டிப்பாக வெளிக் கொண்டு வரத்தான் வேண்டும். வெறும் குடும்பம் நடத்துதல் என்ற சக்கரத்தில் அவர்களை மாட்டிவிடக் கூடாது. மற்றபடி ரோகிணி பார்க்கும் வேலை ஒரு சராசரி வேலைதான். வெறும் மூவாயிரம் சம்பளத்துக்காக அவள் முழு நேர வீட்டம்மாவாக இருப்பதனால் ஏற்படும் லாபங்களை, சந்தோஷங்களை நாங்கள் இருவருமே இழக்க விரும்பவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் என்னிடம்.

"அப்பனே, இது உங்கள் இருவரின் முடிவானால் எப்பொழுதும் அதிலேயே உறுதியாக இருங்கள். அது போதும். இன்று இருப்பதை விட இனி பெண்கள் மேலும் மேலும், சுதந்திர வருமானம் என்ற லட்சியத்தில் கொடி கட்டிப் பறப்பார்கள். அவர்கள் கணவன்மார்களைக் கண்டு நீ பொறாமை படக்கூடாது. நீ பொறாமைப்படாத வரையில் ரோகிணியின் மனத்திலும் தாழ்வு மனப்பான்மை ஏற்படாது. நீங்களும் சந்தோஷமாக இருப்பீர்கள்" என்று அவனை ஆசீர்வதித்தேன்.

மகிழ்ச்சியாக வாழும் கணவன் மனைவியின் வாழ்க்கையில் விரிசலை உண்டாக்குவதைவிட பெரிய பாவம் என்ன இருக்க முடியும்? இருவர் மனத்திலும் தாழ்வு மனப்பான்மை, மற்றும் பொறாமை ஏற்படுமாறு எதையாவது யோசனை என்ற பெயரில் கூறாமல் இருக்கும்படிதான் ஆண்கள் பெண்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்தில், வேலை பார்க்கும் பெண்களின் பெருமைகளை வீட்டம்மாவின் கணவரிடம் ஓத வேண்டாம். வீட்டம்மாவின் 'மகிமை'களை வேலை பார்க்கும் பெண்களின் கணவன்மாரிடம் அளக்கவும் வேண்டாம்.

— உமாதேவி ராமஸ்வாமி

புக் ஷெல்ப்

நம் நாட்டுப் பழங்கதைகள்

வாய் மொழியாக வந்த கிராமத்து நகைச்சுவைக் கதைகளைத் தந்திருப்பவர் முல்லை முத்தையா.

பக் - 116 விலை ரூ. 25.00

மின்னல் கீற்று

புதுக்கவிதையில் சொல்லாட்சி போன்ற இலக்கியக் கட்டுரைகள். ஆசிரியர் - சிற்பி பாலசுப்ரமணியம்.

பக் - 139 விலை ரூ. 27.00

(இரண்டும் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 98)

நெஞ்சகத்தின் அன்பலைகள்

தொழு நோயாளிக்கு சிகிச்சை தரும் மருத்துவர்களின் சேவையை அடிப்படையாகக் கொண்ட நாவல். ஆசிரியர் - ராஜலட்சுமி சுந்தரம்.

பக் - 284 விலை ரூ. 55.00

(காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட், 2, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33)

நோய்கள் அகற்றும் எளிய யோகாசனங்கள்

விளக்குபவர் டாக்டர் இரத்தின சண்முகம்.

பக் - 168 விலை ரூ. 32.00

(ஸ்ரீ செல்வ நிலையம், த.பெ. எண்: 5371, 107/1, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14)

சுவாமி சின்மயானந்தரின் சிறப்புச் சிந்தனைகள்

வாழ்க்கைக்குப் புத்துணர்வினை ஊட்டும் சுவாமிஜியின் சிந்தனைகள். தொகுப்பு - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு.

பக் - 208 விலை ரூ. 39.00

லேனா தமிழ்வாணனின் ஒரு பக்கக் கட்டுரைகள்
- பாகம் 14

சிந்திக்க வைக்கும் வாழ்க்கைக்குப் பயனுள்ள எளிய விஷயங்களைப் பேசுகிறார் லேனா.

பக் - 136 விலை ரூ. 25.00

(இரண்டும் - மணிமேகலைப் பிரசுரம், த.பெ. எண்: 1447, 7, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17)


காவலை மீறி....

ஆர். சூடாமணியின் பதினெட்டு சிறுகதைகள். சமகாலத்து உணர்வுகளை பிரதிபலிக்கும் அற்புதச் சித்திரங்கள்.

பக் - 220 விலை ரூ. 35.00

சந்தியா

ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட கதை. ஆசிரியர் ரங்கநாயகி அம்மாள் ...





எங்கள் வீட்டில் அடிக்கடி கவனக்குறை வால் ஈய சொம்பு உருகுவதைப் பார்த்த ஒரு பெண்மணி சொன்னார் - வேறு பாத்திரத்தில் ரசத்தை வைத்து அதை ஈய சொம்பில் ஊற்றி னாலே போதும் அது ஈய சொம்பில் நேரடியாக வைத்தது போலவே இருக்கும் என்றார். இப் பொழுது ஒரு வருடமாக எங்களுக்கு சொம்பு மாற்றும் வேலையே இல்லை.

— என். விஜயலெட்சுமி

சௌபாக்யம் தரும் அற்புதக் கவசங்கள்

விநாயகர் கவசம், காயத்ரி கவசம் போன்ற இருபத்தியொன்பது கவசங்கள். தொகுப்பு - அபயானந்தஜிதாஸ்.

பக் - 176 விலை ரூ. 10.00

(இரண்டும் – இலக்குமி நிலையம், 53, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.)

உங்கள் நட்சத்திரம்

இருபத்தியேழு நட்சத்திரங்களின் குணங் கள், தோற்றம் போன்றவை. ஆசிரியர் - கே.என். சரஸ்வதி.

பக் - 120 விலை ரூ. 25.00

ஸ்திரீ ஜாதகம்

பெண்ணைப் பற்றி ஜாதகரீதியாகத் தெரிந்து கொள்ள உதவும். ஆசிரியர் - கே.என். சரஸ்வதி.

பக் - 104 விலை ரூ. 25.00

(இரண்டும் - கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38 நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 17.)

இல்லந்தோறும் இயற்கை உணவுகள்

சரளமான நடையில் உடல் நலத்திற்குத் தேவையான செய்திகளைச் சொல்பவர். இயற்கை உணவு & அக்குபஞ்சர் நிபுணர் டாக்டர் மதுரம் சேகர்.

பக் - 277 விலை ரூ. 50.00

டி.பி, ஆஸ்துமாவுக்கு இயற்கை வைத்தியம்

ஆசிரியர் பி.எஸ். ஆச்சார்யா.

பக் - 104 விலை ரூ. 20.00

(இரண்டும் - நர்மதா பதிப்பகம், 16/7, ராஜா பாதர் தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 17.)

வெற்றி மகுடம்

இரேக்க நாட்டு மண்ணில் விளைந்த காதலையும் வீரத்தையும் நாவலாகத் தந்திருப்பவர் கௌதம நீலாம்பரன்.

பக் - 244 விலை ரூ. 40.00

திருவிளையாடல்

திருவிளையாடல் புராணம் முழுமையாக உரைநடையில் தந்திருப்பவர் பேரூரான்.

பக் - 398 விலை ரூ. 75.00

(இரண்டும் - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.)

ஹிப்னாடிசம், மெஸ்மரிசம் கற்றுக் கொள்ளுங்கள்

ஆசிரியர் - அனுமந்தராயர்.

பக் - 112 விலை ரூ. 20.00

நட்சத்திரப்படி குழந்தைகளுக்கு அதிர்ஷ்டப் பெயர் வைப்பது எப்படி?

கூறுபவர் - ஜோதிட திலகம் ஸ்வாமி முருகானந்தா.

பக் - 112 விலை ரூ. 20.00

(இரண்டும் - மயிலவன் பதிப்பகம், 18, தெற்கு பெருமாள் கோயில் முதல் தெரு, வடபழனி, சென்னை - 26.)

சுவையான சமையல் குறிப்புகள்

130 வகை சமையல் குறிப்புகள். ஆசிரியர் எஸ். லீலா.

பக் - 160 விலை ரூ. 30.00

(கண்ணப்பன் பதிப்பகம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.)

சிரிக்க சிந்திக்க சில கதைகள்

நீதிக் கதைகள். ஆசிரியர் - செவல் குளம் 'ஆச்சா'.

பக் - 96 விலை ரூ. 18.00

(விநாயகா பப்ளிகேஷன்ஸ், 21/1, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை 14.)

காட்டுக்குள்ளே திருவிழா

குழந்தை நாடகங்கள். ஆசிரியர் எம்.எஸ். காந்திமேரி

பக் - 95 விலை ரூ. 36.00

(நவஜோதி வெளியீடு, 20, மாதாகோவில் வீதி, பத்மினி நகர், புதுச்சேரி - 12.)

Cosmetology

அழகுக்கலை நிபுணர்களுக்கும், இக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும் அதிகமான பயனுள்ள தகவல்களைத் தரும் ஆங்கில நூல். ஆசிரியர் - Mary Healy.

பக் - 543 விலை ரூ. 595.00

(Prentice - hall of India Private Ltd., New Delhi - 110 001.)

தயக்கம் எனும் தடைச்சுவர்!

மனக பதைபதைக்க பஸ் ஸ்டாண்டில் ஒரு பெண் நிற்கிறாள். இரவு மணி பத்து. அது அரிதாக பேருந்து வரும் இடம். கூடவே இன்னொரு ஆண் நிற்கிறான்.

அந்தப் பெண் செல்லக்கூடிய பேருந்து சென்று விட்டதா இல்லையா? யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது என்று சந்தேகத்திற்கு இடமே வேண்டாம். இருப்பதோ ஒருவர். அந்தப் பெண் தயங்கித் தயங்கி நிற்கிறாள். நேரம் உருண்டு கொண்டே இருக்கிறது. அந்தப் பக்கமாய் ஒரு ஸ்கூட்டர் வர அவன் பின்னால் இருந்த அந்த ஆணும் ஏறிக் கொண்டு சென்று விட அந்தப் பெண் நின்று கொண்டேயிருந்தாள். மணி பதினொன்று ஆகிவிட அழுகை பீறிடுகிறது அந்தப் பெண்ணுக்கு.

ஏன்? கேட்டுப் பார்த்தால் விடை தெரியும். அந்தப் பெண்ணிற்கு அந்த ஆண் மகனுடன் பேசத் தயக்கம். விளைவு அப்பெண்ணின் வீட்டில் பரபரப்பு. பிறகு மூன்று கிலோமீட்டர் நடந்தே அந்தப் பெண் வீடு போய்ச் சேர்ந்தது வேறு கதை.

எதனால் இந்தத் தயக்கம் ஏற்படுகிறது. கூச்சம் வேறு. தயக்கம் வேறு. இவ்வளவுக்கும் அந்தப் பெண் அவ்வளவு கலகலப்பானவள். தயக்கம் இருக்கும் இடத்தில் நிச்சயமாக எதற்கும் விடை கிடைக்காது.


"சார்... எப்ப ஸார் பஸ் வரும்" வாயைத் திறந்து கேட்டால் முத்தா உதிர்ந்து விடும்.

இது ஒரு உதாரணம்தான் தயக்கத்திற்கு. ஆனால் உண்மையிலேயே நடந்தது இது.

நிறைய விஷயங்களில் இந்தத் தயக்கம் நம் வாழ்க்கையிலேயே பெரிய தடுப்புச் சுவராக இருப்பதை நாம் மறுக்க முடியாது.

வெளியிடத்தில், வீட்டில், அலுவலகத்தில், நண்பர்களிடத்தில், இன்னும் எத்தனையோ.

வீட்டினுள் எடுத்துக் கொண்டோமேயானால் நீ ஆரம்பிப்பதா, நான் ஆரம்பிப்பதா என்ற தயக்கத்தில் ஆரம்பிக்காமலேயே தூங்கிக் கொண்டிருக்கும் விஷயங்கள் நமக்குத் தெரியாமல் இல்லை. ஒரு அற்பச் சண்டையில் கணவன் மனைவியை ஒரு விதமாக புரிந்து கொண்டும், மனைவி கணவனை வேறு விதமாகப் புரிந்து கொண்டும், பத்து வருடகாலம் கூட பேசாத கணவன், மனைவியை நிச்சயம் நாம் வாழ்க்கையில்



சந்தித்திருக்கிறோம். நம்மை விரும்பாத மூன்றாம் மனிதர்கள் ஒரு சண்டையை கிளப்பிவிடும் போது அந்த சம்பந்தப்பட்ட மூன்றாம் மனிதரை கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் மாறி மாறி உபசாரம் செய்வதை பார்த்திருக்கிறேன், என் தோழியின் வீட்டில்.

என்னிடம் என் தோழி சொன்னாள்,

"நான் சொல்லியும் கேட்காமல் என் கணவன் அந்தப் பெண்ணோட பேசறாருடி..."

"நீ நேர கேட்டுரேன்...."



"அவரா பேசட்டுமே...."

"ஏன்..." என்றதற்கு அவள் சொன்ன காரணம் சிரிப்பாய் இருந்தது.

"தயக்கமாக இருக்குது. அவர் நான் சொன்னதை சாக்கா வெச்சுட்டு நிஜமாவே அவகூட தொடர்பு வெச்சுட்டா என்ன செய்யறதுடி." அப்ப ஒண்ணு தெரிஞ்சுக்கணும். அது நிஜமானது தானான்னு!

ஆனால் அந்த மனிதர் ரொம்பவும் தங்கமானவர். எவரோ சொன்ன தவறான

காதல் விவகாரம் பத்தி சொல்றேன். ஒரு சகோதரர் என் வீட்டுக்கு வந்து கண்ணீர் விட்டு அழுதார். விஷயம் என்ன தெரியுமா? அவரோட பொண்ணு ப்ளஸ் டூ படிக்கிறாள், அவளுக்கு ஒரு முப்பத்தைந்து வயது ஆடவர் கூட காதலாம்(!!!) அந்தப் பொண்ணுக்கு வந்த கடிதம் இவர் கையில் சிக்கி, வெச்சுட்டு தவிச்சிட்டிருக்கார். மனைவியிடம் சொல்ல பயமாம். ஏன் என்று கேட்டதற்கு அவங்க அப்படியே உடைஞ்சு போய், உய், உய்னு சத்தம் போட்டு ஊரைக் கூட்டிடு வாங்களாம். இது ஒரு சாக்கா? பள்ளியிலிருந்து ரிப்போர்ட் வேறு.



அந்தப் பொண்ணு ஒழுங்காக ஸ்கூல் வருவது இல்லை என்று.

இப்ப என்னங்க நிலவரம்னு கேட்டதற்கு சொன்னார், "அந்த ஆளுக்கு வெளியூர் மாத்தலாகியிருக்கு, இவளை வரச் சொல்லி வற்புறுத் தறான். அந்த லெட்டரையும் நானே போஸ்ட் ஆபீஸ்ல போய் மடக்கி

சொல்லத் தயக்கம். என்ன நினைப்பார்களோ அம்மாவும், அப்பாவும் என்ற பயம். அதைவிட பெரிய ஆச்சர்யம் அந்தப் பெண் நட்பு என்று நினைத்து தான் பழகினாளாம், ஆனால் அவன் அப்படியில்லையாம்.

இவ்வளவையும் கேட்ட அந்தப் பெண்ணின் அப்பா சிறு குழந்தை போல தேம்பி அழ, அந்தப் பெண் பதிலுக்கு அழுது அப்பாவை நோக்க பின் இருவரும் சரியாகிவிட்டனர். தயக்கம் அவங்களை எந்த அளவு கொண்டு விட்டிருக்குன்னு பாருங்க. விஷயம் விபரீதமா போகவிட்டதுக்கு யாரு காரணம். தயக்கம்கற தடைச்சுவர்தான். பெற்றோர்களே தயக்கத்தை உடைச்சுட்டு வாங்க.

கோழிக்குஞ்சு முட்டையை உடைச்சுட்டு வெளி வர தயங்குதா? குழவி தன்னுடைய குழந்தையை (புழுவை) கொட்டத் தயங்கினா புழு என்னிக்குக் குழவியாகறது?

நாம அன்றாடம் பார்த்துட்டு வருகின்ற இன்னொரு படலம் பஸ். எவ்வளவு இடிச்சாலும் ஏன் பெண்கள் வாயைத் திறப்பது இல்லை. அதுவே ஆண்களுக்கு ஒரு வசதியாக போய்விடுகிறது. நமக்கு என்ன வாயா இல்லை. இருக்கிறதுதான். ஆனால் தயக்கம் வாயைக் கட்டிப் போட்டல்லவா விடுகிறது. தைரியமாக தயக்கத்தை உடைத்து "என்னய்யா நினைச்சிட்டு இருக்கன்னு" கேளுங்க. அப்புறம் தெரியும் அதனோட பிரதிபலன்.



நம்மோட தயக்கத்தினால நல்ல விஷயங்களை நிறைய இழக்கிறோம். ஒரு விஷயம் தெரியலையா? நமக்குத் தெரியலைன்னு கான்பிக்கத் தயக்கம், வெட்கம், வெளில வரமாட்டோம். யாராவது ஒருத்தங்க பேச ஆரம்பிச்சுட்டா நாமும் ஆரம்பிச்சுடுவோம்.



தயக்கத்தினால் நட்பு போயிடும். அன்னிக்கு மட்டும் துரியோதனன் கர்ணனைப் பார்த்து "முத்துக்களை எடுக்கவோ, கோர்க்கவோன்னு" கேட்டு தயக்கத்தை உடைச்சு என்றும் நீ என் நண்பன்னு சொல்லாட்டா நமக்கு அந்த நட்போட ஆழம் தெரிஞ்சிருக்குமா. இன்னும் எவ்வளவோ உதாரணங்களை நாமே அன்றாடம் வாழ்வில் பார்க்கிறோம்.

தயக்கத்தை வளர்த்து நல்ல குடும்பச் சூழ்நிலையை எரிமலையா ஆக்காதீங்க. நல்ல நல்ல விஷயங்களை தயக்கத்தால் இழந்துடாதீங்க. முக்கியமா விடலைப் பருவத்தினரை கையாள்வது என்பது கண்ணாடிப் பாத்திரத்தை கல் மேல வைப்பது மாதிரி. தயக்கத்தை உடைச்சு அவங்க கூட நல்லது, கெட்டதை பேசுங்க.

தயக்கம் நம்மை விட்டுப் போயிட்டா, கூடவே குழப்பமும், சந்தேகமும் நமக்கு டாட்டா சொல்லிடாதா? இப்போதிலிருந்து முயற்சிங்க.

— திருமாமகள்

சைவக் காளான்

உணவு உடையினைக் காட்டிலும் இன்றியமையாதது. அந்த உண்மையினை உணர்த்தும் பொருட்டுத்தான் மனித இனம் ஆடையின்றி தோன்றுகின்றது. பிறந்த குழந்தை தன் குரலை உயர்த்தி அழும் பொழுது அதற்குத் தேவையான 'சேனை' என்ற 'தேன்' நீரை நாம் அளிக்கிறோம் அக்குழந்தையின் உடல் உறுப்புகளுக்கு அப்பொழுது தேவையானது அத்தேன்தான். பின் பால்-தாய்ப்பால் அல்லது ஆவின் பால் கொடுக்கப்படுகின்றது. சில மாதங்கள் சென்றவுடன் பால் கலந்த சோறு ஊட்டப்படுகின்றது– வயது ஏற ஏற உணவின் தரமும் கூட்டப்படுகின்றது: அளவும் அதிகரிக்கப்படுகின்றது. இன்னும் வாலிப பருவத்தில் சுவையுடன் கூடிய உணவு கொடுக்கப்படுகின்றது; வயோதிகப் பருவத்தில் உணவு சுருக்கிக் கொடுக்கப்படுகின்றது. இம்மாதிரி கொடுக்கும் போது உடல் உறுப்புகளின் நிலை - அவற்றின் சக்தியாம் வலு, ஜீரணிக்கும் தன்மை ஆகியவற்றை மனதிற் கொண்டு உணவு கொடுக்கப்பட்டாலோ அல்லது உட்கொண்டாலோ நோய்கள் அணுகா; மாறாக மகிழ்ச்சியுடன் உயிருள்ள காலம் வரை வாழலாம்.

முன்பெல்லாம் மனித இனம் உழைத்தது; உழைத்துக் கொண்டே இருந்தது; நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துக் கொண்டே இருந்தது. அரசனிலிருந்து ஆண்டி வரை உழைப்பது என்பது ஒரு கலையாகக் கருதப்பட்டு போற்றப்பட்டது எனலாம். நவீன காலத்தில் இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்குப் பின் மனிதன் இயந்திரத்தின் அடிமையாகி தன்னுள் இருக்கும் இயந்திரத்தின் உண்மைச் செயலை மறக்கத் தொடங்கினான். வெளியிலிருக்கும் இயந்திரம் கெட்டுவிடக் கூடாது என்பதில் கவனம் செலுத்திய மனிதன் தன்னுள் இருக்கும் இயந்திரத்தின் தேவைகளை ஆராய்வதில் கவனம் செலுத்தத் தவறி விட்டான்.

ருசிக்கு மதிப்பு கொடுக்கத் தொடங்கியவன் பசியின் தத்துவத்தை அறிந்து நடக்க மறந்து விட்டான். இதன் விளைவு இரண்டு: ஒன்று ருசி மிகுந்த சமையல். அதாவது எதை எப்படி சமைத்துச் சாப்பிட்டால் உடலுக்கும், உள்ளத்திற்கும் சுகம் கொடுக்கும் என்பதைத் தள்ளிவிட்டு, எதை எப்படிச் சமைத்தால் நாவுக்கு ருசியாக இருக்கும் என்ற உணர்வுக்கும், நிலைக்கும் மனிதன் தன்னை உள்ளாக்கிக் கொண்டது இரண்டாவது நோய்கள் பெருக்கம். புதிய புதிய நோய்களின் ஆளுமைக்குட்பட்ட மனிதன் அவற்றுக்கு இரையாகிக் கொண்டிருப்பதைக் கண்டும் நோயின் காரணத்தைப் புரிந்து செயல்பட, நோயற்ற வாழ்க்கையைப் பெற கவனம் செலுத்தாமல் நோயை விரட்டுவது எவ்வாறு என்று அதற்கு மருந்தினை கண்டுபிடிப்பதில்தான் தன் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினான்.

மிருகத்தைக் கொன்று அதன் இறைச்சியைத் தினமும் உட்கொண்டிருந்த அன்றைய மனிதனுக்கு வராத கொலாஸ்ட்ரால் என்று கூறப்படும் கொழுப்புச்சத்து நோய் மற்ற உணவுப் பதார்த்தங்களுடன் சிறிது இறைச்சியை உண்ணும் இன்றைய மனிதனுக்கு ஏன் வரத் தொடங்கியது?

இறைச்சியைச் சாப்பிட்டதனாலா? அப்படியாயின் இறைச்சி ஒன்றையே உணவாக உட்கொண்டிருந்த அன்றைய மனிதனுக்கு வரவில்லையே! ஏன்?

அன்றைய மனிதன் தான் உட்கொண்ட அளவுக்கு உழைத்தான். ஆனால் இன்றைய மனிதனோ அதிகம் மூளையின் துணை



வீட்டில் பன்னீர் சொம்பு இருந்தால் அதை அப்படியே பெட்டிக்குள் போட்டு பூட்டி வைத்துக் கொண்டிருக்க வேண்டாம். அவற்றை ஊதுவத்தி ஸ்டான்ட் ஆகப் பயன்படுத்தலாம். எளிய கலைநயத்துடன் கூடிய பூஜையறைப் பொருளாகும் இது.

— லக்ஷ்மி சிவகுமார்

◆◆◆

கொண்டு உழைக்கிறான்; மேலும் உடல் உழைப்பில் ஈடுபடுபவன் கூட சுகம் விரும்பி உடலுக்கு அது முடிந்த அளவு வேலை கொடுக்கத் தவறி விடுகிறான்; இல்லையென்றால் சோம்பி, வாய்ச் சொல்லில் வீரனாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறான்.

இதனால் அவனுக்குக் கிடைத்த பெருமை 'உணவே மருந்து' என்ற நிலை போய் 'மருந்தே உணவு' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதேயாகும்.

விஞ்ஞானம் என்னவோ மனித இனத்திற்குத் தன் அறிவுரையைத் தந்து கொண்டு தான் இருக்கிறது. இருப்பினும் வரும் முன் காப்போனாக இருக்க வேண்டிய மனிதன் வந்தபின் எதிர்ப்போனாக மாறத்தான் தன்னை உள்ளாக்கத் தொடங்கியதன் விளைவே இன்றைய உலகில் நாம் காணும் அதிகப்படியான மருத்துவமனைகள்.

இறைச்சியின் ருசி கொண்ட உணவினில் நாட்டங் கொண்ட மனிதன் இறைச்சியைத் தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறும் பொழுது அவன் கலங்கத்தான் செய்கிறான்.

இந்நேரத்தில் அவனுக்கு வரப்பிரசாதமாக வருவதுதான் இறைச்சியின் சுவை கொண்ட காளான்! காளான்!! காளான்!!!

காளான் - வரலாற்று உண்மைகள் :

காளானை ஆங்கிலத்தில் மஷ்ரூம் (Mushroom) என்பர். அதைத் தமிழில் கடற்பஞ்சு என்பர். இது ஒரு வகையான கடற் பிராணி. மஷ்ரூம் என்ற சொல் பொதுவாக பிரெஞ்ச் சொல்லாம் மௌஸரன் (Mousseron) என்ற சொல்லின் வழி வந்தது என்றும் கருதப்படுகிறது.

சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிற்குள் வந்ததாகக் கருதப்படும் ஆரியர்கள் 'ஸோமா' என்ற ஒரு வகை பானத்தை உட்கொண்டதாக வேதம் கூறுகிறது. அப்பானம் காளானிலிருந்து எடுத்திருக்கக் கூடும் என்பது 1969 ஆம் ஆண்டு வஸ்ஸன் (Wasson) என்பவரின் கருத்து.

காளான் ஓவியர்களுக்கு அழகிய பொருளாகவும், மருத்துவர்களுக்கு மூலிகை போன்ற உயர்ந்த பொருளாகவும் விளங்கி இருந்திருக்கின்றது.

செயற்கைக் காளான் : (Artificial Mushroom)

இயற்கை ஈந்திட்ட அரிய படைப்பான காளான்கள் வருடத்திற்கு மூன்று மாதங்கள் மட்டும், அதுவும் மழைக் காலங்களில் சில இடங்களில் மட்டுமே கிடைத்துக் கொண்டுள்ளது. இயற்கைக் காளான் வகைகளில் சுமார் 10,000 வகைகள் உண்பதற்கு ஏற்றவை. இவற்றுள் சுமார் 64 வகைகளை செயற்கை முறையில் வளர்க்க முயற்சி செய்து ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர். எனினும் உலகளாவிய அளவில் சுமார் 20 வகைகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்ஸ் நாட்டவரால் கண்டுபிடிக்கப்பட்ட செயற்கைக் காளான்கள், 1850 ஆம் ஆண்டில் பிரெஞ்ச் நாட்டுத் தோட்டக்கலைஞர்களால் பாரீஸ் நகரில் தொழிற் சாலைகளாக உருவகம் பெற்றது.

தற்போது இச் செயற்கைக் காளான்களை வருடம் முழுவதும் உற்பத்தி செய்ய வழிவகைகள் செய்துள்ளனர் ஆராய்ச்சியாளர்கள்.

இப்பொழுது இந்தியாவில் 'சிப்பிக் காளான்' (Oyster Mushroom) மொட்டுக் காளான் (Button Mushroom) என்ற இரு வகைக் காளான்கள் மட்டும் பரவலாகக் கிடைக்கிறது.

காளான் (அ) சைவ உணவு.... என்ன காளான் சைவ உணவா? அது அசைவமாயிற்றே!

தாவரவியலின்படி காளான் பூக்காத சிறிய செடி வர்க்கத்தைச் சேர்ந்தது என்றும், குளோரபில் இல்லாத காரணத்தால் தனக்குத் தானே

அனைவருக்கு எங்களது தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

P. R. ஜுவல்லரியில்

ராசிக்கேற்ற கல் மோதிரம் வாங்கி அணிந்து பயன்பெறுங்கள்

1. மேஷ ராசி பவழம்
2. ரிஷப ராசி வைரம்
3. மிதுன ராசி மரகதபச்சை
4. கடக ராசி முத்து
5. சிம்ம ராசி மாணிக்கம்
6. கன்னி ராசி மரகதபச்சை
7. துலாம் ராசி வைரம்
8. விருச்சிக ராசி பவழம்
9. தனுசு ராசி புஷ்பராகம்
10. மகர ராசி நீலம்
11. கும்ப ராசி நீலம்
12. மீன ராசி புஷ்பராகம்

எங்களிடம் ராசிக் கல் மோதிரம் வாங்கி பயன் பெறும் அனைவருக்கும் எங்களது வாழ்த்துக்கள்.

12-ம் ஆண்டை நோக்கி சென்று கொண்டு இருக்கும் நாங்கள் வைரம் தவிர ஒவ்வொரு ராசிக்கும் ஒரிஜினல் கல் வைத்த வெள்ளி மோதிரம் ரூ. 400/-க்கு தருகிறோம்.

ரூ. 250/-க்கு கார்னெட் மோதிரம் வாங்கி அணிந்தால் செல்வ வளம் பெருகும். தங்க நகைகள், வெள்ளி பாத்திரங்கள், கொலுசுகள், ராசிக்கல் மோதிரங்கள் வாங்க சிறந்த இடம்.

P.R. JEWELLERY
GOLD • SILVER • DIAMOND & BIRTH STONES
102, USMAN ROAD, T. NAGAR, MADRAS 600 017
TUESDAY HOLIDAY. PH: 434 4442

* தபால் எழுதினால் முழுவிபர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

தரத்திற்கு உத்திரவாதம்

நியூமராலஜிபடி கல் மோதிரங்கள்
March 21 to April 20 Diamond (or) Ruby
April 21 to May 21 Emarald (or) Moonstone
May 22 to June 21 Pusparagam (or) Topaz
June 22 to July 23 Ruby (or) Pearl
July 24 to August 23 Diamond (or) Ruby
August 24 to September 23 Sapphire (or) Coral
September 24 to October 23 OPAL (or) Sapphire
October 24 to November 22 Topaz (or) Pusparagam
November 23 to December 21 Amethyst (or) Tarquise
December 22 to January 20 Garnet (or) Gomeydhagam
January 21 to February 19 Amethyst (or) Pearl
February 20 to March 20 Emarald (or) Aquamarine

ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ 400
ஹைதராபாத் முத்து 10 கிராம், ஒரு மாலைக்கு ரூ 200

வைரம் தவிர அனைத்து கல் வைத்த வெள்ளி மோதிரம் ஒன்று ரூ. 400/-க்கு கிடைக்கும். தபால் செலவு ரூ. 25 சேர்த்து ரூ. **425** க்கு D.D. (or) M.O அனுப்பினால் பதிவு தபாலில் அனுப்புகிறோம். **செப்புகம்பியில் அளவு எடுத்து அனுப்பவும்.**





உன் கூந்தல் ஏறி தவழும் பூ
கோடி ரூபாய்...

- அதிக முடி உதிர்வை தடுக்கிறது
- அடர்த்தியான முடி வளர தூண்டுகிறது
- பொடுகை எதிர்க்கிறது
- இள நரையை தடுக்கிறது

அதிக மூலிகை அதிக சக்தி

தூய தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்பட்டது.

எரிகா

ஹெர்பல் ஹேர் டானிக்

ERRICA
HERBAL HAIR TONIC
— Very Effective —

A Quality Product from:

Dales
MEDICINAL PLANTS RESEARCH DIVISION

DALE CARE

Brindavan, Pondicherry - 605 013.
M.R.P. 100 ml Rs. 29.50 - 200 ml Rs. 54.50. Available at all medical shops and General Stores in Tamilnadu and Pondicherry

LAYAM/ER/319/97

உணவு உற்பத்தி செய்து கொள்ள முடியாது என்றும்தானே உள்ளது?

இக் கூற்றுகளின் படி காளானை அசைவ உணவென்று கூற முடியவில்லையே!

காளானிலிருந்து பூசணத்தைப் பிரித்தெடுக்கின்றோம். இப்பூசணத்தினை சோளம், கம்பு, மக்காச் சோளம் போன்ற தானியங்களில் உட்புகுத்தி வளரச் செய்கின்றோம். இதனையே வித்து என்கிறோம். இவ்வித்துக்களையே வைக்கோல், கரும்புச் சக்கை, மக்காச் சோளத் தட்டை, காகிதம் போன்ற கடைநிலை பொருட்களுடன் சேர்த்து, வளரச் செய்து காளானை உற்பத்தி செய்கின்றோம். இவ்வாறு உற்பத்தியாகும் பொருளினை அசைவம் என்று எங்ஙனம் கூறலாம்?

காளான் - உணவே மருந்து :

இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால், மாரடைப்பு போன்ற நோய் கொண்ட அசைவ உணவுப் பிரியர்களுக்கு இறைச்சியின் சுவை வேண்டும்; புரதம் வேண்டும் ஆனால் கொழுப்பு கூடாது. எனினும் இந்நோய் உள்ளவர்களில் பலர் நாவின் ருசிக்கு அடிமையாகி தெரிந்தே இறைச்சியை உண்டு விடுகின்றனர். இவர்களுக்காகவே இறைச்சியின் சுவையைக் கொண்டு, சத்துக்களைக் கொண்டு கொழுப்புச் சத்து குறைந்த தாவர உணவாக வருகின்றது காளான். எனவே இதனை 'தாவர இறைச்சி' என்று அழைத்தால் தவறாகாது.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்குச் சிறந்த உணவு.

புரதச்சத்து அதிகமாக இருப்பதனால் உடல் எடை குறைந்து வருபவர்களுக்கு ஏற்ற உணவு.

கொழுப்புச் சத்து மிக மிகக் குறைவாகவும், புரதச்சத்து அதிகமாகவும் இருப்பதனால் தன் அழகினை இழந்து விடாமல் உடல் பருமனைக் குறைக்க விரும்புபவர்களுக்கு உகந்த உணவு.

வைட்டமின் 'பி' அதிகமாக உள்ளதால் இருதயம் தொடர்பான நோய் தீர்க்கவும், 'பெரி பெரி' என்ற நோயினைக் குணப்படுத்தவும் காளான் பயன்படுகின்றது.

கருவுற்ற பெண்களுக்கு இரத்த சோகை நோய் ஏற்படும். இவர்கள் தினசரி காளானை உணவில் சேர்த்து வருவது நல்லது. ஏனெனில் வைட்டமின் 'பி' யில் உள்ள Folic Acid காளானில் நிறைந்துள்ளது.

காளானில் வைட்டமின் 'C' & 'D' யும் உள்ளன.

சிறந்த கண் பார்வைக்கும், பற்கள் உறுதிக்கும், எலும்புகள் வளர்ச்சிக்கும் உரிய இரும்புச் சத்துக்களுடன் கூடிய கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற தாதுச் சத்துக்கள் காளானில் உள்ளன.

உயிர் பாதுகாக்கும் மருந்துகள் செய்வதற்கும், புற்று நோயைத் தீர்ப்பதற்கும் கூட காளான் பயன்படுவதாகக் கருதப்படுகிறது.

கவனம்! கவனம்!! கவனம்!!!

1. காளான் தன்னகத்தே கொண்டுள்ள சத்தின் உண்மையை உணர்ந்து சாதாரணமாக 70 கி.கிராம் எடையினைக் கொண்ட சராசரி மனிதன் 100 லிருந்து 200 கிராம் வரை உட்கொண்டால் அவனுக்குத் தேவையான சக்தியைப் பெறுவான் என்று ஆய்வு கூறுகின்றது.

2. காளான்களைப் பறித்தவுடன் சமைப்பது நல்லது.

3. காளான்களின் வேர்ப்பாகத்தில் வைக்கோல் அல்லது மண் துகள்கள் ஒட்டிக் கொண்டிருக்கும். இதனை நீக்க வேர்ப்பாகத்தில் சிறிதளவு நறுக்கி விட வேண்டும். பின் தண்ணீரில் கழுவி சுத்தம் செய்யுங்கள்.

4. காளான்கள் அழுகிய தோற்றத்துடனோ, மணத்துடனோ இருந்தால் வாங்குவதையும், சமைப்பதையும் தவிருங்கள்.


5. காளான்கள் பாலிதீன் பைகளில் நிரப்பப்பட்டு வரும். இப்பைகளில் காற்றோட்டத்திற்காக சில துவாரங்கள் இடப்பட்டுள்ளனவா என்பதனைப் பாருங்கள்.

6. ஈரத்துணியில் மல்லிகைப் பூவை சுற்றி வைத்து பாதுகாப்பது போல பாலிதீன் பைகளில் உள்ள காளான்களையும் அப்படியே ஈரத்துணியில் சுற்றி வையுங்கள். இதனை குளிர்ச்சியான இடங்களில் வைத்து 24 மணி நேரம் பாதுகாக்கலாம்.

****

கையில் நெய்யைத் தடவிக் கொண்டு, குலாப் ஜாமூன் உருண்டைகளை உருட்டினால், ஒட்டாமல் வருவதுடன், ஜாமூனும் நெய் மணக்கும்.

— ஆர். பார்வதி



****

7. குளிர்சாதனப் பெட்டியில் 5 முதல் 8 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் வைத்து 3 நாட்கள் வரை பாதுகாக்கலாம்.

8. சிப்பிக்காளான் இதழ்கள் வெந்திருக்கும் அளவிற்குக் காம்புகள் வெந்திருக்காது. இதற்குக் காம்பிலிருந்து இதழ் வரை நூல்நூலாக நீள் வாக்கில் பிரித்துப் பயன்படுத்துங்கள்.

9. நறுக்கிய காளான்களை நீண்ட நேரம் வைத்திருக்கக் கூடாது. காரணம் அதிலுள்ள சத்துப் பொருட்கள் குறைந்து விடும். எனவே நறுக்கியவுடனே சமைக்கப் பயன்படுத்துங்கள்.

10. காளான்கள் மிகவும் மென்மையானது. இதனை நீண்ட நேரம் வேக விட்டால் கரைந்து விடுவதுடன் சத்துப் பொருட்களும் அழிந்து விடலாம். எனவே குறைவான நேரத்தில் வேக வைத்து இறக்கி விடுங்கள்.

11. காளான்களில் நீர்ச்சத்து அதிகம். எனவே இதனை மனதிற் கொண்டு காளான்களை வேக விடும் போது அளவுடன் தண்ணீர் சேருங்கள்.

12. காளான்களை சமைக்கும் போது சோடா உப்பு சேர்க்கக் கூடாது. அவ்வாறு சேர்த்தால் காளான்களின் மணமும், சுவையும் குறைவதுடன் சத்துப் பொருட்களும் அழிந்து போய் விடும்.

13. காளான்களை சமைத்தவுடன் சாப்பிடுவது நல்லது. மதிய வேளையில் சமைத்தவற்றை மீண்டுமொருமுறை இரவில் சூடு செய்து சாப்பிடக் கூடாது. கெட்டு விடும். எனவே அதிக நேரம் வைத்திருந்து உண்பதனைத் தவிருங்கள்.

14. உலர் காளான்களை காற்றுப் புகாத, கெட்டியான பாலிதீன் பைகளில் நிரப்பி ஒட்டி வையுங்கள். இதனால் காளான்கள் நமத்துக் கெட்டுப் போவது தவிர்க்கப்படும்.

15. காய வைத்துப் பதப்படுத்தப்பட்ட (Dried Mushroom) உலர் காளான்களை கொதிக்கின்ற நீரில் சுமார் 5 நிமிடம் வைத்திருந்து எடுங்கள். இதனால் உலர் காளான்கள் மிருதுவாகி பச்சைக் காளான்கள் (Fresh Mushroom) போல் தோற்றமளிக்கும். பின் இதனைக் கொண்டு அனைத்து வகை உணவுகளும் தயார் செய்யலாம்.

16. டப்பாவில் பதப்படுத்தப்பட்டுள்ள (Canned Mushroom) காளான்களை அதிலுள்ள உப்புக் கரைசலுடன் சேர்த்து 3 நிமிட நேரம் கொதிக்க விட்டு சமையலுக்குப் பயன்படுத்துங்கள்.

காளான் சாலட்

தேவையான பொருட்கள் :

காளான் - 200 கிராம்

மிளகுப் பொடி - ¼ கரண்டி

சீனி - 2 தே. கரண்டி

எலுமிச்சம்பழச்சாறு - ½ தே. கரண்டி

டொமட்டோசாஸ் - ¼ கப்

கொத்தமல்லித் தழை - ஒரு கொத்து

செய்முறை :

காளானைச் சுத்தம் செய்து சிறு துண்டுகளாக்கி ஹாட்பேக்கில் வைத்து ப்ரிஜ்ஜில் வையுங்கள்.

சாப்பிடப் பரிமாறுவதற்கு முன், அனைத்துப் பொருட்களையும் காளான் துண்டுகளுடன் கலந்து தாருங்கள்.

இதனை வெகு நேரம் வைத்திருந்தால் தண்ணீராக வடிய ஆரம்பித்து விடும்.

இப்பொழுது இயற்கையான பச்சை காளான் சாலட் சாப்பிடலாமா!



மோர்க் குழம்புக்கு ஓமம் சிறிது வைத்து அரைத்தால் வாசனையாக இருக்கும்.

— பார்வதி

காளான் பூண்டு ஃப்ரை

தேவையான பொருட்கள் :

காளான் - 200 கிராம்

பூண்டு - 10 பல்

மிளகுப் பொடி - 2 தே. கரண்டி

உப்பு - ருசிக்கேற்ப

எண்ணெய் - தேவைக்கேற்ப

செய்முறை :

வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் காளான் துண்டுகள் மற்றும் நசுக்கிய பூண்டையும் போட்டு வதக்குங்கள்; சிறிது நேரத்தில் மிளகுப் பொடியும், உப்பும் சேர்த்து புரட்டி விட்டு மூடி விடுங்கள்.

காளானிலிருந்து தண்ணீர் பிரிந்து வரும்; வற்றியதும் சிவக்க வறுத்து இறக்குங்கள்.

சுவையான, மணம் நிறைந்த காளான் பூண்டு ஃப்ரை தயார்.

காளான் சீஸ் டோஸ்ட்

தேவையான பொருட்கள் :
பிரட்துண்டுகள் - 6
காளான் - 200 கிராம்
சீஸ் - 2 மே. கரண்டி
டொமட்டோ சாஸ் - 2 தே. கரண்டி
வெண்ணெய் - 2 தே. கரண்டி
மிளகுத்தூள் - ¼ தே. கரண்டி
பூண்டு - 5 பல்
உப்பு - ருசிக்கேற்ப

செய்முறை :

காளானைப் பத்தை பத்தையாக நறுக்குங்கள் (Thin Slices)

வாணலியில் வெண்ணெய் விட்டு காய்ந்ததும் நசுக்கிய பூண்டைப் போடுங்கள். இதனுடன் உப்பு, மிளகுத் தூள், காளான் துண்டுகளையும் சேர்த்து வதக்குங்கள்.

நன்கு வதங்கிய பின்பு டொமட்டோ சாஸையும், சீஸையும் கலந்து லேசாக புரட்டி விட்டு இறக்குங்கள்.

பிரட்டை டோஸ்டரில் டோஸ்ட் செய்யுங்கள். டோஸ்டர் இல்லாதவர்கள் தோசைக் கலில், கருகி விடாமல் பொன்னிறமாக வேக விட்டு எடுங்கள்.

தயார் செய்து வைத்துள்ள கலவைப் பேஸ்ட்டை டோஸ்ட் செய்துள்ள பிரட் துண்டங்களில் தடவுங்கள்.

இது மாலை டிபனுக்கு!

காளான் கறி

தேவையான பொருட்கள் :
காளான் - 200 கிராம்
தேங்காய் - ஒரு மூடி துருவியது
இஞ்சி + பூண்டு அரைத்தது - ஒரு மே. கரண்டி
சீரகம் - 1 தே. கரண்டி
வெங்காயம் - 2
பச்சை மிளகாய் - 5
கொத்தமல்லிப் பவுடர் - 3 தே. கரண்டி
மஞ்சள் பவுடர் - ¼ தே. கரண்டி
உப்பு - ருசிக்கேற்ப
எண்ணெய் - தேவைக்கேற்ப

செய்முறை :

துருவிய தேங்காய்ப்பூ, சீரகம் மற்றும் இஞ்சி+ பூண்டு கலவை போன்றவற்றை நன்கு அரைத்துக் கொள்ளுங்கள்.

வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் நறுக்கிய வெங்காயத்தைப் போட்டு லேசாக வதக்குங்கள். இதனுடன் அரைத்து வைத்துள்ள கலவையையும், கொத்தமல்லிப்பவுடர், மஞ்சள் பவுடரையும் சேர்த்து காளான் துண்டங்களையும் சிறிய பச்சை மிளகாயையும் போட்டு வேக விடுங்கள். உப்பு சேர்த்து ஒரு கப் தண்ணீர் ஊற்றுங்கள்.

(காளானிலிருந்து தானாகவே தண்ணீர் பிரிந்து வரும் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருங்கள்) பின் சுமார் பத்து நிமிடத்தில் கலவையை லேசாக புரட்டி விட்டு இறக்குங்களேன்!

காளான் சட்னி

தேவையான பொருட்கள் :-
காளான் - 200 கிராம்
பெரிய வெங்காயம் - 2
தக்காளி - 3
பூண்டு - 5 பல்
பச்சை மிளகாய் - 4
இஞ்சி - 1 துண்டு
உப்பு - ருசிக்கேற்ப
மஞ்சள் தூள் - 1 தே. கரண்டி
மல்லித் தூள் - 1 தே. கரண்டி
சோம்பு - 1 தே. கரண்டி
சீரகம் - 1 தே. கரண்டி
கரம் மசாலா பவுடர் - 1 தே. கரண்டி
கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை - தாளிப்பதற்கு


எலுமிச்சம் பழத்தில்தான் சர்பத் போட வேண்டும் என்பதில்லை. வீட்டுக்கு வாங்கிய ஆரஞ்சுப் பழத்தை உரித்து சாப்பிட்டுப் பார்த்தால் ஒரே புளிப்பு. ஜூஸ் எடுத்து இனிப்பு கலந்து சர்பத் போட்டு சாப்பிட்டால் சுவையோ சுவை, கூடவே ஆரஞ்சு மணமும். என் இரண்டு வயது பையன் கூட சூப்பர்னு சொல்றான்.

— சா. தேவகி



குட்டி பாட்டில்களை தூர வீசாமல், பஞ்சுகளை அதன் மீது பெவிகால் கொண்டு ஒட்ட வைத்து கலர் கலராக பல பொம்மைகள் செய்து டீ.வி. மீது வைக்கலாம். கண்களுக்கு சிறு மணி களையும், குண்டு மணிகளையும் பயன் படுத்தலாம்.

— எஸ். விஜயா சீனிவாசன்



எண்ணெய் - தேவைக்கேற்ப

செய்முறை :

பூண்டு, பச்சைமிளகாய், இஞ்சி, மல்லித் தூள், மஞ்சள் தூள், கரம் மசாலா பவுடர், சோம்பு, சீரகம், வெங்காயம் போன்றவற்றை மிக்ஸியில் அரைத்துக் கொள்ளுங்கள்.

தக்காளியையும் காளானையும் தனியாக மிக்ஸியில் அரையுங்கள்.

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை போட்டுத் தாளித்து, அரைத்து வைத்துள்ள மசாலா கலவையை மட்டும் இதனுடன் போட்டு பொன்னிறமாக வரும் வரை புரட்டுங்கள்.

பொன்னிறமாக வந்த நேரத்தில் காளான் கலவையைச் சேருங்கள். உப்பு போடுங்கள்.

நன்கு தொக்கு மாதிரி வரும் நேரத்தில் இரண்டு தேக்கரண்டி எண்ணெய் மேலே தெளித்து, இரண்டு கிளறு கிளறி இறக்குங்கள்.

இட்லி, தோசைக்கு தொட்டுச் சாப்பிட்டு விட்டு சுவையைத்தான் சொல்லுங்களேன்!

காளான் தம் ஆலு

தேவையான பொருட்கள் :

காளான் - 100 கிராம்
பெரிய உருளைக்கிழங்கு - 3
பெரிய வெங்காயம் - 1
தக்காளி - 1
பூண்டு - 5 பல்
மசாலாப் பொடி - 1 தே. கரண்டி
தனியாப் பொடி - 1 தே. கரண்டி
உப்பு - ருசிக்கேற்ப
எண்ணெய் - தேவைக்கேற்ப

செய்முறை :

காளானைச் சுத்தம் செய்து சிறு சிறு துண்டுகளாக்குங்கள். பெரிய வெங்காயம் மற்றும் தக்காளியையும் துண்டுகளாக்குங்கள். பின் இவைகளை வாணலியில் எண்ணெய் விட்டு வதக்குங்கள். இதனுடன் பூண்டு, மசாலாப் பொடி, தனியாப் பொடி சேருங்கள். உப்பு போட்டு நன்கு வதக்கி இறக்குங்கள். இப்பொழுது காளான் கலவை தயார்.

உருளைக்கிழங்கின் மேல் தோலினைச் சீவுங்கள். பின் நடுவில் ஒரு இஞ்ச் அளவிற்கு துளை போடுங்கள். இத்துளையினுள் வதக்கி வைத்துள்ள காளான் கலவையை இட்டு நிரப்புங்கள்.

பின் வாணலியில் எண்ணெய் சற்று அதிகமாக விட்டு உருளைக்கிழங்கினை எடுத்துப் போடுங்கள். வாணலியின் வாயினை தட்டு கொண்டு இடைவெளியில்லாமல் நன்கு மூடுங்கள். இத்தட்டின் மேல் தண்ணீர் ஒரு இஞ்ச் அளவிற்கு நிரப்பி அடுப்பினை மிகவும் சன்னமாக எரிய விடுங்கள்.

சுமார் பத்து நிமிடங்களுக்குப் பின்னர் தட்டை எடுத்து விட்டு, உருளைக்கிழங்கினை புரட்டி விட்டு மீண்டும் தட்டினை மூடி வேக விடுங்கள்.

இவ்வாறு செய்தால் உருளைக்கிழங்கு நன்கு வெந்து பொன்னிறத்தில் காட்சியளிக்கும்.

நம் ஆளுவிற்கு காளான் தம் ஆலு தந்து ஆனந்தம் அடையலாமா!

குறிப்பு : தண்ணீர் தட்டில் ஊற்றி வைப்பதால் வாணலியின் உள்ளிருந்து வரக்கூடிய ஆவி தட்டின் மேல் படும். இந்த ஆவி தண்ணீர் திவலைகளாக மாறி மீண்டும் சொட்டு, சொட்டாக வாணலியின் உள்ளேயே வடிந்து விடும். இதனால் உருளைக்கிழங்கு அடிப்பிடித்து, தீய்ந்து விடாமல் வேக உதவும்.

காளான் கலவையில் சற்று தூக்கலாக உப்பு சேருங்கள். ஏனெனில் உருளைக்கிழங்கினுள் கலவையை அடைத்து வேக வைக்கும் பொழுது, இவ்வுப்பு உருளைக்கிழங்கினையும் சார்ந்து சுவையை அதிகரிக்க வேண்டும்.

போடி. **பா. கிருஷ்ணகுமார்**

வீட்டுக்கு வீடு...



அகிலா கார்த்திகேயன்

“கமலம்... அம்பி வந்துட்டான் போல இருக்கு. கதவை தட்டற சப்தம் கேட்கறது” என்று தன் மருமகளை கிழவி அஞ்சனாட்டி அம்மாள் எழுப்பப் பார்த்தாள். கமலம் எழுந்திருப்பதாக தெரியவில்லை. தானே அந்த இருட்டில் தட்டுதடுமாறி எழுந்து போய் சுட்சைப் போட்டாள். கமலம் விசுக்கென்று விழித்துக் கொண்டாள்.

“அப்படி என்ன அவசரம்... எழுப்பிவிட்டா நானே எழுந்துக்க போறேன்... இருட்டிலே எங்கேயாவது விழுந்து வச்சா யார் அவஸ்தைப் படறதாம்” கோபமும் எரிச்சலுமாக கமலம் எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

கணவர் அம்பிதான் வந்திருந்தார்.

“யார் அம்பி தானே” உள்ளேயிருந்து கிழவி ஆவலாகக் கேட்டதற்கு கமலம் பதில் சொல்லவில்லை.

“ஆமாம்... நான்தாம்மா...” அம்பி வாஞ்சையோடு தன் தாயாருக்கு பதிலுரைத்தபடி உள்ளே வந்தார்.

“போன காரியம் என்ன ஆச்சு?” கிழவி தொடர்ந்தாள்.

‘‘பார்த்து பேசிட்டு வந்திருக்கேன்... கொஞ்சங்கூட மசியமாட்டேங்கறான். ஒரு வாரத்திலே சொல்றேன்னு சொல்லியிருக்கான். பார்ப்போம் எல்லாம் ஆண்டவன் விட்ட வழி’’ சற்று அலுப்போடு அம்பி சொன்னதும் கமலம் குறுக்கிட்டாள்.

“அப்போ... போன காரியம் ஒண்ணும் ஆகலையாக்கும். அப்போ வியாழக்கிழமையே திரும்பிவர வேண்டியதுதானே. ரெண்டு மூணு நாளா எங்கேயெல்லாம் அலைஞ்சிட்டு வர்றீங்க?” கமலம் எதையோ குத்திக் காட்டுவது போல் கேட்டாள்.

“அதுக்குன்னு அத்தனை தூரம் போயிட்டு கூட பொறந்தவங்களை பார்க்காம வரமுடியுமா சொல்லு... சேலத்திலே ஒரு நாள், வேலூரிலே ஒரு நாள் தங்கினேன். வரவழியிலே காஞ்சிபுரத்திலே வெங்குட்டுவை எட்டிப் பார்த்துட்டு வந்தேன்” ஸ்கூல் வாத்யாரிடம் பையன் பதில் சொல்வதுபோல அம்பி தன் மனைவியிடம் சற்று பயந்தபடி சொல்லி கொண்டிருந்தார்.

ஆனால் கிழவிக்குத் தெரியும், தன் பிள்ளை கட்டாயம் எல்லோரையும் பார்த்து விட்டுதான் வருவானென்று. அதைப் பற்றி விசாரிக்கத்தான் ஆவலாக உட்



கார்ந்திருந்தாள். ஆனால் எதையாவது கேட்டால் கமலத்திற்குக் கோபம் அதிகமாகுமே என்று பயந்து வாயைத் திறக்கவில்லை.

அம்பிக்குத் தன் அம்மாவின் மனம் புரிந்திருந்தது.

"பாவம்... சாரதா, கல்யாணி, வெங்குட்டு எல்லோருக்கும் நான் போனதிலே ரொம்ப சந்தோஷம். சாரதா ஜவ்வரிசி வடாம் கொடுத்தனுப்பியிருக்கா உனக்குப் பிடிக்குமேன்னு. வேண்டாம்னா கேட்காம வெங்குட்டு உங்கிட்டே கொடுக்கச் சொல்லி நூறு ரூபா கொடுத்திருக்கான்'' அம்மாவிடம் அம்பி சொல்லிக் கொண்டே இருக்க,

"சரி... சரி... மணி பத்தரையாறது. சாப்பிட உட்கார்ந்தா நான் போட்டுட்டு படுத்துப்பேன்" என்று கமலம் அலுத்துக் கொண்டாள். 'ணங்' கென்று சாப்பிடும் தட்டையும், டம்ளரையும் அவள் வைத்தபோது வெறுப்பு வெளியிட்டது.

அம்பிக்குத் தன் மனைவியின் வெறுப்பிற்குக் காரணம் தெரியாமலில்லை. வாங்குகிற சம்பளம் வாய்க்கும் வயிறுக்குமாக பற்றாத நிலையில், அவசியமான காரியத்திற்குப் போனோமா வந்தோமா என்றில்லாமல் அக்கா, தங்கை, தம்பி என்று ஊரை எல்லாம் தான் சுற்றிக் கொண்டு வருவது அவளுக்கு ஆத்திரமாகத் தான் இருக்குமென்று அவர் உணர்ந்தேயிருந்தார்.

ஆனாலும் அவர் பாசம் விடுகிறதா....

தட்டின் முன் உட்கார்ந்த அம்பி, அறையின் மூலையில் ஒடுங்கிப் படுத்திருந்த தாயாரை நோக்கினார். இன்னும் அவள் உறங்கவில்லை. கிழவி காதைத் தீட்டிக் கொண்டு, ஊர் சமாசாரங்களுக்குக் காத்திருப்பது புரிந்தது. தன் மனைவியிடம் பேசுவது போல், கிழவியின் காதில் விழ சற்று உரக்கவே சொல்ல ஆரம்பித்தார் அம்பி....

"கொடுமுடியிலே போன காரியம் தகையாதுன்னு தெரிஞ்சதும் நேரே சேலம் போனேன். சாரதா அக்காவை அடையாளமே தெரியலே... துரும்பா ஒடுங்கிப் போயிருக்கா. நாலு மாசமா நரம்புத் தளர்ச்சின்னு கையும் காலும் குடையறதாம். உள்ளூர் டாக்டர் யார்கிட்டயோ உடம்பைக் காட்டி கெடுத்துண்டிருக்கா. நான் போகும் போது வீட்டில் யாருமில்லே... ரெண்டு பிள்ளை மாட்டுப் பொண்களும் வேலைக்குப் போயிருந்தா. அத்திம்பேருக்குக் கண் ஆபரேஷனாம்... ஈரோடிலே ராஜி வீட்டிலே இருக்காராம். 'அம்பி நான் உன் கூடவே வந்துடறேன்டா. எனக்கு இங்கே சரிபடலே... மெட்ராஸிலே பெரிய டாக்டரா காட்டினா தேவலை'ன்னு சாரதா அக்கா ஓபனாவே கேட்டுட்டா. பாவம் பிள்ளைகள் சரியா கவனிக்கிறதில்லையோன்னு தோணறது... 'அக்கா நீ எப்படியும் கல்யாணத்துக்கு வருவேயில்லே... அப்போ அங்கேயே தங்கிடற மாதிரி வந்துடு'ன்னு சொல்லிட்டு வந்திருக்கேன். இப்பவே அழைச்சிண்டு வரலாம்னு பார்த்தா பஸ்சார்ஜ் போறாது போல இருந்தது."

கேட்டுக் கொண்டிருந்த கிழவிக்கு தன் மூத்த பெண் நிலையைக் குறித்து கண்களில் ஈரம் கசிந்தது.

"ஆமாம்... இங்கே சொத்தும் சொகமும் தட்டுக் கெட்டு போறது.. அக்காவைக் கொண்டு வந்து வச்சுண்டு சீராட்டறதுதான் குறையறதாக்கும்'' கமலம் முணுமுணுப்பது அம்பிக்குக் கேட்காமலில்லை.

அதைப் பொருட் படுத்தாததுபோல அம்பி தொடர்ந்தார்.

''சேலத்திலேர்ந்து இளம்பி வேலூர் வந்தேன்... அங்கே போனதும் கல்யாணி 'வாங்கோ அண்ணா.. தெய்வமே அனுப்பி வைச்சா மாதிரி வந்திருக்கீங்க.. இவரைப் பாருங்க ஒடிஞ்சி போய் உட்கார்ந்திருக்கார்'னு சொன்னா... மாப்பிள்ளைய பார்த்தா பகீர்னு இருந்தது... தாடியும் மீசையுமா எதையோ பறி கொடுத்தா மாதிரி இருக்கார். கம்பெனியிலே ஏதோ பிராப்ளமாம் சஸ்பெண்ட் பண்ணியிருக்காங்களாம். 'ஏம்மா ஒரு மாசத்துக்கு மேலே ஆறதுன்னு சொல்றே... கூடப் பொறந்தவன் நான் இருக்கேன் ஒரு கடுதாசு போட்டா என்ன'ன்னு கோவிச்சுண்டேன். 'நீங்களே சிரமப்படறச்சே ஏன் சொல்லணும்னு விட்டுட்டேன்'னு சொன்னாள். 'போடி பைத்தியக்காரி இந்த மாதிரி சமயத்திலே கூட ஒத்தாசை



ரசம் செய்யும் போது அத்துடன் கொத்த மல்லி கீரை போடுவது வழக்கம்; இதற்கு பதில் சிறிது பொதினா கீரையிட்டு கொதிக்க வைத்து இறக்கவும். பொதினா ரசம் புதுமாதிரி யான வாசத்துடன் ஆனால் சுவையாக இருக் கும். ஜீரணத்தை அதிகரிக்கும் ஆற்றல் பொதினாகீரைக்கு உண்டு.

— ராதிகா அழகப்பன்

செய்யலேன்னா அண்ணன் தம்பின்னு எதுக்கு இருக்கோம். ஊருக்குப் போனதும் ஏதாவது பணம் ஏற்பாடு பண்ணி அனுப்பறேன்னு சொல்லிட்டு வந்தேன். பாவம் கல்யாணி கழுத்திலே, காதிலே ஒண்ணும் இல்லே. ஆபீஸ்லே விவகாரம் ஆயிடுத்துன்னு நகையெல்லாம் வைச்சி ஒப்பேத்தியிருக்கா. அஞ்சு பத்துன்னு கைமாத்து வாங்கி காலம் தள்றா... கண்றாவியாயிருக்கு...'' அம்பிக்கு இதைச் சொல்லும்போது நெஞ்சை அடைத்தது. கிழவியும் தன் புடைவையின் தலைப்பால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சியது தெரிந்தது.

“இங்கே என்ன வாழறதாம்.... நகையும் நட்டுமா நான் மினுக்கிண்டா நிக்கறேன். இருந்த ஒரே ஒரு ரெட்டை வடமும் பேங்கிலே தூங்கறது'' கமலம் புலம்புவது லேசாகக் கேட்டது. வெந்நீராக ஒரு ரசத்தை தட்டில் ஊற்றிவிட்டு எரிச்சல் பார்வை பார்த்தாள்.

“வெங்குட்டு வீட்லே ரொம்ப நாழியில்லே... ஒரு மணி நேரம்தான் இருந்தேன். 'அம்மாவுக்குப் பணமே அனுப்ப முடியலேன்'னு வருத்தப் பட்டான். “நீ என்னடா பண்ணுவே... வீட்டு லோன் மூவாயிரம் பிடிச்சுக்கறா சிரமம் தான்'னு சொன்னேன். மகாதேவனுக்கு பேமெண்ட் சீட் கிடைக்கும் போல இருக்காம். மெட்ராஸ் காலேஜாம். 'ஹாஸ்டல் அது இதுன்னு செலவு பண்ணாதே இங்கேயே இருந்து படிக்கட்டும்'னு சொல்லிட்டு வந்தேன்'' என்று தன் சுற்றுப் பயணத்தின் விபரங்களை முடித்தவுடன்தான் அம்பிக்கு சாப்பாட்டின் மேல் கவனம் திரும்பியது.

"கமலம் தொட்டுக்க ஒண்ணும் இல்லையா... ஒரு அப்பளமாவது பொறிச்சுப் போடேன்'' என்றார்.

“ரா வேளையிலே இல்லாததையெல்லாம் கேட்டா எப்படி'' என்று அடக்கினாள் கமலம்.

"அப்பளமில்லேன்னா என்ன... சாரதா கொடுத்திருக்காளாமே ஜவ்வரிசி வடாம் அதை பொறியேன்... பாவம் தொட்டுக்க ஒண்ணுமில்லாம எப்படி சாப்பிடுவான்'' என்று கிழவி தன்னையும் மீறி குறுக்கிட்டு விட்டாள்.

கமலம் ஆங்காரமாக ஆரம்பித்தாள்.

"எல்லாத்தையும் புட்டு புட்டு சொல்லணுமாக்கும். வீட்டிலே ஒரு ஸ்பூன் எண்ணெய் இல்லே. மளிகைக்காரன் பாக்கியை அடைச்சாதான் எதையும் தருவேன்னு சொல்லிட்டான். வீட்டிலே சவ்விக்காக இல்லே.... இருக்கிற கடனை எல்லாம் தீக்கலாமேன்னு கிராமத்திலே இருக்கிற நெலத்தை பைசல் பண்ணிட்டு வாங்கன்னு அனுப்பினா. போன காரியத்தை ஜெயிச்சுண்டு வராமே ஊரை எல்லாம் சுத்திண்டு செலவு பண்ணிண்டு வர்றீங்க... இங்கேயே தரித்திரம் தாண்டவமாடறது. இதிலே அவங்க கஷ்டபடறா, இவங்க கஷ்டப்படறாங்கன்னு ஊர்லே இருக்கிறவங்க பத்தியெல்லாம் கவலை... எல்லாரையும் இங்கே வா சீராட றேன்னு சொல்லிட்டு வந்துட்டா ஆச்சா... அப்படி எல்லாரையும் வைச்சுண்டு கொண்டாடற மாதிரி உங்க அப்பா என்ன சொத்தையும், பத்தையுமா எழுதி வைச்சுட்டுப் போயிருக்கார்'' கமலம் தன் ஆத்திரத்தை எல்லாம் கொட்டி படபடவென பொரிந்து தள்ளினாள். அம்பிக்குச் சங்கடமாக இருந்தது.

ஆனால் கிழவி எதையோ எண்ணி சிரித்துக் கொண்டாள்.

'அடி பைத்தியக்கார மாட்டுப் பெண்ணே... என் புருஷன் அப்படி என்ன சொத்தை விட்டுட்டு போனார்னு கேட்கறயே... தன்னோட கஷ்ட ஜீவனத்திலும் பிறத்தியாரோட கவலையை தம்மேலே போட்டுண்டு அவங்களுக்கு ஒத்தாசை பண்ணணும்னு ஒரு மனோபாவம் உன் புருஷன் கிட்டே இருக்கே.... அதை விடவா பெரிய சொத்து இருக்க முடியும்' என்று நினைத்தபடி தன் இடுங்கிய கண்களால் சுவற்றில் மாட்டியிருந்த தன் கணவரின் போட்டோவை பார்த்தாள் கிழவி.

விழித்ததும் கிழித்ததில் படித்தது
(காலண்டர் தாளை)

* பழகப்பழக பால் புளிக்கலாம்
  பண்புள்ள மனைவி புளிப்பதில்லை
* ஆற்றல் உள்ளவனுக்கு
  ஆடம்பரம் தேவை இல்லை
* எவருக்கும் புகழ் தற்செயலாக
  வருவதில்லை - புகழ் என்பது
  ஒருவருடைய உறுதிக்கும் உழைப்புக்கும்
  ஏற்ற கூலியே
* வறுமை என்பது தற்காலிகக் கோளாறு
  நிறைய செல்வம் என்பது நிரந்தர நோய்
* கடவுள் அடிக்கடி நம்மிடம் வருகிறார்
  பெரும்பாலும் நாம்தாம் வீட்டில்
  இருப்பதில்லை
* நல்ல மருமகன் கிடைத்தவன் ஒரு
  மகனை அடைகிறான்
  கெட்ட மருமகன் அடைந்தவன் ஒரு
  மகளை இழக்கிறான்
* பணக்கார முதலாளிக்கு ஜலதோஷம்
  என்றால் அவருடைய
  வேலைக்காரர்கள் எல்லாம் தும்முவார்கள்
* வாழ்க்கையில் உறுதியாக உள்ளவருக்கு
  இவ்வுலகில் அசாத்தியமானது எதுவும்
  இல்லை

— சுலோசனா பார்த்தசாரதி

பல துறைகள், பல சுவைகள்!

குழந்தை தாயை அடிக்கும். பிறகு சிறிது நேரத்தில் தாயிடமே கொஞ்சும். ஏன்? குழந்தைக்கு உள்ள ஒரே இடம் தாய்தான். அங்குதான் அது தன் உணர்ச்சிகள் அனைத்தையும் காட்ட முடியும்.

இந்தக் குழந்தையை போலவே பெரியவர்கள் சிலரும் நடந்து கொள்கின்றனர். ஒரே இடத்தில் தம் கோபதாபங்கள் அத்தனையையும் காட்டுகின்றார்கள். விளைவு மனக்கசப்பு.

ரம்யா அப்படியில்லை. புத்திசாலித்தனமாக அவள் நாலைந்து துறைகளில் தன் வாழ்வை முழுமைப்படுத்திக் கொள்கின்றாள். அலுவலகத்தில் வேலையில் கவனம் செலுத்தி நல்ல பெயர் வாங்கிக் கொள்கின்றாள். அன்பு காட்ட விழையும் தன் மனத்திற்கு வடிகாலாக வீட்டில் அன்பைப் பொழிகின்றாள். நுகர்வோர் பாதுகாப்பு சங்கத்தில் அவள் ஓர் உறுப்பினர். அங்கு போராட விழையும் தன் மனத்திற்கு வாய்ப்பளிக்கின்றாள். பூவேலையில் தன் படைப்பாற்றலை வெளிப்படுத்துகின்றாள். தினமும் அரைமணி நேர தியானத்தில் தன்னை மறந்து விடுகின்றாள்.

இப்படி அவள் செய்யாமல், கணவனிடமே தன் மனத்தேவைகள் யாவும் நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்த்தாளானால், அது இயலாத காரியம்.

தன் மனத்துக்குப் பிடித்த பொழுதுபோக்கு ஒவ்வொருவர்க்கும் அவசியம். தம் திறமையை, தம் படைப்பாற்றலை முழுமையாகப் பயன்படுத்த அது வாய்ப்பளிக்கும். அலுவலக வேலையை ராதிகா நன்றாகச் செய்த போதிலும், ஓரளவிற்கு மேல் தன் தனித்திறமைகளை அங்கு காட்ட இயலாது. "என்ன, போரடித்த வேலை" என்று அவள் அலுப்படைவதில்லை. ஏனென்றால், வேலையை விட்டு வந்ததுமே, தனக்குப் பிரியமான ஓவியம்



ரைவதில் அவள் உற்சாகம் அடைகின்றாள்.

நவரசமான எந்த உணர்ச்சியுமே தவறில்லை; தவறு எல்லாம் அதனை பொருத்தமில்லா இடத்தில் காட்டுவதுதான் என்கின்றனர் உளவியலார். அநீதியை எதிர்த்து வெறுப்பைக் காட்டுவது அவசியம். சிசுவதையை எதிர்த்துப் போராடுங்கள். முதியோர் கல்விக்காக வாதாடுங்கள். பெண்ணுரிமைக்குக் குரல் கொடுங்கள். ஆனால் படிக்க மறுக்கிறார்களே என்று பிள்ளைகள் மீது வெறுப்பு கொள்ளாதீர்கள். எந்த விதத்தில் பிள்ளைகளை உற்சாகப்படுத்தி படிக்கத் [illegible] என்று சிந்தனைக்கு



[illegible] கொடுங்கள். அது [illegible] வேலைக்காரியை புரிந்து கொள்ள முயலுங்கள். வெறுக்காதீர்கள்.

தக்க விதத்தில் மனத்தேவை பூர்த்தியாக வேண்டும் என்பது நமக்குத் தெரியாதது அன்று. "விளையாட வேண்டுமா? வெளியில் போய் விளையாடுங்கள். வீட்டில் அடிபிடி சண்டை போடாதீர்கள்" என்று பிள்ளைகளிடம் சொல்கிறோமே; அது விளையாட்டுத் தேவை நிறைவேறா விட்டால், தமக்குள்ளே சண்டையாக மாறி விடுகின்றது என்பதாலேதான்.

ரேவதிக்கு இரண்டு வகையான தோழியர் உண்டு. முதல் வகையினரிடம் அவள் மனம் விட்டுப் பேசுவாள், அவர்கள் கேட்பார்கள். இன்னொரு வகையான தோழியர் அவளிடம் மனம் விட்டுப் பேசுவார்கள்; அவள் ஒரு வார்த்தை பேசாமல் முழுவதும் கேட்பாள். அவரவர் இயல்பு அறிந்து அதற்கேற்ற எதிர்பார்ப்போடு நடப்பதுதானே நல்லது!

தன் ஐந்தாண்டு மணவாழ்வில் மல்லிகா ஓர் உண்மையை கண்டு கொண்டாள். எவ்வளவுதான் கணவன் மீது அன்பு செலுத்தினாலும், அவள் மனம் நிறைவுறவில்லை. இன்னும் அன்பைப் பொழிய வேண்டும் என்னும் ஆர்வம் அவளை விட்டபாடில்லை. நன்கு சிந்தித்த பின், சேவை மனப்பான்மை தான் தன் ஆத்மதிருப்திக்கு வாய்ப்பளிக்கும் என உணர்ந்தாள். வீட்டு வேலைகள் முடிந்த பின் ஏழைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினாள். மனம் அமைதியடைந்தது.

பல நறுமணங்களை நுகர வேண்டுமானால், பல மலர்களை வைத்திருக்க வேண்டும். ஒரே மலரில் எல்லாம் இருக்குமா? நம் மனத்தேவைகளுக்கு வடிகாலாக ஒரே துறையை கைக் கொள்ளாமல், பல துறைகளில் ஈடுபட்டு வாழ்வை முழுமையாக்கிக் கொள்வோம்.


— பத்மாவதி செல்வராஜ்

SRICHAKRA TRIANGLE MATHEMATICAL MYSTERY IN BUSINESS & POLITICS 1991-1996

Tel : 091-044-4937482 Fax : 091-044-4952705 P.O. Box No : 5099 Sennai - 600 028
Visit Our Home Page : **http : //www.Kode.net/~foresee/fractals/**

R. K. S. MUTHUKRISHNAN

Name of the Newspaper & Years	News	Events took Place	Year
NAGPUR TIMES LOKMAT TIMES SUN TIMES NATIONAL MAIL THE SENTINEL 1991	1992 and the **ASHOK CHAKRA** will face both external and Internal dangers that year	India faced communal Problems in **BABRI MASJID (6-12-1992)**	1992
DAILY NEWS 3.9.1992	On November 1992 Bill Clinton US Presidential election, Bill Clinton has ten percent more chance than George Bush.	Won the Presidential election (November 1992)	1992
HINDUSTAN TIMES (Patna) 27.2.1992	The expert, Mr. R.K. Senniyaswamy Muthukrishnan, said here yesterday that using this method he could say with certainity that the **NARASHIMHA RAO REGIME WOULD SURVIVE THE NO-TRUST VOTE** but only to get into "Instrumountable" problems from October.	Narashimha Rao won the no confidence motion in the parliament **(28.2.93)**	1993
GUIDE INDIA March 1994	**NOW WE MOVED ON TO A VERY INTERESTING QUESTION WHAT DOES HE FORESEE FOR INDIA DURING 1994?** He has Predicted that India will face a lot of internal disturbances, but taking the Ashok Chakra into consideration, he sees good leadership.	India suffered with a disease **PLAQUE** and now the Political Situation. (Last quarter period of 1994)	1994
DAILY NEWS 3.9.1992	**NARASHIMHA RAO**, the Prime Minister, will face a **CHALLENGE** from forces led by **ARJUN SINGH**	Political Situation in CONGRESS PARTY **(1995)**	1995
T. RAJENDRA NIN USHA (Tamil Weekly) 18-24/4/95 (This weekly released in 18-4-94 in Madras)	சந்திரிகாவுக்கு பகை வரும்.	**19-4-95 The War start** between Srilankan Military and **LTTE**	1995
DAILY NEWS 3.9.1992	Neither a separate Tamil Eelam nor a separate Tamilnadu is possible. "Muthukrishnan says.	Now Political Situation in Sri Lanka shows the same.	
EXPRESS STARTELLER NOV. 1994	Prediction for P. V. Narashimha rao. The predictions for R. K. S. muthukrishnan through srichakra triangle. the **year 1996** will be **a downfall for Mr. P. V. Narashimha Rao** who will have to face lot of problems		1996
DINAKARAN (Tamil Daily) 26.5.1995	நரசிம்மராவுக்கு 96-ம் ஆண்டில் வீழ்ச்சி.		1996
SOCIETY March 1996	Muthukrishnan looks into his crystal ball (in his case the Sri Chakra) and predicts the defeat of Narasimha Rao at the Centre and a similar ending **to Jayalitha's** regime in Tamil Nadu.	**The Election Result in May**	1996
DAILY NEWS 3.9.92	Muthukrishnan's prediction about **the Kashmir** problem is that it would get solved.	**Faruq Abdullah** Government in JAMMU AND KASHMIR	1996



என் வாழ்வே வேள்வியானது!


பல குழந்தைகளைப் பெற்றுப் பண்புடன் வளர்த்த நம் முன்னோர்கள் காலம் மாறி ஒரிரு குழந்தைகளைப் பெற்று அவர்களை நல்ல முறையில் வளர்க்க கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் காலக்கட்டம் இது. சாதாரண குழந்தைகளையே இன்று வளர்க்கப் படாதபாடுபடும் போது குறையுள்ள குழந்தையை – பெண் குழந்தையைப் பெற்று, அதனை பிறர் பாராட்டும்படி வளர்த்துள்ள சண்பகலக்ஷ்மி எனும் பெண்மணியின் சாதனை, உழைப்பு நிச்சயம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று –

"1974-ல் எனக்குத் திருமணம். '76-ல் என் மகள் வனிதா பிறந்தாள். நார்மல் டெலிவரிதான். குழந்தைக்கு பத்து மாதம் நடக்கும் போது வயிற்றுப் போக்கு வந்தது. மருந்து கொடுத்தோம். மூன்று நாட்களாகியும் குணம் தெரியாததால் குழந்தை மருத்துவ நிபுணரான டாக்டர் டி.என். இராமூர்த்தி அவர்களிடம் எடுத்துச் சென்றோம். அவர்தான் என் மகளுக்கு மறுவாழ்வு தந்து எங்களை மகிழ்வித்தார். தீவிரமாக பரிசோதனை செய்து பார்த்து மூளையில் ஒரு செல் பாதிக்கப்பட்டு விட்டது என்றார். உயிருக்கே ஆபத்தான நிலை. தாமதத்திருந்தாலும் ஒரு ஜடப் பொருளைப் போல்தான் இருந்திருப்பாள். தக்க சமயத்தில் கொண்டு சென்றோம். ஒரே நாளில் பதினெட்டு தடவை வந்து பார்த்தார். இரண்டு வருடம் கழித்து கை, கால் அசைவுக்காக பிஸியோதெரபி தரும்படி சொல்லி அனுப்பினார்.


அதற்கு அவசியமே இல்லாமல் உடல் ரீதியாகக் குறை எதுவும் இல்லாமல் ஆரோக்கியமாக இருந்தாள். ஆனால் பேச வரவில்லை. நான்கு வயதாகியும், 'அம்மா' என்று கூட அழைக்கத் தெரியவில்லை. இரண்டரை வயது முதல் 'ஸ்பீச்தெரபி'க்கு அழைத்துச் சென்றோம். பிரபலமான பலருக்கு சிகிச்சை அளித்திருக்கும் டாக்டர் ஜலாலுதீன் அவர்கள் மிகவும் பிரயாசைப்பட்டு, பொறுமையாக, பணத்தைப் பார்க்காமல், நேரத்தைப் பார்க்காமல் பயிற்சி அளித்தார். எனக்கே பார்க்க மனம் சகிக்காது. அத்தனை பொறுமை. நானும் கற்றுக் கொண்டேன். பயிற்சி அளிப்பது பிடிக்காமல் முகம் பார்க்கும் கண்ணாடி போன்ற பொருட்களை தூக்கிப் போட்டு உடைத்து தன் எதிர்ப்பை காண்பிப்பாள். விடாமுயற்சியால்



HINDUSTAN TIMES (New Delhi) 13. 9. 1993	This is about an extraordinary man who claims to use the Sri Chakra yantra to make his **STUNNINGLY ACCURATE PREDICTIONS.** Hitherto, neither "tantriks" nor astrologers have claimed this as one of the properties of the Sri Chakra. **1,200 YEARS HISTORY, NO ONE IS KNOWN TO HAVE USED IT TO MAKE PREDICTIONS.**
TIMES OF INDIA 30.3.1994	When he was already **"VISUALISING HUMAN BEINGS IN THE FORM OFTRIANGLES."** Prove this. Now Mr. Muthukrishnan devotes his time advisingindustrialists with names and logos for theirnew ventures. If more insustries prosper, the people will get jobs", he said.
REUTERS NEWS (DELHI) 6.3.1995	The use of the Sri Chakra for **BUSINESS** development and **GROWTH** was noted in a special feature run by **REUTERS INTERNATIONAL NEWS** service 6.3.95. The New Delhi detailed Reuters Story was carried in publications across the globe including the South China Morning Post - **HONGKONG**, The Straits Times - **SINGAPORE**, Business World - **PHILIPPINES**, Jakarta Post - **INDONESIA**, Gulf News - **DUBAI** and The Asian Age, **LONDON** and **DELHI**.
மங்கையர் மலர் செப் 1996	இவருக்குள் ஏதோ ஒன்று ஓயாமல் இயங்கிக் கொண்டு இவரைத் தவிக்க வைத்துக் கொண்டு இருக்கிறது என்பதை இவருடைய பேச்சிலிருந்து நன்றாகவே உணர முடிகிறது. இவர் ஆராய்ச்சி நிலையில் தவித்துக் கொண்டிருந்தாலும் பல சமயங்களில் இவர் சொல்லதெல்லாம் நடந்து கொண்டு வந்திருக்கிறது.
INDIAN EXPRESS (EXPRESS WEEK) 12.10.1996.	I am only a tool for its study on the lines of Hohn Woodroffe, J Bolton and D Nical, all British reseachers, Heinrich Zemmier, a German Indologist apart from Kulaichev, the Russian researcher.
IDHAYAM *17.11.1996*	கோடுகளும் முக்கோணங்களும்தான் உலகையே ஆள்கிறது எனக்குத் தோன்றியது. நமது ஸ்ரீ சக்ரா, இஸ்ரேல் கொடியின் டேவிட் சக்ரா, குருவாயூரப்பன், முருகன், சக்கரத்தாழ்வார் என எல்லோர் கரத்திலிருக்கும் சக்கரங்களுக்குள் ஒரு ஒற்றுமை உறைந்திருப்பதை உணர்ந்து கொண்டேன்.
GUIDE INDIA 1.9.1994	Born to a freedom fighter of the Kambalatha Naicker family of zamindars from the **Sidhargal Nattham Village** renowned as the abode of **18 "Siddhars"** on the banks of the river **"Vaigai"**, R.K. Sennaya Swami (Sri Chakras) Muthukrishnan stumbled on an extraordinary phenom enon. I read a book written by **Frederick Engels (Karlmarx's friend)** in which he has equated mathematics with solids, liquids, physics, and chemistry as having some kind of relationship but while talking of **biology=0**. Engels, in his book,**"Dialectics of Nature."** states in these terms: **Application of mathematics:** in the mechanics of solid bodies it is absolute, in that of gases approximate, in that of fluids already more difficult; in physics more tentative and relative; in chemistry, simple equations of the first order and of the smplest nature; in **biology=0**. I am puzzled, **mainly because my prediction on humans actually depends on numbers**. I'm working on the **theory**. Muthukrishnan **remembers** very clearly three personalities he had met. They neither belong to the elite class nor are they men of wealth or of sound standing. One was a ruffian who tried to waylay the fragile man and who turned out to predict his future. Muthukrishnan recalls vividly the words said by the ruffian after hearing him relate incidents that were to happen to him. "I see the world through your eyes." "This sentence has moved me like nothing else. They were said with deepest feelings and open mind." The other two are the **Paramacharya of Kancheepuram** and the **Shringeri peetam Bharathi Swamiji.** "All the three had nothing to gain from my predictions : that is what makes them unique," he says.



SOCIETY **March 1996**	PROPHECY OF ANGLES Madras discovers Muthukrishnan, an extraordinary young man who makes astonishing predictions inspired by the Sri Chakra. **Indira Gandhi** almost a year before her assassination that she would be harmed by "people around her". **The PMO wrote back saying that they would be interested in seeing his research** findings and the correspondence ended there. Later, he had predicted that V.P. Singh's government would not last beyond eleven months and had also cautioned (there are eye-witnesses who can testify to this) that Rajiv Gandhi would be "harmed by a woman". As for the near future, Muthukrishnan looks into his crystal ball (in his case the Sri Chakra) and predicts the defeat of Narasimha Rao at the Centre and a similar ending to **Jayalalitha's** regime in Tamil Nadu:
BUSINESS INDIA **April 8 to 21, 1996**	Krushnun's business cards, logs and even the colour coordinatesof these are determined. A draftsman by profession, 36-year old Muthukrishnan hails from a family of freedom fighters of Bodinaikanur. He had predicted that Krushnun would **be going through a bad financial phase in 1993-94,** but that the adversities could be countered by a Sri Chakra. Coincidentally, Krushnun was preparing for his company's public issue with this worrisome prospect looming befor him. Consequently, Krushnun emphasises that he did his preissue **home work** thoroughly. Krushnun admints that if the **Rs. 5.63 crores** issue sailed through, being over subscribed **60 times**, it was all thanks to the **extraordinary powers of the Sri Chakra**. As he reasons, **"If the environment is against you**, and you can alleviate it with a solution like this, why not use it ? I believe in planning." Now, Krushnun seeks Muthukrishnan's **guidance** for all major business decisions and the Sri Chakra finds a prominent place in his office. Muthukrishnan established contact with this **Soviet scientist**, seeking answers to many questions his obsession with the Sri Chakra evoked. "I am convinced that **Egypt's geometrical pyramids**, as well as the Star of David (the Hebrew version of the Chakra) also hold tremendous significance." He says.
THE ECONOMIC TIMES **10.11.1996**	From the **ancient world** we can find example of some cultural achievements which appear to have used very high **mathematical knowledge..."**. Whilethe Sri Chakra had been used by Hindus for mediation Muthukrishnan started wondering why it cannot be used to predict the lives of people. **He claims that everythig in the universe**, including human beings, can be reduced to lines. Muthukrishnan, **who went on the internet** recently. Together they represented creation, activity, energy, stability and continuity, **he feels Muthukrishnan started realising that it was not only Hinduism which used the chakra. He saw similarities in the pyramids, which are akin totriangles, and the 'Hebrew Chakra' (Star of David). Interestingly, triangles find an important place in the Reiki healing technique. In some of the 'kolams' outside Hindu houses also triangles are used**. "His study pursues how the vibrations of the triangle can help relate a person's future through the triangular configuration by looking into one's hand writing and date of birth." It added: "Each alphabet has certain value based on geometry and similarlynumbers." Using **Fracial system,** by a unique gift of clarity, Muthukrishnan is able to relate vibra tions and triangular values to the person concerned....This isused to arrive at certain prog rammes that can change one's life". **There are industrialists who visit him for consultation it, says Muthukrishnan. He is planning an interesting project of producing chakra-inspired designer houses and fashion designs. The idea, he says, is to build houses and create dresses to suit specific numbers and colours which could be sold to those who would fall into those categories. The project still in the conceptual stage would entail cutting rocks or start production of thread for the dresses on certain specific dates. The construction and dress making would also be done on specific dates.**



மெதுவாக பேர் சொல்ல ஆரம்பித்தாள். ஆனால் பிறர் எதிரில் பேச ஏன்? என் எதிரில் பேசக் கூட கூச்சம் இருந்தது அவளுக்கு. அதைத் தவிர்க்க பிறப்பு, இறப்பு, திருமணங்கள், விழாக்கள் எல்லா இடங்களுக்கும் அழைத்துச் செல்வேன்.

குழந்தைகளுடன் சிநேகிதமாகப் பழக வேண்டுமென்று அடையாறு செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் சேர்த்தேன். படிப்பு வராவிட்டாலும் மற்ற குழந்தைகளுடன் கலந்து பழகி, சாப்பிட்டு, விளையாடி தாழ்வு மனப்பான்மை எள்ளளவும் மனத்தில் புக முடியாமல் இருக்க பயிற்சி அளித்தேன். அரை நாள் பள்ளி முடிந்ததும் மத்தியானம் 'ஸ்பீச்தெரபி' வகுப்புக்கு அழைத்துச் செல்வேன். கண்குத்திப் பாம்பாய் கவனித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

விதவிதமாக டிரஸ் செய்து விடுவேன். சுத்தமாக, நேர்த்தியாக டிரஸ் செய்தாலே தாழ்வு மனப்பான்மை குறைந்து விடுமே! நல்ல நிறமாக, அழகாக, வளர்த்தியாக இருப்பாள். பள்ளி நாடகங்களில் கூட பாரத மாதா, தேவதை போன்ற வேஷமணிந்து தைரியமாக தன்னம்பிக்கையுடன் அவள் நடித்ததையும், நடிக்க வைத்த பள்ளி நிர்வாகத்தையும், என் முயற்சி, நம்பிக்கையையும் பலரும் பாராட்டியது எனக்கு டானிக் போல் இருந்தது. அவள் மேல் கொண்ட பாசத்தால், இன்னொரு குழந்தை பெற்றுக் கொண்டால் அதன் மீது கவனம் திரும்பிவிடலாம் என்று ஒன்றோடு நிறுத்திக் கொண்டோம். இறைவன் பிறப்பைக் கொடுத்தான். அதனை முழுமையாக்குவது பெற்றோர் கடமை என்பதை உணர்ந்து அவள் முன்னேற்றத்துக்காகவே இன்று வரை பாடுபட்டு வருகிறேன்.

ஐந்து வயதில் எம்.எஸ். அவர்களின் 'ஸ்ரீ ரங்கபுரவிஹாரா' பாட்டைக் கேட்டால் முகம் மலர்ந்து கைதட்டி பாட ஆரம்பித்து விடுவாள். கர்நாடக இசையில் அவளது ஈடுபாட்டை அறிந்து இசைப் பயிற்சி அளிக்கத் தொடங்கினோம். சரியாகப் பேசக் கூட முடியாது என்ற நிலையிலிருந்த வனிதா இன்று மேடையேறிப் பாடுகிறாள்! அவளுக்குப் பொறுமையாக பாட்டு சொல்லிக் கொடுத்த அவள் குரு சத்யபாமாவுக்கே அந்தப் பெருமை சாரும்!" என்கிறார் பெருமிதத்துடன்.


"ஸ்பீச்தெரபிக்கு வேகாத வெயிலில் கிளம்பும் போது, இந்தப் பெண்ணை தூக்கிக்கிட்டு வீணா ஏம்மா அலையற? விதின்னு சும்மா கிடப்பியா? என்று பால்காரி, வேலையாட்கள் கேட்கும்போது மனம் அழுதாலும் வெளியில் சிரித்துக் கொண்டே செல்வேன். கணவரிடமும் சொல்ல பயந்து இரவிலே தனியாக அழுவேன். உறவினர்கள், நண்பர்கள் இவளது செய்கைகளைக் கண்டு சிரிக்கும் போது அவமானமாக நினைக்காமல், சண்டையிடாமல் ஒதுங்கி வந்து விடுவேன். அந்தப் பொறுமைக்குப் பரிசுதான் இன்று அதே உறவினர்கள் வாயால் புகழ்வதுடன் எங்களுடன் பாசத்துடன் அனுசரணையாகப் பழகுகின்றனர்."

பதினாலு வயதில் வயதுக்கு வந்துவிட்ட அவளை அதற்குண்டான பயிற்சியும் கற்றுக் கொள்ள வைத்தேன். மாதவிலக்கு சமயம் கண்டபடி நடந்து கொள்ளாமல் பிறர் அறியா வண்ணம் பாதுகாப்புடன் நடந்து கொள்ள அவளுக்குத் தெரியும். அனைத்தும் கடுமையான பயிற்சியால், பொறுமையாக விளக்குவதால்தான் முடியும். ஏன்? அவள் உடல் ரீதியாக நல்ல வளர்ச்சி அடைந்து, அறிவு ரீதியாக மட்டும்தான் பின் தங்கியுள்ளதால் 'செக்ஸ்' பற்றிக் கூட அறிவுறுத்த டாக்டர் சொன்னார். சினிமாவில் குழந்தை உள்ளம் கொண்ட

இரண்டு குழந்தைகள் உள்ள வீட்டில் பர்த் டேக்கு போகும்போது பிறந்தநாள் குழந்தைக்கு மட்டும் பரிசு வாங்கிச் சென்றால் அடுத்த குழந்தை மனம் சொல்லத் தெரியாமல் பாடு படும். அதனால், இன்னொரு சிறிய 'கிஃப்ட்'டை வாங்கிச் சென்று (சாக்லெட், பிஸ்கட் கூடப் பரவாயில்லை. கிஃப்ட்ராப் செய்ய மட்டும் மறக்காதீர்கள்) அதன் கையிலும் தரவும்.

பிறந்த இரண்டாவது குழந்தையைப் பார்க்கச் செல்லும் போதும் இதைக் கடைபிடித்தால், மூத்த குழந்தைக்குக் குட்டிப்பாப்பாவின் மேல் பொறாமை வளர்வது தவிர்க்கப்படும்.

— உஷா



பெண்ணை கதாநாயகன் பாசத்துடன் 'தாயினும் சாலப் பரிந்து' அனுசரணையாக நடப்பது போல் புரிந்து கொள்ளும் பையன் கிடைத்தால் திருமணமும் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார். சமையலில் கூடமாட உதவவும், தன் துணிமணிகளைத் தோய்த்து உலர்த்தி, குளித்து, டிரஸ் செய்து கொண்டு தன் காலில் நிற்கவும் கற்றுக் கொடுத்துள்ளேன்.

ஒய்.எம்.சி.ஏ. வில் நீச்சல் கூட கற்றுக் கொடுத்துள்ளேன். எதற்கெடுத்தாலும் பயப்படுவது குறைந்துள்ளது. இந்தியா முழுக்க சுற்றுலா அழைத்துச் சென்றுள்ளேன். ரெயில் மூலம், விமானம் மூலம் பாம்பே டு கோவா செல்லும் கண்ணாடி போட் மூலம் எல்லாவகைப் பயணமும் சென்றுள்ளோம். சிங்கப்பூரில் பாடும் வாய்ப்பு ஒன்று வந்துள்ளதால் பாஸ்போர்ட்டுக்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

அவளது படிப்பு ஞானம் ஏழாம் வகுப்புவரைதான். வளர்த்தியாக இருந்த அவளைத் தனியாக படிப்புக்கு அழைத்துச் செல்வதில் எனக்குப் பிரச்னையாக இருந்ததால் நேரத்தை வீணாக்காமல் கைத் தொழில் ஒன்று கற்றுக் கொடுக்க முடிவு செய்தேன். எங்கள் வீட்டு மாடியில் ஒரு பையன் 'ஸ்கிரீன் பிரிண்டிங்' தொழில் செய்து வந்தான். அவனிடம் கற்றுக் கொண்டு கடந்த ஐந்து வருடங்களாக என் வீட்டின் கீழ் வெளி அறையில் 'ஸ்கிரீன் பிரிண்டிங்' தொழிலை சொந்தமாக ஆரம்பித்து வனிதாவும் இன்னும் இருவருமாக சேர்ந்து செய்கிறார்கள். காலை எழுந்து குளித்து, தன் வேலைகளை முடித்துக் கொண்டு, மாலை வரை தொழிலை கவனித்து இடையிலேயே கர்நாடக இசை கற்றுக் கொண்டு ('கேசியோ' வாசிப்பாள்) மேடைகளில் அவ்வப்போது பாடி, இப்படி அவளது வெறுமையை அகற்றி முழு நேரத்தையும் பயனுடையதாக்கியுள்ளேன்.

கொழுப்பு நிறைந்த உணவை அளித்தால் மூளை மந்தமாகிவிடும் என்று சரியான அளவான உணவை அளிக்கிறேன். இரண்டு வருடங்கள் யோகாவும் கற்றுக் கொடுத்திருப்பதால் அமைதியும், மனதைக் கட்டுப்படுத்தி ஒரு நிலைப்படுத்தவும் சாந்த குணமாக செயல்படவும் அவளால் முடிகிறது.

கடந்த காலம், நிகழ்காலங்களில் கூட சரியாகப் பேசத் தெரியாது என்ற வனிதா இடையிடையே நம்முடன் புத்திசாலித் தனமாக தாயின் பேச்சில் குறுக்கிட்டு பேசியதுடன், பானுமதி என்று அழைத்துப் பேசியது ஆச்சரியத்தைத் தந்தது. நார்மல் பெண்ணல்ல என்று சொன்னால்தான் தெரிந்ததே தவிர, மற்றபடி எதிலும் குறை சொல்ல முடியாத வளர்ப்பு! அதன் பின்னே அந்த தியாகத் தாயின் கடும் உழைப்பு! எதிர் கொள்ளும் அஞ்சாநெஞ்சம்! தன்னம்பிக்கை!

கடைசியாக சொன்னார் சம்பகம், "இவர்களைப் போன்றவர்களை சமுதாயம் ஒதுக்கி, ஒதுங்கி வேதனைப்பட வைக்காமல் இருக்கும்படி உங்கள் பத்திரிகை மூலம் கேட்டுக் கொள்கிறேன்" என்றார். "பிறந்த, புகுந்த வீட்டினர் அனைவருடனும் நான் ஒதுங்காமல் கலந்து இருந்ததால்தான் இத்தனை வருடங்களில் என் நிலை புரிந்து வந்தனர். எத்தனை பேரால் இப்படி சகிப்புத் தன்மை காக்க முடியும்? வாழ்வின் வேள்வி இந்த வளர்ப்பு. அதைக் கூடியவரை நான் பழுதின்றி செவ்வனே செய்து விட்டேன்" என்றவர் கடைசியில் உடைந்து போனார். இருபது வருடங்களாக அவர் பட்ட கஷ்டங்கள், சோதனைகள், அந்தக் கண்ணீர்த் துளிகளில் தென்பளனத் தெரிந்தது.

பேட்டி : **பானுமதி இராமசந்திரன்**

முகத்தில் கூட தன் எதிர்ப்பைக் காட்ட முடியாத குழந்தையை அடிப்பதுதான் உலகத்திலேயே மிகப் பெரிய கோழைத்தனம்.

— வினோபா பாவே

தகவல் : அ. ஷண்முக சுந்தரம்

P.R.C. கார்மெண்ட்ஸ், கரூர்.

இந்நிறுவனம "பாரதப்பிரதமரின் படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்" கீழ், 1984 ம் ஆண்டு கரூர் கிளை கனரா வங்கியின் பொருளாதார உதவியுடன் துவக்கப்பட்டு 1984 ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

மீண்டும் புதுமைத் திட்டம் No. 2

சில மாற்றங்களுடன் 07-02-1997 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வங்கி ஒன்றின் நீண்டகால டெபாசிட் ரசீது பெறப்பட்டு 'சிறு சேமிப்பு' ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தின் உறுப்பினர்களின் அன்றாட தேவைப் பொருட்கள் அனுப்பப்படுவதின் மூலம், அவர்களுடைய சிறிய அளவு தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது.

ஒரே ஒருமுறை ரூபாய் 500/- செலுத்துங்கள். உடனடியாக ரூபாய் 905/-க்கான வங்கி ஒன்றின் டெபாசிட் ரசீதை பெற்றுக் கொள்ளுங்கள். இத்துடன் ஆண்டுக்கு ஒருமுறை வீதம் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு ரூபாய் 140/- மதிப்பிற்கு கீழ்கண்ட பொருள்களில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு பெற்றுக் கொள்ளுங்கள்.

திட்ட விபரம் :

1. இத்திட்டத்திற்காக ஒரே ஒருமுறை ரூபாய் 500/-ஐ **D.D. (or) M.O.** மூலமாக எங்கள் நிறுவனத்திற்கு செலுத்துங்கள்.
2. உங்கள் பணம் கிடைக்கப் பெற்றவுடன், உங்கள் பெயரில் வங்கி ஒன்றில் டெபாசிட் கணக்கு துவக்கப்படும். இதற்கான வங்கியின் விண்ணப்பப் படிவம் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் கிடைக்கப் பெற்றவுடன் உங்கள் பெயரில் ரூபாய் 905/- க்கான டெபாசிட் ரசீது ஒன்று பெறப்பட்டு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த டெபாசிட் ரசீதின் முதிர்வு காலம் 90 மாதங்களாக இருக்கும்.
3. ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு தேவைப்படும் பொருட்களை பற்றிய விபரங்கள் உங்களிடமிருந்து கேட்டறியப்படும். இதற்கான விலைப்பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் அனுப்பி வைக்கப்படும். இதற்கான பதில் கிடைக்கப் பெற்றவுடன் ரூபாய் 140/- மதிப்புக்குரிய பொருட்களை தபால் அல்லது கூரியர் சர்வீஸ் மூலம் எங்கள் நிறுவனத்தின் செலவில் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு ஏழு ஆண்டுகள், ஆண்டுக்கு ஒருமுறை வீதம், **(140 X 7 X 980/-)** தொடர்ந்து அனுப்பி வைக்கப்படும். முதல் தவணை பொருட்கள் நீங்கள் பணம் செலுத்திய தேதியிலிருந்து ஓராண்டு கழித்து அனுப்பி வைக்கப்படும்.

பொருட்கள் விவரம்

1. "லில்லி" உள்பாவாடைகள்
2. நைட்டீஸ்
3. கரூர் நிட்டிங் கம்பெனியாரின் ISI முத்திரைபெற்ற PRESTIGE பனியன்கள்
4. லுங்கிகள் (கைலிகள்)
5. பெட்சீட்

இதற்கான விலை மதிப்பு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பிவைக்கப்படும்.

இத்திட்டத்தில் சேர்ந்து அனைவரும் பயன்பெற வேண்டுகிறோம்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

P.R.C. கார்மெண்ட்ஸ், ☎ **04324 - 61946**

2/12, A.N.R. காம்ப்ளக்ஸ் 11-வது மாடி,

முருகநாதபுரம், கரூர் - 639 002.

குறிப்பு :

நீண்ட கால டெபாசிட்களுக்கு வங்கிகள் அளித்து வரும் வட்டி விகிதங்களில் வங்கிகளுக்கிடையே மிகுந்த அளவு ஏற்றத்தாழ்வு இருப்பதாலும், வட்டி விகிதங்கள் அடிக்கடி மாறுதலுக்கு உட்படுத்தப்படுவதாலும் எந்த வங்கியில் டெபாசிட் செய்யப்படுகிறது என்பது இத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.



என் மனதில் உள்ள துன்பத்தை என்னுள் அடக்கி வைத்திருப்பதால் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் உள்ளது. மங்கையர் மலர் வாசகி யான நான் எனது துன்பத்தை மற்ற வாசகி களுடன் பகிர்ந்து கொள்வதால் என் பாரம் சிறிது குறையும் என்று நம்புகிறேன்.

என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு அக்கா, இரண்டு அண்ணன், நான்தான் கடைசி. எல்லாவற்றிலும்தான். நான்தான் வீட்டில் கருப்பு. அதுதான் என் குறை என்று நினைக்கவைத்து விட்டார்கள். அவர்கள் என்மீது வைத்துள்ள அன்பில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் என்னுடைய கருமை நிறத்தை சுட்டிக்காட்டிப் பேசும்போதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கும். சின்ன வயதில் அவர்கள் எனக்கு வைத்த பெயர் 'கருவாச்சி'. நன்றாக விளையாடி, பேசிக் கொண்டிருப் போம். திடீரென்று எங்களுக்குள் சண்டை வந்துவிட்டால் அவர்கள் வாயில் வரும் முதல் வார்த்தை 'கருவாச்சி' என்பதுதான். உடனே எனக்கு அழுகை வந்துவிடும்.

சினிமா நடிகைன்னு நினைப்பா?

வீட்டிற்கு யாராவது வந்தால் கேட்பது, "என்னங்க, உங்க கடைசிப் பெண் மட்டும் கருப்பாய் இருக்கிறாளே" என்று. என்னமோ நான் தவறு செய்துவிட்டது மாதிரி கேட்பார்கள். எனவே, சிறுவயது முதலே நாம் கருப்பு என்ற தாழ்வு மனப்பான்மை வந்துவிட்டது. உடல் ஊனமுற்றவர் யாரை யாவது பார்த்தால் நாம் பரவாயில்லை என்று தோன்றும். ஆனால், என்னை 'கருப்பி' என்று கூறும்போது கருப்பு கூட ஒருவகையில் உடல் ஊனமோ என்று நினைக்கத் தோன்றும். என் இரு அண்ணன்களுக்கும் பெண்கள் என்றால் மட்டம் என்ற நினைப்பு. ஒரு நாள் நான் உச்சி எடுக்காமல் தலைசீவி விட்டேன் என்பதற்காக என் பெரிய அண்ணன், "என்ன பெரிய சினிமா நடிகைன்னு நினைப்பா. சகிக்க வில்லை. ஒழுங்காக தலைசீவு" என்றான். சின்ன அண்ணன் அதற்கும் மேலே. நானும், அவனும் ஒரே காலேஜில் படித்தோம். எனக்கு ஆண்கள் மேலுள்ள வெறுப்பு காரணமாக, எந்த ஆணுடனும் பேசமாட்டேன். அது தெரிந்தும் என் வகுப்பில் படித்த ஒரு மாணவன் என் அண்ணனிடம் உங்கள் தங்கைதான் என் வகுப்பில் படிக்கிறாளா என்று சாதாரணமாக விசாரித்ததற்காக என்னிடம், "எப்படி அவன் உன்னைப் பற்றி விசாரிக்கலாம்" என்று குதித்தான். எத்தனை வருட மானாலும் இந்த ஆண்கள் மாறவே மாட்டார்கள். தன் சகோதரி எந்த ஆணுடனும் பேசக்கூடாது என்று நினைப்பவர்கள் மற்ற பெண்கள் மட்டும் தன்னுடன் பேச வேண்டும் என்று நினைப்பார்கள். என் அண்ணன் மட்டும் இதில் விதிவிலக்கல்ல.

நான் இப்போது ஒரு எம்காம் பட்டதாரி. என் இரு சகோதரிகளுக்கும் திருமணமாகிவிட்டது. என் திருமணத்தில்தான் சிக்கல். நான் கருப்பு என்பதால் சில இடங்கள் தட்டிப் போனது. மற்றவர்கள் என்னை கருப்பி என்று திட்டினால்,

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : 'ஜில்'லென...

கடைசி தேதி : 15.3.97

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.


கையொப்பம்

மற்றவர்களை திட்டிய என் அப்பா கூட நான் கருப்பு என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார். பெண் பார்த்துவிட்டு மாப்பிள்ளை வீட்டார் போனவுடன், "இவர்களும் பெண் கருப்பு என்று சொல்வார்களோ" என்று சொல்ல அதற்கு என் பெரிய அண்ணன், "ஏற்கெனவே கருப்பு. இதில் எண்ணெய் தடவி சிவலைன்னு யார் கேட்டது" என்பார். என் பெரிய அக்கா, "பக்கத்து வீட்டு கருப்பிக்குக் கூட திருமணம் ஆகி விட்டது" என்பாள். அப்படிச் சொல்லும் போது அந்த பக்கத்து வீட்டுப் பெண்ணை விட கருப்பான எனக்கு மனது எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கமாட்டாள்.

திருமணம் தட்டிப் போவது பற்றிக் கவலைப்படாத எனக்கு இவர்கள் இப்படிப் பேசுவதுதான் கஷ்டமாக இருக்கும். இதனால் எனக்குத் திருமணத்தின் மீதே வெறுப்பு வந்து விட்டது. மாப்பிள்ளை வீட்டார்க்குப் பெண் பிடிக்குமா என்று கவலைப்படுபவர்கள், பெண்ணுக்குப் பிடிக்கிறதா என்று நினைத்துக் கூட பார்க்கமாட்டார்கள். அதற்கு எனக்குத் தகுதியில்லை என்று அவர்கள் நினைப்பு. ஒவ்வொரு முறையும் பெண் பார்க்கும் படலத்தின் போதும் நான் அவமானத்தால் கூனிக் குறுகி நிற்க வேண்டியது. அவர்கள் போனவுடன் வீட்டில் அதைப்பற்றிய விமர்சனம் வேறு. இதனால் வீட்டில் எனக்கு அமைதியே இல்லை. எத்தனை நான் இரவில் நான் யாருக்கும் தெரியாமல் அழுதிருப்பேன் என்பது எனக்கு மட்டும்தான் தெரியும். காலேஜில் படிக்கும் போது பொறுமைசாலி என்று தோழிகளிடம் பெயரெடுத்த நான் இன்று பொறுமை இழந்து எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறேனோ என்று நினைக்கும் போது எனக்கே வெட்கமாகிறது.

எனக்குள் ஓவியம், கதை, கட்டுரை இவற்றில் ஆர்வம் இருந்தாலும், எனக்கிருக்கின்ற கவலையால் என்னால் அந்தத் திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. இதைப் படிப்பவர்கள் தயவு செய்து ஒரு பெண்ணிடம் அவள் கருப்பா, சிவப்பா என்பதை மட்டும் பார்க்காமல், அவளது மற்ற தகுதியையும், குணநலன்களையும் பாருங்கள். அவளிடம் உள்ள திறமையை வளர்க்க அவளை உற்சாகப்படுத்துங்கள். அவளிடம் உள்ள குறையைச் சுட்டிக்காட்டி உற்சாகம் இழக்கச் செய்யாதீர்கள். இதுவே, நீங்கள் அவர்களுக்குச் செய்யும் மிகப் பெரிய நன்மை.


— ஒரு சகோதரி



"சாந்திக் உண்மையிலேயே அற்புதமானது," என்கிறார் சுனிதா.

"நான் தங்களுடைய சாந்திக் ஹெர்பல் ஃபேசியல் டானிக்கைத் தவறாது உபயோகிப்பவள். என் முகத்தில் நிறைய பருக்கள் இருந்தன, ஆனால் இந்த ஃபேஸ் பேக் உபயோகித்ததும் அவை மறைந்துவிட்டன. நான் நல்ல சிகப்புதான் என்றாலும் சாந்திக் உபயோகித்தது முதல் என் நிறம் மேலும் கூடியுள்ளது. என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் என் அழகின் ரகசியம் என்னவென்று கேட்கிறார்கள்... நான் அவர்களைச் சாந்திக் இடும்படிதான் ஆலோசனை சொல்கிறேன். என்னைப் பார்த்து கல்லூரியில் என்னோடு படிப்பவர்கள் நிறைய பேர் சாந்திக் உபயோகிக்கத் தொடங்கி விட்டார்கள்.

சாந்திக் உண்மையிலேயே அற்புதமானது நான் இதைத் தவறாது உபயோகிப்பேன், மற்றவர்களையும் உபயோகிக்கச் சொல்வேன்."



நன்றி

A. சுனிதா
தியாகராய ரோடு, சென்னை*

சாந்திக் தமிழகம், கேரளா, மற்றும் பெங்களூர் நகரில் பல நல்ல கடைகளில் கிடைக்கிறது. விலை 50 கி. டப்பா ரூ.22, 100 கி. பேக் ரூ.39. கிடைக்குமிடம் அறிய கீழுள்ள முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

* இக்கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது

தர்ஷணா ட்ரெடிஷனல் ப்ராடக்ட்ஸ்

46, பசுல்லா ரோடு, தி. நகர், சென்னை - 600 017 போன்: 8254790.

கிடைக்கும் இடம் சில: சென்னை: [illegible], நீல்கிரீஸ், [illegible] ... A to Z, [illegible] ... நீல்கிரீஸ், [illegible] ... ஸ்ரீ [illegible] ஸ்டோர், [illegible] ஸ்டோர்ஸ், நீல்கிரீஸ் திருச்சி: [illegible] ஸ்டோர்ஸ், மதுரை: [illegible] ஏஜென்சீஸ், 20, வடக்கு சித்திரை வீதி, போன்: 621421 திருநெல்வேலி ஜங்ஷன்: பழனி ஆண்டவர் ஏஜென்சீஸ், 25L, [illegible] பில்டிங், போன்: 25313.
(சாந்திக் ஆயுர்வேத மருந்து)

Anugrah 2329/96 Tam


POWER CUT?

கவலை வேண்டாம் !

இன்றே ஒரு ஆர்ஜீ எலக்ட்ரானிக் ஜெனரேட்டரை பொருத்துவீர் !

புகையில்லாத, சத்தமில்லாத, தடையில்லாத, டீசல், பெட்ரோல் செலவு இல்லாத ஆர். ஜீ. எலக்ட்ரானிக் ஜெனரேட்டர் ஒவ்வொரு இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும், கடைகளுக்கும் மற்றும் கிளினிக்குகளுக்கும் இன்றியமையாதது. ட்யூப் லைட், மின்விசிறி, டி. வி. மற்றும் வி. சி. ஆர் ஆகியவற்றிற்கு பயன்படுத்தலாம்.

கம்ப்யூட்டருக்கான UPS-ம் கிடைக்கும்



மேலும் விபரங்களுக்கு:

ஆர். ஜீ. இண்டஸ்ட்ரீஸ்

21, கலவை தெரு, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002. போன்: 835042.

கோவை: 47, நேரு தெரு, ராம்நகர், கோவை-9. போன்: 230027.
பாக்டரி: L8/12, எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை, ஓசூர்.
போன்: 04344-22186, 22398. ஃபேக்ஸ்: 22885.
பெங்களூர் அலுவலகம்: போன்: 2215586.

A-Z சித்த ஆராய்ச்சி நிறுவனம்

40 வருடகால சேவை

- சிறுநீரக கோளாறுகளை சீர்படுத்தும் மிகச் சிறந்த சிகிச்சை மையம்
- இரண்டே மாத சிகிச்சையில் பூரண நலம் பெறுவீர்
- டயாலிஸிஸோ மாற்று சிறுநீரகமோ தேவையின்றி சிறுநீரகக் கோளாறுகள் நீக்கப்படும்
- ப்ளட் கேன்சர், எபிலெப்சி, டயாபிடிஸ், ஆஸ்துமா, சைனஸ், தோல் வியாதிகள் போன்றவற்றுக்கும் எந்த பக்க விளைவுமின்றி சிகிச்சை அளிக்கப்படும்
- டியாபிடிஸ் - எந்த விதமாய் சார்ந்து வாழ்பவர் இருந்தாலும் 15 நாட்கள் மருந்து எடுத்ததும் Blood Glucose Level Normal செய்து விடுகிறோம்

புற்றுநோய் மற்றும் சிறுநீரக கோளாறுகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

அணுகுவீர் :

டாக்டர் நாஸ்னீன் ஜிக்ருல்லா

U-92, ஸ்கைலார்க் அபார்ட்மென்ட்ஸ், மூன்றாவது மெயின் ரோடு,
அண்ணாநகர், சென்னை - 600 040. ☎ 6263519/6280032

அழகுக்கு அழகு செய்ய...

அழகு சாதனக் கலையென்பது உலகமெங்குமே மிகவும் தொன்மையானதாகும்.

நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள் என்று யாராவது நம்மைப் பார்த்துச் சொன்னால் நம் உள்ளம் எப்படிப் பூரித்துப் போய் விடுகிறது. அதிலும் பெண்களின் உள்ளம் பெரு மகிழ்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை. இன்றைய நாகரிக உலகில் பெண்கள் தங்களை வனப்புடையவர்களாக ஆக்கிக் கொள்ளவே விரும்புகிறார்கள். எல்லா வகையான உணவிலும் ஏதாவது ஒரு சுவை கலந்து இருப்பதைப் போலவே எல்லோரும் ஏதாவது ஒரு வகையில் அழகாகவே இருக்கிறார்கள்.

முக்கியமாக இன்றைய நாகரீக மங்கையர் பலர் மிகப் பெரிய பிரச்னையாக நினைப்பது சருமத்தின் மேல் உள்ள வேண்டாத முடிகளை எப்படி அகற்றுவது என்பது. உதட்டின் மேல் உள்ள முடிகள் நீக்க த்ரெட்டிங் செய்வது நல்லதா அல்லது வேக்ஸிங் செய்யலாமா என்பதும்தான்.

வாக்ஸ் என்பது மெழுகு. வாக்ஸில் இரண்டு வகை உண்டு. ஹாட்வாக்ஸ், கோல்ட்வாக்ஸ். நம் உடம்பில் ஹார்மோன்களின் குறை இருந்தால் இவ்வாறு முடி வளர்வது போன்ற குறைகள் ஏற்படும். தகுந்த மருத்துவரிடம் ஆலோசனை பெற்று ஹார்மோன்கள் குறைகளை நிவர்த்தி செய்யலாம்.

த்ரெட்டிங் : 40-ம் நம்பர் காட்டன் நூலின் உதவியால் வேண்டாத முடிகளை, புருவத்தின் மேலும், உதட்டின் மேலும் மூக்கிற்குக் கீழ் முள்ள பாகத்தில் உள்ள முடிகளை அகற்றுவதாகும். புருவத்திற்கு வடிவம் கொடுக்கும் போது நம் முகத்திற்கு ஏற்றவாறு வடிவம் கொடுத்தால் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். முடிகளை அகற்றும் போது லேசாகப் பவுடர் பூசிக் கொண்டால் வலி இருக்காது. ஆனால் 'த்ரெட்டிங்' செய்ய நன்கு பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

வாக்ஸிங் : த்ரெட்டிங்கினாலும், ஷேவிங்கினாலும் சருமத்தில் மேல் உள்ள முடி மட்டும் வளருவதினால், சருமம் கடினமாகவும் முடி அடர்த்தியாகவும் வளரக் கூடும். ஆனால் வாக்ஸிங்கில் அப்படி வளராது. அதை கை, கால்களில் அடிக்கடி செய்வதால் முடி வருவது குறையுமே தவிர வளராது. கடைகளில் விற்கும் கோல்ட் வாக்ஸ் அல்லது ஹாட்வாக்ஸ் வாங்கி உபயோகிக்கலாம். ஹாட் வாக்ஸ் உபயோகிக்கும் போது நேரடியாகச் சுட வைக்காமல் கொதிக்கும் வெந்நீரில் இந்த டப்பாவை வைத்துச் சூடு செய்து கொள்ள வேண்டும்.

முதலில் முடியை அகற்ற வேண்டிய பாகங்களில் பவுடர் போட்டுக் கொள்ள வேண்டும். அந்த இடத்தில் வாக்ஸை எடுத்து 2 அங்குல அகலமும் 4 அங்குல நீளத்திற்கும் ¼ செ.மீ கனத்திற்கு சமமாகத் தடவ வேண்டும். தடவிய உடனேயே உலர்ந்து விடும். கனமான காட்டன் துணியை அதன் மேல் வைத்து அழுத்த வேண்டும். பிறகு கீழேயிருந்து மேல் நோக்கி துணியைச் சட்டென்று எடுக்க வேண்டும். எடுத்த துணியை மறுபடியும் பக்கத்தில் உள்ள இடங்களில் 2 முறை உபயோகிக்கலாம். இப்படியே இடைவெளி இல்லாமல் ஒத்தி எடுக்க வேண்டும். துணியை எடுக்கும் பொழுது சட்டென்று பிடுங்குகின்ற மாதிரி எடுக்க வேண்டும். இல்லை என்றால் நிதானமாக எடுத்தால் முடியைச் சரியாக அகற்ற வராது. வலிக்கும்தான்.

இப்படி எல்லா முடிகளையும் அகற்றிய பிறகு நீரினால் நன்கு கழுவித் துடைத்து பவுடரோ, கிரீமோ





இப்பொழுது மாம்பூ பூத்துக் குலுங்கும் சீசன். மாம் பூவை வெயிலில் காயவைத்து அத்துடன் சிறிது சாம்பி ராணி, சூடம், கரித்துண்டு இவற்றைச் சேர்த்து பொடித்து நைசான பவுடராக்கவும். இந்தப் பவுடரில் சிறிது கெரசின் விட்டு பிசைந்து சாக்பீஸ் போல நீள வாட்டத்தில் உருட்டி வெயிலில் காய வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். தினம் ஒரு துண்டு எடுத்து ஊது வத்திப் போல் கொளுத்தி வைக்கலாம். இதனால் கொசுத் தொல்லை ஒழிவதுடன் வீடும் சாம்பிராணி மணம் வீசும். இந்தத் திடீர் சாம்பிராணி செய்வதும் எளிது.

— பாலா

போட்டுக் கொள்ள வேண்டும். இம்முறையில் முடிகளை எடுத்த இடம் பார்ப்பதற்கு சுத்த மாகவும் வழவழப்பாகவும் இருக்கும். ஹெர்பெல் முறைப்படி தயாரித்த ஹெர்பெல் வாக்ஸை என் வாடிக்கையாளர்களுக்கு பயன் படுத்து கிறேன். ஹெர்பல் வாக்ஸ் முக்கியமாக, மணமகளுக்குக் கைகால் மற்றும் வேண்டாத இடங்களில் முடியை அறவே நீக்கி மணமகள் மேக்-அப் செய்யும் போது அழகு சிறப்புறும். வாக்ஸ் செய்த பின் கை, கால்களுக்கு மூலிகை எண்ணெய் மசாஜ் செய்கிறேன். முடி வளர்வது அதிகமாக இருந்தால் இந்த முறையில் நன்றாகக் குறையும்.

சில பேருக்குச் சரியான முறையில் முடி களை எடுக்காததால் தோலின் மேல் சிறுசிறு கறுப்பாக முடிகள் தெரியும். அப்படி இருப்ப வர்கள், முடி நன்கு வந்த பிறகு சரியான முறை யில் செய்ய, அழகு நிலையத்தில் செய்வதே சரியாக இருக்கும். மூலிகை மசாஜ் செய்து சுடு நீரில் ஒத்தடம் கொடுத்தும், பிறகு 'பேக்' போட லாம்.

இன்னும் பலபேருக்குப் பொடுகுத் தொல்லை மிக பிரச்னையாக உள்ளது. பொடுகு எதனால் ஏற்படுகிறது என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். எண்ணெய்ப் பசையுள்ள முடியுள்ளவர்களுக்குப் பொடுகுத் தொல்லை உண்டு. இவர்கள் பொடுகுத் தொல்லையிலிருந்து விடுபட மூலிகை எண்ணெய் மசாஜ் செய்து ஹென்னா கண்டி ஷனர் போட்டால் பொடுகு அறவே நீங்கும். முட்டை, பச்சைக்காய்கறி, லிவர், தேன், மீன், கீரை வகைகள் இரும்புச் சத்துள்ள உணவு, வைட்டமின் 'சி' உள்ள பழ வகைகள் உணவில் சேர்க்கவும்.

நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். பொடுகு மற்றும் இளநரை, இவற்றைப் போக்க மூலிகை எண்ணெய், மற்றும் உயர்தர மூலிகை களைக் கொண்டு நான் தயாரிக்கும் ஹென்னா கண்டிஷனர் என் வாடிக்கையாளர்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ளது.

உடல் சூடு தணிய வைப்பது ஹென்னா கண்டிஷனர்தான். தலை சுத்தமாக இருந்தால் அதன் பிரதிபலிப்பு நம் உடம்பில் தெரியும். ஹென்னா போடுவதால் நம்முடி நல்ல கறுமை யாவதுடன், உடல் சூடு தணிந்து உடம்பில் நன்கு பளபளப்பு ஏற்படும்.

பொடுகில் இரண்டாவது வகை : அதிக உஷ்ணத்தினாலும் நீண்ட நாட்கள் ஸ்நானம் செய்யாததாலும் தலையில் அரிப்புடன் தோன்றும். சொறிந்தால் தவிடு போல் பொடிப் பொடியாக உதிரும். நகக்கணுக்களிலும் புகுந்து கொள்ளும். சொறியச் சொறிய சில நாட்களுக் குள் அவ்விடங்களில் முடி உதிர்ந்துவிடும். நம் உடம்பிலுள்ள எண்ணெய்ச் சுரப்பிகள் வறண்டு போவதிலேயே தோல் வறண்டு விடுகிறது. இது பற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் டி-5, 11, யுனைடெட் இந்தியா காலனி இரண்டாவது தெரு, கோடம்பாக்கத் திலுள்ள என்னிடம் நேரில் ஆலோசனை பெற லாம்.

ஓரளவுள்ள எண்ணெய்ப் பசை தேவை. பால் வெண்ணெய், மாமிச ஆகாராதிகள் சாப் பிடுவதாலும் வாரம் ஒரிருமுறை எண்ணெய் ஸ்நானம் செய்வதாலும் எண்ணெய் ஊறலை ஊக்குவிக்கலாம். வெந்தியத்தைப் பாலில் அரைத்துத் தலை முழுகிவர பொடுகை தவிர்க் கலாம். உஷ்ணத்தைத் தவிர்க்க ஹென்னா கண்டிஷனர் 10 நாட்களுக்கு ஒருமுறை உபயோகிக்கலாம். இரத்த சோகையினாலும் அடிக்கடி முடி உதிரும். மருத்துவர் ஆலோ சனைப்படி பி. காம்ப்ளெக்ஸ் சாப்பிடவும். வீட்டிலேயே நாம் சாப்பிடக் கூடிய எளிய மருந்து - காரட் நன்கு துருவி சாறு எடுத்து வடிகட்டி தேன் கலந்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்த சோகை வியக்கத்தக்க வகை யில் அகலும். உடல் எழில் பெறும்.

— ஹேமா லக்ஷ்மண்

அழகு மற்றும் சிகை அலங்கார நிபுணர்.

எனக்கு எய்ட்ஸ் வராது!
ஏனெனில் நான் ஒரு டாக்டர்.



எனக்கு எய்ட்ஸ் வராது.
ஏனெனில் நானும் என் வாழ்க்கைத் துணையும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்கள்.


ஹெச்.ஐ.வி /எய்ட்ஸ் கிருமிகளுக்கு ஜாதி, மதம், ஆண், பெண் அல்லது தொழில் என்ற பாகுபாடு கிடையாது. அது யாரை வேண்டுமானாலும் தாக்கலாம். சமுகத்தின் பல மட்டங்களில் இருக்கும் சிலர் ஏற்கனவே எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவராய் இருப்பதை எப்போதும் உறுதி செய்துகொள்ளுங்கள். எய்ட்ஸ் வராமல் தடுப்பதற்கு இதுவே மிகச்சிறந்த வழி.

மேலும் விவரங்களுக்கு:
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008.
போன் : 8255261 / 8255467 / 8254917
24 மணிநேரமும் இயங்கும் ஹாட் லைன் :
8256882 / 8256864

அறிமுகம்

வசதிக்கு ஒரு புது வடிவம்

ULTRA
MIXER GRINDER



மேஜை மீது வைத்துக் கொள்ளும் வகையில், எங்களது அல்ட்ரா கிரைண்ட் + என்ற இந்தியாவின் முதலாவது டேபிள்-டாப் வெட் கிரைண்டர் இல்லத்தரசிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.
இப்போது ஒரு புதிய வடிவிலே அறிமுகப்படுத்துகிறோம் - அல்ட்ரா மிக்ஸர் கிரைண்டர்.* மிகவும் அடக்கமான, ஆனால் ஆற்றல் நிறைந்த கிச்சன் மெஷின்!
உங்கள் வசதிக்கு ஒரு புதிய வடிவம், பயன்படுத்த மிக எளிதாக இருப்பதோடு, ஆற்றல் திறன் மிக்க வகையிலும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கும் அங்கும் இடம் மாற்ற வசதியாக, இதன் எடை மிகக் குறைவானது. நம்பகமான செயல்பாட்டுக்கு உறுதியான அமைப்பு. நல்ல தரம் மற்றும் சிறந்த திறன். இந்தப் புதுமையான வடிவத்திற்குச் சிறிது இடமே போதும்!

அருகிலுள்ள விற்பனையாளரிடம் இன்றே செல்லுங்கள். இந்த புதிய வடிவம் உங்களுக்குப் புதிய வசதிகளைத் தந்து, புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை நன்றாக புரிந்து கொள்ளலாம்.

*இரண்டு ஜார் கொண்ட மாடல்

மகத்தான வசதி.
மகத்தான அனுபவம்.

Design Regd. No.: 169864 & 169865

எல்ஜி தயாரிப்பு

எல்ஜி அல்ட்ரா இண்டஸ்டிரீஸ் லிமிடெட்: எல்ஜி ஹவுஸ், திருச்சி ரோடு, கோயம்புத்தூர்–641 045. போன்: 314571, 314589, 316132, 313984 பேக்ஸ்: 311740
மண்டல அலுவலகம்: 45/1, கிரி ரோடு, சென்னை–600 017. போன்: 8225735

தமிழ்நாட்டில் முக்கிய விற்பனை நிலையங்கள் எல்லாவற்றிலும் கிடைக்கும்.

Anugrah 2356/97 TAM



சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்வோம்!

இன்றைக்கு சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவது (பொல்யூஷன்) என்பது மிகவும் அதிகமாகிவிட்டது. அதனால் வருகின்ற நோய்களும் அதிகம். இந்த 'நவீன கால நோய்'களுக்கும் மூலிகை முறையில் மருத்துவம் உண்டு என்கிறார் டாக்டர் எம்.எம். அமீன். ஹைதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் யுனானி மருத்துவப் பட்டம் பெற்றதுடன் பரம்பரையாக யுனானி மருத்துவ சிகிச்சை செய்து வரும் குடும்பத்தில் பிறந்தவர் இவர். யுனானி. மருத்துவத்திற்காகவே சென்னை இராயப் பேட்டையில் 136, ஜானி ஜஹான்கான் சாலையில் எஸ்.கே.எஸ் மூலிகை மருத்துவமனையை நிறுவியிருக்கிறார். மருத்துவப் பரிசோதனைக் கூடம் தியான மண்டபம், உடல் பயிற்சிக் கூடம் என அனைத்து வசதிகளும் கொண்டது இம்மருத்துவமனை. பெரியவர்கள் வழியினையும், விஞ்ஞான ரீதியாகதான் கற்ற மருத்துவத்தையும் இணைத்து சிகிச்சை தரும் டாக்டர் சையது எம்.எம். அமீன் இங்கு சுற்றுப்புறச் சூழல் மாசு பற்றி எழுதுகிறார் –

நோய் தடுப்பு குறித்தும் சுற்றுச சூழல் பராமரிப்பு குறித்தும் யுனானி மருத்துவ நூல்கள் விரிவாகவும், விளக்கமாகவும் கூறுகின்றன. நாம் நோய் வாய்ப் படுவதற்கு சுற்றுச் சூழல் மாசுபாடும் கவனக் குறைவுமே காரணம் என்ற கருத்தினை இந்நூல்கள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

சுற்றுச் சூழல் என்பது காற்று, நீர், நிலம் ஆகியவற்றை மையமாகக் கொண்டதே. இவை அனைத்தும் மனித வாழ்க்கையில் அவசியமானவை. இவற்றில் மனித வாழ்க்கைக்கு ஒவ்வாத தன்மைகள் கலக்குமானால், சுற்றுச் சூழல் மாசுபாடு ஏற்படுகிறது. அதாவது சுற்றுச் சூழல் மாசுபாடு என்பது உடல் நலத்திற்கு ஒவ்வாப் பொருட்களின் அணுக்கூறுகள். நிலம், நீர் காற்று ஆகியவற்றுடன் கலந்து, நம் கண்ணுக்குத் தெரியாமலேயே நாம் உண்ணும் உணவு, பருகும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று மூலம் உடலுக்குள் வாய் மூலமும், மூக்கு மூலமும் சென்று தீய நுண் கிருமிகளை உருவாக்கி உடல் நலக் கேடுகளை விளைவிக்கிறது.

சுற்றுச் சூழல் மாசுபாடு அடுக்களையில் இருந்தும் வரலாம். பெரும் தொழிற் சாலைகளில் இருந்தும் வரலாம். இம் மாசுபாடு அறிவியல் வளர்ச்சியில் ஏற்பட்ட தொழில் புரட்சியால் ஏற்பட்டது. மக்கட் தொகை அதிகரிப்பு, உணவு, உடை, உறையுள் ஆகியவற்றின் பற்றாக் குறைகளும் காரணமாக விளங்குகிறது.

வாகனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் இருந்து வெளிவரும் புகை, காற்று மண்டலத்தை மாசுபடச் செய்கிறது. தொழிற் சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களும், மற்றும் மக்களால் வெளியேற்றப்படும் கழிவுகளும், நீரை மாசுபடச் செய்கிறது. விவசாயத்தில் உபயோகப்படுத்தப்படும் கிருமி நாசினி, பூச்சிக் கொல்லி மருந்துகளும், மற்றும் பலவிதமான இரசாயன உரங்களும், நிலத்தை மாசுபடச் செய்கிறது. எனவே இன்றைய உலகில் விவசாயி முதல் விமானம் ஓட்டிவரை சுற்றுச் சூழல்



பாக்கெட் பாலில் பால் கோவா செய்ய வேண்டுமானால் (3 அல்லது 4 மணி நேரமாவது அல்லது இரவு வைத்து காலை என) ஃப்ரிஜில் பால் பாக்கெட்டை வைத்து எடுத்துச் செய்து பாருங்கள். கோவா அளவு கூடுதலாக இருக்கும்.

— பாலா

மாசுபாட்டினால் பாதிக்கப்படுகின்றனர். பலவித நோய்களுக்கு உள்ளாகின்றனர். மேலும் பார்த்தீனியம் போன்ற நச்சுச் செடிகளின், மலரில் இருந்து வெளிப்படும் மகரந்தப் பொடிகள் காற்றில் கலந்து மூக்கு வாய் வழியாக உள்ளே சென்று உடல் நலக்கேடுகளை விளைவிக்கின்றது. இச் செடிகளினால் உண்டா கும் முக்கியமான நோய்கள், தோல் வியாதியும் ஆஸ்த்துமாவும்தான்.

நம்மில் சிலர், மாசுபாட்டின் தீமையை அறிந்து இருந்தும், சில முறைகேடான பழக்க வழக்கங்களைக் கையாண்டு தங்களுக்குத் தாங் களே நோயை வரவழைத்துக் கொள்வதோடு இல்லாமல் மற்றவர்களுக்கும் நோய் பரவச் செய்து விடுகின்றனர். பொது இடங்களிலும், கண்ட கண்ட இடங்களிலும் சிறுநீர் மற்றும் மலம் கழித்தல் போன்ற பழக்கங்கள் மிகவும் வெறுக்கத்தக்கதாகும். பல நோய்கள் பரவுவதற்கு இதுவே மூல காரணமாகும்.

சிலர் வீட்டில் சேர்ந்த குப்பைகளை தெருக் குப்பைத் தொட்டிகளில் கொட்டாமல் வெளியில் போடுவதால் அக்குப்பைகள் அழுகி நாற்ற மெடுத்து நோய்க் கிருமிகளை உற்பத்தி செய்து உடல் நலக் கேடுகளை விளைவிக்கின்றது. வீட்டைச் சுற்றித் தேங்கியுள்ள தண்ணீரில் கொசுக்களும், கிருமிகளும் உற்பத்தியாகி நோய் பரப்பச் செய்யும். நல்ல காற்றோட்டம் இல்லாத சூழ்நிலையில் அமைந்துள்ள வீட்டில் வசிப்போருக்கும் அன்றாடம் சுத்தம் செய்யாமல் அசுத்தமாக

வைத்துள்ள வீட்டில் இருப்போருக்கும் ஈ, கரப்பான் பூச்சி, மற்றும் பல ஜந்துக்களால் நோய் தாக்குதல் நிச்சயம் உண்டு. தண்ணீரைக் கொதிக்க வைக்காமல் பருகுவதாலும், நோய்கள் பல பரவும். நோயின்றி வாழ வேண்டும். அதற்காக சுற்றுச் சூழல் மாசுபாடு ஏற்படாமல் இருக்க நாம் ஒவ்வொருவரும் முயற்சி எடுப்பது நம்முடைய கடமை.

சுற்றுச் சூழல் கெடுவதால் ஏற்படும் நோய்களில் சில :

1. ஆஸ்துமா
2. சைன சைடீஸ் (மூக்கடைப்பு)
3. யானைக் கால்
4. மஞ்சள் காமாலை
5. யூரினரி இன்ஃபெக்ஷன் (சிறுநீர்க் கடுப்பு நோய்)

1. ஆஸ்துமா என்னும் இளைப்பு நோய் ஏற்பட நரம்புத் தளர்ச்சி, அலர்ஜி போன்றவைகளுடன் தூசி கலந்த காற்றை சுவாசிப்பதும், காரணமாகிறது. இந்த நோயினால் மூச்சுக் குழலும், நுரையீரலும் பாதிக்கப்படுகின்றன. மூச்சுக் குழலின் உட்புற சவ்வுப் பகுதியில் திடீரென சுருக்கம் உண்டாவதால் வரும் நோய் இது. இந்த நோய் மக்கள் தொகையில் 5 - 8 சதவீதம் பேருக்கு ஏற்படும். வயது வரம்பென்பது கிடையாது. மூச்சை உள்ளே இழுக்கும் போதும், விடும் போதும் - ஒருவித கஷ்டமும் குறட்டை போன்ற ஒலியும் ஏற்படும். நோயாளியே கூட இதைக் கேட்க முடியும். நோயாளியின் அருகில் உள்ளவர்களும் மருத்து வர்களாலும் கூட இதைக் கேட்க முடியும். ஓயாத இருமலுடன் அதிகமான சளியும் இருக்கும்.

புகையும் தூசியும்தான் இந் நோய்க்கு முக்கிய காரணம். இந்த நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு முகம் வெளுத்திருக்கும். காது, மூக்கு போன்றவை கருநீல நிறமாகத் தோற்றம் தரும். இவர்கள் மூச்சு விடவே மிகவும் சிரமப் படுவார்கள். நாடித் துடிப்பும், படபடப்பும், வேகமும் கூடியதாக இருக்கும். சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைப்பதுடன் சத்து மிகுந்த உணவை உட்கொண்டு பக்க மற்றும் பின் விளைவுகள் இல்லாத மூலிகை மருந்துகளும் சாப்பிட நல்ல பலனும் முழுமையான குண மும் கிடைக்கும்.


2. மூக்கடைப்பு எனப்படும் சைன சைடீஸ் நோய்க்கு முக்கிய காரணம் அலர்ஜிதான். தீராத தலைவலி, மூக்கடைப்பு, தும்மல், மூக்கில் நீர் ஒழுகுதல்,

ஒரு சின்னஞ்சிறிய அற்புதம்!

CRI®

வொண்டர் ஸப்™

C.R.I. பெருமையுடன் அறிமுகம் செய்யும்
புரட்சிகரமான டொமஸ்டிக் சப்மர்ஸிபிள் பம்ப்.*



ஆச்சரியமூட்டும் விலையில்

*மாடல் 1.0 HP WS 100	மாடல் 0.5 HP WS 100	மாடல் 1.5 HP WS 100
அதிகபட்ச ஆழம் 174 அடி	அதிகபட்ச ஆழம் 82 அடி	அதிகபட்ச ஆழம் 246 அடி
ரூ. 6775*	ரூ. 5990*	ரூ. 7350*

C.R.I. வொண்டர் ஸப். தரமான பம்புகள் தயாரிப்பில் 30 வருட பாரம்பரியம் மிக்க ***C.R.I.,*** தற்போது 4" & 4½" போர்வெல் பம்புகளில் மற்றுமொரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கிறது. நவீன தொழில்நுட்ப சிறப்பம்சங்கள் அனைத்தும் கொண்ட ***C.R.I. வொண்டர் ஸப்*** தோற்றத்தில் மிகச்சிறிது, ஆனால், ஆற்றலில் மிகப்பெரிது.

C.R.I. வொண்டர் ஸப் பம்பில் அப்படியென்ன அற்புதம்?

• போர்வெல் ஜெட் மற்றும் கம்ப்ரஸ்ஸர் பம்புகளைவிட **இருமடங்கு வரை அதிக தண்ணீர்!** • ஜெட் பம்புகளைவிட **அதிக ஆழத்திலும் வேலை செய்யும் திறன்!** • சப்மர்ஸிபிள் பம்புகளிலேயே **மிகவும் குறைவான விலை!** (ஜெட்பம்ப் நிறுவ ஆகும் அதே செலவுதான் இருக்கும்) • காற்றுத்தடை ஏற்படுவதில்லை, எனவே பம்பில் நீருற்றத் தேவையில்லை.

தண்ணீர் வீட பிரச்சினைகளையே அதிகம் தரும் போர்வெல் ஜெட் மற்றும் கம்ப்ரஸ்ஸர் பம்புகளிடமிருந்து இனி உங்களுக்கு நிரந்தரமான விடுதலை!

இலவசம்

- ஒரு மோனோ பாக்ஸ் (தனியாக ஸ்டார்ட்டர் வாங்க வேண்டியதில்லை)
- அமைத்துத்தருதல் (Installation Free)**
- * அறிமுக விலை வரி நீங்கலானது

** இச்சலுகை 97 மார்ச் 31 வரை மட்டுமே

டீலர்ஷிப் விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன:- போன்: 0422-577257 பேக்ஸ்: 0422-575553.

Branches: • New Delhi - 7522079 • Secunderabad - 7712382 • Indore - 521841 • Nagpur - 770478 • Jaipur - 376868 • Bangalore - 2233029 • Chittoor - 26332 • Kochi - 355712 • Pune - 676788 • Jabalpur - 411084 • Ghaziabad - 625136

முக்கிய நகரங்களில் டீலர்களின் தொலைபேசி எண்கள் • சென்னை - 5221007, 5342517, 2366870, • மதுரை - 742729, 625645, 741879 • திருச்சி - 700156, 700210 • செங்கல்பட்டு - 26349, • சேலம் - 412037, • நாகர்கோவில் - 33448, 31618 • ஓசூர் - 22366, 22110 • ஆத்தூர் - 40204 • ஆரணி - 27153 • அறந்தாங்கி - 30033 • அருப்புக்கோட்டை - 71192 • கோவை - 216406 • தர்மபுரி - 61737 • ஈரோடு - 72817 • கோபி - 22370 • கவுந்தப்பாடி - 40582 • காரைக்கால் - 20199 (P.P.) • கள்ளக்குறிச்சி - 22687 • மன்னார்குடி - 23031 • மயிலாடுதுறை - 24038 • மார்த்தாண்டம் - 70379 • நாமக்கல் - 30512 (P.P.) • பேராவூரணி - 32734 • பரமத்தி வேலூர் - 20388 • புளியங்குடி - 33049 • சத்தி - 20545 • ஸ்ரீவில்லிபுத்தூர் - 60204 • சங்ககிரி - 40340 • தஞ்சாவூர் - 31843 • தேனி - 74475 • திருநெல்வேலி - 25848 • தூத்துக்குடி - 323171 • திருவண்ணாமலை - 22823 • தென்காசி - 24172 • வந்தவாசி - 25147 • வள்ளியூர் - 20274 • வேலூர் - 22556 • கரூர் - 61807 • பழனி - 43399

வொண்டர் ஸப். இல்லத்தின் வெகுமதி! உள்ளத்தின் நிம்மதி!

தொண்டையில் அடிக்கடி வலி போன்ற தொல்லைகள் இதனால் ஏற்படும். மூக்கின் உட்புறமுள்ள சைனஸ் என்னும் வெற்றிடத்தில் நீர் கோர்த்துக் கொள்வதால் ஏற்படுவதுதான் இந்த நோய். குளிர்காலத்தில் இதன் தீவிரம் அதிகமாகும். தூசு, புகை, மகரந்தப் பொடி போன்றவைகளினால் அலர்ஜியும் ஏற்படும் இதற்கு ஆண்டிபயாடிக் மற்றும் ஆண்டி இன்ஃப்ளமேட்டரி மருந்துகள் தருவதுடன் சில சமயம் பாதிக்கப்பட்ட பகுதியில் துளையிட்டு நீரை வெளியேற்றுவதும் உண்டு. ஆனால் இது போன்ற சிகிச்சைகள் முழுமையான தீர்வு தருவதில்லை. மீண்டும், மீண்டும் இவை தொடர வாய்ப்பு உண்டு. இந்த நோய்க்கு யுனானி முறையில் கண்டு பிடிக்கப் பட்டுள்ள மூலிகை மருந்தை 40 முதல் 80 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர பூரண குணம் கிடைக்கும். 10 முதல் 15 சதவிதம் பேருக்கு மீண்டும் வரக் கூடிய வாய்ப்பு உண்டு. அவர்கள் 2-வது கோர்ஸ் மருந்து எடுத்துக் கொள்ள இந் நோயிலிருந்து முழுமையாக விடு படலாம். நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு முன்னும், பின்னும் எக்ஸ்ரே படம் எடுத்து நோய் இருந்த தன்மையும் குணமடைந்த நிலையும் அறிந்து நாங்கள் இத்தகைய நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கிறோம்.

3. மஞ்சள் காமாலை நோய்க்கு முக்கிய காரணம் நீரின் தூய்மை கெட்டு விடுவதுதான். இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற வேண்டும். நோய் கண்டவர்களின் கண்கள், நகங்கள் இவைகளுடன் சிறு நீரும் மஞ்சளாக இருக்கும். இந் நிலையையே மஞ்சள் காமாலை என்கிறோம். நோய் கண்ட வர்களின் சிறுநீரை வெள்ளையான பாட்டிலில் வைத்துப் பார்த்தால் சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் இருக்கும். சாதாரணமாக கல்லீரலை வெளியிலிருந்து கைகளினால் அழுத்திப் பார்த்தால் உணர முடியாது. ஆனால் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டவர்களை அழுக்கிப் பார்க்கும்போது வீங்கி கல்லீரலை உணர்வதுடன் அந்த இடத்தில் வலியும் இருக்கும். காய்ச்சலும் விடாமல் தொடரும். காய்ச்சல் என்ன வகையைச் சார்ந்தது என அறிய சோதனைகள் செய்யும் போதே மஞ்சள் காமாலைக்கான சோதனையும் செய்ய வேண்டும். ஆரம்ப நிலையிலேயே அறிந்து சிகிச்சை பெற்றால் 2 முதல் 5 நாட்களில் நோய் குணமாகிவிடும். ஆனால் நோய் குணமான பின்பும் மீண்டும் தொடராமலிருக்க 15 முதல் 20 நாட்கள் தொடர்ந்து மருந்து சாப்பிட வேண்டும். காசினிக்கீரை, கீழாநெல்லி, மஞ்சள் கரிசலாங் கண்ணி, போன்றவைகளை நன்கு சுத்தப்படுத்தி சமைத்து உண்பது நல்லது. உப்பையும் எண்ணெயையும் பாதியாகக் குறைத்து விட வேண்டும். மாதுளம் பழத்தை உரித்தோ அல்லது சாறு எடுத்தோ அருந்தலாம். இந்த நோயினால் குடல் உஷ்ணமாவதால் நோய் கண்டவர்கள் க்ளுகோஸ், தயிர், மோர், இளநீர், கரும்பு, சாத்துக்குடி, ஆரஞ்சு போன்ற பழங்களின் சாற்றை வீட்டிலேயே தயாரித்து அருந்தலாம். சர்க்கரை நோயுள்ளவர்கள் க்ளுகோஸைத் தவிர்க்க வேண்டும். கருவுற்ற பெண்களுக்கு இந்த நோய் கண்டால் கருவைக் கலைக்க வேண்டிய நிலைதான் என்பது இல்லை. கருவை கலைக்காமலேயே நோயை முழுமையாக குணமாக்க சிறந்த மூலிகை மருந்துகள் உண்டு. அறிகுறி எதுவுமே யில்லாமல் சிலருக்கு இது பாசிடிவ் நிலையில் இருக்கும். இந்த நிலை மஞ்சள் காமாலை நோய்க்கு ஒரு கேரியர் போல 'Hbs Ag' என்னும் டெஸ்ட் வெளிநாடு செல்பவர்களுக்கு செய்யப்படுவது வழக்கம். இவ்வகை மஞ்சள் காமாலை நோய் கண்டறியப்பட்டால், வெளி நாடு செல்ல அனுமதி கிடைக்காது. இதற்கு 1 முதல் 8 மாதம் வரை நோயின் வீரியத்திற்கு ஏற்ப இம்மருத்துவமனையின் மூலிகை மருந்துகளை உண்டு குணம் பெறலாம்.

3. யானைக்கால் - பார்க்கவே

உபயோகப்படுத்திய டூத் பிரஷை காலில் வெடிப்பு உள்ள இடங்களில் தேய்க்கப் பயன் படுத்துங்கள். இது டூத் பிரஷ்ஷின் மற்றொரு மகிமை.

— ஆனந்தவல்லி



அருவருப்பு தரக்கூடிய இந்த நோய் தரும் வேதனைகள் ஏராளம். அடிக்கடி முறை தவறாமல் வரும் காய்ச்சல், வலி, வீங்கிப் பெரிதாகிப் போன கால்களின் "பளுவைத்" தூக்கிக் கொண்டு நடக்க வேண்டிய பரிதாபம் ஆகியனவாகும். மிகக் கொடுமையான இந்த நோய் ஒரு வித கொசுக்கடியினால்தான் பரவுகிறது. ஆரம்பத்தில் குளிர் காய்ச்சல் வரும். அதுவும் இரவில்தான் அதிகமாக வரும். உடலில், அக்குள், தொடைகளின் இடுக்கு போன்ற பகுதிகளில் நெறிகட்டும். நெறி கட்டிய பகுதிகள் கடினமாகும். மருந்துகளுக்குக் காய்ச்சல் கட்டுப்படாது. இந்த நோய் கண்டுள்ளதை அறிய இரவில்தான் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும். இந்த நோய்க்குக் காரணமாகும் "மைக்ரோ பைலேரியா" கிருமிகள் இரவில் மட்டும்தான் இரத்தத்தின் மேல் பகுதியில் வரும். இரத்தப் பரிசோதனையில் இந் நோய் கிருமிகள் தென்படாமல் இருந்தாலும் சிலருக்குக் கால்கள், கைகள், பெண்களின் மார்பகங்கள், ஆண்களின் விதைகள், ஆகிய பகுதிகளில் இந் நோயின் பாதிப்பு ஏற்படுவது பரவலாக ஏற் படக் கூடியது. லிம்பேடிக் கிளாண்ட் விரிவதால் வருவதுதான் இந்த நோய். அலோபதி மருந்துகள் தற்காலிகமாக மட்டுமே வலி வேதனைகளைக் குறைக்க உதவும். ஆனால் நிரந்தரமான தீர்வு பெற இதில் வழி இல்லை. இந்த நோய்க்கு ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெற்றால் முழுமையாகக் குணம் பெற முடியும். வீக்கம் குறைய இரவில் மட்டுமே சாப்பிட ஒரு மூலிகை மாத்திரையும் மலர் ஒத்தடமும் கொடுக்கப்படும். தேவைப்பட்டால் 2-வது கோர்ஸ் மருந்து எடுத்துக் கொண்டால் முழு மையான குணம் பெறலாம். மருந்துகள் காய்ச்சலை நிறுத்தி, வீக்கத்தைக் கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைத்து விடும். யானைக்கால் நோய் முற்றிய நிலையில் பாதிக்கப்பட்ட இடத்தில் மீன் செதில்கள் போல தோன்றி நீர் கோத்த நிலையை அடைந்து விட்டால் ஓரளவுதான் குணப்படுத்த முடியும். ஆனால் காய்ச்சலை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

4. யூரினரி இன்ஃபெக்ஷன் - என்னும் சிறுநீர் கடுப்பு நோய் அசுத்தமான இடங்களில் சிறுநீர் கழிப்பதால் பரவலாக வருகிறது. தெரு வோரங்கள், சுத்தம் இல்லாத கழிவறைகள், போன்ற இடங்களில் சிறுநீர் கழிப்பதைத் தவிர்த்தாலே இந்த நோய் தாக்காமல் பாதுகாத்துக் கொள்ள முடியும். நிற்காமல் தொடரும் காய்ச்சலும், தாங்க முடியாத முதுகு வலியும், மூத்திரக்கடுப்புமே இந்த நோய் தரும் வேதனை கள். இந்த அறிகுறிகள் இருப்பின் சிறுநீர் பரிசோதனை செய்து பார்த்து சிகிச்சை பெற வேண்டும். ஆண்களை விட பெண்களையே அதிகம் பாதிக்கக் கூடிய நோய் இது. 5 முதல் 10 நாட்கள் மூலிகை மருந்து சாப்பிட வேண்டும். சிலருக்குத் தொடர்ந்து காய்ச்சல் இருக்கும். அவர்கள் 40 நாட்கள் தொடர்ந்து மூலிகை மருந்து உண்ண வேண்டும். இதனால் நீர்க் கடுப்பை உண்டாக்கும், கிருமிகளை எதிர்க்கும் சக்தி உடலுக்கு ஏற்படும். கழிவறையை முன் னெச்சரிக்கையாக, மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்வது மிகவும் அவசியம். சுற்றுச் சூழல் மாசுபாடு ஏற்படாமல் தடுத் துக் கொண்டால், உடல் நலக் கேட்டை விளைவிக்கும் நோய்க் கிருமிகள் உற்பத்தி ஆவதையும் பரவுவதையும் தடுத்து விடலாம். சுகாதார முறைகளைக் கையாண்டு வாழ்ந்தால் நோயற்ற வாழ்வு பெற்று நலம் பல பெறலாம்.

நம்மில் சிலர் உருளைக்கிழங்கு கார கறி செய்யும் பொழுது, கிழங்கை வேக வைக்காமல் அப்படியே வதக்கிச் செய்வார்கள். அப்படி செய்யும் பொழுது கிழங்கை நறுக்கி சிறிது உப்புக் கலந்த நீரில் போட்டு வைத்து எடுத்து வதக்கினால் எளிதில் வெந்து விடும். அதோடு இந்த உருளைக்கிழங்கு கார கறியுடன் ஒரு பீட்ரூட்டை துருவி சேர்த்துக் கலந்து செய்து பாருங்கள். அழகான கலரில் காரக் கறி அதிக சுவையுடன் மிகவும் நன்றாக இருக்கும்.

— பாலா







• பீனா



• வள்ளி

இம்மாத

பொருள் : தொக்கு

முதல் பரிசு ரூ. 300/-

சுண்டைக்காய் தொக்கு

மனித நலத்துக்கு அருசுவைகளும் இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் நாம் பெரும்பாலும் நம் உணவில் கசப்பை நீக்கிவிடுகிறோம். இதனால் நாம் நம்மையறியாமலே நம் உடலில் பல வியாதிகளுக்கு வித்திடுகிறோம். எனவே நாம் கசப்பான பதார்த்தங்களையும் சிறிது கவனத்துடன் பக்குவமாக சமைத்து எல்லோரும் சாப்பிட வகை செய்தோம் என்றால் பலவித வியாதிகளை வராமலேயே தவிர்க்கலாம்.

கண்டைக்காயின் குணம் : கபம், கிருமி, வாதம், பித்தம், சீதளம் இவற்றைப் போக்கும். பசியைப் பெருக்கும். நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும்.

தேவையான பொருட்கள் :

பச்சை கண்டைக்காய் - 250 கிராம்
புளி - 100 கிராம்
வற்றல் மிளகாய் - 50 கிராம்
வெந்தயம் - 1 மே. கரண்டி
பெருங்காயம் - வாசனைக்கேற்ப
நல்லெண்ணெய் - 150 கிராம்
கடுகு, மஞ்சள் பொடி - தாளிக்க
வெல்லம் - சிறிய கட்டி
உப்பு - ருசிக்கேற்ப

செய்முறை :

கண்டைக்காயை நன்கு அலம்பி, நீர் போக வடியவிட்டு மிக்ஸியில் ஒன்றிரண்டாக அரைத்துக் கொள்ளவும். வற்றல் மிளகாய், பெருங்காயம், வெந்தயம் ஆகியவற்றை தனித்தனியே எண்ணெய் விடாமல் பொன்னிறமாக வறுத்து மிக்ஸியில் நன்கு நைஸாக அரைத்துக் கொள்ளவும். புளியை உப்புடன் சேர்த்து வெந்நீரில் ஊறவைத்து, நன்கு கெட்டியாகக் கரைத்து வடிகட்டிக் கொள்ளவும்.

பின் வாணலியில் மொத்த நல்லெண்ணெயும் விட்டு, கடுகு, மஞ்சள் பொடி தாளித்து, பின் பச்சை கண்டைக்காய் விழுதைக் கொட்டி நன்கு சுருள வதக்கவும். விழுது நன்கு வதங்கியவுடன் புளிக் கரைசலைக் கொட்டி சிறிது நேரம் தளதளவென கொதிக்க விடவும். பின்பு மிளகாய்ப் பொடி, வெந்தயம், பெருங்காயம் கலந்து அரைத்து வைத்துள்ள பொடியைக் கொட்டி





• சாந்தா நாராயணன்

இல்லத்தரசி...

கருள, சிறுத்தியில் வதக்கவும். சிறு துண்டு வெல்லத்தையும் சேர்க்கவும். மேலே எண்ணெய் மிதந்து பிரியும் வரை கிளறி கீழே இறக்கி வைத்து, நன்கு ஆறியவுடன் ஒரு பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளவும். கசப்பை விரும்பாதவர்கள் கூட இந்த சுண்டைக்காய் தொக்கை விரும்பிச் சாப்பிடுவார்கள். நீரிழிவு நோய்காரர்களுக்கு இந்தத் தொக்கு நல்ல வரப் பிரசாதம்.

— ஆர். விஜயா, செய்யாறு.

இரண்டாம் பரிசு ரூ. 200/-

சுவைதரும் முருங்கைத் தொக்கு!

நினைத்தாலே மணக்கும் ஒரு காயைக் கொண்டு மிகமிகச் சுவையாக ஒரு தொக்கு செய்து அந்த ருசியினால் இன்னும் ஒருபிடி சாதம் கூடச் சாப்பிடும் அளவுக்கு ஒரு தொக்குக்கு மவுசு இருக்கிறது என்றால் அது முருங்கைத் தொக்குதான்.

தேவையான பொருட்கள் :

நன்கு சதைப் பற்றுள்ள (உருட்டையான) திட்டமான அளவு முருங்கைக் காய்கள் - 10

பெரிய வெங்காயம் - ¼ கிலோ

மிளகாய்ப் பொடி (வறுக்க வேண்டாம்) - 50 கிராம்

பெருங்காயம், வறுத்துத் தூள் செய்த வெந்தயப் பொடி - தேவைக்கேற்ப

வெல்லம் - 1 கோலியளவு

கடுகு, உப்பு - தேவைக்கேற்ப

புளி - 100 கிராம்

ந. எண்ணெய் - 150 கிராம்

(எந்த எண்ணெய் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.)

செய்முறை :

முதலில் முருங்கைக்காய்களை சுத்தம் செய்து பெரிய நீளத் துண்டுகளாக்கிக் கொள்ளவும். அதனைப் பிளந்து உள்ளிருக்கும் பருப்பு, சதைப்பற்றை ஸ்பூன் மூலம் சுரண்டி ஒரு பாத்திரத்தில் சேகரிக்கவும். வெங்காயத்தைப் பொடிப் பொடியாக நறுக்கி அதனையும் முருங்கைக்காய் சதையுடன் சேர்த்து வைக்கவும். புளியை ஊறவிட்டு கெட்டியான சாறு எடுத்து வைக்கவும்.

வாணலியில் நமக்குத் தேவைப்பட்ட எண்ணெயில் 10 ஸ்பூன் விட்டு கடுகைப் போட்டு நன்கு வெடிக்க விடவும். உடன் பெருங்காயம், வெந்தயப் பொடி சேர்த்து ஒரு நிமிடம்

பொறுத்து வெங்காயம் முருங்கை கலவையைக் கொட்டி வதக்கவும். கொஞ்சம் நிறம் மாறியதும் புளிக் கரைசலை விட்டுக் கிளறிக் கொண்டு இருக்கவும். அடிப் பிடிக்காமல் எண்ணெய் சேர்த்து வரவும். 10 நிமிடம் பொறுத்து உப்பு, தூள் செய்த வெல்லம், மிளகாய்ப் பொடி சேர்த்து அல்வா போல் நன்கு சுருண்டு வரும் வரை கிளறிக் கொண்டே இருக்கவும். கலவை சுருண்டு எண்ணெய் பிரியும் போது இறக்கி நன்கு ஆறியதும் காற்றுப் புகாமல் பாட்டிலில் போட்டு மூடி விடவும்.

இந்தத் தொக்கு எந்த உணவுடனும் தொட்டுக் கொண்டு சாப்பிட சுவையாக இருக்கும். ஒரு வருடம் வரை கெடாமலும் இருக்கும்.

— கே. பாக்யலக்ஷ்மி, சென்னை - 44.

மூன்றாம் பரிசு ரூ. 100/-

பாகற்காய் தொக்கு

தேவையான பொருட்கள் :

பாகற்காயை கொட்டை நீக்கி சிறியதாக நறுக்கிக் கொண்டது - 2 டம்ளர்

ரிபைண்ட் ஆயில் - அப்பளம் பொரிக்கத் தேவையான அளவு

நல்லெண்ணெய் - ¼ டம்ளர்

புளி - ஒரு பெரிய எலுமிச்சம் பழம் அளவு

நீர் - 1¼ டம்ளர்

மஞ்சள் தூள் - 1 சிட்டிகை

மிளகாய் தூள் - ¼ டம்ளர்

வெந்தயம் (வறுத்துப் பொடித்துக் கொண்டது) - ¾ டீஸ்பூன்

பெருங்காயத் தூள் - ¾ டீஸ்பூன்

கடுகு - 1 டீஸ்பூன்

கறிவேப்பிலை - சிறிதளவு

உப்பு - தேவையான அளவு

செய்முறை :

சிறிது சிறிதாக நறுக்கிக் கொண்ட பாகற்காயை முதலில் சிறிது நேரம் உப்புத்தூள் தோய்த்து வைக்கவும். (10 நிமிடங்கள் வரை.)

பின் வாணலியில் ரிபைண்ட் ஆயிலை ஊற்றிக் கொண்டு எண்ணெய் நன்கு காய்ந்ததும் காஸை சின்னதாக்கிக் கொண்டு பாகற்காய் துண்டுகளை அப்பளம் பொரிப்பது போல பொரித்தெடுக்கவும். (பொன்னிறமாகும் வரை). அடுப்பிலிருந்து வாணலியை இறக்கி வைக்கவும்.

புளியைக் கொட்டை, அழுக்கு போக 1¼ டம்ளர் நீர் விட்டு நன்கு பிழிந்து ஒரு வாய கன்ற கடாயில் ஊற்றி அடுப்பில் வைக்கவும். கொதிக்க ஆரம்பித்ததும் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், வெந்தயப் பொடி, பெருங்காயத் தூள் வேண்டிய அளவு உப்பு எல்லாவற்றையும் போட்டுக் கொள்ளவும். கூடவே நறுக்கிப் பொரித்து வைத்துள்ள பாகற்காய் துண்டுகளையும் போடவும். நன்கு கைவிடாமல் கிளறவும். நன்கு நீர் வற்றியவுடன் சிறிது சிறிதாக நல்லெண்ணையை விட்டுக் கொண்டு கை விடாமல் கிளறவும். தற்போது சிறிதளவும் நீர்ச்சத்து இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு கடாயை அடுப்பிலிருந்து இறக்கவும். கடைசியாக எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலை தாளித்து விட்டு நன்கு கிளறி வைக்கவும்.

நன்கு சூடு தணிந்ததும், கழுவி வெயிலில் வைத்து உலர்த்தியெடுத்த பாட்டிலில், சிறிது

இஞ்சி வீட்டில் அதிகம் இருந்தால் கேரட் துருவலில் துருவி வெயிலில் காய வைத்து காய்ந்ததும் மிக்ஸியில் பவுடராக்கி பாட்டிலில் வைத்துக் கொள்ளுங்கள். டீ, காப்பி, குருமா, மற்றும் பொரியல், பொங்கல் என சமையலில்



சில புடைவைகளில் 'க்ராஸாக' ஓரம் கத்திரிக்கப் பட்டிருக்கும். அதை வெட்டி எடுக்கும் போது அது ஒரு சதுரமாகக் கிடைத்தால், அப்புடைவைக்கான ப்ளவுஸின் முதுகுப்புறம் வைத்துத் தைக்கலாம். விரல் அகலம் கிடைத்தால் கழுத்து, கை ஓரங்களில் பைப்பிங் ஆக உபயோகிக்கலாம். 'ரிப்பன்' அகல மிருந்தால் எலாஸ்டிக் வைத்து மூடி தைத்து தலையில் வைத்துக் கொள்ளும் ரப்பர் பேண்டாக உபயோகிக்கலாம்.

— ரமாலக்ஷ்மி

ஆரஞ்சு தோல் பொடியாய் நறுக்கியது
- 1 ஐஸ் கிரீம் கப் அளவு (சின்னது)
வெல்லம் - ¼ படி
புளி - சிறிய உருண்டை
மிளகு - 2 ஸ்பூன்
மிளகாய் - 4
உப்பு, பெருங்காயம், மஞ்சள் தூள்
- கொஞ்சம்
நல்லெண்ணெய் - 1 கப்

செய்முறை :

முதலில் பொடியாய் நறுக்கிய (காய்ந்தது இருந்தாலும் பரவாயில்லை) ஆரஞ்சுத் தோலை தண்ணியில் ஊற வைக்கவும். சுத்தம் செய்த வேப்பம் பூவை வாசனை வரும் வரை வறுத்து (கருக்க வேண்டாம்) நீரைத் தெளித்து ஊற வைக்கவும். அதிக நீரில் ஊற வைத்தால் வடி கட்டும் போது உயிர்ச் சத்து போய்விடும்.

ஒரு மணி நேரம் ஊறியதும் முதலில் ஆரஞ்சுத் தோலை நன்கு மைய அரைத்து, அத்துடன் ஊறவைத்த வேப்பம்பூ, புளி, மிளகு, உப்பு, மிளகாய், பெருங்காயம் சேர்த்து நைஸாக அரைக்கவும். தண்ணீர் அதிகம் தெளித்து அரைக்க வேண்டாம். விழுது கெட்டியாக இருந்தால் சீக்கிரம் தொக்கு கிளறிவிடலாம்.

வாணலியில் ½ கப் ந. எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு தாளித்து அரைத்த விழுதினைப் போட்டுக் கிளறி வெந்ததும் மஞ்சள் தூள், வெல்லம் போட்டு கைவிடாமல் கிளறி மீதி இருக்கும் எண்ணெயை ஊற்றிக் கிளறினால் 'வேப்பம்பூ தொக்கு" பாத்திரத்தில் ஒட்டாமல் உருண்டு வந்ததும் இறக்கி, ஆறியதும் பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

"வேப்பம்பூ தொக்கு உப்பு, புளி, காரம் கசப்பு, இனிப்பு துவர்ப்பு ஆகிய அறுசுவையுடன் இருக்கும். சாதத்தில் சிறிது நெய் ஊற்றித் தொக்கைப் போட்டு பிசைந்து சாப்பிட்டால் அபார ருசியுடன் ஆரஞ்சு ஃபிளேவருடன் இருக்கும்.

— சாந்தா நாராயண், திருவரங்கம்.

ஆறுதல் பரிசு ரூ. 50/-

வெஜிடபிள் தொக்கு

தேவையான பொருட்கள் :

காரட் - 25 கிராம்
பட்டாணி - 25 கிராம்
கத்திரிக்காய் - 1 (சிறியது)
பீட்ரூட் - 25 கிராம்
பீன்ஸ் - 25 கிராம்
உருளைக்கிழங்கு - 1
பூண்டு - 25 கிராம்
தக்காளி - 1 (பெரியது)
புளி - 1 எலுமிச்சை பழம் அளவு
நல்லெண்ணெய் - 25 கிராம்
வெந்தயம் - 1 டீஸ்பூன்
பெருங்காயம் - தேவையான அளவு

செய்முறை :

எல்லா காய்கறிகளையும் சிறியதாக நறுக்கிக் கொள்ளவும். வெந்தயமும் பெருங்காயமும் சிவக்க வறுத்துப் பொடி செய்யவும். நல்லெண்ணெய் சூடு பண்ணி ஆறவைக்கவும். புளியைக் கெட்டியாகக் கரைத்து தக்காளியைத் தவிர எல்லாக் காய்களும் போட்டு மிதமான தீயில் வேக வைக்கவும். ஏழு நிமிடங்களுக்குப் பிறகு தக்காளி போட்டு ஒரு கிளறு கிளறி எண்ணெயும் பொடி செய்த வெந்தயப் பவுடரையும் போட்டு இறக்கி ஆறியவுடன் ஒரு பாத்திரத்தில் எடுத்து வைக்கவும். ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும். பூரி, சப்பாத்தி, தோசை இவற்றுடன் தொட்டுக் கொள்ள மிகவும் சுவையாக இருக்கும்.

பின் குறிப்பு : இந்தத் தொக்கு பண்ணுவதற்கு என்று தனியாகக் காய் வாங்க தேவையில்லை. வாரத்தின் கடைசியில் ப்ரிட்ஜில் எது இருக்கிறதோ அந்தக் காயைப் போட்டுச் செய்யலாம்.

— எம். வன்னி கிருஷ்ணன், சென்னை - 80.

நாட்டியம் பெண்களுக்கு மட்டுமா சொந்தம்?





நன்றாக உடற்பயிற்சி செய்து, கரணை கரணையாக உடம்பு புடைத்துக் கொண்டு இருந்தது. கைகளிலும் கால்களிலும் ஆணின் முரட்டுத்தனம்...! ஆனால், இடுப்பில் காஞ்சிபுரம் பட்டுச் சேலை பளபளக்க, கால்களில் சலங்கைகள் ஒலித்தன!

பெங்களூரில் கர்நாடக மாநில நாட்டியச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கலைஞர்கள்தான் இப்படி வித்தியாசமாகக் காட்சி அளித்தார்கள். நான்கு நாட்கள் நடந்த இந்த நாட்டிய நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைவரும் ஆண்களே!

ஆண்களால் கூடப் பெண்கள் போல நாட்டியமாட முடியும் என்பதை வெளிப்படுத்தவே இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.


டாக்டர்கள், பொறியியல் வல்லுநர்கள், விஞ்ஞானிகள் என்று பல தொழில்கள் செய்து வரும் ஆண்கள் இந்த நாட்டிய நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்கள்!

பெண்கள்தான், அவர்களுடைய உடல்தான் நாட்டியமாட ஏற்றதாக இருக்கிறது என்ற கருத்தை முறியடிப்பதற்காக இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நாகேஷ்பாபு என்ற இளைஞருக்குப் பதினேழு வயது. நாட்டியம் கற்க அவர் விரும்பியதற்கு வீட்டில் பெரிய எதிர்ப்பு. "ஆறு அடி மூன்று அங்குலம் உயரம் உள்ள நீயா நடனம் ஆடப் போகிறாய்?" இப்படி



பெரியவர் ஒருவர் இறந்த போது சடங்குகளைப் படமாக்கியது பற்றி ஒருவர் எழுதி இருந்ததைப் படித்தேன். எனக்கு ஒரு யோசனை. இந்தக் காலத்தில் பல பேரக் குழந்தைகள் தாத்தா, பாட்டியைப் பிரிந்து வெகு தூரத்தில் வாழ்கிறார்கள். தாத்தா, பாட்டி மற்றும் பெரியோர்கள் உறவினர்களை ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது சில ஆண்டுகளுக்கு ஒரு முறையோதான் பார்க்க முடிகிறது. குடும்பப் பெரியவர்கள் சுலோகம், புராணக் கதைகள், மற்றும் நல்ல நெறிப்படுத்தக் கூடிய கதைகள் சம்பவங்கள் இவற்றைச் சொல்வதையும் அதை இளைய தலைமுறையினர் சிரத்தையுடன் கேட்பதையும் படமாக்கி நிரந்தரமாக வைத்துக் கொள்ளலாமே. வீட்டின் விசேஷ பண்டி கைகள் பூஜைகள் போன்றவற்றையும் வீடியோ படமெடுத்து வைத்துக் கொண்டால் அவ்வப்போது நம் குழந்தைகளுக்குப் போட்டுக் காட்டலாம்.



— கல்யாணி

கேலி செய்தனர் நண்பர்கள் கூட!

"எனக்கு நாட்டியம்தான் எல்லாம். வேறு எதுவும் பிடிக்கவில்லை" என்கிறார், நாகேஷ். இப்போது யாராவது நாட்டிய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய, நாகேஷைக் கேட்டால், தான் நாட்டியம் ஆடுவதாகக் கூறுகிறார்.

"என்ன! நீங்க கூடவா ஆடறீங்க..." இப்படி வியப்போடு கேட்கிறார், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வந்தவர்!

மைசூரைச் சேர்ந்த நாகராஜுக்கு 26 வயதாகிறது. நாட்டியம் கற்பதற்கு வீட்டார் பலமாக எதிர்ப்பு தெரிவிக்க, குருவின் உதவியோடு, ரகசியமாய் ஒன்றரை ஆண்டுகள் நாட்டியம் கற்றார். யோகாசனப் பயிற்சி வகுப்பிற்கு மகன் போவதாக அப்பா நினைத்து இருக்க, மகன் நாட்டிய வகுப்பிற்குப் போய்க் கொண்டு இருந்தார்!

மகன் செய்த நாட்டிய நிகழ்ச்சியை அப்பா பார்த்து 'ஓகே' சொல்வதற்குள், நிறைய நாட்கள் ஆகிவிட்டன!

பெண்களைப் போல ஒயிலாக, எழிலாக, தளுக்காக ஆண்களால் நாட்டியமாட முடியாது என்கின்றனர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்பவர்கள். யாரோ ஒரு பிருஜு மகராஜ் ஒரு தனஞ்செயன் இருக்கலாம். ஆனால், ஆண்களால் எளிதாக நாட்டியமாட முடியாது என்பது அவர்களது கருத்து.

"நிகழ்ச்சியை ஏற்பாடு செய்பவர்கள், பெண்கள் நாட்டியம் ஆடுவதையே விரும்புகின்றனர். அப்போதுதான் கவர்ச்சி இருக்கும்" என்கிறார் ஷியாம் பிரகாஷ். இவர் ஒரு பொறியியல் வல்லுநர். நான்கு வயது முதலாக அப்பா பயிற்சி தர, சிறப்பாக நாட்டியமாடுகிறார். "நாட்டியமாடுவதையே தொழிலாகக் கொண்டால் பிழைப்பு நடத்துவது கஷ்டம். அதுவும் ஆண்கள் நாட்டியமாடினால், பிழைப்பது மிகவும் கஷ்டம்" என்கிறார்.


"முகத்தை முற்றிலுமாய் ஷேவ் செய்து கொண்டால் ஆண்கள் கூடக் கவர்ச்சியாகத்தான் இருக்கிறார்கள்" என்கிறார் V.S. கிருஷ்ணா ராவ். நாட்டியக் கலையின் பழைமையான குருக்களில் இவர் ஒருவர்.

"நான் வழக்கமாக எனது சகோதரியுடன் நாட்டியம் ஆடுவேன்" என்கிறார் ரமேஷ் கன்கல். பரதநாட்டியத்தில் திறமை மிக்க இவர் இப்போது தனியாகவே நாட்டியமாடத் தொடங்கிவிட்டார்.

"நான் நாட்டியமாடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். யார் என்ன சொன்னாலும் சொல்லி விட்டுப் போகட்டும்" இப்படி நாகேஷ்பாபு உறுதியாகச் சொல்கிறார்.

மகிழ்ச்சி உண்டாக ஆண், பெண் வேறுபாடு கிடையாது. நாட்டியக் கலைக்கும் இந்த வித்தியாசம் கிடையாது! சொனைட்டியிலிருந்து -

— சேலம் சக்திக்கொடி





ரம்யா

10

காலையில் எழுந்து மணியைப் பார்த்த மங்களம் திடுக்கிட்டாள். மணி ஏழு!

அருகில் வனஜா இன்னமும் தூங்கிக் கொண்டிருக்க கிரிஜாவைக் காணோம்.

"சமத்துப் பொண்ணு - நேத்தி மாதிரி அம்மா அசந்து தூங்கறானு காப்பி போடப் போயிட்டாளோ?"

சமையல் உள்ளே எட்டிப் பார்த்தவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. உள்ளே யாரும் இல்லை. ஒரே அமைதி. இந்த கிரி எங்கே போயிருக்கும்?

நேரத்தோட எழுந்து மொட்டை மாடிக்குப் போய் ஏதாவது படிச்சுட்டிருப்பாள். எப்ப பாரு-பரீட்சை-பாடம்தான்!

மகள் படிக்கும் புத்தகங்களையும், அதனால் விளைந்த விபரீதங்களையும் உணராத மங்களம், பெருமையாக மகளைப் பற்றி நினைத்தபடி, பல் துலக்கப் போனாள். காப்பி போட்டு, பால் காய்ச்சி அவள் கலந்தும் குடித்தாயிற்று. மாடியில் இருந்து ஏன் இன்னும் யாரும் இறங்கி வரக் காணோம்?

'பாத்திரங்கள் எல்லாம் தண்ணீர் பிடிச்சு வெச்சிருக்கு. கோபி - ரமணி எழுந்துண்டிருப்பாங்க. இந்த வனஜாவாவது எழுப்பி விடக் கூடாதா என்னை?'

முற்றத்தில் நின்று 'கோபி - ரமணி!' என்று குரல் கொடுத்தாள். மேலிருந்து ரமணி தலையை நீட்டி எட்டிப் பார்த்தான்.

"என்ன அத்தை! கோபி குளிக்கறான்."

"கண் முழிச்சா என்னை ஒரு குரல் கூப்பிட்டு எழுப்பக் கூடாதா, நல்லா தூங்கிட்டேன். கீழே வந்து காப்பியைக் குடிச்சிட்டு போப்பா. மணி எட்டாகறதே. சங்கர் என்ன பண்றான்? ஆபீஸ் போக வேண்டாமா? சின்னக் குட்டி மேலே படிச்சிக்கிட்டு உலாத்திட்டிருக்கும்.

அதைக் கொஞ்சம் கீழே இறங்கி வரச் சொல்லு. உங்க அத்திம்பேர் இன்னுமா தூங்கறார்?" என்று சத்தம் போட்டாள் மங்களம்.

"அத்திம்பேரும் சங்கரும் அசந்து தூங்கறாங்க, அத்தை! நீங்களும் தூங்கிண்டு சங்கரும் தூங்கவே லீவு போட்டிருக்கானோனு நெனச்சேன். இதோ ரெண்டு பேரையும் எழுப்பறேன். கிரிஜா மேலே இல்லை அத்தை!" என்றான் ரமணி.

"காலங்கார்த்தாலே எங்கே ஒழிஞ்சுதோ? யாராவது சிநேகிதிட்ட நோட்ஸ் வாங்கறேன்னு போயிருக்கும். ஏய் வனஜா. இவ்வளவு கத்தறேன் அப்படி என்ன தூக்கம்? எழுந்திருடி. ஆபீஸ் போக வேண்டாமா? என்னமோ ஒரே அசதி யாரோ மந்திரம் போட்ட மாதிரி எல்லாரும் தூங்கி வழியறீங்களே?"

எரிச்சலுடன் வனஜாவை எழுப்பினாள்.

வனஜா எழுந்து கொட்டாவி விட்டபடி கொல்லைப் பக்கம் போனாள். வாசற் கதவு பெரிதாகத் தட்டுவது கேட்டு கதவைத் திறந்தாள் மங்களம். வேலைக்காரி!


"இன்னாம்மா இன்னிக்கு ஞாயித்துக்கிழமை கூட இல்லையே. சின்னய்யா வனஜாம்மா எல்லாரும் லீவா? எவ்வளவு நேரம் கதவை இடிக்கிறது. மணியடிக்கிறது? அப்பாலே சலிச்சுப் போயி, எதிர் வீடு செஞ்சுட்டு வரேன்.!"

அலுத்துக் கொண்டபடி ...ன் பக்கம் போனாள்.

கோபியும் ரமணியும் கீழே இறங்கி வந்தார்கள். அவர்களுக்குக் காலையில் சீக்கிரமே போக வேண்டும். காப்பி மட்டும்தான் இங்கே.

கோதா பார்த்தசாரதி

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'



23 வது

இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

தீவுத் திடல், சென்னை - 600 009

சிந்தை குளிர்விக்கும் சிறப்பம்சங்கள்

சிறுவர் உல்லாச உலகம். ✱ இயல்பியல் நுட்பத்துடன் கூடிய அறிவியல் கூடம். ✱ ரெயில் வண்டியில் க்ரடி, சிங்கம், மிக்கி அண்டு டோனால்டு, புலி உருவங்கள் குழந்தைகளுக்கு வரவேற்பு ✱ அண்ணா கலை அரங்கில் தினசரி நாடகம். சினிமா மற்றும் பல கேளிக்கை அம்சங்கள்.

சிறப்பு பஸ் வசதிகளும் உண்டு.

ஒவ்வொரு மணி நேரத்திற்க்கும் உங்களில் ஒருவருக்குக் கிடைக்கலாம் ஓர் அதிர்ஷ்டப் பரிசு. ஆகவே, உங்கள் பாதிநுழைவுச் சீட்டைப் பத்திரமாக வைத்திருங்கள்.

தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
சென்னை - 600 004.

இன்றே உங்கள் குடும்பத்துடன் வருகைதாருங்கள்.

பரிசளிப்போர் : • அன்பகம் உணவகம் • ஸ்ரீ கட்பீஸ் ஜங்ஷன்
•பாப்புலர் அப்பளம் •மருதாணி வாலா உகம் ராஜ் & கோ. சென்னை.
•பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட் •மணிமேகலை பிரசுரம் •எவ்வெரிடே திரி ஸ்டவ்
விடுமுறை நாட்களில் சிறப்பு பரிசு அளிப்பவர்கள் : எச்.எம்.பி.ராலி ∴பேன் கம்பெனி

DIPR / DIS / 31 / 97

டிபன் வெளியில் சாப்பிட்டுக் கொள்வார்கள். ராத்திரி சாப்பாடுதான் வீட்டில். மதியம் ஆபீஸ் கான்டீனில்.

"மன்னி கூட இல்லை. பெரியம்மா தனியா கஷ்டப்படறா. டேய் ரமணி. நீ காப்பி கூட வெச்சிட்டுவா. பெரியம்மா சொல்லுங்க. ஏதாவது ஹெல்ப் பண்ணணுமா? ஆபீசுக்கு லேட்டானா கூட பரவாயில்லை. காய் நறுக்கட்டுமா. அதோ முனீம்மா குக்கர் தேச்சுண்டு வந்துட்டா. குக்கர் வைக்கட்டுமா? நா நல்லா சமைப்பேன் பெரியம்மா!" என்று பரிந்து கூறினான் கோபி.

வனஜா துவைக்கிற கல்லின் மேல் உட்கார்ந்தபடி கனவு கண்டு கொண்டிருந்தாள். மங்களத்தம்மாளின் கூச்சல் கூட அவளை இந்த உலகத்துக்கு இழுத்து வர முடியவில்லை. காலையில் எழுந்ததிலிருந்தே ஒரே தலைசுற்றல். குமட்டல், நேற்றும் ஒரு மாதிரியாக இருந்தது.

மனசுக்குள் ஏதோ கணக்குப் போட்டவள் திடுக்கிட்டாள்.

'அய்யோ. ஒரு மாசத்துக்கு மேல் ஆகிறதே! அப்படி ஏதாவது இருக்குமோ?' இந்த மனோவின் பேச்சைக் கேட்டதால் வந்த வினை.

கோடைக்கானல் போய்த் தங்கும் எண்ணம் நிறைவேறவில்லை.

தினசரி ரகசியமாய்ச் சந்தித்து அலுத்து விட்டது மனோவுக்கு. அதனால் ஒரே கோபம். அன்று ஒரு நாள்....

"வனி - இப்படியே எத்தனை நாள் ஏங்கிட்டிருக்கிறது? என் மேலே நம்பிக்கை இல்லையா உனக்கு?"

"ஏன் மனோ இப்படிச் சொல்றீங்க? அண்ணாவுக்கு அன்னிக்கு நாம ஹோட்டல் போனது தெரிஞ்சு போச்சு. மன்னி சொல்லிட்டா. மேலும் வீட்டில் விசேஷம் என்பதால் அம்மா கடை கண்ணினு அலையறா. லீவு இருந்தா வீட்டைப் பார்த்துக்கோனு மடக்கிப் போட்டுட்டார்!" என்றாள் அழாக் குறையாக.

"அதெல்லாம் எனக்கு தெரியாது. நாளைக்கு எனக்கு பர்த்டே! நீ நாளை மார்னிங் என்னோட என் வீட்டுக்கு வரே! என் அருமைக் காதலி, என் வருங்கால மனைவியை என் அம்மா அப்பாவுக்கு அறிமுகம் செய்யப் போகிறேன். உனக்கு உன் வருங்கால மாமனார், மாமியாரைப் பார்க்க ஆசை இல்லையா?"

அவன் சொன்ன தோரணையில் மயங்கி விட்டாள் வனஜா.

"ம். அப்ப நாளைக்கும் ஆபீஸ் போக முடியாது. அண்ணா தீவிரமா தூண்டித் துருவி விசாரிக்க ஆரம்பிச்சா, நா ஆபீஸ் போற லட்சணம் தெரிஞ்சு போகும். அதான் ஒரு மாசம் நல்லதனமா நேரத்தோட வீட்டுக்குப் போயிட்டா, அப்புறம் கவனிக்க மாட்டாங்கனு பார்த்தேன்..." என்று இழுத்தாள்.

"நாளைக்கு மார்னிங் வீட்டுக்கு என்னோட வரே! எங்கேயாவது பயந்து பயந்து சந்திக்கறதெல்லாம் இனிமே முடியாது. ஒரு மாசமா உன்னை ஒருநாள் பார்க்கல்லைன்னா என் உயிரே போயிட்ட மாதிரி இருக்கு. அதுக்குத்தான் என் பேரண்ட்ஸ் கிட்ட விஷயத்தை சொல்லிட்டா, நாம பயமில்லாம எங்க வீட்டிலேயே சந்திக்கலாம், கல்யாணம் வரை!"

செல்லமாக அவள் கன்னத்தில் தட்டி கண்டிப்பாகக் கூறினான் மனோ.

மறுநாள் அவள் இறங்கும் பஸ் ஸ்டாப் அருகே காருடன் காத்திருந்தான் மனோ. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பயந்தபடி ஏறிக் கொண்டாள் வனஜா.

"மெனி மெனி ஹாப்பி ரிடன்ஸ் ஆஃப் தி டே, மனோ!" என்று கூறி அவன் கையில் ஒரு சிறிய கிஃப்ட் பார்சலைத் திணித்தாள்.

"ஹேய். என்ன இதெல்லாம்?" என்று கேட்டபடி அதைப் பிரித்த மனோ, சின்ன அட்டைப் பெட்டியில் இருந்த டைபின்னைக் கண்டதும், "இதெல்லாம் எதுக்கு? நீ கொடுக்கணுமா சில்லி" என்று செல்லமாகக் கடிந்து கொண்டான்.

"ஏதோ இந்த ஏழையால் முடிந்தது. நீங்க தங்கத்திலே வாங்கிப் போட்டுக்குவீங்க. இது வெறும் கவரிங்தான்!" என்றாள் வெட்கத்துடன்.

'இதை வாங்கவே அம்மாவுக்குத் தெரியாமல் பணம் எடுக்க வேண்டி இருந்தது!'



பெண்களுக்குக் குழந்தை உற்பத்தி செய்யும் திறன் அவள் வாழ்நாளில் முப்பது வருடங்களுக்குத்தான் இருக்கும். அவள் வயதுக்கு (15 வயது) வந்ததிலிருந்து தொடங்கி மாதவிலக்கு நிற்கும் வரை (45 வயது) யில்தான் கணக்கு. அதுவும் அந்த முப்பது வருடங்களில் தாய்மை அடையவைக்கும் சக்தி (ஃபெர்டிலிடி) மொத்தமே 60 நாட்களுக்குத்தானிருக்கிறது! இதற்கேதான் நாட்டின் ஜனத்தொகை இப்படி அதிகரிக்கிறது.

நன்றி : 'மை டாக்டர்' புத்தகம்

— பத்மினி கிருஷ்ணன்


RADEUS/SB/837/2-93-TAM
கொசுக்களா?
ROOSTER
பாதுகாப்பானது
செயலாற்றல் மிக்கது.
அதிக புகை கிடையாது.
உங்கள் ஜன்னல்களை
மற்றும் கதவுகளை
மூடத் தேவை இல்லை.
இரவு முழுவதும் இனிய உறக்கத்தை
உறுதிப்படுத்துகிறது.
ரூஸ்டர்
கொசுவர்த்திச் சுருள் – அல்லெத்ரின் கொண்டது
தயாரிப்போர் :
788/1, ஜி ஐ டி சி., வாபி, குஜராத்


கேசவர்த்தினி...
நீண்ட அடர்த்தியான கூந்தலுக்கான
பரம்பரை இரகசியம்.
ஊட்டமளிக்கும் கேசவர்த்தினி கூந்தல் தைலம்.
நீங்கள் நாள்தோறும் உபயோகிக்கும் தேங்காய்
எண்ணெயில் சிறிதளவு கேசவர்த்தினியை
கலந்து தேய்த்தால், உங்கள் கூந்தல் நீண்டு ஒளி
கொண்டு திகழுவதைக் காண்பீர்கள். மேலும்
உங்கள் கூந்தல் அடர்த்தியாகவும்,
கருமையாகவும் காணப்படும். இன்றே ஒரு
பாட்டில் கேசவர்த்தினியை வாங்குங்கள்.
ஆறே மாதங்களில் அழகு மிளிர்ந்த
கூந்தலை பெறுங்கள்.
KESAVARDHINI
கேசவர்த்தினி
கூந்தல் தைலம்
இலவசம் !
உங்கள் பெயர், வயது, முகவரி, எவ்வளவு வருடங்களாக கேசவர்த்தினியை உபயோகிக்கிறீர்கள், உங்கள் இல்லத்தில் உபயோகிக்கும் மற்றவர்களின் பெயர், வயது என்ற விவரங்கள் எழுதி ஒரு கேசவர்த்தினி அட்டைப் பெட்டியின் மேலட்டையுடன் அனுப்புங்கள். இரண்டு அழகிய கைக்குட்டைகளை இலவசமாகப் பெறுங்கள். இச்சலுகை சரக்கு உள்ள வரை. விலாசம் : கேசவர்த்தினி, ஆற்காட் ரோடு, சென்னை - 87.
KV-145



கத்திரிக்காய், வெண்டைக்காய், பீன்ஸ் மற்றும் அவரைக்காய் என எந்த பொரியலுக்கும் சிறிது (பச்சையாக) சீரகப் பொடியை தூவி இறக்கி விடுங்கள். பொரியல் கமகமவென மணமுடன் நன்றாக இருக்கும். மேலும் தேங்காய் போட வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

— பாலா

மனசுக்குள் நினைத்துக் கொண்டாள்.

"இருந்தால் என்ன, வனி? உன் கையால் தொட்டதுமே தங்கமா மாறிடாதா?"

உல்லாசமாகக் கூறியவன், "ஏன் பின்னால் போய்ப் பதுங்கறே. வா. ஜம்னு ராணி மாதிரி என் பக்கத்தில் உட்கார்ந்துவா!" என்று காரை நிறுத்த, நகர்ப் பகுதி தாண்டி விட்டபடியால் அவளும் தைரியமாக ஏறி அமர்ந்தாள்.

"பாட்டுப் போடவா?" என்று பட்டனைத் தட்டிவிட நெஞ்சை அதிரடிக்கும் சங்கீதம் அதற்கு ஏற்றபடி தாளமிட்டபடியும் ஒரு கையால் அவளை அணைத்தபடியும் காரை ஓட்ட ஆரம்பித்தான்.

"ச். சீய் என்ன மனோ இது நடுரோட்டிலே. யாரும் பார்க்கப் போறாங்க. ரோட்டைப் பார்த்து ஓட்டு!" என்று போலியாகச் சிணுங்கினாலும், அத்துமீறிய அவன் தொடுகையும், அது அவளுக்கு ஏற்படுத்திய கிளுகிளுப்பும் அவளுக்கு வேண்டித்தான் இருந்தது.

"மகாகனம் பொருந்திய மகாராணி வனஜா அவர்களே! இந்த ஏழையின் குடிசை வந்து விட்டது. இறங்கலாமா?" என்ற மனோவின் குரல் கேட்டு, அவன் அருகாமை தந்த மயக்கத்திலிருந்து விடுபட்டுப் பார்த்தாள்.

நிமிர்ந்து பார்த்தவள் பிரமித்துப் போனாள்.

வீடா அது? அரண்மனை என்றே சொல்லலாம். பெரிய ரன்வே நெடுகப் பூந்தொட்டிகள். போர்டிகோவில் வளைத்துக் கொண்டு மேலேறும் போகன்வில்லா. குரோட்டன்ஸ் மட்டுமில்லாமல் மல்லி, குண்டு மல்லி, சண்பகம், பாரி ஜாதம், முன்புறம் இப்படியென்றால், பக்கவாட்டில், பின்னால் மா, பலா, வாழை என்று பல கனிமரங்கள்.

அடர்ந்த தோப்பின் நடுவே அழகிய மாளிகை அது.

"என்ன அப்படியே நின்று விட்டாய் வா. வனி. உள்ளேவா!" என்று கைகளைக் கோத்துக் கொண்டு உள்ளே அழைத்துப் போய் அந்த நீளமான ஹாலில் சோபாவில் உட்காரவைத்தான். காலடியில் கார்ப்பெட்டின் மெத்தென்ற இதம்.

"என்ன சாப்பிடுகிறாய்? முதன் முதலாக எங்க வீட்டுக்கு வந்திருக்கிறாய். போய் ஸ்வீட்டாக ஏதாவது கொண்டு வரேன்!"

இவ்வளவு பெரிய மாளிகையில் யாரும் இல்லையே!

அப்போதுதான் கவனித்தாள். யாரும் வேலைக்காரர்கள் கூட இல்லையே!

"என்ன மனோ, பர்த் டேன்னீங்க, பார்ட்டி மாதிரி ஏதாவது இருக்கும்னு நெனச்சேன். யாரையும் காணோமே!"

"வருவாங்க, வனி - பொறு அவசரப்பட்டா எப்படி?"

"வனி - நீ எனக்குப் பரிசு கொடுத்தாயல்லவா? இதோ, என் பரிசு!" என்று அவளை அருகில் இழுத்து, தன் கழுத்தில் இருந்த வடம் போன்ற சங்கிலியை அவள் கழுத்தில் போட்டான். வனஜா திடுக்கிட்டாள்.

"என்ன மனோ - உன் கழுத்தில் இருப்பதை..." என்றவளை இடைமறித்து, "நானே உனக்கு சொந்தம் என்றாகிவிட்ட போது, இது உன் கழுத்தில் இருக்கக் கூடாதா? என் அம்மா வந்து ஏதாவது கொடுக்கும் முன் என் கையால் தரணும்னு தோணிச்சு, தப்பா?"

நன்றியினால் நெஞ்சு கனத்தது. நூல் மாதிரி ஒரு சங்கிலி. கையில் ஒரு வளை காதில் ஒரு பொட்டு. இதற்கு மேல் எதுவும் அதிகம் என்பாள் அம்மா.

கழுத்தில் கனத்த சங்கிலி பத்து பவுன் இருக்கும். தன் அதிருஷ்டத்தை நம்ப முடியாமல் திகைத்த வனஜா, "தாங்க்ஸ் மனோ!" என்று அவன் கைகளைப் பிடித்து கண்ணில் ஒற்றிக் கொள்ள, அவன் கைகளை பதிலுக்கு முத்தமிட்டான் மனோ - வனஜாவின் உடம்பு சிலிர்த்தது.

"அம்மா இப்ப வந்துடுவாள். அதற்குள்..." என்று ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து அவள் முன் போட்டான்.

"என்ன வனி, அப்படிப் பார்க்கிறாய்? கொஞ்ச நேரத்தில் எங்கம்மா வந்துடுவாங்க, அதற்குள்ளே இந்தப் புடைவையைக் கட்டிண்டு வந்துடு!"

அவன் நீட்டிய அட்டைப் பெட்டியில் சாண் அகலம் சரிகையுடன் கிளிப்பச்சை நிறத்தில், உடலிலும் பார்டரிலும் இரட்டைக் கிளிகள். அடேயப்பா. பத்தாயிரம் ரூபாய் இருக்கும்.

அவன் காட்டிய அறையினுள் நுழைந்து தாளிட்டுக் கொண்ட வனஜா பிரமித்துப் போனாள். மிக நேர்த்தியான படுக்கை அறை

அது. நடுவில் மிருதுவான மெத்தையுடன் இரட்டைக் கட்டில். ஃபால்ஸ் ரூஃப். அழகான சித்திரங்களுடன் நடுவே வட்டக் கண்ணாடியுடன்.

தன் முழு உருவத்தையும் ஆளுயரக் கண்ணாடியில் ஒரு நிமிஷம் பார்த்து தானே மோகித்துப் போனாள். அருகே நிழலாட, பயந்து போய் இரு கைகளாலும் உடம்பை மூடிக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் - மனோ!

"ச்சீய்! என்ன மனோ இது. டிரஸ் மாத்தச்சே உள்ளே வந்து ம்-ம் வெளியே போங்க. நோ அட்மிஷன். ஆமாம், நா கதவைப் பூட்டிண்டுதானே வந்தேன். நீங்க எப்படி?"

பொய்க் கோபத்துடன் சிலை மேல் எறிந்த புடைவையை அள்ளிப் போர்த்திக் கொண்டாள்.

"ஹேய். எப்படி வந்தேன்னு கேட்டீல்லே? அங்கே பார்!"

பார்த்தாள். பக்கத்து பெட் ரூமையும் இதை

கனுச்சாதம் வைக்க சிவப்பு சாதம் கலக்க கண்ணாம்பு இல்லை. அதனால் கேசரி பௌடர் கலந்து சாதத்தைப் பிசைந்தேன். சிவப்பாக இருந்தது.

— இந்திரா கோபாலன்



யும் இணைக்கும் அட்டாச்ட் பாத்ரூம் கதவு திறந்திருந்தது. முட்டாள். இந்த பெட்ரூம் கதவைக் கவனிக்காமல் போனோமே!"

வெட்கத்துடன் திரும்புமுன், மனோ அவளை அலாக்காகத் தூக்கினான்.

"ஹேய் - டார்லிங், நடிக்கறே, பாத்தியா. நான் வரணும்னு உனக்கு உள்ளூர ஆசை. அதான் கவனிக்கல்லை. உன் மனசு எனக்குத் தெரியாதா?"

அவனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடியபடியே - "ப்ளீஸ் மனோ, நிஜமா எனக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை. இப்ப இதெல்லாம் வேணாம் மனோ.

ரீஸ் நா சொல்றதக் கேளு, மனோ. உங்க ரண்ட்ஸ் இப்ப வந்தா நம்மைப் பத்தி என்ன னைப்பாங்க?"

"ஹேய். அதுதான் தடைன்னா, அவங்க ரக் குறைஞ்சபட்சம் அரைமணி ஆகும். னாட்சியம்மன் கோயில் வரை போய்த் நம்ப, வேணாமா? அதுவும் எங்கம்மா ானா சன்னிதி சன்னிதியா நின்னு அர்ச் னை பண்ண ஒரு மணி நேரம் ஆகும்.

கம் ஆன் வனி. ரொம்ப ஃபீஸ் பண்ணாதே. ால் பாயசத்தைக் கையிலே கொடுத்துட்டு 'னைக்கு சாப்பிடலாம்ங்கிற மாதிரி இருக்கு. தடுக்கிறது!" என்று அவளை....

அவள் அழுதும் தொழுதும் புலம்பியும் ிெத்ததும் எதுவும் பலனில்லை. அதற்கு மேல் ்வளால் தன்னைக் காத்துக் கொள்ளவு ்டியவில்லை.

இரு கைகளிலும் முகம் புதைத்து கூனிப் பாய், அழுது கொண்டிருந்தவளை, கண்ணீ ரத் துடைத்து முகத்தை நிமிர்த்தினான்.

"லுக் ஹியர் டார்லிங்! இப்ப என்ன ுயிடிச்சுன்னு இப்படி அழறே? ஏற்கெனவே காடைக்கானல் போக திட்டமிட்டதுதானே?]ப்ப வீட்டிலே நடந்து போச்சு. தட் இஸ் ுல்!"

அவன் குரலில் எரிச்சல் தொனிப்பதாகத் தான்றியது அவளுக்கு.

"பிராமிஸ்ஸா இதுக்கெல்லாம் ஆசைப் ட்டு நா உன்னோட கொடைக்கானல் ரேன்னு சொல்லல்லை மனோ. பயந்து யந்து சந்திக்காம உன்னோட மனம் விட்டு பசிப் பழகி சந்தோஷமா ஊரெல்லாம் சுத்திப் ார்க்கலாமேனுதான். நா ஒண்ணும் 'அப்படி'ப் ட்ட பெண்ணில்லை" என்று ரோசத்துடன் றினாள்.

"இதுக்குப் போய் இவ்வளவு கவலைப் டறியே, எழுந்திரு. அப்பா அம்மா வந்திடு ாங்க. புடைவையை மாத்திக்கோ. புடைவை யைக் கட்டிண்டு சிரிச்ச மாதிரி இரு! சாரி னி. நான்தான் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்!" அவன் கெஞ்சினதில் சமாதானமடைந்து புடை வையை மாற்றி முகம் கழுவிக் கொண்டாள்.

ஆனால் சிரித்த மாதிரி மட்டும் இருக்க முடியவில்லை. அழுகை பொங்கிப் பொங்கி வந்தது.

"எனக்கு மனசே சரியில்லை. அழுகைதான் வருது. இந்த முகத்தோட அவங்களை சந்திக்க முடியும்னு தோணல்லை. ப்ளீஸ் மனோ. இன் னொரு நாள் பார்த்துக்கலாம்.

என்னை வீட்லே விட்டுடுங்க." அழவே ஆரம்பித்தாள் வனஜா.

"ஓ.கே. ஓ.கே. அழாதே வனி. நீ அழுதா எனக்கு என்னமோ பண்ணுது. அம்மா வந்து என்னடா சர்ப்ரைஸ்'னு கேட்டு ஏமாந்து

பிரட் இரண்டு ஸ்லைஸ் எடுத்துக் கொண்டு, அதன் தோலை நாற்புறங்களும் நீக்கிவிட்டு, இரண்டு ஸ்லைஸ்களின் உட்புறமும் நெய் தடவி, போளிக்குத் தயார் செய்த பூர்ணத்தை பரவலாகத் தடவி, ஸ்லைஸ்களை மூடி, நான் ஸ்டிக் பேனில் வைத்து, சிறிதளவு நெய்விட்டு இருபுறமும் லேசாக டோஸ்ட் செய்து எடுத்தால் "சாண்ட் விச்-போளி" தயார்.

— ஏ. பாலா



போவாங்க. என்ன சொல்ல? ஆனாலும் ரொம்ப மோசம் வனி நீ!"

போலியாக அலுத்துக் கொண்டு அவளை மெயின் ரோடிலேயே இறக்கி விட்டு விட்டு விர்ரென்று போய்விட்டான்.

"பயங்கர கோபம் மனோவுக்கு. இருக்கட்டும். சீமந்தமெல்லாம் முடிந்த பிறகு ஒரு நாள் சந்தித்துப் பேசினால் சரியாகி விடும்!"

மன்னி ஊருக்குப் போன பிறகு ஒரு நாள் மனோவின் பெற்றோரைச் சந்திக்க வேண்டும்!...

'மனோ சர்பிரைஸ் என்ன என்று கேட்டால், என்ன சொல்வது அம்மாவுக்கு!' என்றீர்களே! இதோ டபிள் சர்பிரைஸ்! பேரனுடன் மருமகள்! என்று சொல்லுங்கள். ஏற்றுக் கொள்வார்களா மனோ? கல்யாணத்துக்கு முன் வரம்பு மீறியவன்!' என்று ஏசுவார்களோ?

மனசுக்குள் அழுது கொண்டிருந்த வேளையில் "ஏண்டி வனி, பல் தேய்க்கப் போனா இத்தனை நேரமா? மன்னி கூட இல்லை. அந்த ஆம்பளைப் பசங்களே தேவலை. ஒத்தாசையா ஓடியாடறா. நீ கொஞ்சம் கறுகறுப்பா ஏதாவது பண்ணக் கூடாதா? இன்னிக்கு லீவா?"

நீளமாகக் கத்தியபடி மங்களம் வந்தாள்.

அம்மா கண்ணில் இருந்து இதுவரை தப்பியாகி விட்டது. சீமந்த டென்ஷனில் அம்மா எதுவும் கவனித்துக் கேட்கவில்லை. இந்த நிலையில் உள்ளே போனால் முகபாவம், உடல் நிலை எல்லாம் கண்டு பிடித்து விடுவாள். அவள் வாயைக் கொஞ்ச நாளைக்கு மூடி வைக்க, இந்த விவகாரம் நல்லபடியா முடியற வரை, இது ஒன்றுதான் இப்போதைக்கு சிறந்த வழி!

"நான் உள்ளே வர முடியாதும்மா!"

"சரியாப் போச்சு. இந்தக் காப்பியை எடுத்துக்கோ!" என்று டம்ளரை வைத்தாள் மங்களம்.

"குளிச்சிட்டு ஆபீஸ் கிளம்பறேன். சாப்பாடு வேண்டாம். கான்டீன்ல பார்த்துக்கறேன்!"

அந்த நாட்களில் வயிற்று வலியும் தலை வலியும் அவளுக்கு அதிகம். அதனால் சில சமயம் சாப்பிட மாட்டாள். எனவே மங்களம் ஒன்றும் சொல்லாமல் முணுமுணுத்தபடி உள்ளே போய்விட்டாள். குளித்து உடை மாற்றிக் கொண்டு கிளம்பினாள்.

அவனை உடனே பார்க்க வேண்டும் என்கிற வேகம். ஆனால் எப்படி? அவன் எங்கு வேலை செய்கிறான் என்று தெரியாது. ஏதோ மேல் படிப்புக்கு படித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னான். மாலை வேளையில்தான் போன் செய்யலாம். ஒரு ஃப்ரெண்ட் நம்பர்.

மாலையில்தான் அங்கு இருப்பான். வீடு அன்று அவன் காரில் அழைத்துப் போன போது பார்த்தது. அன்று வழி பார்த்துக் கொள்ளும் நிலையிலா அவள் இருந்தாள்? நகரைத் தாண்டி புறநகர்ப் பகுதியில் புதிது புதிதாக முளைத்துக் கொண்டிருக்கும் பங்களாக்களில் அதுவும் ஒன்று.

எங்கேயென்று பஸ்ஸில் ஏறி டிக்கட் கேட்பது? எங்கு இறங்கி எப்படித் தேடுவது? ஒழுங்கான அட்ரஸ் கூடத் தெரியாமல் அவனுடன் கடந்த ஒரு வருஷமாகப் பழகி, இன்று அவன் உயிரையும் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறோமே!

முதல் முறையாக ஒரு பயம் அலை போல் உடலெங்கும் பரவி உடல் சிலிர்த்து அடங்கியது. அன்றுதான் கடவுளை நினைத்தாள்.

'அம்பிகே மீனாட்சி, எப்படியாவது அவரைச் சந்திக்கவை. ஒரு மாசமாகப் பார்க்கல்லைங்கிற கோபத்தில் அவரும் வராமல் இருந்து விட்டால்....?'

விஷயம் கேள்விப்பட்டால் மனோ அப்படியே சந்தோஷத்தில்... வேகமாகக் கார் ஒன்று அவளை உராய்ந்து சென்றது.

"ஸ்டுபிட்.. ரோடைப் பார்த்து நடக்கிற தில்லே?"

ஆ. அந்தக் குரல் மனோ, மனோவுடையது தான். அம்பிகே. உன்னை நினைத்தேன் உடனே சந்திக்க வைத்து விட்டாயே. உனக்கு கோடான கோடி வணக்கம். மனசுக்குள் நன்றி சொல்லிக் கொண்டே "மனோ மனோ" என்று பித்துப் பிடித்தவள் போல் கத்திக் கொண்டே ஓடினாள்.

இந்தியா செக்யூரிடீஸ் லிமிடெட்

அளிக்கும்

Positive Deposit Schemes

அதிக பாதுகாப்பு

- CARE AA - மதிப்பீடு "High Investment Grade"
- குரூப் நிறுவன சொத்துக்கள் ரூ. 15,000 கோடி

அதிக நம்பிக்கை

- 15 லட்சத்திற்கும் மேற்பட்ட பங்குதாரர்கள்
- பல்வேறு அத்யாவசியமான தொழில்களில் ஈடுபாடு

அதிக வருமானம்

- ஆண்டிற்கு 17.50% முதல் 29.77% வரை வருமானம் அளிக்கும் திட்டங்கள்

நிறைவான சேவை

- வட்டிக்கு முன் தேதியிட்ட காசோலைகள்

காலம் மாதங்கள் + நாள்	வட்டி மாதம் ஒரு முறை	வட்டி காலாண்டிற்கு ஒரு முறை	வட்டி ஆண்டிற்கு ஒரு முறை	குமுலேடிவ் மூலம் பெறக்கூடிய வருமானம்
12 + 1	17.50 %	17.75 %	19.00 %	19.00 %
15	17.75 %	18.00 %	19.25 %	20.00 %
24 + 1	18.00 %	18.25 %	19.50 %	21.40 %
36	18.50 %	18.75 %	20.00 %	24.27 %
48	18.50 %	18.75 %	20.00 %	26.84 %
60	18.50 %	18.75 %	20.00 %	29.77 %

% - ஆண்டு வட்டிவிகிதம்

செப்டம்பர் 30, 1996 [illegible] ... திட்டங்கள் நவம்பர் 18, 1996 முதல் [illegible]

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

INDSEC


India Securities Limited

14, ஹாடோஸ் ரோடு, சென்னை - 600 006. தொலைபேசி : 8279517.

விண்ணப்பப் படிவங்களுக்கு தொடர்பு கொள்ள : மும்பை : 4950606, 2044006, Extn. 1520/21, 2041003, சென்னை : 8279517, 8272377, பெங்களூர் : 5591650, 5591708, ஹைதராபாத் : 313585, கல்கத்தா : 2406177, புது டெல்லி : 6842458 / 9546, அகமதாபாத் : 6560277, 6561844, சூரத் : 683461.

ESSAR

ISL/1168


இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்
Murugan
முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை-3.
போன் : 5350182, 5343412

கார் கிரீச்சிட்டு நின்றது.

மூச்சிறைக்க ஓடி வந்த வனஜா, "அப்பாடி நல்ல வேளையா உன்னைக் கண்டு பிடிச்சுட்டேன், மனோ! ஒரு மாசம் உங்களையும் பார்க்காம தவிச்சே போயிட்டேன். நீங்களா வந்து என்னைப் பார்த்தால் ஒழிய, நான் உங்களைப் பார்க்க முடியாது போல இருக்கே" என்றாள்.

"நீதானே இன்னும் ஒரு மாசம் என்னைத் தேடிண்டு வராதேன்னே? இப்ப ரிப்போர்ட் பண்ணா எப்படி?" என்றான் கடுப்பாக.

"என்ன விஷயம். சீக்கிரம் சொல்லு நா அவசரமா ஒரு இடத்துக்குப் போகணும். இப்படியா மனோ மனோ என்று ரோடில் கத்திக் கொண்டு வருவாய்?"

கண்களில் பெருகிய கண்ணீரைப் புறங்கையால் துடைத்தபடியே "உங்களை விட எனக்கும் ரொம்ப அவசரம், மனோ. எனக்குத் தெரியும். உனக்கு என் மேல் ரொம்ப கோபம். உங்க வனியை மன்னிக்க மாட்டீங்களா, மனோ? நேத்திலிருந்து என் உடம்பும் மனசும் படற வேதனை.

உங்களைப் பார்த்ததும் கத்திட்டேன். சாரி, மனோ. கதவைத் திறங்களேன். இப்படியே எத்தனை நேரம் நிற்பது? காரில் ஏறி உட்காந்துண்டு சொல்றேனே!"

கெஞ்சினாள் வனஜா.

"கெட் இன் ப்ளீஸ். தெருவே கூடி நின்னு வேடிக்கை பார்க்குது!"

கதவைத் திறந்தான். ஏறி முன் சீட்டில் அவனருகில் உட்கார்ந்தாள். ஸ்டீயரிங்கில் வைத்த கைகளை எடுக்காமலேயே, விறைப்பாக, "லுக் வனி. இன்னும் பத்து நிமிஷத்துலே நா ஒருத்தரை மீட் பண்ணணும். சொல்ல வந்ததை சீக்கிரம் சொல்லி முடி!" என்றான்.

டோமேடோ கெச்சப், டோமேடோ சாஸ், பாட்டிலை திறந்த பின் ஸ்டிராவை உள்ளே போட்டு நன்றாகக் கலக்கினால், கெச்சப்பும், சாசும் சுலபமாக வரும்.

— குமுதினி



"கம் டுதி பாயிண்ட் குவிக்!" என்றான் வெறுமையாக.

"ரொம்ப அவசரப்படதீங்களே, மனோ. அன்னிக்கு சொல்லச் சொல்லக் கேட்காம பிறந்த நாள் பரிசு கொடுத்தீங்களே. அதுக்குப் பதிலா நானும் உங்களுக்கு ஒரு பரிசு தரப் போறேன்!"

"புதிர் போடாம விஷயத்துக்கு வா!"

கைக் கடிகாரத்தைப் பார்த்தபடி சொன்னான் மனோ.

"அப்பாவைப் போல பையனுக்கு அவசரம்பா. கல்யாணமாகி மூணு முடிச்சு விழறதுக்குள்ளே அவன் முந்திட்டான்!" வெட்கத்துடன் சொன்னாள்.

"வனி! வாட் நான்சென்ஸ்?" கத்தினான்.

"நான்சென்ஸ் ஏதும் இல்லப்பா. சென்சிபிளாத்தான் பேசறேன். அம்மா கேட்டா சர்ப்ரைஸ் கிஃப்டா எதைக் காட்டறதுன்னீங்களே. பேரனோட மாட்டுப் பெண் இரட்டைப் பரிசா கொடுங்க."

"திஸ் இஸ் டு மச். சில்லி கேர்ள். நீ ஒண்ணும் பிரிகாஷன்ஸ் எடுத்துக்கறதில்லையா?" எரிச்சலுடன் தோளில் படிந்த கையைத் தட்டி விட்டான்.

மனோ மனோ அவனைப் பார்த்து விட்டால் இத்தனை நேர, கவலை, பீதி, டென்ஷன் எல்லாம் போய்விடும். சோவாட், எங்கம்மா கிட்ட வாதாட இன்னொரு ப்ளஸ் பாயிண்ட் என்பான். ஸ்வீட் நியூசுக்கு ஸ்வீட் வாங்கித் தரேன் என்பான். உங்கம்மாவைத்தான் முதலில் பார்க்கணும் இழுத்துண்டு போயிடணும்.

இப்படி ஏதேதோ கற்பனையில் இருந்தவளுக்கு ஆரம்ப முதலே அவன் காட்டிய அலட்சியமும் அவசரமும் உள்ளூர ஒரு கோபத்தை மூட்டியது. அது இப்போது வெடித்தே விட்டது.

"எதுக்கு ஏன் எடுத்துக்கணும். அன்னிக்கு என்னை அடைஞ்சே தீரணும்னு துடிச்சது என்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சத்தியம் பண்ணின மனோதானே?" அவளும் கோபமாய்க் கேட்டாள்.

"ஹேய் எவ்வளவு பேர் இப்படி கிளம்பி இருக்கீங்க? எவனாவது பணக்கார வீட்டுப் பையன் கிடைப்பானானு பஸ் ஸ்டாண்டிலே நின்னுண்டு வலை வீசறது. எவனாவது மாட்டினா அவனைக் கட்டில் வரைக்கும் இழுத்துப் போயிட்டு, அப்புறம் உங்க வாரிசு என் வயத்துலே வளர்றதுனு டயலாக் வுடறது.

இதெல்லாம் நம்ம கிட்ட நடக்காதும்மா!" ஏளனமாகச் சொன்னான் மனோ.

"மனோ வலை வீசியது நீ. மாட்டினது நான். காதல், கல்யாணம்னு ஆசை காட்டி கட்டில் வரை இழுத்தது நீ. நான் அந்த மாதிரி அலை

யற ரகம் இல்லை. மனோ, ஒரு நடுத்தர குடும்பத்துப் பெண். காதல்னு நீ பசப்பினதை நம்பி உன்னோடு வந்ததுக்கு இதுதானா நீ தர பரிசு?

கட்டில் வரை வந்துட்டேன்னு சொல்லியே அம்மா அப்பாட்ட சம்மதம் வாங்கறேன்னியே. அன்னிக்கு நீ காட்டின முகமே வேறே, இன் னிக்கு காட்டற முகமே வேறே! என்னை அழைச்சிட்டுப்போ, உங்கம்மா கிட்ட. உனக் குப் பயமா இருந்தா நான் கேட்கறேன்!"

அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

"அட ச்சீ. கையை எடு! என் மேலே கை போட என்ன துணிச்சல்? அம்மா கிட்ட போனா, 'கல்யாணத்துக்கு முன்னே அவனோடு கட்டிலுக்கு வந்த நீ இன்னும் எவனுடவாவது போயிருக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம்? உன் வயிற்றில் வளர்றது அவன் குழந்தைதான்கிறது என்ன நிச்சயம்'னு கேட்பா.

என்ன . பதில் சொல்வே? ஆம்பளைக்கு அவசரம்தான். பொம்பளைக்கு எங்கேடி போச்சு புத்தி? நீயல்லவா ஜாக்கிரதையாயிருந்திருக்கணும்? கோடைக்கானல் உல்லாசப் பயணம் போகணும்னவதானே நீ. இதுக்கு முன்னாடி எத்தனை பேரோடு போனியோ யாருடைய வாரிசோ இது?"

கையை இழுத்துத் தள்ளி விட்டான். தெருவில் யாரும் இல்லை. அவன் தள்ளியதில் முன்புறக் கதவில் தலை மோதி விண் விண்ணென்று தெறித்தது.


பளார் என்று ஒரு அறை அவன் கன்னத்தில் விட்டாள். 'அம்மா!' என்று கையால் கன்னத்தை அழுத்திக் கொண்டான் மனோ. கண்களில் பூச்சி பறந்தது.

"பூ.... பூ— பிளடி ராஸ்கல். உன்னையே நம்பி என்னைக் கொடுத்ததுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்!"

இரண்டு கைகளாலும் தலையில் அறைந்து கொண்டான். காருக்குள்ளேயே அவன் காலைப் பிடித்துக் கொண்டாள்.

"மனோ. என்னை மன்னிச்சிடு மனோ! என் மனோவையா நா அடிச்சேன்? ப்ளீஸ் மனோ. உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு நா அப்படி எல்லாரோடும் போறவ இல்லைனு உனக்குத் தெரியாதா? உங்கம்மா கால்லே விழுந்து கெஞ்சி கேட்டுக்கறேன். நீங்க மட்டும் என்னைத் தப்பா நினைக்காதீங்க. என்னைக் கைவிட்டுடாதீங்க மனோ!" என்று அரற்றினாள் வனஜா.

"ஏய். போனா போறதுன்னு விட்டா மேலே மேலே போறியே. லுக் ஹியர். ஒரு நாளைச் சுகத்துக்காக தாலியைக் கட்டி பெண்டாட்டியாக்கிக்கணுமா? பூ அழகுன்னா பூந்



Globe உலக உருண்டை ஸ்கூலில், போலீஸ் ஸ்டேஷனில் மட்டும்தான் இருக்க வேண்டுமா? வீட்டில் டி.வி மேலோ, ஷோகேஸிலோ வைக்கலாம். தனி அழகு தான். குழந்தைகளுக்கு எந்தெந்த நாடு எங்கிருக்கிறது, ஊர்கள், கடல்கள், இவற்றை விளையாட்டாக சொல்லிக் கொடுக்கலாம்.

— த. ரேவதி

தோட்டத்தையே விலைக்கு வாங்கணுமா? காசை வீசி எறிஞ்சா கை நிறைய தானே வந்து விழுது."

பௌச்சிலிருந்து சில நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து வீசினான் மனோ. அதிர்ந்து போனாள் வனஜா.

"பணமா கொடுக்கிறாய் மனோ. பணத்துடன் நம் பந்தம் முடிந்து விட்டதா? மனோ ச்சீ உன் பெயரைச் சொன்னாலே பாவம்! எனக்கு வேண்டாம் உன் பாவப் பணம் நீயே வைத்துக் கொள். குட்பை ஃபார் எவர்!"

ஒரு ஆட்டோ வைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். அம்மா கேட்டால் வயிற்று வலி, லீவு போட்டுட்டு வந்துட்டதாக சொல்லி விடலாம். அது சகஜமாக அடிக்கடி நடப்பதால் அம்மாவும் நம்பி விடுவாள். வீடு வந்து இறங்கியவளுக்கு வியப்பு.

கதவில் பெரிய பூட்டு தொங்கியது! அய்யோ இந்த நேரத்தில் அம்மா எங்கு போனாள். அப்பா எப்பவும் வீட்டிலேதானே இருப்பார்? அம்மாவுக்கு ஏதும்...?

"உங்கம்மாவுக்கு திடீர்னு உடம்பு முடியல்லையாம். உங்கப்பா டாக்சி வெச்சு கூட்டிட்டு போனார். பக்கத்து ஆஸ்பத்திரிதான். நீங்க யாரும் வந்தால் அங்கே வரச் சொன்னார்."

கடவுளே. இன்று இன்னும் இது வேறு கஷ்டம் பாக்கியா? அம்மா காலையில் நன்றாகத் தானே இருந்தாள்? ஒரு கயவனின் முகமூடி கிழிந்து தோலுரித்துப் பார்த்த அதிர்ச்சியே இன்னும் தீரல்லையே. அதற்குள் இன்னொரு இடியா?

(தொடரும்)

பாரின் வளைகாப்பு

முதல் குழந்தை பிறப்பதற்குமுன் தாயாகப் போகிற பெண்ணுக்கு இந்தியக் குடும்பங்களில் வளைகாப்பு செய்து கொண்டாடுவது உண்டு.

இது போல் அமெரிக்காவிலும் 'பேபி ஷவர்' என்று கொண்டாடுகிறார்கள். இதைச் சில சமயங்களில் உறவினர்களும், நண்பர்களும் இணைந்தோ இல்லை தனித்தனியாக விழாவாகவோ கொண்டாடுவதுண்டு. தாயாகப் போகும் பெண்ணை, குழந்தை பிறக்க இரண்டு மாதங்கள் இருக்கும் போது அலங்கரிக்கப்பட்ட நாற்காலியில் உட்காரவைத்து, வரப்போகிற குழந்தைக்குத் தேவையான பொருட்களை அன்பளிப்பாகக் கொடுப்பார்கள்.

'பேபி ஷவர்' இரண்டாவது அல்லது மூன்றாவது முறை தாயாகப் போகும் பெண்ணுக்காகக் கூடக் கொண்டாடப்படுவதுண்டு. இதற்காக அழைப்பு அட்டைகள் பிரத்யேகமாக குழந்தைகள் அல்லது விளையாட்டுச் சாமான்களின் படம் போட்டு 'பேபி ஷவர் கார்ட்ஸ்' என்று கிடைக்கின்றன.

இதற்காக பிறந்த நாள் வைபவத்துக்கென அலங்கரிக்கிற மாதிரி அறையை ரோஜா அல்லது நீல நிற பேப்பர்களால் தோரணம் செய்து அலங்கரிக்கிறார்கள். ரோஜா நிறம் மென்மையும், நளினமும் கொண்டதாம். எனவே இது பெண்ணைக் குறிக்குமாம். நீல நிறம் வலிமை மற்றும் முரட்டுத்தனத்தை பிரதிபலிப்பதாம். இதனால் இது ஆண் குழந் தையைக் குறிக்கும்.

தாயாகப் போகிற பெண்ணுக்கு மன மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துவதே 'பேபி ஷவரின்' நோக்கம். அன்று அந்தப் பெண்ணுக்குச் சமையல் வேலையைக் குறைக்க சிநேகிதிகள் ஆளுக்கொரு ஐட்டம் சமைத்துக் கொண்டு வருவதுண்டு.

வந்துள்ள விருந்தினருக்குப் போரடிக்காமல் இருக்க வீட்டுக்குள் விளையாடும் இன்டோர் கேம்ஸ்ஸை விளையாடுகிறார்கள். குழந்தை பிறந்தவுடன் தேவைப்படும் சாதனங்களின் பெயர்ப்பட்டியலை தயாரிக்கச் சொல்வது அவற்றின் பெயர்களை ஏறுமாறாக எழுதி கண்டு பிடிக்கச் சொல்வது, பிறக்கப் போகும் குழந்தை ஆணானாலோ இல்லை பெண்ணானாலோ என்ன பெயர் வைக்கலாம் என்று எழுதி பெயர்ப் பட்டியல் தயாரிப்பது போன்றவை இதில் அடக்கம்.

இங்குள்ள இந்தியர்கள் இதையே கொஞ்சம் சம்பிரதாயமுள்ளதாக மாற்றிக் கொண்டாடுகிறார்கள். தாயாகவிருக்கும் பெண்ணை மணையில் உட்கார வைத்து வளையடுக்கி, ஆரத்தி எடுத்து வெற்றிலை பாக்கு கொடுத்து, கணவன் அன்பளிப்பாகத் தரும் புதுப் புடைவையை அணிந்து கொள்ளச் சொல்லி வைபவத்தில் கலந்து கொள்ள வந்துள்ள பெண்மணிகளுக்கும் வெற்றிலை பாக்கில் வளையல்கள் வைத்துக் கொடுத்து என்று மங்களகரமாகக் கொண்டாடுகிறார்கள்.

— லக்ஷ்மி ரமணன்



திருமண மலர்

மணமகள் தேவை

■ Progressive minded Ashtasahasaram, Shadamashana Gothram, Pooradam star, bachelor, 33/180/15,000/- p.m. business seeks pious, educated, good looking girls. Widow/divorcees without encumbrance welcome. Box No. 13616

■ Progressive minded, 29/177/8000/- self employed, bachelor, Mrigasheersham, Shadamashanam need good looking, congenial mate, employed widows welcome. Simple register marriage only. Box No. 13617

■ 29/165/3000/-/M.Com, doing onw business at Perambalur seeks bride. Box No. 13618

■ Wanted fair Adi-Dravida girl for groom 30/169/4500 working in Neyveli Lignite Corporation Ltd. Box No. 13619

■ Alliance invited from employed girls preferably LIC/ Bank/Govt for Vadama, Kousika, Pooratathy boy, 28, M.Com., CA final, Rs. 4000/- p.m. Public Ltd. Co., subsects no bar. Send horoscope to Box No. 13620

■ சௌராஷ்ட்ரா சமூகத்தை சேர்ந்த சென்னையில் பப்ளிக் லிமிடெட் கம்பெனியில் மாதம் ரூ. 5,500/- பெறும் B.Com., PGGDMM படித்த 32 வயது இளைஞனுக்கு அழகான படித்த வேலையில் உள்ள/அல்லாத குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண் : 13621

■ ஐயர், வடமாள், கௌசிக கோத்ரம், ஹஸ்தம், 31 வயது, +2 ரூ. 3000/- சென்னையில் தனியார் கம்பெனியில் வேலையிலுள்ள பையனுக்கு, வேலையிலுள்ள நல்ல குடும்பத்தைச் சார்ந்த பெண் தேவை. பெட்டி எண் : 13622

■ தெலுங்கு தேவாங்க செட்டியார், அங்கப் போல் 27 வயது DEEE, ரூ. 5000/- மாத வருமானம் தனியார் கம்பெனியில் பணிபுரியும் மணமகனுக்கு அதே இனத்தில் படித்த, வேலையிலுள்ள மணமகள் தேவை. பெட்டி எண் : 13623

■ தெலுங்கு தேவாங்க செட்டியார் கர்ணா, 29 வயது B.Com., D.Co-op, ரூ. 4000/- மாத வருமானம் தனியார் கம்பெனியில் பணிபுரியும் மணமகனுக்கு அதே இனத்தில் படித்த, வேலையிலுள்ள மணமகள் தேவை. பெட்டி எண் : 13624

■ சோழிய வெள்ளாளர் அசைவம், 160/31, D.E.E.E. Ex Navy. சொந்த தொழில் 6000/- வருமானம். படித்த அழகான வேலை, வேலை இல்லாத குடும்பப் பெண் தேவை. பெட்டி எண் : 13625

■ Tamil Yadava, 32/Post Graduate, employed in a University, Chennai in clerical cadre, middle class family, seeks employed girl from the same caste. Reply with horoscope to Box No. 13626

■ வசிஷ்ட கோத்திரம், கன்னட மாத்வா, புனர்பூசம் 5.5" மாநிறமுள்ள 33 வயது +2 படிப்புள்ள, சுய தொழில் மாத வருமானம் சுமார் 6000/-. சொந்த வீடும் பல வீட்டு மனைகளும் (சுமார் 10 லட்சம்) உள்ள, எந்த வித கெட்ட பழக்கங்களும் இல்லாத நல்ல குணவாளனான வரனுக்கு, +2 படித்த, அழகான நல்ல குணவதியான பெண் தேவை. வேலைக்கு செல்லும், செல்லாத பெண் பற்றிய முழு விவரத்துடன், ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. கேட்டை, ஆயில்யம், மூலம் வேண்டாம். பெட்டி எண் : 13627

■ Alliance for Brahacharanam, Parasara, Sadhayam boy 30/5.7"/MABL advocate, private practice Coimbatore. Rs. 6000/- from graduate Coimbatore employed girl or transferable. Please reply with horoscope to Box No. 13628

■ SozhiaVellala Pillai, Tamil, M.Tech., 32/165, Business Executive, seeks educated, preferably employed girls. Subsects no bar. Box No. 13629

■ பாரத்வாஜ கோத்திரம், உத்திரட்டாதி (மீன ராசி) 28 வயது பட்டதாரியான சென்னையில் பிரபலக் கம்பெனியில் சீனியர் சேல்ஸ் எக்ஸிகியூட்டிவாக மாதம் ரூ. 7000/- சம்பாதிக்கும் வரனுக்கு சென்னையில் அரசு/தனியார் துறையில் பணியாற்றும் லட்சணமான, நிறமான, உயரமான பெண் தேவை. ஜாதகம், விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 13630

■ துளுவ வெள்ளாளர் முதலியார், அசைவம், வயது 39, 5.6" சிவப்பு நிறம், மின்சார வாரியத்தில் அசஸராக பணிபுரியும் பட்டதாரி ஆணுக்கு அதே இனத்தை சேர்ந்த பணியில்/பணியில் அல்லாத மணமகள் தேவை. பெட்டி எண் : 13631

■ நாட்டுக்கோட்டை செட்டியார், வயது 43. சொந்த தொழில் மூலம் மாத வருமானம் 4,500/- முதல் மனைவியுடன் ஒற்றுமை இன்றி தனித்து வாழ்பவர். இவருக்கு நல்ல குணமும், அன்பும், பாசமும், செழுத்தும் சிகப்பு நிறமான பெண் தேவை. கணவனால் கைவிடப்பட்ட பெண்களானும், குழந்தைகளுடன் கூடிய விதவைகள் ஆனாலும் பரவாயில்லை. ஜாதி, மதம், தடை இல்லை. பெட்டி எண் : 13632

■ Alliance invited from parents of good looking home

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்ய, கட்டணம் ரூ. 100/-. இதை சென்னையில் மாற்றலாகக் கூடிய டிமாண்ட் டிராப்ஃட்டாக, "மங்கையர் மலர்" என்ற பெயருக்கு எடுத்து விளம்பர வாசகத்துடன் அனுப்ப வேண்டும். மணியார்டர், போஸ்டல் ஆர்டர் காசோலை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விளம்பரக் கட்டணத்தை எங்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து பணமாகவும் செலுத்தலாம்.

loving graduate girl for Iyer boy Bharadwajam, Brahacharanam, Poorattadhi, M.Sc., 5.11½", 27 yrs. employed in Bank, Calcutta. Rs. 5000/- p.m. Own house. Box No. 13633

■ Iyer, Brahacharanam, Bharadwaja, Visakam, 28/165/ 5000 plus, Chief Accountant in Public Ltd. Co., seeks fair, good looking, graduate decently employed in Chennai, 23 years and below. Subsects no bar. Reply with horoscope. Box No. 13634

■ தொண்டை மண்டல முதலியார் கோவை ஜில்லாவைச் சேர்ந்தவரின் மகன். வயது 32. டெல்லியில் சொந்த பிஸினெஸ், நல்ல வருமானம். இங்கிலீஷ் தெரிந்த நல்ல குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண் : 13635

■ Moudgalya Madhwa Desistha, Brahmin bachelor 43 income Rs. 4000/- p.m. requires good looking, working Madhwa, Smartha girl 32 - 36. Write with horoscope and family details. Very simple marriage. Box No. 13636

■ இந்து வீரசைவ புலவர், காமராஜர் மாவட்டத்தைச் சார்ந்தவர். சென்னையில் பிரபல தனியார் நிறுவனத்தில் பணிபுரியும், வயது 39/5.9"/6000/- 2 பெண் குழந்தைகள் வயது 13, 11, உள்ளவர்க்கு, மறு மணத்திற்கு நன்கு படித்த குடும்பப்பாங்கான மணப்பெண் தேவை. குழந்தைகளில்லாத விதவைகளும் விண்ணப்பிக்கவும். ஜாதி தடையில்லை. வரதட்சணை தேவையில்லை. பெட்டி எண் : 13637

■ Palghat Vadama Iyer, Bharadwaja, Moolam (II padam) 29 yrs. P.G.D in Mtls. Mgmt. employed in Bank, graduate girls, preferably employed. Send horoscope with full details. Box No. 13638

■ தாரமிழந்தவர், வயது 48, கவரா, வருமானம் ரூ. 6000/-, 30 வயதுக்கு மேற்பட்ட ஓரளவு படித்த அழகான குடும்பப்பாங்கான பக்தி மற்றும் அடக்கமுள்ள மணமகள் தேவை. சொந்த வீடு, நிலம், வாகனம், சகல வசதியுண்டு. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 13639

■ Saiva Pillai only son, 25 yrs., P.G., M.F.C., 180 cms, fair, good looking. Manager Rs. 10,000/- p.m. reputed firm, Mumbai, parents, employed bride, fair, good looking 163 cms, M.C.A., MBA., M.Sc., B.E Computer. Well sound family. Box No. 13640

■ SC (A.D) Tamil, 30 yrs., 176 cms., SSLC serving in Army with one year of Army service left. Onw house at Bangalore. Seeks bride. Contact Phone : 5573586. Box No. 13641

■ Alliance invited for very fair, handsome, Doctor (MRCP) 28/183 cms. Practising in U.K., Vadamal, Moudgalyam, Sukla Yajur, Ayilyam (4) from very beautiful, fair and tall Doctor girls. Box No. 13642

■ வடகலை ஸ்ரீவத்ஸ கோத்திரம், பூரம் வயது 34, 3000/- சம்பளம் மதுரையில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் சிவந்த அழகான பையனுக்கு வடகலை/ தென்கலை வேலை பார்க்கும்/வேலை பார்க்காத பெண் தேவை. பெட்டி எண் : 13643

■ Brahacharanam, Bharadwajam, Pooradam, 31/165 highly placed computer company Bangalore, seeks girl upto 26 good family, no dosham. Rahu in 8th house. Reply with horoscope details to Box No. 13644

■ Iyer, Vadama, Guatama Gothram, Swathi, 28, 165 working in Ltd. Co., Erode. Educated/employed or unemployed above 23 homely Tamil/Kerala Iyer girls wanted. Send horoscope with family details to Box No. 13645

■ Alliance invited from Karkathar only. Boy 30/175/ 4000/- p.m. working in a private firm. Graduates with fair looking can apply with horoscope to Box No. 13646

■ Tholuva Naicker 31, Mirugasheersam, LDC, Rs. 3000/-, in Central Govt. Right leg affected by polio but can walk. Invites alliance from good looking preferably employed girl. Subsects no bar. Apply with horoscope to Box No. 13647

■ துளுவ வெள்ளாளர் இனம், எம்.எஸ்ஸி., எம்.ஃபில், எல்.ஐ.சியில் டெவலப்மெண்ட் ஆபீசர், 30/166/6000/- வரனுக்குப் படித்த, அழகான அதே இன மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 13648

■ Vadama, Athreyam, Poosam, 35/170/6,500/- B.Sc., LIC seeks graduate employed bride. Send horoscope to Box No. 13649

■ அஷ்டஸஹஸ்ரம், ஸ்ரீவத்ஸ கோத்திரம், பூரட்டாதி, 35 வயது, பி.காம், திருச்சியில் சொந்த வீடு, தனியார் துறையில் வேலை, 1800/- மாத சம்பளம் உள்ள பையனுக்கு, திருச்சியிலோ சுற்று வட்டாரத்திலோ வேலை பார்க்கும் பட்டதாரி மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 13650

■ Alliance invited from affluent BE/MCA/GNIIT/ MBBS, tall, beautiful girl for Tamil Iyer Brahacharanam, Haritha, Ayilyam, 34/BE/165/PSU, well settled. Reply with details and horoscope to Box No. 13651

■ Alliance invited from well qualified, fair, beautiful girls of well settled Tamil Brahmin families for only son, 26 yrs/171 cms/62 kg. Punarvasu, Vishwamitra handsome, professionally qualified, Asst. Manager in reputed industrial giant and professional carnatic musician, cultured Mumbai based Brahmin family. Reply with horoscope to Box No. 13652

■ Alliance invited for Tamil Iyer boy, Ashtasahasram, Barathwaja, Uthiradam, SSLC, 28 yrs., 5.5", Rs. 1,800/- p.m. employed in a private firm. Subsect no bar. Reply with horoscope to Box No. 13653

■ Reddiar, Trichy, BE/25/172/Rs. 9,500/- educated, affllent family seeks alliance from fair, slim, educated preferably professionally qualified girls below 23. Reply with horoscope and family background at the earliest. Box No. 13654

■ Vadamal, Athreya, Hastham, 28, 175, M.Sc., Ph.D doing PDF in Canada. Green card holder, visiting India in December, seeks fair, slim, tall BE/MCA girl, willing to settle in Canada. Box No. 13655

விளம்பர வாசகங்கள் கண்டிப்பாக 30 வார்த்தைகளுக்கு மேல் இருக்கக் கூடாது. விளம்பர வாசகங்களை அனுப்பும் போது பெட்டி எண்ணுடன் விளம்பரம் செய்ய வேண்டுமா அல்லது விலாசத்துடன் பிரசுரம் செய்ய வேண்டுமா என்பதைத் தெளிவாக எழுத வேண்டும். ஒன்றும் குறிப்பிடவில்லை என்றால் விலாசம் பிரசுரிக்கப்படும்.

உங்களின் கனவுகளை நினைவாக்கி கொள்ளுங்கள்!



Mr. Rajasekar

தங்களின் மகனோ (அ) மகளோ மருத்துவம் (Medicine) பொறியிய (Engineering) அல்லது அயல் நாடுகளுக்கு சென்று மேற்படி படிக்க பத்மபு பேர்ல்ஸ் உரிமையாளர் திரு எஸ். இராஜசேகர் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.

அவர் கூறுவதாவது தங்களின் மகனோ (அ) மகளோ கவனமின்மையினாலு தடைகள் மற்றும் பல பிரச்னைகளால் இந்த அரிய வாய்ப்பினை இழக்கிறார்கட அவர்கள் தங்களின் ஜாதகப்படி மருத்துவராகவோ, பொறியாளர்களாகவோ (அ) அய நாடுகளுக்கு சென்று படிக்கும் வாய்ப்பு இருந்தாலும் அவர்கள் ஜாதகத்தில் உள் தோஷங்களினால் அவர்கள் நினைத்த உயர் நிலையினை அடையாம போய்விடுகிறார்கள்.

நாங்கள் நன்றாக தங்களின் ஜாதகத்தை அறிவியல் முறையில் ஆராய்ந்து மற்று தோஷங்களை நிவர்த்தி செய்வதுடன் தங்களின் ஜாதகத்திற்கு ஏற்ப இராசி கற்களை அணியச் செய்கிறோம்.

திரு சுதர்ஷன் என்பவர் எங்களின் வாடிக்கையாளர்களில் ஒருவர். அவர் எங்களின் நிறுவனமா **பத்மஸ்ரீ பேர்ல்ஸில்** இராசி கற்கள் அணிந்த பிறகு தனக்கு ஏற்பட்ட மாற்றங்களை கீழே குறிப்பிட்டுள்ளா

''பதட்டமின்மை, தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள், படிப்பில் மிக்க ஆர்வம் மற்றும் உடல் நலத்தி முன்னேற்றம்.''

இந்த கூற்றுக்கள் அனைத்தும் திரு முரளி என்பவரின் மகனான கோடம்பாக்கத்தை சேர்ந்த தி சுதர்ஷன் அவர்களால் கூறப்பட்டது. அவர் தற்போது +2 முடித்துவிட்டு சென்னையில் D.M.E. சிறந் முறையில் பயின்று வருகிறார்.

தங்களின் ஜாதகங்களை நன்றாக ஆராய்ந்து பல அற்புதங்களை காணுங்கள்.

- நிதி நிலைமை, திருமணத் தடைகள், கல்வி, சொத்து சம்பந்தமான பிரச்னைகள், வேலை வாய்ப உடல் நிலைமை, வெளிநாடு பயணம் போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படும்.
- வியாபார முன்னேற்றத்துக்கும், குழந்தை பேறு இல்லாதவர்களுக்கும் சிறப்பு ஆலோசனை வழங்கப்படும். இதற்கான கட்டணம் ரூ. 300/-.

எந்த கற்களை அணிய வேண்டும் என்று கூறுவதற்கு ரூ. 151/- (ஒரு ஜாதகத்திற்கு மற்றும் மூன்று கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்படும்). வெளியூர் நபர்களுக்கு ரூ. 151/- மற்றும் கூடுதலாக ரூ. 30/ தபால் கட்டணம் செலுத்த வேண்டும். ஜாதகத்துடன் நேரிலோ (அ) ஜாதகத்தின் நகலையோ (அ) பிறந் தேதி, நேரம், இடம் போன்ற விவரங்களை உங்கள் பிரச்னையுடன் D.D./M.O. வை **Padmashri Pearls** என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

இதற்கு முன் இந்த விளம்பரத்தைப் பார்த்து D.D./M.O. அனுப்பியவர்களுக்கு பதில் அனுப்பி கொண்டு இருக்கிறோம்.

- ***Results can be seen within 30 days — 6 months. Hundreds have been benefitted***

வேலை நேரம் : காலை 10.30 முதல், மாலை 8.30 வரை.

Consultation by appointment only.

ஞாயிற்றுகிழமை வர விரும்புகிறவர்கள் முன் பதிவு செய்து கொள்ளவும்.

Hyderabad முத்துக்கள் மற்றும் ஜாதி நவரத்தினக் கற்களின் விற்பனையாளர்கள்.

Padmashri Pearls

Jewellers & Gem Merchants
53, North Usman Road, T. Nagar,
Chennai - 600 017 (Opp. A.R.R. Complex)
Ph : 8234060. Pager : 9632 - 756314.

Hyderabad Show Room : 2-4-47, M.G. Road, Secunderabad - 3. Ph : 841936

We Serve

புதிய ராகாவும் எண்ணெய் குளியலும்...
சன் டிவி உமா பத்மநாபனின் கருத்து.



